விலை 10.00

Registered as a Newspaper at G.P.O.

பக்கங்கள்: 32

THAMILTHANTHI தமிழ்த்தந்தி

# தமிழ்த்தந்தி

உண்மையாய்.. உரிமையாய்.. உணர்வாய்..

www.facebook.com/thamilthanthi

Follow@thamilthanthi

★ விளம்பரங்கள்
★ வாழ்த்துகள்
மற்றும் இதர வணிக தொடர்பாடலுக்கு:
Tel: 0114 - 369411
Fax: 0114 - 641294
e-mail: thamilthanthi@gmail.com

தமிழ் 07 தந்தி 01 ஞாயிற்றுக்கிழமை 02.12.2018 Sunday 02nd December 2018 e-mail: thamilthanthi@gmail.com www.thamilthanthi.com



# அரசியல் காழ்ப்புணர்வே

## என்மேல் சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளுக்கு காரணம்

கண்ணாடி வீட்டிலிருந்து முன்னாள் அவைத்தலைவர் சிவஞானம் கல்லெறியக்கூடாது

கூட்டமைப்பின் தூண்டுதலின் பேரிலேயே என் மீது பொய்க் குற்றம் சுமத்துகின்றனர்

இவர்களின் சுயரூபங்களை மக்கள் நன்றாக புரிந்து கொண்டுள்ளார்கள்

### முன்னாள் வடமாகாண சபை அமைச்சர் அனந்தி சசிதரன் கொந்தளிப்பு

என்னுடைய தனிக்கட்சி அரசியல் வளர்ச்சியைப் பொறுக்க முடியாத கூட்டமைப்பின் குறிப்பாக, சுமந்திரன், சயந்தன் மற்றும் வடமாகாண சபை முன்னாள் அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் போன்றோரின் காழ்ப்புணர்ச்சியே என் மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டாகும். இதை எப்படி எதிர்கொள்வது என்பது எனக்குத் தெரியும். நான் இந்த சலசலப்புகளுக்கு எல்லாம் அஞ்சமாட்டேன். முடிந்தால் அவர்கள் என்மீதான குற்றச்சாட்டுக்களை நிரூபிக்கட்டும் பார்க்கலாம் என்று வடமாகாண சபை முன்னாள் கூட்டுறவுத்துறை அமைச்சரான திருமதி அனந்தி சசிதரன் தமிழ்த்தந்திக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

கண்ணாடி வீட்டிலிருந்து கல்லெறியும் செயற்பாட்டையே முன்னாள் அவைத்தலைவர் மேற்கொண்டுள்ளார். குறிப்பாக அமைச்சர் நிர்வாக செயற்பாடுகளில் பங்குகொள்வதில்லை. நாங்கள் மாகாண சபைக்கு வருவதற்கு முன்னர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கடன் வழங்கும் நோக்கில் வந்த நிதிதான் இந்த நிதி. இது அப்போதைய ஆளுநர் சந்திரசிறி இருந்த பொழுது தன்னுடைய ஆளுநரின் செயற்பாடுகளுக்காக இந்த நிதியுடன் சேர்த்து பல நிதிகளும் முறைகேடாக அவரால் பயன்படுத்தப்பட்டு வந்த நிலையில், நாங்கள் மாகாணசபை உறுப்பினர்களாக வடக்கு மாகாண சபைக்கு வந்த பின்னர், போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக வந்த நிதிகளில் அவரால் பயன்படுத்தப்பட்டதற்கு மிகுதியாக இருந்த நிதிகளை மீள வடக்கு மாகாணசபை பெற்றுக் கொண்டது.

ஏற்கனவே போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கடன்கள் வழங்குவதற்காக வந்த இந்தி நிதியை கூட்டுறவுப் பகுதிக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. அதே போல விவசாய அமைச்சுக்கும் ஒதுக்கப்பட்டது. அத்துடன் முதலமைச்சரின் உள்ளூராட்சி, மற்றும் காணிக்கும் இந்த மீளப்பெறப்பட்ட நிதிகள் பிரிக்கப்பட்ட நிலையில், 2015ஆம் ஆண்டு இந்த நிதிகள் மீளப்பெறப்பட்டு வழங்கப்பட்டு, 2015இலும் பயன்படுத்தப்படாமல், 2016இலும் பயன்படுத்தப்படாமல், 2017 இலும் நான் பதவிக்கு வரும் வரை இந்த நிதி பயன்படுத்தப்படாமல் இருந்தது.

ஏற்கனவே கடன்களுக்கு என்று இந்த நிதி வந்ததனால் நுண்டனால் பாதிக்கப்பட்ட மக்கள் அந்தந்த மாவட்டத்திலிருக்கின்ற மக்கள் அம் மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர்களூடாக தங்களுடைய இந்த நுண்கடன் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு கடன் வழங்குமாறு கோரிக்கை விடுத்ததையடுத்து அவர்கள் எங்களுடைய மாகாண கூட்டுறவு ஆணையாளர்களூடாக விண்ணப்பித்து பிரதம செயலாளருக்கு அந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டதைத் தொடர்ந்து நாங்கள் எங்களுடைய அமைச்சர் சபையில் நான் அமைச்சராக வந்தவுடன் அமைச்சர் சபையில், அமைச்சர் பத்திரத்தைப் போட்டு இந்தக் கடன்களை ஐந்து மாவட்டங்களிலும் நுண்கடனை தீர்ப்பதற்கான கடனாக வழங்குமாறு அனுமதி வழங்கப்பட்டது. அமைச்சர் சபை அனுமதி வழங்கியிருந்தது.

ஆனால் அமைச்சர் சபை அனுமதி வழங்கியவுடனேயே எங்கள் அமைச்சின் செயலாளர் அப்போதிருந்த வரகதீஸ்வரன் அவர்கள் இரண்டு மாதங்களுக்குள் அந்த நிதியை செலவளிக்குமாறு கோரிக்கை வைத்ததையடுத்து அமைச்சர் சபை அனுமதி வழங்கியமையினால் நிதியைப் பெற்று இந்தக் கடன்களை நீங்கள் வழங்கலாம் என்று ஓர் அறிவுறுத்தலை அவர் வழங்கியிருந்தார் மாகாணத்தினுடைய கூட்டுறவு ஆணையாளருக்கு.

அவர்கள் அந்தப் பணத்திற்கு விண்ணப்பித்த பொழுது பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) பிரதம செயலாளருடைய அறிவுறுத்தலுக்கு அமைய நிதியை நேரடியாகவே கூட்டுறவுத் திணைக்களத்திற்கு விடுவித்திருந்தார்கள். எந்த இடத்திலும் என்னுடைய செயலாளருக்கும் சரி, திணைக்களத் தலைவர்களுக்கும் சரி ஓரிடத்திலும் இந்த அமைச்சர் சபையின் அனுமதி போதாது, மாகாண சபையினுடைய அனுமதி பெறப்பட வேண்டுமென்ற கோரிக்கை அல்லது எழுத்துமூலமான எண்ணப்பாடு எதுவும் அவர்களுக்குத் தெரிவித்திருக்காத நிலையில் பிரதம செயலாளரின் அறிவுறுத்தலின் படி ஏற்கனவே வந்த விண்ணப்பங்களின் பிரகாரம் அவர்களின் நுண்கடன்களைத் தீர்ப்பதற்காக கூட்டுறவு உதவி ஆணையாளர்களால் தெரிவு செய்யப்பட்ட பயனாளிக்கு இந்தக் கடன்கள் வழங்கப்பட்டது.

இந்த நிதியானது முன்னாள் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானத்தின் கருத்தின்படி, முறைகேடான நிதிப்பிரயோகம் அல்ல. ஏற்கனவே போரால் பாதிக்கப்

02 ஆம் பக்கம் பார்க்க

# 19ஆவது திருத்தச் சட்டம் நடைமுறையில் உள்ளதா?

ஜனாதிபதி கையொப்பமிட்டு அது சட்டமாக்கப்பட்டுள்ளதா என்ற கேள்வி தற்பொழுது எழுந்துள்ளது.

# தமிழர்களின் நலன்களை பலியிட்டுள்ள கூட்டமைப்பு

## தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் கஜேந்திரன்



தமிழ்த்தந்திக்கு பிரத்தியேப் பேட்டி

தமிழ் மக்களின் நலன்களை பலியிட்டு இந்திய, மேற்குலக சக்திகளின் நலன்களை பேணும் அரசாங்கத்தை அமைப்பதற்கு நிபந்தனையின்றி தங்களின் ஆதரவை கூட்டமைப்பு வழங்கியிருக்கின்றது.

இவ்வாறு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் தமிழ்த்தந்திக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

தமிழ் தேசிய கூட்டமைப்பானது மீண்டும் மீண்டும் மாபெரும் துரோகத்தை தமிழ் மக்களுக்கு இழைத்துக் கொண்டே வருகின்றது. இதுவொரு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதற்கான பேரம் பேசலுக்கான அரிய சந்தர்ப்பம். தமிழ் தேசிய கூட்டமைப்பானது இந்த நேரத்தில் இந்திய, மேற்குலக நாடுகளிலிலிருந்து உத்தரவாதங்களைப் பெற்றிருக்கவேண்டும்.

குறிப்பாக இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கும், தமிழ் மக்களால் அங்கீகாரம் பெற்ற தீர்வினைப் பெற்றுக் கொள்வது தொடர்பாகவும், போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைகள் தொடர்பாகவும், வட,கிழக்கில் அதிகரிக்கும் சிங்களக் குடியேற்றங்களை தடுத்து நிறுத்துதல், அரசியல் கைதிகளை விடுதலை செய்தல்,

02 ஆம் பக்கம் பார்க்க

# அரசியலமைப்புக்கு உட்பட்டே செயலாளர்கள் நியமனம்

தற்போதைய அரசியல் நிலைமைகள் காரணமாக நாட்டு மக்களின் வாழ்க்கையில் எந்தவிதமான அழுத்தங்களும் ஏற்படக்கூடாது என்று ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தெரிவித்தார்.

மக்கள் சேவைகள் பாதிப்படைவதற்கு இடமளிக்காதிருக்கும் பொறுப்பை உரிய முறையில் நிறைவேற்றுமாறு ஜனாதிபதி அனைத்து அரசாங்க அதிகாரிகளிடமும் கேட்டுக் கொண்டார்.

கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்ற சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் நிரந்தர நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

சுமார் 27,000 சமுர்த்தி அதிகாரிகளின் வாழ்க்கை எதிர்

02 ஆம் பக்கம் பார்க்க



# புதிதாக இரண்டு மின் உற்பத்தி நிலையங்கள்

## ரஞ்சித் சியம்பலாபிட்டிய

நாட்டில் புதிதாக இரண்டு மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இலங்கையின் மின்சாரம் தொடர்பான தெரிவுசெய்யப்பட்ட திட்டத்திற்கு அமைவாக சம்பிரதாயம் அல்லாத மாற்று புதுப்பிக்கத்தக்க சக்தி மூலம் 2030ஆம் ஆண்டளவில் நாட்டின்



02 ஆம் பக்கம் பார்க்க

# காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயத்தை தொடர்ந்தும் உதாசீனம் செய்யும் சம்பந்தன்

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் குற்றச்சாட்டு



இதேவேளை தமிழ் மக்களின் பிரதிநிதிகளான இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசிய கூட்டமைப்பு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினையில் அக்கறையாக செயற்பட்டிருந்தால் இந்த பிரச்சினையை தீர்த்திருக்கலாம் என்று தெரிவித்த வலிந்து காணால் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், எனினும் அவர்கள் தமது விவகாரத்தில் உதாசீனமாகவே செயற்பட்டு வருவதாக விசனம் வெளியிட்டனர்.

நாட்டின் பல இடங்களில் இன்னமும் இரகசிய முகாம்கள் இருப்பதாக தெரிவித்திருக்கும் வலிந்து காணாமல்

02 ஆம் பக்கம் பார்க்க

# சீனிக்கான வரி குறைப்பு?

பழச்சாறு தயாரிப்பிற்கான, ஒரு கிராம் சீனிக்கு விதிக்கப்பட்டிருந்த 50 சத வரியை 30 சதமாகக் குறைப்பதற்கு நிதி அமைச்சு தீர்மானித்துள்ளது.பழச்சாறு மற்றும் பிஸ்கட் தயாரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் குழுவினர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஸவை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். இதன்போதே, வரியை குறைப்பதற்கு பிரதமர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

# க.பொ.த.(சா/த)பரீட்சை ஏற்பாடுகள் பூர்த்தி

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 12 ஆம் திகதி நிறைவடையவுள்ளது. பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பி பூஜித தெரிவித்துள்ளார்.



இரத்மலானை விசேட தேவையுடையோர் வித்தியாலயம் மற்றும் தங்கல்ல, மாத்தறை, சிலாபம், கொழும்பு மகசீன்

02 ஆம் பக்கம் பார்க்க

# இராமேஸ்வரம்-தலைமன்னாரிடையே விரைவில் பயணிகள் படகுச் சேவை

தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்திற்கும் இடையிலான பயணிகள் சேவை ஆரம்பிப்பது தொடர்பாக இலங்கையிலுள்ள இந்தியத்தூதரகத்துடன் பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாக மீள்குடியேற்றம் புனர்வாழ்வு மற்றும் இந்தமத அலுவல்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்கு அமைச்சர் பதிலளித்தார்.

இதன்போது, இந்த பயணிகள் படகு சேவை தொடர்பில் விரைவான நடவடிக்கைகள் எடுப்பதற்கு என்னால் முடிந்த அனைத்து முயற்சிகளையும்

02 ஆம் பக்கம் பார்க்க

# பொலிஸ் அதிகாரிகள் பலருக்கு பதவி உயர்வு

பொலிஸ் அதிகாரிகள் பலருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர கூறியுள்ளார்.

கடந்த வாரங்களில்



02 ஆம் பக்கம் பார்க்க

# வவுணதீவு இரு பொலிஸார் படுகொலை; கிளிநொச்சியில் முன்னாள் போராளியொருவர் சரண்



மட்டக்களப்பு வவுனதீவில் இரண்டு பொலீஸார் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் கிளிநொச்சி பொலீஸ் நிலையத்தில் முன்னாள் போராளி ஒருவர் நேற்று (01) காலை சரணடைந்துள்ளார்.

மட்டக்களப்பு - வவுணதீவு பகுதியில் இரண்டு பொலிஸார் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் மாவீரர் நாள் நினைவேந்தல் செய்வதற்கு பொலிசார் இடையூறு வழங்கியதனால் பழிவாங்குவதற்காக இடம்பெற்றிருக்கலாம் என கருதி விசாரணைகள் நடைபெற்று வருகின்றது.

இந்த நிலையில் மாவீரர் நாள் ஏற்பாட்டுக் குழு தலைவர் கைது செய்யப்பட்டுள்ளார் இவருடன் பணியாற்றியவர்களை கைது செய்ய பொலிசார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தனர்.

அந்த வகையில் கிளிநொச்சியை சேர்ந்த ஒருவரும் பணியாரியதாக கூறி நேற்று அவரை கைது செய்வதற்காக கிளிநொச்சிப் பொலிஸ் விசேட குழு ஒன்று தேடுதல் மேற்கொண்டு வந்த நிலையில் அவர் நேற்றுக் (1) காலை கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்

சரணடைந்தவர் முன்னாள் போராளியான வட்டக்கச்சிப் பகுதியை சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான இராசநாயகம் சர்வானந்தன் (வயது 48) என்பவர் என கிளிநொச்சிப் பொலிஸ் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றனர்

இவரது வாக்குமூலங்கள் எடுக்கப்பட்டதன் பின்னர் சிஐடியிடம் பொலிசார் பாரப்படுத்த உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புசல்லாவையில் நீரில் மூழ்கிய பாடசாலை மாணவரின் சடலம் மீட்பு

புசல்லாவை - சென் கிளயார் கீழ் பிரிவு பகுதியில் குளிக்கச்சென்று காணாமற்போன பாடசாலை மாணவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த மாணவர் ஏனைய மாணவர்கள் சிலருடன் நேற்று முன்தினம்(30) மாலை குளிக்கச்சென்ற போது நீரில் மூழ்கி காணாமற்போயுள்ளார்.

மாணவரைத் தேடும் பணிகளில் பொலிஸார் மற்றும் கடற்படையினர் ஈடுபட்டதுடன், நேற்று சடலம் மீட்கப் பட்டுள்ளது.

கம்பளை பகுதியைச் சேர்ந்த ஜெயசங்கர் கணேஷ்வரன் எனும் 18 வயதான மாணவரே இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை புசல்லாவை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# மாவீரர் தினத்தை முன்னிட்டு லண்டனில் குருதிக்கொடை

**வவுனியா நிருபர்**

மாவீரர் தினத்தை முன்னிட்டு பிரித்தானியாவில் குருதிக்கொடை நிகழ்வு மிகவும் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றது.

கடந்த புதன், சனி மற்றும் ஞாயிறு ஆகிய தினங்களில் பிரித்தானியாவின் பல்வேறு பகுதிகளில் குறித்த குருதி கொடை நிகழ்வு நடத்தப்பட்டுள்ளது.

நாடு கடந்த அரசாங்கத்தின் விளையாட்டு துறை சமூகநல பிரதி அமைச்சின் ஏற்பாட்டினால் நடாத்தப்பட்ட இந்த நிகழ்வில் பெருமளவிலானோர் கலந்து கொண்டு குருதி தானம் செய்திருந்தனர்.

# பஸ் கட்டணத்தைக் குறைப்பது தொடர்பில் பேச்சுவார்த்தை



எரிபொருள் விலை மீண்டும் குறைக்கப்பட்டதை அடுத்து, பஸ் கட்டணத்தைக் குறைப்பது தொடர்பில் பஸ் சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் எம்.ஏ.பி. ஹேமசந்திர தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் டீசலின் விலை 7 ரூபாவால் குறைக்கப்பட்டதுடன், கடந்த 15 ஆம் திகதி டீசலின் விலை 5 ரூபாவால் குறைக்கப்பட்டது.

அதேநேரம், நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் அனைத்து வகையான டீசல் மற்றும் பெற்றோலின் விலை 5 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், ஒரு மாதத்திற்குள் டீசலின் விலை 17 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் முதலாம் திகதி 7 ரூபாவால் டீசல் விலை குறைக்கப்பட்டதற்கு அமைய, பஸ் கட்டணம் குறைக்கப்பட்டதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், பஸ் கட்டணத்தை மேலும் குறைப்பதற்கான தேவையுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அனைத்து தனியார் பஸ் சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தி எதிர்வரும் வாரத்திற்குள் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என எம்.ஏ.பி. ஹேமசந்திர தெரிவித்துள்ளார்.

# ஐக்கிய தேசிய கட்சியின் நீதிக்கான வாகனப் பேரணி

ஐக்கிய தேசிய கட்சியின் நீதிக்கான பேரணி நேற்று கொழும்பில் இருந்து ஆரம்பமானது.

அந்தக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவால் இந்தப் பேரணி ஆரம்பித்து வைக்கப்பட்டு, வெுந்தரை வரையில் பேரணி செல்லவுள்ளது.

இந்த வாகனப் பேரணி மொரட்டுவ, பாணந்துறை, களுத்துறை, அம்பலாங்கொட, காலி, வெலிகம, மாத்தறை ஊடாக தெவுந்தரை வரை சென்றடைய உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வாகனப் பேரணியில் ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர்கள் உட்பட ஆதரவாளர்கள் பலர் பங்கேற்றுள்ளனர்.



நேற்றுபேரணியை ஆரம்பிக்கும் முன்னதாக கொழும்பு விகாரமகா தேவி பூங்காவில் இடம்பெற்றுக் கொண்டிருக்கின் சத்தியாக்கிரக போராட்டத்திலும் அந்தக் கட்சியின் உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

# விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் ஒரு தொகை மீட்பு



புதுக்குடியிருப்பு, சுதந்திபுரம் பிரதேசத்தில் யுத்த காலத்தில் விடுதலைப் புலிகளால் மறைத்து வைக்கப்பட்டிருந்த யுத்த உபகரணங்கள் மீட்கப்பட்டுள்ளன.

பொலிஸ் விஷேட அதிரடிப் படையின் முல்லைத்தீவு முகாமின் அதிகாரிகளால் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பில் இந்த உபகரணங்கள் கண்டெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது 2250 டி 56 ரக தோட்டாக்கள், ஆர்.பி.ஜி. தோட்டக்கள் 03, 06 ஆடி செல் உட்பட மேலும் பல அயுதங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இவற்றை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியதன் பின்னர் கிளிநொச்சி முகாமில் உள்ள தேடுதல் மற்றும் குண்டு செயலிழப்பு பிரிவினரின் ஒத்துழைப்புடன் அழிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் விஷேட அதிரடிப் படையினர் தெரிவித்தனர்.

## காணாமல்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், இந்த முகாம்களில் கடந்த காலங்களில் பலவந்தமாக கைதுசெய்யப் பட்டும், கடத்தப்பட்டும் மற்றும் சரணடைந்த நிலையிலும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.எங்கு அந்த இரகசிய முகாம்கள் இருக்கின்றன என்பது தொடர்பான தகவல்கள் தங்களுக்கு தெரியும் என்றும் தெரிவித்திருக்கும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், இந்தத் தகவல்களை வெளியிடுவதால் தமது பிள்ளைகளுக்கு ஆபத்து ஏற்படலாம் என்பதாலேயே அவற்றை வெளியிடாது இரகசியம் பேணுவதாக அறிவித்துள்ளனர்.வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகள் உயிரோடு இருப்பதாக நம்பிக்கையுடன் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் பெற்றோர்கள் உள்ளிட்ட உறவினர்கள், இனிமேலாவது ஸ்ரீலங்கா அரசாங்கம் தமது பிள்ளைகளை விடுவிக்க வேண்டும் என்று மன்றாட்டமாக வேண்டுகோளும் விடுத்துள்ளனர்.

யுத்தத்தின் இறுதி கட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினரிடம் சரணடைந்த மற்றம் உறவினர்களால் கையளிக்கப்பட்ட நிலையிலும், கடத்தப்பட்டும், கைது செய்யப்பட்ட நிலையிலும் காணாமல் ஆக்கப்பட்டுள்ளவர்களை தேடி கண்டுபிடித்துத் தருமாறும், அவர்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் கண்டறிந்து வெளிப்படுத்துமாறும் வலியுறுத்தி தமிழ் தாயகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.இந்த போராட்டத்தை ஆரம்பித்த கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவினர்கள் 648 நாளாக போராடி வருகின்றனர்.கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்திற்கு முன்பாக தமது உறவுகளை தேடி 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களது போராட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களுக்கும் இந்த போராட்டம் வியாபித்தது.

இந்த நிலையில் கிளிநொச்சி - வைரவர் கோவிலடியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சுமார் இரண்டு மணித்தியாலங்களாக கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது கருத்துத்தெரிவித்த வலிந்து காணமல் ஆக்கப்பட்டோரின் உறவினர் சங்கத்தின் செயலாளர் லீலாதேவி ஆனந்தநடராஜா, வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகள் ரகசிய முகாம்களில் தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்டிருப்பதாக கூறினார்.

2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உள்ளிட்ட தமிழ் மக்களின் உண்மை நிலையை வெளிப்படுத்த சிவில் அமைப்புக்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் உதவ வேண்டும் என்றும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பகிரங்க கோரிக்கை விடுத்தனர்.

அருட்தந்தை பிரான்சிஸ் தலைமையில் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி ஸ்ரீலங்கா இராணுவத்திடம் சரணடைந்த தமது பிள்ளைகள் விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை தலையீடு செய்து உண்மையை வெளிக்கொணர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இன்றைய போராட்டத்தில் இணைந்துகொண்ட சரணடைந்த இளைஞர் ஒருவரின் தாய் கோரிக்கை விடுத்தார்.

இதேவேளை தமிழ் மக்களின் பிரதிநிதிகளான இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசிய கூட்டமைப்பு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினையில் அக்கறையாக செயற்பட்டிருந்தால் இந்த பிரச்சினையை தீர்த்திருக்கலாம் என்று தெரிவித்த வலிந்து காணால் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள்விசனம் வெளியிட்டனர்.

## இராமேஸ்வரம்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

மேற்கொள்வதாகவும் நிச்சயம் இந்த சேவை இடம்பெறும் என்றும் அவர் மேலும் நம்பிக்கை வெளியிட்டார்.

கேரளாவிலுள்ள ஐயப்பன் புனித தலத்தை வழிபடுவதற்காக செல்லும் இலங்கை பக்தர்களின் நலன்கருதி முன்னெடுக்கப்படும் இந்த படகு சேவையானது, இந்த யாத்திரை காலத்திற்கு பின்னர் சுற்றுலாத்துறைக்கு பயன்படும் வகையிலும் இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகள் நாடு திருப்புவதற்கும் பயன்படும் என்றும் அவர் கூறினார்.

மேலும் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் பயணிகள் படகு சேவை மூலம் வடக்கு மாகாணத்தில் வர்த்தக நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கும் இந்த சேவை பெரிதும் உதவும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். படகு சேவையின் மூலம் குறைந்த செலவில் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் பொருட்களை ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்கும் வசதியாக அமையும்.

110,000 வீடுகளை கட்டும் பணியில் முதற்கட்டமாக 15 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் நிகழ்வு இந்த வருட இறுதிக்குள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டர்.

## தமிழர்களின்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

போரால் அழிந்த வடக்கு, கிழக்கு பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்காக ஒரு கட்டமைப்பை குறிப்பாக விடுதலைப்புலிகள் காலத்தில் உருவாக்கப்பட்ட

சிரான் என்ற கட்டமைப்பு போன்ற கட்டமைப்பு ஊடாக நேரடியாக வடக்கு, கிழக்கை கட்டியெழுப்புவதற்கான நிதியுதவிகளை பெறுவதற்கான ஏற்பாடுகளை கோரியிருக்கலாம்.

இந்த அரிய சந்தர்ப்பத்தை நழுவவிட்டுள்ளார்கள். இந்த உத்தரவாதங்கள் எல்லாம் இந்திய, மேற்குலக நாடுகளிலிருந்துதான் பெறப்பட்டிருக்க வேண்டும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக இவர்கள் எந்தவிதமான நிபந்தனைகளும் இல்லாமல் இந்திய மேற்குல நாடுகளுக்கு தேவைப்படுகின்ற ஒரு ஆட்சியை உருவாக்குவதற்கு நிபந்தனையில்லாமல் தங்கள் ஆதரவைப் கொடுத்துள்ளார்கள்.

தமிழ் மக்களின் நலன்களை தட்டிக்கழிக்கின்றார்கள். இதற்கு மாற்றாக மாற்று அரசியல் தலைமை ஒன்று உருவாக்கப்பட வேண்டும். அப்படி உருவாக்கப்படும் மாற்று அரசியல் தலைமை கூட்டமைப்பைப் போன்றே தமிழ் மக்களின் நலன்களைப் பலியிடுபவர்களாக இருக்கக்கூடாது.

குறிப்பாக சித்தார்த்தனும், சுரேஷ் பிரேமச்சந்திரனும் தமிழ் மக்களுக்காகப் பேரம் பேசக்கூடியவர்கள் அல்லர். அவர்கள் தமிழ் மக்களின் நலன்களைப் பலியிட்டு தங்களின் எஜமானர்களுக்காக நிபந்தனையில்லாத ஆதரவை எந்தநேரத்திலும் கொடுக்கக்கூடியவர்கள். இவர்களை வைத்துக் கொண்டு மாற்று ஒன்றை உருவாக்க முடியாது. அப்படி இவர்கள் இருந்தால் அந்த மாற்றும் கூட்டமைப்புப் போன்றதாக இருக்கும். அதற்காகத்தான் இவர்கள் இருவரையும் தமிழ் மக்கள் பேரவையிலிருந்து வெளியேற்றும்படி கோருகின்றோம். உதாரணமாக சித்தார்த்தன் தமிழ் தேசிய கூட்டமைப்புக்குள் இருந்து கொண்டு நிபந்தனையில்லாமல் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதற்கு தன்னுடைய ஆதரவையும் கையொப்பம் இட்டுக் கொடுத்துள்ளார். இதைத்தான் நாங்கள் ஆரம்பத்திலிருந்து சொல்லி வந்துள்ளோம். நாங்கள் கூறிய செய்தியின்மை அச்சுக் காய்வதற்குள் தன்னுடைய சுயரூபத்தை வெளிக்காட்டியுள்ளார்.

ரணில்விக்கிரமசிங்கவை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டு வருவதற்கு துடியாய் துடிக்கும் இந்திய, மேற்குலகிலிருந்து அவர்கள் உறுதியான உத்தரவாதத்தைப் பெற்றிருக்க வேண்டும். ஆனால் அப்படிச் செயற்படவில்லை. இவர்கள் இருவரும் பொறுத்த சந்தர்ப்பங்களில் காலைவாரக்கூடியவர்கள்.

சிவசக்தி ஆனந்தன் இதில் தான் நடுநிலை வகிக்கின்றேன் என்று சொன்னாலும் கூட அவரின் நடுநிலையும் சந்தேகத்திற்கிடமானதுதான். அண்மையில் அவரின் குரலில் வெளிவந்த ஒலிப்பதிவில் கூட, தாங்கள் மகிந்த ராஜபக்ஷவிடம் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் பதவியையும், பணமும் கேட்டதாகவும் அது கிடைத்தவுடன் அவரின் பக்கம் தங்கள் ஆதரவை தெரிவிப்பதாகவும் கூறியிருந்தார்.

ஆகவே இவர்கள் எல்லாம் ஒரு மாற்றுத்தலைமையாகவிருந்து தமிழ் மக்களுக்காகப் பேரம் பேசக்கூடியவர்கள் அல்ல. அதனால் அவர்கள் தமிழ் மக்கள் பேரவையிலிருந்து வெளியேற்றப்பட வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## அரசியல்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

பட்ட மக்களுக்கு கடன் கொடுப்பதற்காக வந்த நிதி, இந்த நிதியை அமைச்சரோ, அமைச்சின் செயலாளரோ, திணைக்களத் தலைவர்களோ யாரும் எடுத்துவிடவில்லை. இதில் சில நிர்வாகப் பிழை வந்திருக்கின்றது. அதுவும் சரியான அறிவுறுத்தல் கிடைக்காத பட்சத்தில் வந்த பிழையே தவிர, இவர்கள் கூறுவது போன்று முறைகேடான நிதிப்பிரயோகம் அன்று.

மூன்றுபேர் கொண்ட குழுவை நியமித்திருந்தால் என்னை விசாரணைக்குட்படுத்தி இவ்வாறான குற்றச்சாட்டுக்களை சுமத்தியிருக்கின்ற எங்களை அதிலிருந்து விடுவிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். அதேபோல இந்த மூன்று பேர் கொண்ட குழு நிச்சயமாக கடந்த காலங்களில் உள்ளூராட்சித் திணைக்களத்தின் கீழ் நடைபெற்ற, அதுவும் எங்கள் அவைத் தலைவர் மாகாணத்தின் உள்ளூராட்சி திணைக்களத்தில் இருந்திருக்கின்றார். அவருடைய காலத்தில் நடைபெற்ற எல்லா மோசடிகளையும் மிகத்தெளிவாக ஆராய்ந்து அந்த அறிக்கையையும் மக்களுக்கு முன் கொண்டு வருவதன் ஊடாக அவைத்தலைவர் சி.வி.கே.சிவாஞானம் மீது சுமத்தப்பட்டிருக்கின்ற பழியும் போக்கப்படும் சூழலை உருவாக்க வேண்டும்.

நான் அரசியல் கட்சி தொடங்கி மக்களின் பேராதரவோடு வருவதை சகிக்க முடியாமல் என்மீதான காழ்ப்புணர்வின் காரணமாக என்னை பழிவாங்கும் நோக்கில் என்னுடைய அமைச்சில் பணியாற்றிய உத்தியோகத்தர்களை பழிவாங்குவது ஏற்றுக் கொள்ள முடியாது.

வடமாகாண சபையில் உரிய நோக்கத்திற்கு செலவழிக்கப்பட்ட நிதிக்கு இவ்வாறான முறைப்பாட்டை ஆளுநருக்கு செய்திருக்கும் முன்னாள் அவைத்தலைவர் போன்றவர்கள் எவ்வாறு எங்களுடைய வடக்கு மாகாண சபையின் முன்னேற்றத்திற்கு தடையாக இருந்திருப்பார்கள் என்பதை இப்பொழுது மக்கள் உணர்ந்திருப்பார்கள்.

ஏனெனில் இவ்வளவு கடன்களுக்குள் பெண்கள் சிக்குண்டு சிதறுப்பட்டுக் கொண்டிருக்கின்ற நேரத்தில், இரண்டு வருடங்கள் செலவழிக்காத நிதியை நான் அமைச்சுப் பொறுப்பெடுத்தவுடன் அந்த நிதியை மக்களுடைய தேவைக்காக பயன்படுத்தி, அது இப்பொழுதும் வடக்கு மாகாண கூட்டுறவுத்துறையின் மூலதன நிதியாகத்தான் இருக்கின்றதேயொழிய அதை நாங்கள் யாருக்கும் மானியமாக கொடுத்துவிடவில்லை.

எனவே முறைகேடான நிதிப்பிரயோகங்கள் என்ற வார்த்தைப் பிரயோகங்கள் எல்லாம் என்னுடைய அரசியல் வளர்ச்சி மீதான காழ்ப்புணர்வு காரணமாக அச்சப்படும் செயற்பாடே.

மக்களின் மீதான என் பற்றும் இவர்களின் உண்மை முகத்தை தோலுரித்துக் காட்டும் என்ற செயற்பாடும் இவர்களுக்கு என்மீதான அச்சத்தை தோற்றுவித்துள்ளது என்று அவர் கமலும் தெரிவித்தார்.

## பொலிஸ்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

இதற்காக நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டதாகவும், அதனடிப்படையில் பதவி உயர்வு வழங்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவின் பணிப்புரையின் படி 2891 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இவ்வாறு பதவி உயர்வு வழங்கப்படுகின்றதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர கூறியுள்ளார்.

## க.பொ.த...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

சிறைச்சாலை போன்றவற்றில் விசேட பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

போராதனை போதனா வைத்தியசாலை மஹரகம புற்றுநோய் வைத்தியசாலை போன்றவற்றிலும் பரீட்சை நடைபெறவுள்ளது.

பரீட்சை நடவடிக்கைகளுக்காக 47 ஆயிரம் அதிகாரிகள் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

## அரசியலமைப்பு...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

பார்ப்பான முழுமையான ஓய்வூதியத்துடன், கூடிய நியமனக் கனவை நனவாக்கும் வகையில் சுமார் 7,000 பேருக்கு நிரந்த நியமனங்கள் இதன் போது வழங்கப்பட்டன.

தான் அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்களை நியமித்திருப்பது அரசியலமைப்பில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு ஏற்பவாகும்.

எனவே அந்த அனைத்து நியமனங்களும் சட்டபூர்வமானது என்பதுடன், அதில் எவ்வித பிரச்சினையும் கிடையாது என்று குறிப்பிட்ட ஜனாதிபதி, நாட்டில் எத்தகைய அரசியல் நிலைமைகள் ஏற்பட்டாலும் தமது அமைச்சுக்களின் நடவடிக்கைகளை உரிய முறையில் நிறைவேற்றி, நாட்டின் அனைத்து துறைகளையும் உரிய முறையில் பேணுவது அமைச்சுக்களின் செயலாளர்கள் உள்ளிட்ட அரசாங்க அதிகாரிகளின் பொறுப்பாகும் என்று மேலும் குறிப்பிட்டார்.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பொருளாதார அபிவிருத்திக்கு சமுர்த்தி இயக்கம் மேற்கொண்டுவரும் பணிகளை பாராட்டிய ஜனாதிபதி, சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரிகளின் பணிகளையும் பாராட்டினார்.

வீடமைப்பு, சமூக நலன்புரி அமைச்சர் விமல் வீரவங்ச உள்ளிட்ட அமைச்சர்களும் வீடமைப்பு, சமூக நலன்புரி அமைச்சின் செயலாளர் உபாலி மாரசிங்ஹ, சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் நாயகம் நிமல் கொடவலகெதர ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## புதிதாக...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

மொத்த மின்சார தேவையில் மூன்றில் ஒன்றை பூர்த்தி செய்து கொள்வதற்காக திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கமைவாக மின்சார சபையினால் தயாரிக்கப்பட்டடுள்ள 2018 -2037 நீண்டகால திட்டத்தின் கீழ் 2020ஆம் ஆண்டளவில் தேசிய மின்சார கட்டமைப்புடன் தொடர்புபடுத்த வேண்டிய 60 மெகா வோல்ட் காற்று மூலமான மின் உற்பத்தி மற்றும் 150 மெகா வோல்ட் சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான கொள்கை கட்டமைப்புக்கு அடிவாக பெறுகை அலுவல்களை முன்னெடுப்பதற்கு மின் சக்தி மற்றும் பதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய சமர்ப்பித்த ஆவணத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# கல்முனை ரோட்டரி கழகத்தின் 18ஆவது தலைவராக பொறியியயாளர் சதீஸ் குமார்



கல்முனை ரோட்டரி கழகத்தின் 18ஆவது தலைவராக பொறியியயாளர் சதீஸ் குமார் அவர்கள் பதவி ஏற்க்கும் நிகழ்வு கல்முனையில் உள்ள ஆசாத் பிளாசா மண்டபத்தில் இடம் பெற்றது.

இவ் வைபவத்தில் கல்முனை ரொட்டறி கழக தலைவர் திருசிதம்பரநாதன் ரோட்டரி கழகம்சார்பில் வரவேற்பு உரை நிகழ்தினார். கடந்த ஆண்டின் தலைவர் திரு சிதம்பரநாதன் அவரதுகாலத்தில், சிறப்பாக சேவை செய்வதட்கு உதவிய தனது குழூஉறுப்பினர்களுக்கு நன்றி கூறி கௌரவித்தார்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகதிருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபை தலைவரும் முன்னாள் திருகோணமலைரொட்டறி கழக தலைவருமான வைத்திய கலாநிதி ஞானகுணாளன் கலந்துகொண்டார்.

இந்த வைபவத்தில் ஏழு திருகோணமலை ரொட்டறி அங்கத்தவர்கள் அருட் தந்தை லக்ஷ்மன் பீரிஸ் அவர்கள் தலைமையில் கலந்து கொண்டனர். இதன்போது கடந்த ஆண்டின் தலைவர் திரு சிதம்பரநாதன் புதிதாக தெரிவான தலைவர் பொறியியயாளர் சதீஸ் குமார்அவர்களுக்கு தலமைப் பதவியை வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.

# மலையகத்தில் தொடரும் போராட்டங்கள்



**பூண்டுலோயா நிருபர்**

மலையகத்தில் இன்று சூடு பிடித்திருக்கும் விடயம் அடிப்படை சம்பளம் 1000 ரூபா கிடைக்குமா என்ற கேள்வி?கிடைக்கும் என உறுதியாக ஒரு சாரார் செயல்பட இது அரசியல் நாடகம் என மற்றொரு சாரார் குற்றம் சுமத்திக்கொண்டு இருக்கின்றனர்.கூட்டு ஒப்பந்தம் மக்களுக்கு நியாயத்தை வழங்குமா?அல்லது அரசியல் வாதிகள் மக்களுக்கு உரிய வேதனத்தை பெற்றுக்கொடுப்பார்களா என முகநூல் விமர்சகர்களும் ஊடகங்களும் தினமும் அவதானித்துக்கொண்டு இருக்கின்றன.

சம்பள உயர்வு கிடைக்க வேண்டுமென மலையகத்தில் அரசியல் ரீதியாகவும் அரசியலுக்கு அப்பாற்பட்டும் பல போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.அந்த வகையில் மலைநாட்டு புதிய கிராமங்கள் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு சமூதாய அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளத்தை பெற்றுக்கொடுத்தே தீருவேன் என உடும்பு பிடியாக அறிக்கைகளை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றார். அந்தவரிசையில் கம்பனிகாரர்களுக்கு அழுத்தத்தை கொடுப்பதற்கும் சம்பளத்தை பெறுவதற்கும் கடந்த திங்கட்கிழமை சங்கிலித்தொடர் போராட்டமொன்றை மேற்கொள்ளுமாறு தொழிலாளர்களுக்கு பணித்ததமைக்கு அமைய மலையகத்தில் பல இடங்களில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.1000 சம்பளம் கொடு அல்லது தோட்டத்தை விட்டு வெளியேறு என்ற தொனிப் பொருளில் அடையாள வேலைநிறுத்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. காலை 8.30 மணிக்கு ஆர்ப்பாட்டம் ஆரம்பமாகி மதியம் ஒரு மணிவரை போராட்டம் நடத்தப்பட்டது.அதுமட்டுமல்லாமல் நகர வர்த்தகர்களையும் வியாபார ஸ்தலங்களை மூடி ஆதரவு அளிக்குமாறு அறிவித்தல் வழங்கியதற்கமைய அன்றைய தினம் வியாபார ஸ்தலங்களும் மூடப்பட்டு தோட்டத்தொழிலாளர்களுக்கும் ஆர்பாட்டத்திற்கும் ஆதரவு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அமைதியான முறையில் யாருக்கும் இடையூறு இன்றி நடைபெற்ற இவ் ஆர்பாட்டத்தில் பெருந்திரளான மக்கள் கலந்துக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# ஆசிரியர் விடுதலை முன்னணிக்கு புதிய அங்கீகாரம்!



**பூண்டுலோயா நிருபர்**

தேசிய சேமிப்பு வங்கியினூடாக ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் கடன்களுக்கு சிபாரிசு செய்ய ஆசிரியர் விடுதலை முன்னணிக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. சமூகத்தின் உயர்வுக்காக ஏணியாக செயற்படும் ஆசிரியர்களுக்கு தொழில் கௌரவம் அளிக்கப்பட்டாலும் பொருளாதார ரீதியில் உடனடியாக பெருந்தொகையை திரட்டிக்கொள்ள முடியாது.வீட்டு கடன், காணி கொள்வனவு,என்பவற்றுக்கு அதிகமான பணம் தேவையாக உள்ளது.

இவற்றை தேசிய சேமிப்பு வங்கியின் ஊடாக பெறலாம். இதற்கான சிபாரிசினை ஆசிரியர் விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் நாதன் பொருளாலர் கங்காதரன் ஊடாக தொடர்பு கொண்டு உங்கள் கடன் வசதிகளை இலகுவாக பெற்றுக்கொள்ளலாம்.

# மலையகத்திற்கும் இலவச அம்பியூலன்ஸ் சேவை

**சுஜீவன்**




இன்று நாட்டின் பல பகுதிகளிலும் அவசர அம்புலன்ஸ் சேவைகள் விஸ்தரிப்பட்டு வருகின்றன. 1990 இற்கு இலவச அழைப்பினை ஏற்படுத்துவதன் மூலம் இவ் அம்புலன்ஸ் சேவையை இலவசமாகவே மக்களுக்கு பெற்றுக்கொள் முடியும்.

அந்த வரிசையில் நுவரெலியா மாவட்டத்திற்கு 7 அம்புலன்ஸ்கள் வழங்கி வைக்கப்பட்டன. இதில் தலவாக்கலை பொலிஸ் பிரிவிற்கும் ஒரு அம்புலன்ஸ் 27 .11 .2018 அன்று கையளிக்கப்பட்டது. ஜனாதிபதி செயலகத்தின் சுவ சரிய பிரிவுக்கு தலவாக்கலை - லிந்துலை நகரசபை தலைவர் திரு அசோக சேபாளவினால் விடுத்த வேண்டுகோளுக்கமைய தலவாக்கலை பொலிஸ் பிரிவிற்கு ஒரு அம்புலன்ஸ் வழங்கப்பட்டுள்ளது.

இதனால் தல்வாக்கலை லிந்துலை திம்புள்ள பத்தனை ஆகிய பொலிஸ் பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளில் வாழும் மக்கள் இவ் அம்புலன்ஸ் சேவையை இலவசமாக பெற்றுக் கொள்ள முடியுமென நகரபிதா தெரிவித்தார். இப்பகுதிகளில் ஏதாவது விபத்துக்கள் ஏற்பட்டு தொலைபேசி ஊடாக 1990 இற்கு அழைப்பினை ஏற்படுத்தி தாம் இருக்கும் இடத்தை சரியாக குறிப்பிடும் பட்சத்தில் அவ்விடத்திற்கு துரித கதியில் அம்புலன்ஸ் வந்து சேரும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இவ் இலவச அம்புலன்ஸ் சேவையை பிரதேச மக்கள் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ளுமாறும் வேண்டுகோள் விடுக்கப்படுகிறது.

# எட்டுமாத குழந்தை சடலமாக மீட்பு

**வவுனியா நிருபர்**

வவுனியா வடக்கின் எல்லைக்கிராமமான ஊஞ்சல்கட்டி பகுதியில் 8 மாதக் குழந்தை கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளது.

நேற்று குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

பிறந்து எட்டுமாதங்களேயான குழந்தையை தந்தைவழி உறவுகாரரான வயதான பெண்மணியிடம் ஒப்படைத்து விட்டு குழந்தையின் தாய் ஆடுமேய்க்கசென்றுள்ளார். தந்தை தொழிலிற்கு சென்றுள்ளார்.

வெளியில் சென்ற தாய் மீண்டும் வந்துபார்த்தபோது வயதானபெண்மணி தனிமையில் இருந்துள்ளார். அவரிடம் குழந்தை எங்கு என கேட்டபோது சரியான பதிலை வழங்கவில்லை. இதனால் குழந்தையை தாய் பல இடங்களில் தேடியுள்ளார். எனினும் குழந்தை கிடைக்கவில்லை. பின்னர் அயலவர்களிற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அனைவரும் குழந்தையை தேடியநிலையில் குழந்தை அருகில்உள்ள கிணற்றினுள் விழுந்திருக்கலாம் என்று சந்தேகம்கொண்டனர்.

கிணற்றில் உள்ளநீரை இறைத்தபோது குழந்தை அதனுள் சடலமாக இருந்தமை கண்டுபிடிக்க பட்டது.

இதனையடுத்து புளியங்குளம் பொலிசாருக்கு தெரியப் படுத்தியதையடுத்து, சந்தேகத்தின் அடிப்படையில் குறித்த வயதான பெணிடம் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த பெண் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்று தெரிவித்த பொலிசார் மேலதிக விசாரனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





**அட்டன் கல்வி வலயத்தின் இஸ்லாமிய தின நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் அட்டன் டிக்கோய நகர சபையின் டிக்கோயா நகர மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் 2018ஆம் ஆண்டு அட்டன் கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்ற இஸ்லாமிய போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. அட்டன் வலய கல்வி பணிப்பாளர் பி.ஸ்ரீதரன் அவர்களின் வழிகாட்டலின் கீழ் இந்த நிகழ்விற்கு கல்வி அமைச்சின் முஸ்லிம் பாடசாலைகளின் அபிவிருத்தி பிரிவு உதவி கல்வி பணிப்பாளர் எம்.ஐ.எம் நௌப்பர்டீன் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார். இதன் போது பல கலை கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றன.**

**படம்: ஆர்.ரஞ்ஜன்**

# புரட்டொப் பகுதி கோவில்களுக்கு உபகரணங்கள் கையளிக்கப்பட்டது



**பூண்டுலோயா நிருபர்**

புரட்டப்பகுதிகளுக்கு உட்பட்ட தோட்ட கோயில்களுக்கு உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

கொத்மலை பிரதேச சபைக்கு உட்பட்ட இத்தோட்டங்களுக்கு கோவில்களுக்கு பொருட்களை கொத்மலை பிரதேச சபை உறுப்பினர் ராஜீவ் காந்தி வழங்கி வைத்தார்.

புரட்டொப் ரஸ்புரூக் பகுதி கோவிலுக்கு 1 லட்சம் பெருமதியான கூரைத்தகடுகள் மற்றும் 50,000பெறுமதியான விநாயகர் சிலை வழங்கப்பட்டதோடு பூச்சிக்கொடை பகுதிக்கு ஒலிப்பெருக்கி வழங்கிவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கொத்மலை பிரதேச சபை உறுப்பினர் ராஜீவ் காந்தி, செல்லமுத்து மற்றும் தோட்ட பொதுமக்கள் இந்நிகழ்வில் கலந்துக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# வெலிகம ரிம்ஸா முஹம்மத் எழுதிய ‘விடியல்’ நூல் அறிமுக விழா

வெலிகம ரிம்ஸா முஹம்மத் எழுதிய ‘விடியல்’ நூல் அறிமுக விழா 2018 டிசம்பர் 02 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 4.15 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பூங்காவனம் இலக்கிய வட்டம் ஏற்பாடு செய்திருக்கும் இந்நிகழ்வு, இலக்கியப் புரவலர் அல்ஹாஜ் ஹாஷிம் உமர் அவர்கள் முன்னிலையில் பேராசிரியர் சபா. ஜெயராசா அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ அமைச்சர் அல்ஹாஜ் ரிசாட் பதியுத்தீன் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார். அத்துடன் விசேட அதிதியாக முன்னாள் கடற்தொழில் நீரியல் வள கிராமிய பொருளாதார அலுவல்கள் துறை பிரதி அமைச்சர் அல்ஹாஜ் எம்.எஸ்.எஸ். அமீர் அலி அவர்கள் கலந்துகொள்ளவுள்ளார். தொழிலதிபர் அல்ஹாஜ் ஏ.ஆர்.எம். அரூஸ் நூலின் முதற்பிரதியைப் பெற்றுக்கொள்ளவுள்ளார்.

கொடைவள்ளல் அஸ்ஸெய்யத் ஹனீப் மௌலானா, ஓய்வு பெற்ற அதிபர் கவிஞர் மூதூர் முகைதீன் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கொழும்பு பல்கலைக்கழக உளவளத்துறை விரிவுரையாளர் அல்ஹாஜ் யூ.எல்.எம். நௌபர், மூஷான் இன்டர்நெஷனல் தலைவர் அல்ஹாஜ் எம். முஸ்லிம் ஸலாஹுதீன், இப்ராஹீமிய்யா கல்லூரி பணிப்பாளர் அல்ஹாஜ் வை.எம். இப்ராஹிம், டாக்டர் அல்ஹாஜ். ஏ.பீ. அப்துல் கையூம் (ஜே.பி.), கலாநிதி யூசுப் கே. மரைக்கார், பன்னூலாசிரியர் கலாபூஷணம் பீ.ரீ. அஸீஸ், அமேசன் கல்லூரி பணிப்பாளர் ஜனாப். இல்ஹாம் மரிக்கார், அஸீஸ் மன்றத் தலைவர் அல்ஹாஜ் அஷ்ரப் அஸீஸ் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்துகொள்வார்கள்.

மௌலவி. காத்தான்குடி பௌஸ் அவர்களின் கிராஅத்துடன் ஆரம்பிக்கவிருக்கும் இந்நிகழ்வில் தர்காநகர் தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளரும் எழுத்தாளருமான யாழ். ஜுமானா ஜுனைட் வரவேற்புரையை நிகழ்த்த வாழ்த்துரைகளை சிரேஷ்ட கலைஞர் கலைச்செல்வன், காப்பியக்கோ டாக்டர் ஜின்னாஹ் ஷரிபுத்தீன், நவமணி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் அல்ஹாஜ் என்.எம். அமீன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளார்கள்.



# ஆயுள் தண்டனை கைதி இல்லற வாழ்வில் ஈடுபடுவதற்காக பிணை



கொலை வழக்கில் சிறையில் உள்ள ஆயுள் தண்டனை கைதி இல்லற வாழ்வில் ஈடுபடுவ தற்காக 2 வாரங்களுக்கு பரோல் வழங்கி சென்னை உயர் நீதிமன் றம் உத்தரவிட்டுள்ளது.

கொலை வழக்கில் கைதான திருநெல்வேலியைச் சேர்ந்த 28 வயதான நபர் தற்போது ஆயுள் தண்டனை கைதியாக கடலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இந்நிலையில் தனது கணவருடன் இல்லற வாழ்வில் ஈடுபட தனக்கு உரிமை உள்ளதால் தனது கணவருக்கு பரோல் வழங்க வேண்டுமெனக் கோரி அவரது இளம் வயது மனைவி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் சி.டி.செல்வம், எஸ்.ராம திலகம் ஆகியோர் அடங்கிய அமர்வு, 'மனிதன் என்பவன் ஒரு சமூக விலங்கு. மனிதனுக்கும் குடும்பம் தேவை. தன்னுடைய உணர்வுகளையும், உணர்ச்சிகளையும் வெளிப்படுத்த வாழ்க்கை துணை தேவை. இல்லற வாழ்வு என்பது ஒவ்வொருவரின் உரிமை. ஆயுள் தண்டனை கைதி என்பதற்காக அந்த உரிமை மறுக்கப்படக் கூடாது.

எனவே வரும் டிச.15 முதல் 29 வரை 2 வாரம் அவருக்கு பரோல் வழங்க வேண்டும். அவர் தப்பிவிடாமல் இருக்க தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும்' என உத்தரவிட்டுள்ளனர்.

# கஜா புயல் நிவாரணம்: ஆமிர் கான் உதவிக்கரம்



தமிழகத்தை மிரட்டிவந்த கஜா புயல் கடந்த 16-ம் தேதி நாகை வேதாரண்யம் இடையே கரையைக் கடந்தது. இதில் நாகை, தஞ்சை, புதுக்கோட்டை மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டன. மேலும் 7 மாவட்டங்களும் பாதிப்புக்குள்ளாகின. கஜா புயல் தாக்கியதால் டெல்டா மாவட்டம், புதுக்கோட்டை மாவட்டத்தில் வரலாறு காணாத பேரழிவு உண்டானது.

30 ஆண்டுகள் அம்மக்கள் பின்னோக்கி சென்றுவிட்ட நிலை ஏற்பட்டுள்ளது. முக்கிய தொழிலான தென்னை, பலா, முந்திரி நெற்பயிர் விவசாயம் அடியோடு அழிந்துப்போனது. லட்சக்கணக்கான தென்னை மரங்கள் அடியோடு சாய்ந்தது.

1 லட்சம் மின்கம்பங்கள் சரய்ந்ததால் மின்சாரம் முழ்மையாக துண்டிக்கப்பட்டு, நிவாரண உதவிகள் கிடைக்காமல் ஆயிரக்கணக்கான குக்கிராமங்களில் மக்கள் இன்றும் வாடும் நிலை உள்ளது. வீடிழந்து உணவின்றி, மின்சாரம், அடிப்படை தேவையின்றி வாடும் மக்களுக்கு இந்தியா முழுதுமிருந்து உதவிக்கரங்கள் நீளுகின்றன.

இந்நிலையில் கஜா புயலில் பாதிக்கப்பட்டோருக்கு உதவுவதற்காக அமிதாப் பச்சன், ஆமீர் கான் உள்ளிட்டோரிடம் பேசியதாக இன்று காலை கமல்ஹாசன் தெரிவித்திருந்தார்.

அதற்கு உடனடியாகச் செவிசாய்த்திருப்பவர் பாலிவுட் கதாநாயகன் ஆமிர் கான், அவர் தன் ட்விட்டரில் கஜா புயல் தமிழ்நாட்டில் ஏற்படுத்திய பேரழிவு குறித்து நான் கடும் துயரமடைந்தேன். துயரத்தில் வாடுபவர்களுக்கு, நம் சகோதர சகோதரிகளுக்கு உதவ நாம் அனைவரும் ஒன்று கூடுவோம். எந்த விதத்திலாவது அவர்கள் துயர் துடைக்க பங்களிப்பு செய்ய முயற்சி செய்வோம் என்று ட்வீட் செய்துள்ளார். இதனை அங்கீகரித்து கமல்ஹாசனும் நன்றி ஆமிர் கான் ஜி. உங்களைப் போன்றவர்கள் பல வழிகளில் நாம் 'ஒரே நாடு' என்பதை உணரச் செய்கிறீர்கள் என்று பதில் ட்வீட் செய்துள்ளார்.

# ரோஜாவின் குற்றச்சாட்டு




ஆந்திர அரசின் சார்பில் என்.டி.ஆர்.கேண்டீன் திட்டத்தில் லட்சக்கணக்கில் ஊழல் நடப்பதாகவும், அதனால் தனது நகரி தொகுதி மக்களுக்கு ரூ.4க்கு இரு வேளையும் உயர்தரமான உணவு வழங்குவதாகவும் ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் எம்எல்ஏ ரோஜா தெரிவித்தார்.

ஆந்திர அரசு சார்பில் மாநிலத்தில் உள்ள முக்கிய நகரங்களில் என்.டி.ஆர். கேண்டீன் தொடங்கப்பட்டுள்ளது. இங்கு ரூ. 5-க்கு உணவு வழங்கப்படுகிறது. தமிழகத்தின் அம்மா உணவக திட்டத்தை முன்னோடியாக கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

அதேசமயத்தில், எதிர்க்கட்சியான ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் கட்சி எம்எல்ஏ ரோஜா, தமது சொந்த அறக்கட்டளை சார்பில் இம்மாதம் 17-ம் தேதி முதல் நகரி தொகுதி மக்களுக்கு ரூ. 4-க்கு உணவு வழங்கி வருகிறார். இதனை இத்தொகுதி மக்கள் வெகுவாக பாராட்டி வருகின்றனர்.

இதுகுறித்து ரோஜா கூறியதாவது:

ஆந்திர அரசின் என்.டி.ஆர் கேண்டீன் திட்டத்தில் லட்சக்கணக்கில் ஊழல் நடந்து வருகிறது. மேலும், ஆந்திரா முழுவதிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படவில்லை. தரமான அரிசி இதில் பயன்படுத்தப்படுவதில்லை. ரேஷன் அரிசி மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. இதிலும் ஊழல் நடைபெறுகிறது.

ஆனால், நான் தொடங்கியுள்ள ஒய்.எஸ்.ஆர். கேண்டீனில், தரமான அரிசி, பருப்பு, எண்ணெய் வகைகள் பயன்படுத்தப்படுகின்றன. தினமும் 500 முதல் 600 வரையிலான ஏழை மக்கள் இங்கே உணவருந்துகிறார்கள்.

அரசின் நிதியுதவி ஏதுமில்லாமல் ஒரு எம்எல்ஏவால் அவரது தொகுதி மக்களுக்கு தரமான உணவு வழங்க முடிகிறது என்றால், அரசால் ஏழை எளிய மக்களுக்கு எவ்வளவு நன்மைகள் செய்ய முடியும் என்பதை தெரியப்படுத்தவே இத்திட்டத்தை தொடங்கினேன். இவ்வாறு ரோஜா தெரிவித்தார்.

# அனுமன் தலித் அல்ல; பழங்குடியினர்: என்சிஎஸ்டி தலைவர் பேச்சால் அதிர்ச்சி



கடவுள் அனுமன் தலித் அல்ல, அவர் பழங்குடியின வகுப்பைச் சேர்ந்தவர் என்று தேசிய பழங்குடி ஆணையத்தின் தலைவர் நந்த குமார் தெரிவித்தார்.

லக்னோவில் நேற்று நிகழ்ச்சி ஒன்றில் தேசிய பழங்குடி ஆணையத்தின் தலைவர் நந்த குமார் பங்கேற்றார். அப்போது அவர் அனுமன் குறித்துப் பேசுகையில், கடவுள் அனுமன் குறித்து பல்வேறு பேச்சுக்கள் வருகின்றன. ஆனால், அதைத் தெளிவுபடுத்த வேண்டும். கடவுள் ராமரின் படையில் கழுகுகள், கரடிகள், குரங்கள் இருந்தன என்று மக்கள் எண்ணுகிறார்கள்.

ஓரான் பழங்குடியின வகுப்பினர் பேசும் குருக் மொழியில் குரங்குகள் வனர் கோத்திரத்தைச் சார்ந்தவை. கன்வார் பழங்குடி வகுப்பில், அனுமன் கிளான் கோத்திரத்தைச் சேர்ந்தவர். அதே போல, பல்வேறு பழங்குயின வகுப்பில் கித் அல்லது கழுகு என்பது கோத்திரமாக கருதப்படுகிறது. ஆகவே கடவுள் ராமரின் படையில் பழங்குடியினஅதிகமாக இருந்து போரில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவித்தார்.

சில நாட்களுக்கு முன் ராஜஸ்தான் மாநிலம் ஆல்வார் மாவட்டத்தில் உ.பி. முதல்வர் ஆதித்யநாத் தேர்தல் பிரச்சாரம் செய்தார். அப்போது அவர் பேசுகையில், அனுமன் ஒரு காட்டுவாசி, தலித் என்று கூறி பரபரப்பை ஏற்படுத்தி இருந்தார். இந்த வார்த்தைக்கு அவர் 3 நாட்களில் மன்னிப்பு கேட்க வேண்டும் எனக்கூறி ராஜஸ்தானில் உள்ள வலதுசாரி இந்து அமைப்பு ஒன்று நோட்டீஸ் அனுப்பியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# இளைஞர்களுக்கு வலை வீசும் போதை பெண்கள்; தட்டிக்கேட்ட பெண் போலீசுக்கு அடி,உதை, ஆடை கிழிப்பு

திண்டுக்கல் காமராஜர் பேருந்து நிலையத்தில் மாநகராட்சியின் பயணிகள் தங்கும் விடுதி உள்ளது. இந்த பயணிகள் தங்கும் விடுதியில் பெரும்பாலும் பயணிகள் தங்குவதில்லை. ஆனால் மற்ற தொழிலுக்கு தான் முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்கள் . அது போல் நகரில் பல தங்கும் விடுதிகளிலும் பாலியல் தொழில் தான் கொடிகட்டிப் பறந்து வருகிறது.

இந்த நிலையில்தான் கடந்த சில தினங்களுக்கு முன்பு பஸ் ஸ்டாண்டு பயணியர் தங்கும் விடுதி அருகே பாலியல் தொழிலில் ஈடுபட்டு வரும் காயத்ரி என்ற விலை மாது போதை மப்பில் அப்பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த டூவீலரில் ஏறி உட்கார்ந்து கொண்டு, போகும் வரும் இளைஞர்களுக்கு வலை வீசி வந்தார். இந்த விஷயம் பஸ்நிலையத்தில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த பெண் காக்கியான செல்விக்கு (பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது) தெரியவே உடனே டூவீலரில் உட்கார்ந்து இருந்த விலை மாது காயத்திரியை கீழே தள்ளி விட்டு படார் என ஒரு அறைவிட்டார். இதனால் டென்ஷன் அடைந்த போதை மப்பில் இருந்த விலைமாது காயத்திரியோ, பெண் போலீஸ் என்று கூட பார்க்காமல் பதிலுக்கு அடித்து விட்டார்.

இதனால் ஆத்திரம் அடைந்த அந்த பெண் காக்கியோ அந்த விலை மாது சேலையை உருவி வீசி எரிந்தார். உடனே அந்த விலை மாது, போலீசின் யூனிபார்மை கிழித்து விட்டு ஓடிவிட்டார். அதை கண்டு அந்த பெண் போலீசான செல்வி அசிங்கப்பட்டு தலைகுனிந்தவாறே அருகே உள்ள பஸ் ஸ்டாண்ட்டு காவல் நிலையத்திற்கு சென்றார். இப்படி பெண் போலீசே கிழிந்த அரை குறை யூனிப்பார்முடன் சென்றதை கண்டு பஸ்ஸ்டாண்டில் சில கடைக்காரர்களே வாய் அடைத்து போய்விட்டனர். அப்படி இருந்தும் கூட அந்த விலை மாது மேல் எந்த ஒரு நடவடிக்கையும் காக்கிகள் எடுக்காததால் மீண்டும் அந்த விலை மாது பஸ்ஸ்டாண்டுக்கு இளைஞர்களை தன் வலையில் சிக்கவைத்து சீரழித்து வருகிறார். இந்த காயத்திரி போலவே இருபதுக்கு மேற்பட்ட விலை மாதுகள் பஸ்ஸ்டாண்ட்டில் உள்ள மாநகராட்சியின் தங்கும் விடுதி அருகிலேயே முகாம் போட்டு பலான தொழிலுக்கு இளைஞர்களையும், பெரியவர்களையும் இழுத்து வருவதால் வெளியூர்களிலிருந்து வருபவர்கள் இவர்களிடம் சிக்கி பணத்தை பறிகொடுப்பதுடன் . மட்டுமல்லாமல் எய்ட்ஸ் நோய்க்கும் ஆளாகிவருகிறார்கள். அந்த அளவுக்கு இந்த தொழில் பஸ்ஸ்டாண்டு உள்பட நகரில் பல பகுதிகளில் கொடி கட்டி பறந்து வருகிறது.

# ஏழு மாதங்கள் மலேசிய விமான நிலையத்தில் இருந்த சிரிய அகதி



விசா காலாவதியாகிவிட்ட நிலையில் மலேசிய விமான நிலையத்தில் தங்கி இருந்த சிரிய அகதி ஒருவர் 7 மாதங்களுக்குப் பிறகு கனடா அனுப்பி வைக்கப்பட்டார்.

சிரியாவைச் சேர்ந்த ஹசன் அல் கோடார் என்பவர் மலேசியாவுக்கு சுற்றுலா வந்தார். கடந்த மார்ச் மாதம் வேறு நாட்டுக்குச் செல்ல முயன்ற அவரை மலேசியாவின் கோலாலம்பூர் விமான நிலைய அதிகாரிகள் தடுத்து நிறுத்தினர். ஹசனின் விசா காலம் முடிந்துவிட்டதாகத் தெரிவித்து அவருக்கு அனுமதி மறுத்தனர். இதனைத் தொடர்ந்து ஹசன் விமான நிலையத்திலேயே தனித்திருக்கப் பட்டார்.

மேலும், புதிய விசா கிடைக்கும் வரை விமான நிலையத்திலேயே தங்க வைக்கப் பட்டார் ஹசன். அவர் ஏழு மாதங்கள் வரை விமான நிலையத்திலேயே காலை முதல் இரவு வரையிலான நேரங்களைக் கழித்தார். இந்த நிலையில் ஏழு மாதங்களுக்குப் பிறகு தற்போது இந்த வாரம் கனடா சென்றடைந்தார்.

விமான நிலையத்திலிருந்து ஹசன் வெளியே வர உதவிய கொலம்பிய முஸ்லிம் சங்கம் கூறும்போது, நாங்கள் ஹசனின் பிரச்சினைளைக் கவனித்தோம். அவர் மலேசிய விமான நிலையத்திலேயே தங்கி இருப்பதாகவும்,வேறு எங்கும் செல்ல அனுமதி இல்லாமல் இருக்கிறார் என்றும் எங்களுக்குத் தெரியவந்தது. அதனைத் தொடர்ந்து அவருக்கு உதவ ஏற்பாடு செய்தோம் என்றனர்.

இதனைத் தொடர்ந்து ஹசனின் ஆவணங்கள் தயாராகி அவர் கனடா அனுப்பப்பட்டார்.

37 வயதான ஹசன் மீண்டும் சிரியா செல்ல மறுத்துள்ளார்.

இதுகுறித்து ஹசன் கூறும்போது, எனக்கு சிரியா செல்ல விருப்பமில்லை. நான் ராணுவத்தில் சேர விரும்பவில்லை. நான் முதலில் கனடாவில் இறங்கிய போது அங்கு மழை பெய்து கொண்டிருந்தததது. மீண்டும் சாலைகளில் நடப்பது எனக்கு சாதாரணமான விஷயம் தான். ஆனால், என்னைப் பொறுத்தவரை இது சுதந்திரத்தின் சுவாசம் என்றார்.

# சேதமடையும் சீனப் பெருஞ்சுவர்



உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்றான சீனப் பெருஞ்சுவர் சேதமடைந்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உலக அதிசயங்களில் பிரம்மாண்டமான ஒன்று சீனப் பெருஞ்சுவர். சீனப் பேரரசர் கின் ஷி ஹுவாங்கின் யோசனையின் பேரில் இந்தப் பெருஞ்சுவர் கிழக்கே ஹெபேய் மாகாணத்தில் உள்ள ஷாங்ஹாய்குவானில் தொடங்கி மேற்கே லோப்நுர் வரையில் 8,850 கி.மீ. தூரத்துக்குப் பிரம்மாண்டமாய் நீளும்.

சுமார் 2,000 ஆண்டுகள் பழமை வாய்ந்த பல சிறப்புகளைப் பெற்ற சீனப் பெருஞ்சுவர் தற்போது சேதமடைந்து வருவதாக செய்திகள் வெளியாகி உள்ளன.

இடியும் நிலையில் இருக்கும் பகுதிகள் அவ்வப்போது புதுப்பிக்கப்பட்டு வந்தாலும் சுவரின் 30% சதவீதம் பலத்த சேதமடைந்துவிட்டதால் இதனைச் சரி செய்யும் பணியில் சீன அரசு ஈடுபட்டுள்ளது.

மேலும், சீனப் பெருஞ்சுவரின் கட்டுமானங்கள் மிகவும் சிக்கலான முறை என்பதால் அதனை மிகவும் நுட்பமான முறையிலேயே அணுக வேண்டும் என்றும், அதற்காக முதற்கட்ட நடவடிக்கையாக பாதிக்கப்பட்ட இடங்களில் ட்ரோன்களைக் கொண்டு அளவெடுக்கும் பணி நடந்து வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சீனப் பெருஞ்சுவரின் இந்தப் பாதிப்புக்கு மாறிவரும் நவீன முறைகளே காரணம் என்று தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் வருத்தம் தெரிவித்துள்ளனர்.

# நியூசிலாந்து கடற்கரையில் இறந்து கரை ஒதுங்கிய 51 திமிங்கிலங்கள்






நியூசிலாந்தின் ஹன்சன் வளைகுடாப் பகுதியில் உள்ள சத்தாம் தீவில் 51 'பைலட்' இன திமிங்கலங்கள் இறந்து கரை ஒதுங்கியுள்ளன.

நியூசிலாந்தின் ஹன்சன் வளைகுடாப் பகுதியில் உள்ள சத்தாம் தீவில், 80 முதல் 90 வரையிலான பைலட் வகை திமிங்கிலங்கள் கரை ஒதுங்கியது.

அவற்றில் 30 முதல் 40 வரையிலான திமிங்கிலங்கள் தாமாகவே மீண்டும் மிதந்து கடலுக்குள் சென்று விட்டன. ஆனால் மீதமுள்ள 51 திமிங்கிலங்கள் இறந்து கரை ஒதுங்கி விட்டன.

திமிங்கிலங்களின் இறப்புக்கு சரியான காரணம் அறியப்படவில்லை. நோய், பாதை குழப்பம், நிலவியல் சார்ந்த காரணங்கள், வேகமாக வீழும் அலை, ஏதேனும் எதிரிகளால் துரத்தப்படுதல் அல்லது மோசமான காலநிலை ஆகியவை காரணமாக இருக்கலாம் என நியூசிலாந்து இயற்கை வள பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் நியூசிலாந்தின் ஸ்டீவர்ட் தீவில் 145 பைலட் வகை திமிங்கிலங்கள் இதே போலவே இறந்து கரை ஒதுங்கியது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க முன்னாள் அதிபர் ஜார்ஜ் ஹெர்பர்ட் வாக்கர் புஷ் காலமானார்

அமெரிக்க முன்னாள் அதிபர் ஜார்ஜ் ஹெர்பர்ட் வாக்கர் புஷ்(94) உடல் நலக்குறைவால் நேற்று காலமானார்.

பராக் ஒபாமாவுக்கு முன்னர் அமெரிக்காவை ஆண்ட முன்னாள் அதிபர் ஜார்ஜ் டபிள்யூ. புஷ்ஷின் தந்தையும் அந்நாட்டின் மற்றொரு அதிபருமான ஜார்ஜ் ஹெர்பர்ட் வாக்கர் புஷ் (ஜார்ஜ் ஹெச்.டபிள்யூ. புஷ்) அந்நாட்டின் அதிபராக கடந்த 1989 முதல் 1993-ம் ஆண்டுவரை பொறுப்பு வகித்தவர். அதற்கு முன்னதாக 1981 முதல் 1989 வரை 8 ஆண்டுகாலம் துணை அதிபராகவும் இவர் இருந்துள்ளார்.

இவரது மகனான ஜார்ஜ் டபிள்யூ. புஷ், அந்நாட்டின் அதிபராக 2001 முதல் 2008-ம் ஆண்டுவரை இருமுறை அந்நாட்டின் அதிபராக பதவி வகித்துள்ளார்.

இந்நிலையில், வயோதிகம் சார்ந்த காரணங்களால் வீட்டில் ஓய்வெடுத்துவந்த ஜார்ஜ் ஹெச். டபிள்யூ. புஷ்(94) நிமோனியா எனப்படும் கபவாதம் சார்ந்த பிரச்சனைகளால் பாதிக்கப்பட்டிருந்தார்.

கடந்த ஆண்டு கடுமையான உடல்நலக் குறைவால் ஹூஸ்டன் நகரில் உள்ள மெத்தடிஸ்ட் மருத்துவமனையில் சுமார் 15 நாட்கள் சிகிச்சைபெற்ற அவர் ஓரளவுக்கு குணமடைந்து வீடு திரும்பினார்.

இந்நிலையில், முன்னாள் அதிபர் ஜார்ஜ் ஹெர்பர்ட் வாக்கர் புஷ் நேற்று காலமானதாக அவரது செய்தி தொடர்பாளர் அறிவித்துள்ளார். அவரது இறுதி சடங்குகள் தொடர்பான விபரங்கள் விரைவில் அறிவிக்கப்படும் எனவும் அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த்தந்தி
ஞாயிற்றுக்கிழமை 02.12.2018
இல. 146,டோசன் வீதி, கொழும்பு2
தொலைபேசி: 0114369412 பக்ஸ்: 0114641294
மின்னஞ்சல்: thamilthanthi@gmail.com

## தமிழரின் அரசியல் தலைவர்கள் விழித்துவிட்டார்கள்

தமிழ் மக்களின் தலைவர்கள் சகல அரசாங்கங்களும் தங்கள் இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்காக மட்டுமே பயன்படுத்தி வந்துள்ளனர் என ஸ்ரீலங்கா ஜனாதிபதி சமீபத்தில் கருத்துவெளியிட்டுள்ளார். சமீப காலமாக தமிழ் மக்களின் பிரதிநிதிகள் எனத் தம்மை அழைப்பவர்களில் சிலர், தங்கள் இருப்பை தக்கவைத்துக் கொள்வதற்காக மாத்திரமே தமிழ்மக்களைப் பயன்படுத்தியுள்ளனர் என்பதும் மறைக்க முடியாத உண்மை. இணக்க அரசியல் மூலம் சுயலாப அரசியல்நடத்திவந்த இவர்கள், நல்லாட்சி அரசு தமிழர்களுக்கான காத்திரமான நிரந்தரத் தீர்வினை வழங்குவர் என பறைசாற்றியபோது, மீண்டும் மீண்டும் ஏமாறாதே, ஏமாற்றாதே என்ற கோசம் தமிழர் மனங்களில் ஓங்கி ஒலித்தது. சிங்கள அரச இயந்திரத்தின் நிலையினையும், வார்த்தைப் பிரயோகங்களையும்,நடவடிக்கைகளையும் உற்று நோக்கிய பாமரமக்களும் ஏமாற்று நடவடிக்கையினை தெள்ளத்தெளிவாக அறிந்தபோது, தமிழ் அரசியல் மேதாவிகள் மாத்திரம் தீர்வு வரும், தீர்வு வரும்... என மக்களிடையே அரசியல் பேசித்திரிந்தனர். எதிர்க்கட்சி என்னும் நிலையில் கூட எதிர்த்தது என்ன? அல்லது மக்களுக்குகிடைத்து என்ன? தமிழரின் அனைத்து அபிலாசைகளையும் மீறி, நல்லாட்சி அரசின் அனைத்துக்கும் ஆமோதித்த நிலையிலும், கிடைக்கப்பெற்ற பலன் என்ன? இன்று ஆட்சி அஸ்தமிக்கும் காலத்தில்... நல்லாட்சியும் ஏமாற்றி விட்டது என்ற புலம்பல். ஏமாற்றியது நல்லாட்சியல்ல... புலம்புபவர்களே என்பதும் மக்களுக்கு நன்று தெரியும்!

தமிழர் தாயகப் பகுதி மிகவும் வேகமாக சிங்களக் குடியேற்றவாதிகளால், தமிழரின் வாழ்வாதாரங்கள், வளங்கள் தொடர்ச்சியாக ரண்டப்பட்டுக்கொண்டிருக்கும் நிலையில், தமிழரின் அடுத்த சந்ததி திட்டமிட்ட சிந்தனைச் சிதைப்புக்குள்ளும், சீர்கேடுகளுக்குள்ளும் சிக்கிவரும் சூழ்நிலையில், போரின் வடுக்களோடும் வலிகளோடும் உறவுகள் தினம் தினம் அல்லலுறும் நிலையில், வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டவர்களின் நிலை இன்னமும் தெரியாத நிலையில இப்படியாகஅடுக்கிக்கொண்டு போகக்கூடிய தமிழரின் நிலைகளுக்கு தீர்வுகள் பெறுவதற்குப்பதிலாக. மக்கள் புரட்சி வெடிக்கட்டும் என ஒட்டுமொத்த மக்களின் உணர்ச்சிகளையும் நெருப் ஒபாகித் தன்னையே மக்களுக்கு கொடையாக்கிய தியாக தீபத்தின் நினைவு நிகழ்வுகளை நாம் மட்டுமே நடத்த முடியும் என்றும் ஏனையவர்கள் நினைவேந்தல்களை மேற்கொள்ளக்கூடாது என்றும் தடைஉத்தரவுபோடும் அளவிற்கு சில அரசியல் தலைவர்கள் தங்கள் சுயஇலாப அரசியல் முகங்களைத் துணிந்து காட்டத் தொடங்கிவிட்டனர்.

ஸ்ரீலங்கா அரசால் தமிழர் பகுதிகளில் முன்னெடுக்கும் அபிவிருத்திகள் கூட, சிங்களக் குடியேற்றங்களுக்காகவும், வளச் சுரண்டல்களுக்காகவும் என்பதை முற்றிலும் உணராது இன்னமும் இணக்க அரசியல் மூலம் இருப்புகளைத் தக்கவைக்கலாம் என எண்ணும் சில தலைவர்களுக்கு, மக்கள் மனங்களில் குமுறும் உணர்ச்சிப் பிழம்புகளின் வலிமை தெரியவில்லை. மக்களின் அபிலாசைகளை வென்றெடுக்க,நிரந்தரதீர்வினைப் பெற்றெடுக்க முன்னெடுக்கப்படும் பயணத்தில்,மக்களுடன் ஒன்றிணைந்து பயணிக்கும் உண்மையான அரசியல் பிரதிநிதிகளையே இனிவரும் காலங்களில் மக்களின் வாக்குகள் தாங்கும். மக்கள் விழித்துவிட்டார்கள்... அரசியல் தலைவர்கள் விழித்துவிட்டார்கள்.

முள்ளிவாய்க்காலில் ஆயுதங்கள்மௌனிக்கப்பட்டபின்னர், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையினை அரசியல்நீரோட்டத்தின் மூலம் வென்றெடுக்கவேண்டும்... கொள்கை தமிழரின் அரசியல் அபிலாசைகளை வென்றெடுக்க தமிழர் தரப்பு அரசியல் தலைவர்கள், தமிழ் அரசியல் கட்சிகள் அமைத்து சிங்கள பேரினவாத அரச இயந்திரத்துடன் அரசியல் புரியவேண்டும்.

செயல்முறை ஒரே குறிக்கோளுடன் செயற்படும் அரசியல்தலைவர்கள் ஒன்றிணையாமல், ஒவ்வொருவரும் தனித் தனி அரசியல் கட்சிகள் அமைத்து, தனிமனித அரசியல் செய்ய முனைகின்றார்கள். குழப்பம் தமிழரின் அரசியல் அபிலாசைகளுக்காக முழுமையாக தங்களை அர்ப்பணித்து இயங்கும் பக்கம் ஒன்றாகவும், தமிழர்பிரச்சனைகளை சுயலாப அரசியலுக்காக, பேரினவாத அரச இயந்திரத்தின்பொம்மைகளாகஇயங்கும் பக்கம் ஒன்றாகவும் பிரிந்தால் கூட , இரு தெளிவான பிரிவுகளே.

அனால் இங்கு சிதறடிக்கப்பட்ட கண்ணாடிச் சிதறல்கள்போல் பிளவுபட்டு காணப்படும் அரசியல் சந்தை,எவ்வாறு தமிழர்களின் பிரதிநிதி என்றுதன்னை அடையாளப்படுத்தும் ? தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளைமுன்னிறுத்தி அரசியல் செய்யும் தலைவர்கள், கொள்கை ரீதியில் உடன்பட முடியாமல் பிரிந்துபுதிதாக அரசியல் கட்சிகள் தொடங்கி, பின்னர்மக்களின் நலன்களுக்காக தேர்தல்காலப்பகுதியில் ஒன்றிணைந்துகூட்டணிகளாக போட்டியிடுவது எவ்வாறுஎன்பது மக்கள் மத்தியில் புரியாதபுதிராகவே உள்ளது.

ஆயிரமாயிரம் உறவுகளின் ஈகத்தின்முற்றுப்பெறாத வேட்கையே இன்று தொடரும்அரசியல் என்பதனை முற்றும் உணர்ந்து,தமிழர்களின்அரசியல் அபிலாசைகளை வென்றெடுக்க முற்றிலும் தங்களை அர்ப்பணித்தவர்கள் ஒரு குடையின் கீழ், ஒருசக்தியாக, ஒரு குரலாக இணையவேண்டும் என்பது ஒட்டுமொத்த தமிழ் பேசும் மக்களின் அவாவாக உள்ளது. இல்லாதுபோனால் சிங்கள அரச இயந்திரத்தின் கைப்பொம்மைகளே தமிழரின் பிரதிநிதிகள் என பறைசாற்றி (மாத்திரம்) திரிவர்.

# போலி வாக்குறுதிகளும் தொடர் ஏமாற்றமும்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கந்த ஒக்டோபர் மாதம் 26ம் திகதி, ஆரம்பித்து வைத்த குழப்பம், முழுநாடும் உட்பட அரசதுறையில் ஒவ்வொரு கட்டமைப்பையும் பிளவுபடுத்தி வருவதுடன் அரசியலில் ஸ்திரமற்ற தன்மையை மேலும் வலுப்படுத்தியே வருகின்றது. நாட்டில் யார் பிரதமர் என்றாலும் ஜனநாயகம் தோல்வி காணமுடியாது. ஜனநாயகத்தை பணத்திற்கும், அதிகாரத்திற்கும் அடமானம் வைத்தால் எதிர்கால



சந்ததிகள் மிகவும் மோசமான பின்னடைவுகளையே எதிர்கொள்ள வேண்டி ஏற்படும். ஜனநாயகம் உயிரோடு இருந்தால் நாட்டுப் பிரஜைகள் குறிப்பாக சிறுபான்மை மக்களினால் நிம்மதியாக அவர்களின் உரிமைகளை பெற்று வாழமுடியும். இந்நிலைக்கு மத்தியில் இன்று தமிழ் முஸ்லிம் கட்சிகள் தங்களது பாராளுமன்ற உறுப்பினர்களை பாதுகாத்துக் கொள்வதில் மிகப்பெரிய சவாலை எதிர் கொண்டுள்ளது. ஏனெனில் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களை தமது பக்கத்திற்கு மாற்றிக்கொள்வதற்கு அதிக பிரயத்தனமும் விலையும் வழங்கப்படுகின்றன. தற்போதைய ஆட்சியாளர்களினால் (குறிப்பான எஸ்.பி.திசரநாயக்கவினால் தேவைப்பட்டால் முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆகிய கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களையும் எங்களனால் எடுத்துக்கொள்ள முடியுமென்று பகிரங்கமாக தெரிவித்துள்ளமையானது சிறுபான்மை கட்சிகளை உடைத்து தமது பெரும்பான்மையினை பெற்றுக்கொள்ள முடியுமென்ற நிலையில் தமிழ் முஸ்லிம் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களை மலினமாக கணிப்பீடு செய்வதாகவே அமைந்துள்ளது.

பதவிக்கும், பணத்திற்கும் ஆசைப்பட்டவர்கள் தமிழ், முஸ்லிம் சமூகங்களில் அரசியல் பிரதிநிதிகளாக இருப்பதுதான் தற்போது இரு சமூகத்திற்கும் இருக்கின்ற மிகப்பெரிய சாபக்கேடு என்றே குறிப்பிடலாம். கடந்த மூன்றரை ஆண்டுகளாக தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணப்படவில்லை. அதனால்தான் புதிய பிரதமரை நிமித்தேன் என்று அண்மைக்கால அரசியல் குழப்பங்களுக்கு தற்போது புதுக்காரணமொன்றை முன்வைக்க ஆரம்பித்திருக்கின்றார் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி என்பதால் நான் தனித்துயொரு தீர்மானத்தினை எட்டிவிட முடியாது. பாராளுமன்றமும் எமக்கு துணை நிற்க வேண்டும் கடந்த மூன்றரை ஆண்டுகளாக இது நடக்கவில்லை அதனால் புதிய பிரதமருடன் நான் இணைந்து செயற்படுவோம். என அவர் கூறிப்பிட்டிருந்தார் மூன்றரை ஆண்டுகளாக ஜனாதிபதியாகவிருந்து எதைச் செய்தீர்கள் என கேள்வி எழுப்புவர்களின் வாயை அடைப்பதற்கும் எதிர்காலத்தில் தமிழர்களின் ஆதரவை பெறுவதற்கும் ஒரு அரசியல் வாதியாக ஜனாதிபதி இப்படித்தான் பேச வேண்டும். சிங்கள தலைமைகள் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இதுபோன்று நடந்து கொள்வது ஒன்றும் அதிசயமான விடயமல்ல என அரசியல் வ்டரங்கள் குறிப்பிட்டு வருகின்றன.

ஆளும் கட்சியிலும், எதிர்கட்சியிலும் உள்ள இரண்டு பிரதான சிங்கள தலைவர்களுக்கு இடையில் ஒரு நிகழ்வு ஊடாட்டம் எப்போதும் இருந்து கொண்டே இருக்கும். ஒருவர் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணப் போவது போன்று பாசாங்கு செய்து கொள்வார். மற்றவர் அதற்கு குறுக்கே தடைபோடுவார். ஒருவர் தீர்வை முன்வைத்தால், உடன்பாட்டை செய்துகொண்டால் மற்றவர் அதனை எரிப்பார் அல்லது அதனை கிழித்துப்போடுவார். இல்லையேல் கிழித்துப்போடுமாறு பாதயாத்திரை செல்வார். பண்டாரநாயக்க, டட்லி சேனநாயக்க, ஜே.ஆர். ஜெயவர்த்தன, ஆர்.பிரமதாஸ, சந்திரிக்கா குமாரங்க, மகிந்த ராஜபக்ச தற்போது மைத்திரிபால சிறிசேன அவருடன் ஆட்சி செய்த ரணில் விக்ரமங்க என்று இந்த ஊடாட்டம் தொடர்ந்து கொண்டே வருகின்றது.

எதிர் எதிர் நிலையில் இருக்கும் தலைவர்கள்தான் மாறுகின்றனரே தவிர, அவர்களுக்கிடையிலான உறவு நிலையும் தமிழர் பிரச்சினையின் தீர்வு ஒன்றை எட்டுவதனை தடுக்கின்ற மானோபாவமும் மாறவில்லை. அதுபோலதான் முன்னைய அரசாங்கம் செய்த தவறிவிட்டதென்று ஜனாதிபதி நியாயம் கூறி தப்பிக்க முயல்வதனையும் குறிப்பிடலாம். கடந்த ஆட்சியில் இதனை ரணில் விக்ரமங்கவும் கூறினார். சந்திரிக்காவும் கூறினார். மைத்திரிபால சிறிசேனவும் இதையே கூறியிருந்தார். மகிந்த ராஜபக்ச போரை வெற்றிகொண்டார் ஆனால் அமைதியை வெற்றிகொள்ளவில்லை அதனையே நாங்கள் செய்யப்போகின்றோம் என்பதனையே நல்லாட்சியில் பேரில் இவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் கடைசியில் என்ன நடந்தது. எதை செய்து முடித்தார்கள்? இப்போது அவர்களுக்குள் முரண்பாடு முற்றிவெடித்துவிட்ட நிலையில், மூன்றரை ஆண்டுகளாக தமிழர் பிரச்சினையை தீர்க்க ரணில் விக்ரமசிங்கவின் அரசாங்கம் எதையும் செய்யவில்லை. அதனால்தான் புதிய பிரதமரை நியமித்தேன் எனக்கூறுவதில் என்ன நியாயம் உள்ளது.

சிங்களத் தலைவர்களை தமிழர்கள் நன்றாகவே புரிந்து கொள்கின்றார்கள். அவர்கள் காலத்திற்குக் காலம் இப்படித்தான் செயற்படுவார்கள், செயற்பட்டு வந்திருக்கின்றார்கள்

ரணில்விக்ரமசிங்கவை நீக்கியதற்கும் புதிய பிரதமராக மகிந்த ராஜபக்சவை நியமித்தமைக்கும் இதுவரை பல காரணங்களை ஜனாதிபதி கூறிவிட்டார். இதன்போது சரத்பொன்சேகவும் தொடர்பட்டிருந்த கொலைச்சதித் திட்டத்தினை மூடிமறைக்க முற்பட்டதால்தான் பதவி நீக்கம் செய்தேன் என்று நாட்டு மக்களுக்கு அன்று உரையாற்றிய போது கூறினார். மேலும் ஜனமகிய பேரணியில் இந்தியாவுடன் எனக்கு பகையை ஏற்படுத்தினார் ரணில் என்றார். ரணிலுடன் தன்னால் பணியாற்ற முடியவில்லையென்றும் அதனால் சபாநாயகரை பிரதமராக பதியேற்குமாறு எட்டு மாதங்களுக்கு முன்னமே அழைத்தேன் எனவும் கூறியிருந்தார். ஆனால் தற்போது தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாண தவறியதால்தான் புதிய அரசாங்கத்தை அமைத்தேன் என்கிறார். இதுபோல ஜனாதிபதி இன்னும் பல காரணங்களை எதிர்வரும் நாட்களில் கூறும் வாய்ப்புக்களும் உள்ளன. அவர் எத்தனை காரணங்களையாவது கூறிவிட்டு போகட்டும். ஆனால் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டு அந்த சமூகத்தை குறிப்பாக மீண்டும் ஒருதடவை தமிழர்களை ஏமாற்ற முயற்சிப்பதுதான் அபத்தமானது.

அடுத்த தீபாவளிக்குள் பிரச்சினைக்கு தீர்வுகாண நடவடிக்கை எடுப்பதாகவும்

**நக்கீரர்**

கடந்த தீபாவளி நிகழ்வின் போது வாக்குறுதி கொடுத்திருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அரசாங்கமே மூன்று ஆண்டுகளில் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண தவறியது. என்று குழப்பத்தை ஏற்படுத்திய அவர், அதில் தனக்குள்ள பங்கையும், பொறுப்பையும் தவறையும் ஏற்றுக்கொள்ள தயாராகவில்லை என்பதை அவரது கருத்துக்கள் வெளிப்படுத்துகின்றன.

ஜனாதிபதி இப்போதுள்ள பிரச்சினை தமிழர்களுக்கான அரசியல் தீர்வோ, அதனை அடுத்த தீபாவளிக்கும் அடைய வேண்டுமென்ற அவசியமுமல்ல. கடந்த காலங்களில் இருந்து அடுத்த தீபாவளிக்குள் தீர்வு கிடைக்குமென்று சம்பந்தன் பலமுறை கூறிவிட்டார். அதனையே மறந்துபோன தமிழ் மக்கள் நான் கூறுவதையா? நினைவில் வைத்துக்கொள்ளப் போகின்றனர். என்ற தத்துணிவும் அவருக்கு இருக்கலாம் என அரசியல் அவதானிகள் குறிப்பிடுகின்றனர். ஆனால் அவர் இப்போ மூன்றரை ஆண்டுகளில் தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்க்காமல் தனக்கு எந்தத் தொடர்பும் இல்லையென்கிறார். இதுவே வாக்களித்த மக்களுக்கு மேலும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. காணாமல்போனவர்களின் உறவுகளும், காணிகளை இழந்தவர்களும் அரசியல் கைதிகளின் உறவினர்களும் எத்தனை முறை ஜனாதிபதியை சந்தித்து கோரிக்கை விடுத்திருப்பார்கள். அல்லது கெஞ்சியிருகப்பார்கள் அப்போது ஒருமுறையாவது இதனை ரணில் விக்ரமசிங்க அரசாங்கதான் பார்த்துக்கொள்ள வேண்டும். அவர்களுடன் கேளுங்கள் எனக்கு அதிகாரமோ தொடர்போ இல்லையென்று கூறியிருக்கலாமே என தமிழ் மக்கள் அங்கலாய்க்கின்றனர். அப்போதெல்லாம் நிறைவேற்றுவதாக வாக்குறுதி கொடுத்துவிட்டு அதனையும் காப்பாற்றாமல் இப்போது வந்து முன்னைய அரசாங்கதான் பொறுப்பென்று மக்களிடம் கூறுவதில் என்ன நியாயம் உள்ளதென்பதனை நீங்களே சிந்தியுங்கள்.

சிங்களத் தலைவர்களை தமிழர்கள் நன்றாகவே புரிந்து கொள்கின்றார்கள். அவர்கள் காலத்திற்கு காலம் இப்படிதான் செயற்படுவார்கள், செயற்பட்டு வந்திருக்கின்றார்கள். இனிவரும் காலங்களிலும் அப்படியேதான் செயற்படப் போகின்றார்கள். இதுவே இலங்கை அரசின் வரலாறு. எதிர்வரும் நாட்களில் நாடாளுமன்றத்தின் ஊடாக மகிந்த பிரதமரானால் அவரும் இதனைத்தான் கூறுவார். மீண்டும் ரணில் பதவிக்கு வந்தாலும் இதனையே கூறுவார். ஏன்னென்றால் இலங்கை அரசியலும், ஆட்சியாளர்களும் கொண்ட வரலாறு இதுவே. அவர்களின் மனப்போக்குகள் நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றே என்ற மாற்றம்வரும் வரை இப்போலி வாக்குறுதிகளும் தொடர்ந்து தமிழர் வாழ்வில் தொடர்ந்து கொண்டே செல்லும்.




**சுவிஸில் மாவீரர்களுக்கு இரண்டு தரப்பாக பிரிந்து அஞ்சலி நிகழ்வை நடத்திய அதே சமகாலத்தில் இந்த வீரவணக்க நிகழ்வு பற்றி பிரபல மனித உரிமை செயற்பாட்டாளரான ச.வி.கிருபாகரன் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளார். வீரவணக்கம் செலுத்தப்பட்ட தளபதிகளில் சிலர் தற்பொழுதும் உயிருடன் இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்**

# இறுதிப்போரில் கொல்லப்பட்ட போராளிகளுக்கு அஞ்சலிசெலுத்த மறுக்கும் சுவிஸ் கிளை

**இரா.துரைரத்தினம், சுவிட்சர்லாந்து**

இம்முறையும் இலங்கையில் வடக்கு கிழக்கிலும் தமிழர்கள் வாழும் நாடுகளிலும் மாவீரர் நாள் நிகழ்வுகள் நடைபெற்றிருக்கின்றன.

இதில் வடக்கு கிழக்கில் மாவீரர் துயிலும் இல்லங்களில் நடைபெறும் மாவீரர் நாள் நிகழ்வுகளை தடை செய்ய வேண்டும் என சில இடங்களில் பொலிஸார் நீதிமன்ற கட்டளையை பெற முனைந்த போதிலும் விடுதலைப்புலிகளின் சின்னங்களுக்கே தடை என்றும் இறந்த போராளிகளுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு தடை இல்லை என்றும் நீதிமன்றங்கள் உத்தரவிட்டதால் நீதிமன்ற அங்கீகாரத்துடன் வடக்கு கிழக்கில் மாவீரர்நாள் நிகழ்வுகள் நடந்தேறியுள்ளன.

எந்த குழப்பங்களோ பிரச்சினைகளோ ஏற்படவில்லை. பொதுமக்களின் நிகழ்வாக இறந்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வாக நடைபெற்றிருக்கின்றன. அஞ்சலி நிகழ்வுகளுக்கு மட்டுமே இடம் வழங்கப்பட்டிருந்தது. முக்கியமாக அரசியல்வாதிகளின் உரைகளுக்கு அங்கு இடமளிக்கப்படவில்லை.

ஆனால் வெளிநாடுகளில் வழக்கம் போல இம்முறையும் இரண்டு மூன்று பிரிவுகளாக பிரிந்தே அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றிருக்கின்றன.

குறிப்பாக சுவிட்சர்லாந்தில் பிறிபோர்க்கில் உள்ள பெரிய மண்டபத்தில் சுவிஸ் தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவின் ஏற்பாட்டில் மாவீரர்நாள் நிகழ்வுகள் நடைபெறுவது வழமை. இம்முறையும் அங்குதான் சுவிஸ் தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவின் மாவீரர் நாள் நிகழ்வுகள் நடைபெற்ற போதிலும் அதற்கு புறம்பாக சுவிஸ் போராளிகள் கட்டமைப்பினால் பேர்ண் நகரில் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாவீரர் நாள் நிகழ்வுகள் நடத்தப்பட்டது.

2009 இறுதி யுத்தத்தின் கடைசி நாட்காளாகிய மே 16.17. 18.. தினங்களில் மாவீரரான தமிழீழ விடுதலைப்புலிகளின் சில தளபதிகளுக்கு வீரவணக்கம் செலுத்த வேண்டும் என சுவிஸ் போராளிகள் கட்டமைப்பு சுவிஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவிடம் கேட்டிருந்தனர்.

இறுதிப்போரில் இராணுவத்தினரிடம் சரணடைந்த போது சுட்டுக்கொல்லப்பட்ட அரசியல்துறை பொறுப்பாளர் நடேசன், புலித்தேவன், இசைப்பிரியா உட்பட தளபதிகளான சூசை, பானு, ஜெயம், ரமேஷ், புலனாய்வுத்துறையை சேர்ந்த மாதவன் மாஸ்ரர், லக்ஸ்மன், கண்ணன், நேரு, ரட்ணம், ஆகியோருக்கும், இறுதிப்போரில் இறந்த ஏனைய போராளிகளுக்கும் வீர வணக்கம் செலுத்த வேண்டும் என சுவிஸ் போராளிகள் கட்டமைப்பினர் சுவிஸ் தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவினரிடம் கேட்டிருந்தனர்.

இதற்கான பேச்சுவார்த்தைகள் பல தடவைகள் இருதரப்பிற்கும் இடையில் நடைபெற்ற போதிலும் இறுதிப்போரில் இறந்த தளபதிகள் போராளிகளுக்கு இப்போது வீரவணக்கம் செலுத்த முடியாது என சுவிஸ் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு மறுப்பு தெரிவித்ததை அடுத்து சுவிஸ் போராளிகள் கட்டமைப்பினர் பேரண் நகரில் மண்டபம் ஒன்றில் இறுதிப்போரில் இறந்த தளபதிகள் போராளிகளுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வை நடத்தினர்.

முதல்தடவையாக தளபதிகளான சூசை, பானு, ஜெயம், ரமேஷ், உட்பட 12பேரின் படங்கள் வைக்கப்பட்டு வீர வணக்கம் செலுத்தப்பட்டது.

இறுதிப்போர் முடிந்த 10வருடங்கள் கடந்து விட்டது. இறுதிப்போரில் கொல்லப்பட்ட தளபதிகள் போராளிகளின் படங்களை அல்லது தூபிகளை வைத்து இதுவரை அஞ்சலி நிகழ்வு நடத்தப்படவில்லை.

இவர்களின் படங்களை வைத்து ஏன் அஞ்சலி நிகழ்வு நடத்தப்படுவதில்லை என சுவிஸ் போராளிகள் கட்டமைப்பினர் சுவிஸ் தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவினருடனான சந்திப்பில் கேள்வி எழுப்பபட்டது.

இவர்கள் இறந்து விட்டார்கள் என தலைமைப்பீடத்திலிருந்து (தலைவர் பிரபாகரனிடமிருந்து) இதுவரை தமக்கு தகவல் வரவில்லை என்றும் தலைமைப்பீடத்திலிருந்து உறுதிப்படுத்தப்பட்ட தகவல் வந்தால் மட்டுமே இவர்களின் படங்களை வைத்து தம்மால் அஞ்சலி நிகழ்வுகளை நடத்த முடியும் என்றும் பதில் அளித்தனர்.

சுவிஸ் தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவுடன் பல தடவைகள் பேச்சு நடத்திய போதிலும் அவர்களுடன் இணக்கப்பாடு எட்டப்படாத நிலையிலேயே தாம் இறுதிப்போரில் கொல்லப்பட்ட தளபதிகளின் படங்களை வைத்து தனியாக அஞ்சலி நிகழ்வை நடத்தியதாகவும் சுவிஸ் போராளிகள் கட்டமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

இறுதிப்போர் முடிந்த பின்னர் சுமார் 50க்கும் மேற்பட்ட போராளிகள் சுவிஸில் அகதி தஞ்சம் பெற்றுள்ளனர். இவர்களில் விடுதலைப்புலிகள் பத்திரிகையின் ஆசிரியராக இருந்த ரவியும் ஒருவராவார். சுவிஸ் தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவினருடனான பேச்சில் சுவிஸ் போராளிகள் கட்டமைப்பின் சார்பில் ரவி அவர்களே பேச்சுக்களில் ஈடுபட்டிருந்தார்.

சுவிஸில் மாவீரர்களுக்கு இரண்டு தரப்பாக பிரிந்து அஞ்சலி நிகழ்வை நடத்திய அதே சமகாலத்தில் இந்த வீரவணக்க நிகழ்வு பற்றி பிரபல மனித உரிமை செயற்பாட்டாளரான ச.வி.கிருபாகரன் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளார்.

வீரவணக்கம் செலுத்தப்பட்ட தளபதிகளில் சிலர் தற்பொழுதும் உயிருடன் இருப்பதாக பிரபல மனித உரிமை செயற்பாட்டாளர் ச.வி.கிருபாகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு அவர் விடுத்துள்ள அறிக்கையில், போரளிகள் கட்டமைப்பினர் வீரவணக்கம் செலுத்திய தளபதிகளில் குறைந்தது ஒருவர்தானும் உயிருடன் இருப்பதை தன்னால் நிரூபிக்க முடியும் என்றும், அவ்வாறு நிரூபித்தால் நீங்கள் அத்தனை பேரும் சிங்கள பௌத்த அரசின் வால் பிடிகள் என்பதை ஏற்று கொள்வீர்களா? என்று சவால் விடுத்துள்ளார்.

இதேவேளை, போராளிகள் கட்டமைப்பு மேற்கொண்ட வீர வணக்க நிகழ்வுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் சுவிஸ் கிளை கண்டணம் தெரிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இசைப்பிரியாவை ஒரு பெண் ஊடகவியலாளராக சர்வதேசமும் அதன் ஊடகங்களும், புலம்பெயர் தமிழ்மக்களும் உள்வாங்கி, சிறிலங்கா அரசின் இனவழிப்பு நடவடிக்கையின் ஓர் குறியீடாக அவரை வெளிக்கொணர்ந்த சூழ்நிலையில், அவரையும் ஒரு போராளியாக அறிவித்து வணக்க நிகழ்வை சிலர் ஏற்பாடு செய்வது சந்தேகத்தை உருவாக்குகின்றது என்று தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் சுவிஸ் கிளை தெரிவித்துள்ளது.





இறுதிநாட்களில் உரிய முறையில் அறிவிக்கப்படாத மாவீரர்களுக்கு, அவர்களுக்கான எந்தவொரு தரநிலையும், அங்கீகாரமும் வழங்காமல் வெறுமனே சிறப்புத்தளபதிகளாக அறிவிக்கும் நிலைப்பாட்டையும் சுவிஸ் கிளையானது ஏற்றுக் கொள்ளவில்லை' என்றும் சுவிஸ் கிளை தெரிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் இறுதிப்போரில் கொல்லப்பட்டு விட்டார் என்ற போராளிகள் கட்டமைப்பின் கருத்தை தாம் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் சுவிஸ் கிளை தெரிவித்துள்ளது.

இந்த முரண்பாடுகளின் மத்திலேயே சுவிட்சர்லாந்தில் இரு தரப்பாக மாவீரர்நாள் நிகழ்வுகள் நடத்தப்பட்டிருக்கிறது.

இறுதிப்போரில் கொல்லப்பட்ட தளபதிகள் போராளிகளுக்கு 10வருடங்கள் கடந்த நிலையிலும் ஏன் இதுவரை வணக்கம் செலுத்தவில்லை என்றும் தலைவர் பிரபாகரன் உயிருடன் இல்லை என தெரிந்தும் அவருக்குரிய மரியாதையையும் வீரவணக்கத்தையும் ஏன் செலுத்தாமல் இருக்கிறார்கள் என்ற கேள்வி மக்கள் மத்தியில் மேலோங்கியிருப்பதாக போராளிகள் கட்டமைப்பினர் தெரிவிக்கின்றனர்.

உரியவர்களுக்கு வீரவணக்கம் செலுத்தாமல் நடத்தப்படும் மாவீரர்நாள் நிகழ்வுகள் பற்றி மக்கள் விசனம் அடைந்திருக்கிறார்கள். இதனால் மாவீரர்நாள் நிகழ்வுகளுக்கு செல்லும் மக்கள் தொகையும் குறைந்து வருகிறது என போராளிகள் கட்டமைப்பினர் குற்றம் சாட்டுகின்றனர்.

ஏற்கனவே லண்டன், கனடா போன்ற இடங்களில் இரு பிரிவுகளாக பிரிந்து நின்று மாவீரர்நாள் நிகழ்வுகள் நடத்தப்பட்டு வந்த நிலையில் இம்முறை சுவிட்சர்லாந்திலும் இரண்டாக பிரிந்துள்ளளனர்.

தலைவர் அறிவிக்கும் வரை இறுதிப்போரில் கொல்லப்பட்டவர்களுக்கு வீரவணக்கம் செலுத்துவதில்லை என்பது ஏற்றுக்கொள்ளக் கூடிய காரணம் அல்ல.



# மட்டக்களப்பு மாவீரர் தினத்திற்கும் பொலிஸ் சோதனைச் சாவடி மீதான தாக்குதலுக்கும் தொடர்பு உண்டா?

## நேரடி ரிப்போர்ட்



'புலி வருது புலி வருது' என்பவர்களுக்கும் 'புலி வரும் புலி வரும்' என்பவர்களுக்கும் கடந்த வெள்ளிக்கிழமை மட்டக்களப்பில் நடைபெற்ற சம்பவம் பெரும் பேசு பொருளாக மாறியுள்ளது.

30.11.2018 ம் திகதி வெள்ளிக்கிழமை நள்ளிரவில் மட்டக்களப்பு வவுணதீவு வீதிச் சோதணைச் சாவடியில் கடமையில் இருந்த இரு பொலீஸ் உத்தியோகத்தர்கள் மீது நடத்தப்பட்ட மிக கொடூரமான தாக்குதல் சம்பவம் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பாதுகாப்பு தரப்பினரை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.





வடகிழக்கில் யுத்தம் நிறைவடைந்து ஒன்பது ஆண்டுகளுக்கு பின்னர் பொலீஸ் சோதணைச் சாவடி ஒன்றின் மீது நடத்தப்பட்ட முதலாவது துப்பாக்கிச் சூட்டு சம்பவமாக இந்த சம்பவம் பதிவாகியுள்ளது.

அதுவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் நாளினை வடகிழக்கில் உள்ள தமிழர்கள் மிகவும் உணர்வு பூர்வமாக அனுஸ்டித்து இரண்டு நாட்கள் நிறைவடைவதற்குள் நடத்தப்பட்ட இந்த தாக்குதல் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு வித அச்ச உணர்வை ஏற்படுத்தி உள்ளது.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் அரசியல் நெருக்கடிகளுக்கு மத்தியில் நடந்துள்ள இந்த தாக்குதல் சம்பவம் தென்னிலங்கை இனவாதிகளுக்கு சிங்கள மக்கள் மத்தியில் தங்களது இனவாத சிந்தனைகளையும் புலி வருது புலி வருது என்ற பூச்சாண்டி கதைகளை மீண்டும் உருவாக்க வாய்ப்பாக அமைந்துள்ளது.

'நல்லா இருந்த ஊரும் நாலு பொலீஸ்காரரும்' என்ற கதையாக இன்று மட்டக்களப்பின் நிலை மாறியுள்ளது.

உண்மையில் நடந்தது என்ன? இரண்டு பொலீசாரும் எவ்வாறு படுகொலை செய்யப்பட்டார்கள்? இந்த படுகொலைக்கான காரணங்கள் என்ன? இதனை யார் செய்திருப்பார்கள்? என்ன நோக்கத்திற்காக இவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள்? மாவீரர் நாளுக்கும் இவர்களது படுகொலைக்கும் தொடர்பு உண்டா? நாட்டின் அரசியல் குழப்பத்திற்கும் இந்த கொலைகளுக்கும் இடையில் சம்பந்தம் உண்டா? கருணா அம்மானுக்கு இந்த கொலையில் சம்பந்தம் உண்டா? இந்த படுகொலைக்கு பின்னால் உள்ள நிகழ்ச்சி நிரல் என்ன? இதனை செய்தவர்களின் அரசியல் பின்னணி என்னவாக இருக்கலாம்? என்ற பல்வேறு வினாக்களுக்கு விடை தேட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

### உண்மையில் நடந்தது என்ன?

மட்டக்களப்பு மாவட்டத்தில் படுவான்கரைப் பகுதியில் உள்ள யுத்த காலத்தில் பெயர் பெற்ற இராணுவ முகாம் அமைந்திருந்த வலையிறவு பாலம் என்று அழைக்கப்படும் நீண்ட பாலத்தின் முடிவில் அமைக்கப்பட்டிருந்த வவுணதீவு பொலீசாரின் வீதிச் சோதணைச் சாவடியில் வழமை போன்று மூன்று பொலீசார் காவல் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

**விசேட செய்தியாளர்**

புதூர் விமான படை முகாமில் இருந்து சுமார் அரை கிலோமீற்றர் தூரத்திற்கும் வவுணதீவு பொலீஸ் நிலையத்தில் இருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் அமைந்துள்ள குறித்த பொலீஸ் சோதனைச் சாவடி மட்டக்களப்பு நகரில் இருந்து வலையிறவு பாலத்தை கடந்து சென்றால் வலப்பக்கம் கொக்கட்டிச்சோலைக்கும் இடப்பக்கம் வவுணதீவு பொலீஸ் நிலையம் ஊடாக ஆயித்தியமலைக்கு செல்லும் இருவீதிகள் ஒன்றினையும் சந்தியில் அமைந்துள்ளது.

குறித்த பொலீஸ் சோதனைச் சாவடிக்குள் கடந்த 30.11.2018 ம் திகதி வெள்ளிக்கிழமை நள்ளிரவு கடந்து 1.30 மணிக்கும் 3.00 மணிக்கும் இடைப்பட்ட நேரத்திற்குள் உட்புகுந்த இனம் தெரியாத குழு ஒன்று அங்கு காவல் கடமையில் இருந்த இரண்டு பொலீஸ் உத்தியோகத்தர்களை துப்பாக்கியால் சுட்டும் வெட்டியும் படுகொலை செய்துள்ளமை ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

கொல்லப்பட்ட இரண்டு பொலீஸ் உத்தியோகத்தரில் ஒருவர் தமிழர் எனவும் மற்றையவர் சிங்களவர் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

காலி மத்துகம பிரதேசத்தைச் சேர்ந்த இந்திக்க பிரசன்ன(34) மற்றும் கல்முனை பெரிய நீலாவனையை சேர்ந்த கணேஷ் தினேஷ்(28) என்ற இரு பொலீஸ் உத்தியோகத்தருமே சம்பவத்தில் பலியாகியுள்ளனர்.

சோதனைச் சாவடியின் வெளியே நின்ற தினேஷ் என்ற தமிழ் பொலீஸ் உத்தியோகத்தரின் சடலம் கைகள் பின்னால் கட்டப்பட்ட நிலையில் முகம் குப்பரப் போடப்பட்டு பிடரியில் துப்பாக்கியால் சுடப்பட்டு முகப் பகுதி சிதைவடைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது. பிரசன்ன என்ற சிங்கள பொலீஸ் உத்தியோகத்தரின் சடலம் சோதனைச் சாவடிக்குள் நெஞ்சு பகுதியில் ஆழமான மூன்று கத்தி குத்தும் கழுத்து பகுதி மற்றும் கை உடல் பகுதிகளில் பதினைந்துக்கு மேற்பட்ட கத்தி வெட்டு காயங்களுடன் துப்பாக்கி சூட்டு காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளது.

பிரேதப் பரிசோதனை முடிவுகளின் பிரகாரம் கொல்லப்பட்ட பொலீஸ் உத்தியோகத்தர்கள் தாக்குதல் நடத்த வந்தவர்களுடன் நீண்ட நேரம் கைகளால் சண்டை செய்து தங்களை தற்காத்துக் கொள்ள போராடியுள்ளமை தெரியவந்துள்ளது.

சோதனைச் சாவடிக்கு வெளியே நின்ற தினேஷ் என்ற தமிழ் பொலீஸ் உத்தியோகத்தரின் விரல்கள் உடைந்துள்ளதுடன் அவரது நகங்களுக்குள் கொலையாளிகளின் இரத்த படிவுகள் காணப்படுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த தாக்குதல் மிகவும் திட்டமிட்டு நடத்தப்பட்டுள்ளமை புலனாகியுள்ளது.

### ரி 56 ரக துப்பாக்கிகள் பாவிப்பு!

குறித்த தாக்குதல் சம்பவத்திற்கு ரி 56 ரக துப்பாக்கியை தாக்குதல் நடத்தியவர்கள் பாவித்துள்ளமை தெரிய வந்துள்ளது.

அத்துடன் பொலீசார் வைத்திருந்த ரிவால்வர் கைத்துப்பாக்கிகள் இரண்டையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பு காத்தான் குடியில் கோப்பிக் கடை வைத்திருந்த வயோதிபர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்திற்கும் ரி 56 ரக துப்பாக்கி பயன்படுத்தப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### மயிரிழையில் தப்பிய பொலீஸ் உத்தியோகத்தர்?

சம்பவ தினம் கடமையில் இருந்த மற்றுமொரு தமிழ் பொலீஸ் உத்தியோகத்தர் சம்பவம் நடைபெறுவதற்கு சற்று நேரத்திற்கு முன்னர் சுகவீனம் காரணமாக பொலீஸ் சோதனைச் சாவடியில் இருந்து

12 ஆம் பக்கம் பார்க்க....



# 11 தமிழ் இளைஞர்களின் கடத்தலும் ...

அரச கட்டமைப்பின் பல்வேறு பிரிவுகளிலிருந்தும் கிடைக்கப்பெற்றுவரும் முரண்பாடான தகவல்களுக்கு மத்தியில், குற்றப் புலனாய்வுப் பிரிவிலிருந்து (சி.ஐ.டி) பொலிஸ் கண்காணிப்பாளர் நிஷாந்த சில்வாவை விலக்குவதற்கும், நீர்கொழும்பு பொலிஸ் பிரிவில் அவரை இடமாற்றம் செய்வதற்கும் மேற்கொள்ளப்பட்ட முயற்சி தொடர்பான தெளிவான தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

அவசியமான சேவைத் தேவைப்பாடுகள் என்ற காரணத்தைக் குறிப்பிட்டு, நிஷாந்த சில்வாவை இடமாற்றம் செய்வதற்கான உத்தரவு, பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவிடமிருந்து, நவம்பர் 18, 2018 இல் வெளியாகியிருந்தது.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவைக் கலந்துரையாடாமல், இடமாற்றத்துக்கான இந்த முடிவு எடுக்கப்பட்டிருந்தது.

இந்த முடிவு எடுக்கப்படுவதற்குச் சில நாள்கள் முன்னர் வரை, ஏன், சில மணித்தியாலங்கள் முன்னர் வரை, நிஷாந்த சில்வாவை இடமாற்றுமாறு, ஜனாதிபதியிடமிருந்தும் படைப்பிரிவுத் தரப்புகளிடமிருந்தும், பொலிஸ்மா அதிபருக்கு அழுத்தங்கள் வழங்கப்பட்டிருந்தன.

இப்பத்திரிகையின் வசமுள்ள ஆவணங்களின் அடிப்படையில், நிஷாந்த சில்வாவின் தொழில் வாழ்க்கையில் தலையிட வேண்டாமென, சி.ஐ.டியின் தலைமைப்பீடத்திலிருந்து, அதேயளவிலான அழுத்தங்கள் வழங்கப்பட்டன என்பதையும் காண முடிகிறது.

நவம்பர் 13, 2018இல் நடைபெற்ற தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முகவராக நிஷாந்த சில்வா இருந்தாரென, பாதுகாப்புப் பணியாட்தொகுதியின் பிரதானி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன குற்றஞ்சாட்டினார் என, சி.ஐ.டியின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரத்னவுக்கு எழுதிய கடிதமொன்றில், பொலிஸ்மா அதிபர் குறிப்பிடுகிறார்.

இந்தக் கூட்டம், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில், ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

அதன் பின்னர், பொலிஸ்மா அதிபரை அலைபேசியில் தொடர்புகொண்ட அட்மிரல் விஜேகுணரத்ன, இந்த பாதுகாப்பு அச்சுறுத்தல் தன்னால் வெளிப்படுத்தப்பட்ட பின்னரும், நிஷாந்த சில்வா, சி.ஐ.டிக்காகப் பணியாற்றத் தொடர்ந்தும் ஏன் அனுமதிக்கப்பட்டார் என்று கேள்வியெழுப்பினார் என, அக்கடிதம் தெரிவிக்கிறது.

நவம்பர் 16, 2018இல் அட்மிரல் விஜேகுணரத்னவிடமிருந்து பெறப்பட்ட இந்த அழைப்பின் பின்னர் தான், சி.ஐ.டியின் பொறுப்பாளராக இருந்த ரவி செனவிரத்னவுக்குக் கடிதமொன்றை எழுதி, மேற்படி விடயங்களைக் குறிப்பிட்டு, பயங்கரவாத அமைப்புகளுடன் தொடர்புகள் அல்லது குற்றவியல் அல்லது சட்டவிரோத நடவடிக்கைகளில் பங்கெடுப்பு ஆகியன உள்ளனவா என, நிஷாந்த சில்வா பற்றிய அறிக்கையொன்றை வழங்குமாறு, பொலிஸ்மா அதிபர் கோரினார்.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரத்னவுக்குப் பொலிஸ்மா அதிபர் எழுதிய இரகசியமான இந்தக் கடிதம் (Ref: SD/ IG/ OUT/ S-04/ 5745/ 2018), தமிழீழ விடுதலைப் புலிகளுடன், பொலிஸ் கண்காணிப்பாளர் நிஷாந்த சில்வா தொடர்புபட்டுள்ளார் என்பது, நவம்பர் 13, 2018 அன்று நடைபெற்ற தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் வெளிப்படுத்தப்பட்டது.

விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளுடன் தொடர்புகளைக் கொண்ட பொலிஸ் கண்காணிப்பாளர் நிஷாந்த சில்வா, சி.ஐ.டிக்காகப் பணியாற்றுவதற்கு ஏன் அனுமதிக்கப்பட்டுள்ளார் என, என்னுடன் அலைபேசி மூலம் தொடர்புகொண்ட, பாதுகாப்புப் பணியாட்தொகுதியின் பிரதானி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன, என்னிடம் கேட்டார்.

எனவே, குறித்த அதிகாரி தொடர்பில், நவம்பர் 16 - மாலை 3 மணிக்கு முன்னதாக, கீழ்வரும் விடயங்கள் தொடர்பில் அறிக்கையொன்றைத் தருமாறு நான் கோருகிறேன்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளுடன் குறித்த அதிகாரி தொடர்புபட்டுள்ளார் என்பது தொடர்பான தகவல்கள் உள்ளனவா?

ஏதாவது குற்றவியல் அல்லது சட்டவிரோத நடவடிக்கைகளில் குறித்த அதிகாரி ஈடுபட்டுள்ளாரா?

இந்த அதிகாரிக்கு, எவ்வாறான உத்தியோகபூர்வக் கடமைகள் வழங்கப்பட்டுள்ளன? என, அக்கடிதத்தில் கேள்வியெழுப்பப்படுகிறது.

இதற்குப் பதிலளித்து, நவம்பர் 18ஆம் திகதி, பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரத்ன எழுதிய கடிதத்தில் (Ref: S/DIG/CID/IGP/3303/18), பயங்கரவாத நடவடிக்கைள் அல்லது குற்றவியல் அல்லது சட்டவிரோத நடவடிக்கையிலோ நிஷாந்த சில்வா ஈடுபட்டார் என்பது தொடர்பாக, தானோ அல்லது சி.ஐ.டி பணிப்பாளர் ஷானி அபேசேகரவோ அறிந்திருக்கவில்லை எனக் குறிப்பிடப்படுகிறது.

நிஷாந்த சில்வாவுக்கு வழங்கப்பட்ட கடமைகளை, அவரது திறமைக்கு ஏற்றவாறு அவர் சிறப்பாகச் செய்துள்ளார் எனவும், போர்க் காலத்தில், நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தவிருந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகள் பலரைக் கைதுசெய்து, அவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்துள்ளார் எனவும், அக்கடிதத்தில் அவர் குறிப்பிட்டார்.

அத்தோடு, தற்போது நீதிமன்றங்களின் முன்னாலுள்ள, பல்வேறு உணர்மிகையான விசாரணைகளை, பொலிஸ் கண்காணிப்பாளர் நிஷாந்த சில்வா எவ்வாறு மேற்கொண்டார் எனவும், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரத்ன, அக்கடிதத்தில் மேலும் விளங்கப்படுத்தினார்.

பாதுகாப்புப் பணியாட்தொகுதியின் பிரதானியால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை உறுதிப்படுத்தும் வகையில், நிஷாந்த சில்வாவுக்கு எதிராக, எந்தவோர் ஆதாரமும் கிடையாது என, இப்பத்திரிகையின் உடைமையில் இருக்கும் அக்கடிதத்தில், அவர் குறிப்பிடுகிறார்.

அட்மிரல் விஜேகுணரத்ன, சந்தேகநபராகப் பெயரிடப்பட்டுள்ள, 11 இளைஞர்களின் கடத்தல் தொடர்பான விசாரணைகளை, நிஷாந்த சில்வாவே முன்னெடுக்கிறார் என, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி சுட்டிக்காட்டினார்.



குறித்த இளைஞர்களைக் கடத்திக் கொலை செய்தார் என்று, பாதுகாப்புப் பணியாட்தொகுதியின் பிரதானி மீது குற்றச்சாட்டு இல்லாவிடினும் கூட, குறித்த வழக்கின் பிரதான சந்தேகநபர்களில் ஒருவரான நேவி சம்பத் என்று அழைக்கப்படுகின்ற லெப்டினன் கொமாண்டர் சந்தன ஹெட்டியாராச்சியைக் காப்பாற்றி, அவரை சி.ஐ.டி விசாரணை செய்யவோ அல்லது கைதுசெய்யவோ விட முடியாமல் தடுத்தார் எனக் குற்றஞ்சாட்டப்படுகிறது.

நேவி சம்பத்தை, சி.ஐ.யில் முன்னிறுத்துமாறு மீண்டும் மீண்டும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டமைக்கு மத்தியில் இது இடம்பெற்றிருந்தது.

நேவி சம்பத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை என, விஜேகுணரத்ன தெரிவித்து வந்த போதிலும், கடற்படை அதிகாரிகளின் ஓய்விடத்தில், நேவி சம்பத்தை, விஜேகுணரத்ன ஒளித்து வைத்திருந்தார் என, கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில், சி.ஐ.டி தெரிவித்தது.

இது சம்பந்தமாக, நேரில் கண்டவர்களையும் ஆவணங்களையும், சி.ஐ.டி சமர்ப்பித்தது.

பயங்கரவாத நடவடிக்கைகளில் நிஷாந்த சில்வா ஈடுபட்டுள்ளார் என, விஜேகுணரத்ன அவரை மாட்டிவிட முயல்கின்ற போதிலும், எந்த புலனாய்வுச் சேவைகளும் சட்ட அமுலாக்கல் பிரிவுகளும், அவ்வாறான எந்தவிதத் தகவல்களையும் உத்தியோகபூர்வமாகப் பெற்றிருக்கவில்லை என, அக்கடிதத்தில் சிரேஷ்ட டி.ஐ.ஜி செனவிரத்ன விளங்கப்படுத்தினார்.

பதினொரு இளைஞர்களின் கடத்தல் வழக்கை, நிஷாந்த சில்வா விசாரித்து வருவதன் காரணமாகவே, அவர் மீது இக்குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது என, சிரேஷ்ட டி.ஐ.ஜி குற்றஞ்சாட்டினார்.

குறித்த வழக்கில், விஜேகுணரத்னவைக் கைதுசெய்து, நீதிமன்றின் முன்னால் ஆஜர்படுத்துமாறு, கொழும்பு நீதவான் நீதிமன்றம், மூன்று தடவைகள் உத்தரவிட்டதை அவர் சுட்டிக்காட்டினார்.

முன்னைய சந்தர்ப்பத்தில் நான் உங்களுக்குக் குறிப்பிட்டதைப் போன்று, பாரதூரமான குற்றவியல் குற்றச்சாட்டுகள் தொடர்பில், விஜேகுணரத்னவைக் கைதுசெய்து, நீதிமன்றில் ஆஜர்படுத்த வேண்டுமென்ற நீதிமன்ற உத்தரவொன்று உள்ளது.

எனவே, பாதுகாப்புப் பணியாட்தொகுதியின் பிரதானியாகப் பணியாற்றுவதற்கு அவர் பொருத்தமற்றவர்.

இவ்விடயத்தை, பாதுகாப்புச் செயலாளருக்கு நீங்கள் அறிவித்துள்ளீர்கள் என நான் புரிந்துகொள்கிறேன்.

விசாரணையொன்றில் தலையிடவும், விசாரணை செய்யும் அதிகாரியைக் குழப்புவதற்கும் முயலும் வகையில் சந்தேகநபர் செயற்படுவதால், சாட்சிகளைப் பாதுகாக்கும் சட்டத்தின் அடிப்படையில், அவருக்கெதிராக நடவடிக்கை எடுக்கப்பட முடியும் என, அக்கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்தார்.

நிஷாந்த சில்வாவை நியாயப்படுத்தி, அட்மிரல் விஜேகுணரத்ன மீது, விசாரணைக்கான குற்றவியல் தடையை ஏற்படுத்தினார் எனக் குற்றஞ்சாட்டும் வகையில் எழுதப்பட்ட, சிரேஷ்ட டி.ஐ.ஜி செனவிரத்னவின் கடிதம் கிடைக்கப்பெற்ற பின்னர், நவம்பர் 18, 2018இல், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்திக்க வருமாறு, பொலிஸ்மா அதிபருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

அதற்கு மறுநாள், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹேமசிறி பெர்ணான்டோவுக்கு, பொலிஸ்மா அதிபர் எழுதிய கடிதத்திலேயே இவ்விடயம் வெளிப்

# வடக்கு கிழக்கும் விளையாட்டு அபிவிருத்தியும்

அண்மைய காலங்களில் வடக்குக் கிழக்கில் விளையாட்டு அரங்கில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள் மகிழ்ச்சி தருவதாக அமைகிறது. தேசிய அற்றும் சர்வதேச பார்வைகள் நம்மை நோக்கி கூடுதலாக விழுவதாகவே தோன்றுகிறது. 40ஆண்டுகளுக்குப் பிறகு தேசிய கிரிக்கற் அணியில் யாழ்ப்பாணத்திலிருந்து விஜயகாந்த் வியஸ்காந்த் இடம் பிடித்திருக்கிறார். கால்பந்தாட்டத்தில் தேசிய குழாமில் ஞானரூபன் மற்றும் இளையோர் குழாமில் தனுஜன் போன்றோர் பிரகாசித்து வருகின்றனர் யாழ் மண்ணின் பிரபல வலைப்பந்தாட்ட வீராங்கனை தர்ஜினி அவுஸ்ரேலியாவில் கழகத்தின் சார்பிரல் தொழில் ரீதியான போட்டிகளில் பங்கேற்று வருகிறார். அத்தோடு அண்மையில் இலங்கை அணி ஆசியக்கிண்ணத்தைக் கைப்பற்ற பெரும் பங்காற்றியுள்ளார். தேசிய ரீதியிலான தடகள மற்றும் பெருவிளையாட்டுக்களில் நம்மவர்கள் பிரகாசிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். இந்தவருட முற்பகுதியில் நடைபெற்ற தெற்காசியப் போட்டிகளில் கூட எம்மவர்கள் பலர் பங்குபற்றியிருந்தனர்.

நீண்ட வருடங்களின் பின்னர் கால்பந்தாட்டத்தில் புதிய மைல் கல்லாக தொழில் ரீதியான கால்ப்பந்தாட்டத் தொடர் வடக்கு கிழக்க பிரிமியர் லீக் (North East Primier League 12 கழகங்களுக்கிடையே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வடக்குக் கிழக்கு கழகங்கள் தேசிய ரீதியிலான போட்டிகளில் பங்கேற்கத் தொடங்கியுள்ளன. பெண்கள் கால்பந்தாட்டத்தில் கூட கால் பதிக்கத் தொடங்கியுள்ளார்கள் என்பதற்கு தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி பெண்கள் அணியே சான்று.


நீண்டகால போரின் தாக்கங்களிலிருந்து மீண்டும் எமது திறமைகளை தேசிய மற்றும் சர்வதேச அளவில் காட்டுவதற்கு சந்தர்ப்பங்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. அவற்றை நாம் சிறப்பாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். வடக்கு கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரை விளையாட்டு அரங்கில் நிறைய திறமை மிக்கோர் இருக்கின்றனர். அவர்களை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது. பல்வேறு விளையாட்டுக்களில் எம்மை உலக தரத்திற்கு உயர்த்துவதில் முதலில் அதற்கான சூழலை (Sports Ecosystem) உருவாக்க வேண்டும் அதற்கான வழிவகைகளையும் திட்டங்களையும் அக்கட்டுரை ஆய்வு செய்கிறது.

ஒரு பிரதேசத்தில் விளையாட்டு அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கு அதிலுள்ள பல்வேறுபட்ட அங்கங்களான பாடசாலைகள்,கழகங்கள்,சமூக மற்றும் தொழில் நிறுவனங்களின் அபிவிருத்தி மீது கவனம் செலுத்துவது அவசியமானதாகும். இந்தக் கட்டமைப்பை நாங்கள் படத்திலுள்ளவாறு மூன்று முக்கிய நிலைகளாக கொள்ளலாம்.

1. அடிப்படைக் கட்டமைப்பு - பாடசாலைகள்,சமூக கழகங்கள் (Community Clubs)

2. இடைத்தரக் கட்டமைப்பு - விளையாட்டுக்கழகங்கள்,விளையாட்டுக் கல்விக் கூடங்கள் ((Sports Academy)

3. மேல்தர கட்டமைப்பு - தொழில் சார் கழகங்கள்,விளையாட்டு நிறுவனங்கள் ((Sports Enterprises)




சிறுவர் மற்றும் இளையோர் பெரும் பாலோனோரின் விளையாட்டு பாடசாலைகளில் தான் ஆரம்பமாகின்றது.பாடசாலைகளில் அதற்குரிய வசதிகள் மற்றும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுப்பது அவர்களின் திறமைகளை ஆரம்பகாலங்களிலேயே இனங்காண்பதற்கும் அவர்களை அடுத்த நிலைக்கு எடுத்துச் செல்வதற்கும் உதவியாக இருக்கும். சிங்கப்பூர் போன்ற அபிவிருத்தி அடைந்த நாடுகளில் குறைந்தபட்சம் ஒருகுழந்தை 04 விளையாட்டுக்களிலாவது ஈடுபட பாடசாலைகள் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்ற கொள்ளையைக் கொண்டிருக்கின்றன. அது அவர்களுக்கு பிடித்த அல்லது திறமையை வெளிக்காட்டக்கூடிய விளையாட்டை இனங்காண உதவும்.

வடக்கு கிழக்கைப் பொறுத்தவரை ஒருசில பெரிய பாடசாலைகள் மாத்திரமே பல விளையாட்டுக்களைப் பயில்வதற்குரிய வசதிகள் சந்தர்ப்பங்களை வழங்குபவைகளாகவுள்ளன. சிறிய மற்றும் இடைத்தர பாடசாலைகளிலும் இவ்வசதிகள் கொணரப்படல் வேண்டும். அத்தோடு தனிநபர் விளையாட்டுக்களான பூப்பந்து,டெனிஸ்,மேசைப்பந்து போன்றவற்றில் பின்தங்கியிருப்பதாகவே தோன்றுகிறது.பாடசாலைகள் அரசு மற்றும் பழைய மாணவர் சங்க உதவிகளுடன் இவற்றை மேம்படுத்த முன்வர வேண்டும். பாடசாலை,வலய,மாவட்ட நிலைப் போட்டிகள் அதிகரிக்கப்பட்டு திறமைகள் இனங்காணப்பட்டு அவர்களை அடுத்த நிலைக்கு எடுத்துச் செல்ல வேண்டும்.அனுபவம் மிக்க பயிற்சியாளர்கள் பாடசாலைகளில் நியமிக்கப்படல் வேண்டும். பெரும்பாலான பாடசாலைகள் நல்ல பயிற்சியாளர்களை நிய மிக்க போதுமான நிதி வசதிகளைக் கொண்டிருக்கவில்லை. இந்நிலைமை மாற்றப்பட வேண்டும்.

சமூக கழகங்கள் (Commuunity Clubs) இந்த அடிப்படைக் கட்டமைப்பில் அடங்குகின்றது. மேலைத்தேய நாடுகளில் இது ஒவ்வொரு சிறிய பகுதிகளிலும் காணப்படுகின்றது. இதன் நோக்கங்களில் ஒரு அங்கம் அந்தப்பகுதிகளிலுள்ள விளையாட்டை அபிவிருத்தி செய்வதாகும். விளையாட்டுகளுக்குரிய அடிப்படை வசதிகளை வழங்குவது சமூகத்தினரிடையே போட்டிகள் வைப்பது போன்றவற்றின் மூலம் அப்பகுதி மக்களின் விளையாட்டை மேம்படுத்துவதற்கு இவை உதவுகின்றன. இப்படி அமைப்புக்கள் நம் பகுதிகளில் பெரும்பாலும் இல்லையென்றே சொல்லலாம். பல ஊர்களில் அவ்வூர் விளையாட்டுக்கழகங்கள் இப்பணியை ஓரளவு செய்கின்றன. அரசாங்கம் அல்லது சமூக அமைப்புக்கள் சேர்ந்து இப்படியான கழகங்களை உருவாக்கி விளையாட்டுக்களை அபிவிருத்திசெய்ய முன்வர வேண்டும். விளையாட்டுக் கல்விக் கூடங்கள் ((Sports Academy) எமத் விளையாட்டின் தரத்தை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல உதவும். விளையாட்டில் ஆர்வமுள்ளோர் மற்றும் திறமையுள்ளோர் இவற்றின மூலம் தம்மை தேசிய,சர்வதேசரீதியிலான போட்டிகளுக்கு தயார்படுத்திக்கொள்ள முடியும் வடக்குக் கிழக்கைப் பொறுத்த வரை இவ்வாறான ஒருசில விளையாட்டுக் கல்விக்கூடங்கள் இருக்கின்றன. அதுவும் கால்பந்து மற்றும் கிரிக்கற் போன்ற ஒருசில புகழ்பெற்ற விளையாட்டுகளுக்கு மாத்திரமே அரியாலையில் அமைந்திருக்கும் கால்பந்துக் கல்விக் கூடம் ஒரு சிறந்த உதாரணமாகும். இது போன்ற கல்விக் கூடங்கள் அன்னும் பல இடங்களிலும் வேறுவிளையாட்டுக்களுக்கும் உருவாக்கப்படல் வேண்டும்.

விளையாட்டுக்கழகங்கள் வடக்குக் கிழக்கு விளையாட்டு அபிவிருத்தியில் பெரும் பங்காற்றுகின்றன. முக்கியமாக கால்பந்து மற்றும் கிரிக்கற் கழகங்கள் தேசிய ரீதியில் எம் திறமையை வெளிப்படுத்துகின்றன. இக் கழகங்கள் உள்ளூர் விளையாட்டுக்களையும் அபிவிருதத்தி செய்கின்றன.தற்போது நடைபெற்றுவரும் பலவகைளான போட்டிகள் நல்ல அறிகுறியாகவே தென்படுகின்றன. அத்தோடு இளைஞர் கழகம் (லுழரவ ஊடரி) இவ்விளையாட்டுக்கழகங்களோடு இணைந்து பணியாற்றுகின்றன.மேலைத்தேய அல்லது நல்ல அனுபவம்மிக்க பயிற்சியாளர்கள் நியமிப்பதன் மூலம்நாம் விளையாட்டின் தரத்தை மேம்படுத்திக் கொள்ள முடியும். புலம் பெயர உறவுகள் மற்றும் அரசு இக்கழகங்களின் அபிவிருத்தியில் பங்களிக்க முன்வரவேண்டும் பெரும்பாலான கழகங்கள் மிகவும் அடிப்படைத் தரவசதிகளுடனேயே இயங்குகின்றன. விளையாட்டு உபகரணங்கள் மைதான இடவசதிகள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலேயே இருக்கின்றன இவை சீர்செய்யப்படுகின்றபோது நம் விளையாட்டுக்கள் முனடனேறுவதைக் காணமுடியும்.

விளையாட்டு ஊடகங்கள் விளையாட்டு அறிவை மேம்படுத்திக் கொள்ளவும் விளையாட்டு விடயங்கள் பலரை சென்றடையவும் உதவும் வடக்குக் கிழக்கைப் பொறுத்தவரை விளையாட்டு ஊடகங்கள் மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலேயே உள்ளன. உள்ள+ர் விளையாட்டுக்களை ஒலி ஒளி பரப்பும் ஊடகங்கள் வெளிப்படுத்துவது மிகவும் அரிது அத்தோடு விளையாட்டுச் சஞ்சிகைகள் மிகவும் அரிதாகவே வெளியிடப்படுகின்றன. சிறுவர்கள் மற்றும் இளையோர்கள் உலக விளையாட்டுக்களைப் பார்ப்பதன் மூலம் தங்கள் விளையாட்டுத் திறன்களை விருத்திசெய்து கொள்ள முடியும். உள்ள+ர் ஊடகங்கள் இவற்றை அபிவிருத்திசெய்ய முன்வர வேண்டும்.

இறுதியாக ஒருபிரதேச விளையாட்டில் பெரும் தாக்கத்தைச் செலுத்துபவை விளையாட்டு முதலீடுகளும் தொழில் ரீதியான விளையாட்டுக்களும் தான். தொழில் ரீதியான விளையாட்டுக்கள் விளையாட்டு வீரர்களுக்கு வாழ்வாதாரத்தைத் தர முடிவதால் அவர்கள் முற்று முழுதாக விளையாட்டுக்களில் தங்களை அர்ப்பணிக்க முடியும் இது அவர்களின் விளையாட்டுத்தரத்தை விரைவாக மேம்படுத்தும் அண்மையில் தொடங்கப்பட்டிருக்கும் வடக்குக் கிழக்கு பிரிமியர் லீக் ஒரு சிறந்த உதாரணமாகும். நீண்ட காலத்தின் பின் தொடங்கப்பட்டிருக்கும் இத் தொழில் ரீதியான போட்டிகள் நம் பிரதேச கால்பந்தை அடுத்த நிலைக்கு எடுத்துச் செல்லும் வெளிநாட்டு வீரர்களின் பங்கெடுப்பு நிதி முதலீடுகள் தேசிய ரீதியிலான பார்வைகள் நம் பிரதேச திறமைகளை மேம்படுத்த முடியும். மற்றைய விளையாட்டுக்களுக்கும் இப்படியான தொழில் ரீதியான போட்டிகள் கழகங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும். இதற்கு நிதி படைத்தோர்,புலம்பெயர்ந்த உறவுகள் வியாபார நிறுவனங்கள் முதலீடு செய்யவேண்டும். தனிப்பட்ட திறமைமிக்க வீரர்களுக்கும் நிதி ஆதரவாளர்கள் உதவி செய்ய வேண்டும். இதன் மூலம் சர்வதேச தேசிய போட்டிகளில் விரைவில் நம்மவர்களை காணக் கூடியதாக இருக்கும்.

**ஆக்கம்: இ.ராஜசீலன்**
**உதவிக் கல்விப் பணிப்பாளர்**
**வலயக்கல்விப் பணிமனை**
**வவுனியா தெற்கு**

# அதன் பின்னரான நடவடிக்கைகளும்



படுத்தப்பட்டது.

### பரந்தளவிலான கண்டனம்

ஞாயிற்றுக்கிழமையொன்றின் இரவு நேரத்தில் வந்த குறித்த உத்தரவு, உலகம் முழுவதிலும், உடனடியானதும் கடுமையானதுமான கண்டனத்தை ஏற்படுத்தியது.

மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஆட்சியில் மேற்கொள்ளப்பட்ட வெள்ளை வான் கடத்தல்கள் பல, ஊடகவியலாளர்களின் கொலைகள் ஆகியன தொடர்பான விசாரணைகளை முன்னின்று வழிநடத்திய விசாரணையாளர் என்ற வகையில், ஊடகவியலாளர்கள், சிவில் சமூகக் குழுக்கள் ஆகியவற்றிடையே, நிஷாந்த சில்வா, பெரிதும் அறியப்பட்டவர்.

லசந்த விக்கிரமதுங்கவின் கொலை, பிரகீத் எக்னலிகொட காணாமற்போனமை, கீத் நொயாரின் கடத்தலும் சித்திரவதையும், உபாலி தென்னக்கோன் மீதான தாக்குதல்கள், நாமல் பெரேராவைக் கடத்த முயன்றமை ஆகியன, இவற்றில் உள்ளடங்குகின்றன.

இந்த உத்தரவு பகிரங்கமாக அறிவிக்கப்படுவதற்கு வெறுமனே ஒரு மணித்தியாலத்துக்கு முன்னராக, மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், டி.என்.எல் தொலைக்காட்சி அலைவரிசையின் விசேட ஜனஹந்த நிகழ்ச்சியின் நேரடி ஒளிபரப்பில், இவ்விடயம் தொடர்பாகக் கலந்துரையாடினார்.

மஹிந்த ராஜபக்ஷவும் அவரது பிரிவினரும், அவர்களது குற்றங்களையும் கொள்ளைகளையும் மறைக்க விரும்புகின்றனர்.

இப்போது தான், இந்த விசாரணைகள் எல்லாவற்றையும் கையாளுகின்ற பிரதான அதிகாரி, நீர்கொழும்புக்குத் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். அவர்கள் ஏன் இதைச் செய்கிறார்கள்? என, அவர் கேள்வியெழுப்பினார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர், மஹிந்த ராஜபக்ஷ வேண்டுவது இதைத் தான். அவரது விசாரணைகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்காகத் தான், பொலிஸ் கண்காணிப்பாளர் நிஷாந்த, சி.ஐ.டியிலிருந்து நீக்கப்படுகிறார்.

சி.ஐ.டியில் நிஷாந்த சில்வா தொடர்ந்து இருந்தால், நாடாளுமன்றத்தில் சபாநாயகரைத் தாக்க முயன்ற தனது நாடாளுமன்ற உறுப்பினர்களில் அரைவாசி அல்லது அரைவாசிக்கு அதிகமான நாடாளுமன்ற உறுப்பினர்கள், அடுத்தாண்டின் நடுப்பகுதிக்கு முன்னராக, வெலிக்கடைச் சிறையில் இருப்பார்கள் என்பதை, மஹிந்த ராஜபக்ஷ உணர்ந்திருந்தார்.

இந்த வெலிக்கடைப் பயங்கரவாதக் குழுவின் காரணமாகத் தான் இவை எல்லாமே என அவர் சாடியிருந்தார்.

இந்தக் கண்டனத்தைத் தொடர்ந்து, ஐக்கிய தேசியக் கட்சியின் ஹரின் பெர்ணான்டோ, ஹிருணிகா பிரேமச்சந்திர உள்ளிட்ட இன்னும் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள், தொலைக்காட்சியில் நேரடியாகக் கண்டனங்களை வழங்கினர்.

நிஷாந்த சில்வாவை நீக்குவதன் மூலமாக, சி.ஐ.டியை முடக்குவதற்கு முயல்கின்றனர் என அவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் சார்பாக, அதன் தலைவர் துமிந்த சம்பத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையில், திடீரென மேற்கொள்ளப்பட்ட இந்த இடமாற்றம், மேலே குறிப்பிடப்பட்ட வழக்கு விசாரணைகளைத் தாமதப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டது என நாம் நம்புகிறோம்.

இந்தச் சூழ்நிலைகளின் கீழ், ஊடக சுதந்திரமும் ஊடகவியலாளர்களும் ஆபத்திலிருக்கின்றனர் என்பதால், நாம் அதிர்ச்சியடைந்துள்ளோம் எனக் குறிப்பிடப்பட்டது.

ஊடகவியலாளர்களுக்கான சர்வதேசப் பேரவை, இவ்விடயம் தொடர்பில் பாரதூரமான கவலையை வெளிப்படுத்தியதோடு, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில், ஊடகவியலாளர்கள் மீதான பல பாரிய தாக்குதல்களை, நிஷாந்த சில்வா விசாரித்து வந்தார் எனச் சுட்டிக்காட்டியது.

நிஷாந்த சில்வாவின் இடமாற்றம் தொடர்பில், சர்வதேச மன்னிப்புச் சபையும் தன் பங்குக்கு, அறிக்கையொன்றை வெளியிட்டது:

ஊடகவியலாளர்களுக்கு எதிரான தாக்குதல்கள், அவர்கள் காணாமலாக்கப்பட்டமை உள்ளிட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பான முக்கிய குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைகளில், அதிகாரிகள் தலையிட்டுள்ளனர் எனத் தென்படும் இவ்விடயம் தொடர்பில், நாங்கள் கவலையுடன் கவனமெடுத்துள்ளோம்.

இந்த வழக்குகள் தொடர்பில் தொடர்ந்து நடைபெறும் குற்றவியல் விசாரணைகள், எந்த விதத்திலும் தாமதப்படுத்தப்படக்கூடாது என்பதை, அதிகாரிகள் உறுதிப்படுத்த வேண்டும். இந்த வழக்குகள் தொடர்பான நீதி, நீண்டகாலமாகக் கிடைக்க வேண்டியுள்ளது எனத் தெரிவித்தது.

திங்கட்கிழமை காலையில், இவ்வாறான அறிக்கைகளைத் தொடர்ந்து, முக்கியமமான பல நாடுகளின் தூதுவர்கள், குறித்த இடமாற்றம் தொடர்பான விளக்கத்தை ஏற்படுத்துமாறு கோரிக்கைகளை முன்வைத்தனர்.

அவர்களுக்குக் கிடைக்கப்பெற்ற பதிலாக, சேவைக்கான தேவைப்பாட்டைக் கருத்திற்கொண்டு, குறித்த முடிவு, பொலிஸ்மா அதிபரால் தனித்து எடுக்கப்பட்டது என்பதே காணப்பட்டது என, பல இராஜதந்திரத் தகவல்மூலங்கள் தெரிவிக்கின்றன.

பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, கடைசி நேரத்தில் கைவிடப்பட்டுவிட்டார் என்பது, தெளிவாகத் தெரிந்தது.

இதேவேளை, நவம்பர் 19, அதே திங்கட்கிழமை, நிஷாந்த சில்வாவின் இடமாற்றத்துக்கு எதிராக, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி, தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் மேன்முறையீடொன்றை முன்வைத்தார்.

உணர்மிகை மிக்கதும் முக்கியமானதுமான பல விசாரணைகள், முடிவடையும் தருணத்தை எட்டியுள்ள நிலையில், நிஷாந்த சில்வாவின் இடமாற்றம் மேற்கொள்ளப்பட்டால், அவ்விசாரணைகள் மிகப்பெரிய அளவில் பாதிக்கப்படும் என, தனது மேன்முறையீட்டில், சிரேஷ்ட டி.ஐ.ஜி ரவி குறிப்பிட்டார்.

சி.ஐ.டி விசாரணைகளுக்கு இந்த அதிகாரியின் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு, இடமாற்ற உத்தரவை உடனடியாக மீளப்பெறுமாறு, ஆணைக்குழுவிடம் அவர் கோரிக்கை விடுத்தார்.

குறித்த கடிதத்தில், சி.ஐ.டியின் கூட்டுக் கொள்ளைப் பிரிவின் பொலிஸ் பொறுப்பதிகாரி, பொலிஸ் கண்காணிப்பாளர் நிஷாந்த சில்வா, உடனடியாக அமுலுக்கு வரும்வகையில், நீர்கொழும்பு பொலிஸ் பிரிவுக்கு, பொலிஸ்மா அதிபரால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் திணைக்களத்தில் அவரது 25 ஆண்டு காலச் சேவையில், இந்த அதிகாரி, சி.ஐ.டியில் 20 ஆண்டுகளாக இருந்து வந்ததோடு, மிகவும் உணர்மிகையான பல விசாரணைகளை மேற்கொண்டு, அனைத்துச் சந்தேகநபர்களுக்கும் எதிராக, அச்சமின்றிச் செயற்பட்டார்.

இந்த வழக்குகளில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளோரினதும் அவர்களது குடும்பங்களினதும், பிரதான இலக்காக இவர் மாறியுள்ளார்.

அவரது பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு, அவருக்குத் தேவையான பாதுகாப்பை வழங்குமாறு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, சி.ஐ.டிக்குப் பணிப்புரை விடுத்திருந்தது.

பொலிஸ்மா அதிபரின் பணிப்புரைக்கு அமைய, அவரைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை, சி.ஐ.டி எடுத்துள்ளது.

இந்த விடயங்களைக் கருத்திற்கொண்டு, அவரது இடமாற்ற உத்தரவை இரத்துச் செய்து, அவரது விசாரணைகளை எவ்விதத் தடைகளும் இன்றி மேற்கொள்வதற்கு அவருக்கு வாய்ப்பளிக்குமாறு, உங்களிடம் நான் கேட்டுக் கொள்கிறேன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொலிஸ் கண்காணிப்பாளர் நிஷாந்த சில்வா, தனது இடமாற்றத்துக்கு எதிராக, தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில், நவம்பர் 19, திங்கட்கிழமையன்று, தானும் மேன்முறையீடு செய்தார்.

தன் மீது, பாதுகாப்புப் பணியாட்தொகுதியின் பிரதானியால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை மறுத்த அவர், விசாரணைகளைத் தொடர்ந்து நடத்தி, சம்பந்தப்பட்டவர்களை நீதியின் முன்னால் நிறுத்துவதற்காக, தனது இடமாற்றத்தை இல்லாது செய்யுமாறு கோரினார்.

இடமாற்றத்துக்கு எதிரான மேன்முறையீடுகளைத் திங்கட்கிழமை பெற்ற தேசிய பொலிஸ் ஆணைக்குழு, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அமைந்துள்ள தங்களது அலுவலகத்தில், விசேட அவசர கூட்டமொன்றை நடத்தி, முறைப்பாடுகளைக் கருத்திற்கொண்டது.

இந்தக் கூட்டத்தின் போது, இரண்டு மேன்முறையீடுகளும் அவற்றுக்கான ஆதார ஆவணங்களுக்கும் கருத்திற்கொள்ளப்பட்டன. இதைத் தொடர்ந்து, முக்கியமான குறித்த அதிகாரியை, நீர்கொழும்புக்கு இடமாற்றம் செய்வதற்கான முடிவு குறித்து, பொலிஸ்மா அதிபரிடம் விளக்கமொன்றைக் கோருவதற்கு, ஆணைக்குழு தீர்மானித்தது.

நவம்பர் 19ஆம் திபதி பிற்பகலில், ஜனநாயகத்துக்கான சட்டத்தரணிகள் அமைப்பு, நிஷாந்த சில்வாவின் விவகாரம் தொடர்பில், விசேட ஊடகவியலாளர் சந்திப்பையொன்றை நடத்தியது.

சடுதியான இந்த இடமாற்றத்துக்குப் பின்னால், அரசியல் உள்ளது என நாம் நம்புகிறோம் என, அவ்வமைப்பின் ஏற்பாட்டாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான ஜே.சி. வெலிமுன, வெளிப்படையாகவே

14 ஆம் பக்கம் பார்க்க....



# இன்றைய அரசியல் முரண்பாடுகளுக்கு புதிய மக்கள் ஆணை ஒன்றே தீர்வாகுமா?

பாராளுமன்றம் தன் கடமையை செய்து கொண்டிருக்கிறதா? இலங்கையின் அதிகார மையம் யார் கைகளில் காணப்படுகிறது. என்னதான் நடக்கிறது? மக்கள் ஆணையை மதித்து ஆட்சி நடைபெறுகிறதா? மக்களால் மக்களுக்காகத்தெரிவு செய்து பாராளுமன்றம் அனுப்பியவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதையெல்லாம் பார்க்கிறபோது வெட்கமாகவும் இருக்கிறது. அதிசயமாகவும் இருக்கிறது. பாராளுமன்றம் ஒவ்வொரு தடவையும் கூடுகிறபோது நீயா? நானா? அடித்தால் இடிப்பேன், இடித்தால் மிளகாய்த் தூள் எறிவேன், மிளகாயத் தூள் எறிந்தால்



தண்ணியால் அடிப்பேன் இவ்வாறு பழிக்குப் பழிவாங்குகின்ற ஒரு இடமா? பாரளுமன்றம் என்கிற அளவுக்கு வட்அப்பிலும், முகநூல்களிலும் தோலுரிக்கப்படுமளவுக்கு மக்களின் பிரதிநிதிகளும், ஆட்சியாளர்களும், எதிர்கட்சியாளர்களும் விமர்சிக்கப்படும் அளவுக்கு நிலைமை கடும்மோசமாக இருப்பதாகவே நடுநிலை வாதிகளாலும், மக்கள் ஆணையை நம்புகின்ற ஜனநாயக வாதிகளாலும் பார்க்கப்படுகிறது. இதற்கிடையில் நாட்டின் பாராளுமன்ற நடைமுறையை சிறந்த முறையில் கட்டியெழுப்புவதற்கு ஒவ்வொரு முறையும் நாட்டின் ஜனாதிபதி தொடக்கம் புத்திஜீவிகள், கட்சித்தலைவர்கள் என எல்லோராலும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் கூறப்பட்ட போதிலும் பிரச்சினைகளும், முரண்பாடுகளும் தொடர்ந்த வண்ணமே காணப்படுவது கவலை அளிப்பதாக பலரும் கூறுகின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை பாராளுமன்றம் கூடியபோது கூச்சலும் குழப்பத்திற்கும் மத்தியில் மீண்டும் ஒரு ஒத்திவைப்புச் செய்யப்பட்டுள்ளது. பாராளுமன்றத் தெரிவுக்குழுவினரை தெரிவு செய்தமையினால் வெகுண்டெழுந்த பாராளுமன்ற ஆட்சிக்குழுவினர் வெளிநடப்புச் செய்தமையினால் அது வெறும் கட்சிக்கூட்டமேயன்றி வேறு ஒன்றுமில்லை என்கிற அளவுக்கு நிலைமை சென்றிருக்கிறது. பாராளுமன்ற தெரிவுக்குழுவில் தமக்கு அதிக இடம் வழங்கபட வேண்டும் என மஹிந்த தரப்பினரும் ராஜபக்ஷ குழுவினர் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இழந்த நிலையில் தம்மை ஆளும் கட்சியென ஒருபோதும் கூற முடியாது எனவும் அதனால் அவர்களுக்கு அதிக இடம் வழங்க முடியாது என ரணில் தரப்பினரும் மோதிக்கொண்டனர். இந்நிலையில் பாராளுமன்றத்தில் கட்சிகளின் பெரும்பான்மை அடிப்படையிலேயே தெரிவுக்குழு அமைய வேண்டும் என ரணில் தரப்பினரால் கோரிக்கை முன்வைக்கப்பட்;ட நிலையில் அன்று காலை சபாநாயகர் தலைமையில் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெற்றது.

இதில் எவ்வித இணக்கப்பாடும் இன்றி கூட்டம் முடிவடைந்ததை அடுத்து பாராளுமன்ற தெரிவுக்குழுவில் ஐக்கிய தேசிய முன்னணி சார்பில் 5 உறுப்பினர்களும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் 5 உறுப்பினர்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் ஒரு உறுப்பினரும் மக்கள் விடுதலை முன்னணி சார்பில் ஒரு உறுப்பினரும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் சபாநாயகர் மன்றில் அறிவித்திருந்த நிலையில் பாராளுமன்றம் கூடியது. பாராளுமன்ற தெரிவுக்குழுவில் இடம்பெறும் அங்கத்தவர்கள் தொடர்பாக மன்றில் இடம்பெற்ற வாதப் பிரதிவாதங்களுக்கு மத்தியில் உரையாற்றும் போது பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல அவர்கள் தமக்கு பெரும்பான்மை இருக்கின்றது என நிரூபித்தாலும் தாம் அவர்களுக்கு இடம்விட்டு விலகியிருக்க தயாராக இருக்கின்றோம் எனத் தெரிவித்திருந்தார். பெரும்பான்மையை நிரூபிக்கத் தவறிய மஹிந்த ராஜபக்ஷ தரப்பினரை அரசாங்கமாக ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் பிரதமர் என ஒருவர் இல்லை எனவும் சபாநாயகர் ஏற்கனவே அறிவித்தற்கு அமைய ஆட்சியில் இல்லாதவர்களுக்கு எவ்வாறு தெரிவுக்குழுவில் அதிக உறுப்பினர்களை வழங்க முடியும் என லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்திருந்தார்.

இதேவேளை சபாநாயகரின் அறிவிப்பை ஏற்க மாட்டோம் என தினேஷ் குணவர்தன தெரிவித்த அதேவேளை, தெரிவுக்குழுவில் தனக்கும் ஒரு இடம்தரவேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் பொதுச்செயலாளர் டக்ளஸ் தேவானந்த பாராளுமன்றில் கோரிக்கை விடுத்திருந்தார். நான் ஆளுங்கட்சியில் இருக்கின்றேனா அல்லது எதிர்க்கட்சியில் இருக்கின்றேனா என்பது எனது முடிவு. ஆனால் நான் எனது கட்சியின் மூலமே நான் பாராளுமன்றத்திற்கு தெரிவானேன். அதன் படி எனது கட்சிக்கும் தெரிவுக்குழுவில் உறுப்புரிமை வழங்க வேண்டுமென கேட்டிருந்தார். அதேவேளை தற்போது அராசாங்கம் என்று ஒன்று இல்லை தெரிவுக் குழு குறித்து வாக்கெடுப்பை நடத்துங்கள் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க மன்றில் வேண்டுகோள் விடுத்தார். இதேவேளை பாராளுமன்றில் அவநம்பிக்கை பிரேரணை நிறைவேற்றப் படவில்லையென விமல் வீரவன்ச கருத்து வெளியிட்டிருந்தார். இன்று மன்றில் தினேஷ் குணவர்தன, லக்ஷ்மன் கிரியெல்ல, டக்ளஸ் தேவானந்தா பந்துல குணவர்தன, அநுரகுமார திஸாநாயக்க, வீமல் வீரவன்ச, அஜித் பெரேரா ஆகியோர் தெரிவுக்குழு தொடர்பில் பல்வேறு கருத்துக்களை மன்றில் முன்வைத்திருந்தனர்.

இந்நிலையில் ஆட்சியில் உள்ளவர்களுக்கே பாராளுமன்ற தெரிவுக்குழுவில் அதிகமான அங்கத்துவம் வழங்க வேண்டும் என மஹிந்த ராஜபக்ஷ தரப்பினர் கோரிக்கை விடுத்தனர். ஆனால் பாராளுமன்றில் மஹிந்த ராஜபக்ஷ தரப்பினர் பெரும்பான்மையை நிரூபிக்க தவறியுள்ளமையால் அவர்களின் அரசாங்கத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என சபாநாயகர் அறிவித்திருந்தார். இந்நிலையில் சபாநாயகரின் அறிவிப்புக்கமைய பெரும்பான்மையற்றவர்களுக்கு எவ்வாறு அதிகமான அங்கத்துவத்தை வழங்க முடியும் என ஐக்கிய தேசியக் முன்னணியினர் கேள்வியெழுப்பினர். இவ்வாறா முரண்பட்டக் கருத்துக்களால் பாராளுமன்றத்தில் எழுந்த வாதப் பிரதிவாதங்களால் மஹிந்த அணியினர் வெளிநடப்பு செய்திருந்தனர்.

இதற்கிடையில் நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பங்களால் எதிர்வரும் நாட்களில் இடைக்கால பஜட்கூட முடிவாகாத நிலையில் புதிய ஆண்டிலிருந்து அரச ஊழியர்களுக்கான சம்பளங்கள் வழங்குவதிலும் சில குறைபாடுகள் காணப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. தடியெடுத்தவர்கள் எல்லோருமே வேட்டைக்காரர்கள்போல இயங்குவதானது எதிர்கால இலங்கையின் பொருளாதார மற்றும் கல்வி சமூக விடயங்களில் பாரியளவு தாக்கத்தை ஏற்படுத்தும் என்கிற அறிவுப்புக்களும் அறிஞர்களிடமிருந்து வெளியாகிக் கொண்டிருக்கும் நிலையில் இதற்கான ஒரே தீர்வு என்பது அது மேதகு ஜனாதிபதியிடமிருந்தே வெளியாக வேண்டும் எனவும் கூறப்படுகின்றது. இதற்கிடையில் பாராளுமன்றத்தை ஒத்திவைத்த விடயத்தை ஜனாதிபதி வாபஸ்பெறுவதே சிறந்த தீர்வாகும் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள சில ஊடகங்கள்வாயிலாக அமைச்சர்கள் கருத்துக்களை கூறியிருந்த போதிலும் நாட்டின் இன்றைய சூழலுக்கு சிறந்த தீர்வாக காணப்படுவது பொதுத்தேர்தல் ஒன்றே ஆகும் என்பதில் அனைத்துக் கட்சிக்காரர்களிடையே முடிவாக இருந்தாலும் அதனை ஜனாதிபதி அவர்கள் கூறியபோல மேற்கொள்ள ஏன் முடியாதுள்ளது.

கலைந்த பாராளுமன்றம் கலைந்ததாக இருக்க ஏன் இரு தரப்பாரும் பாராளுமன்றத்தைக் கலைப்பதே சிறந்த வழி எனக் கூறிவருகின்றனர். பாராளுமன்றத்திற்குள் கூச்சலும் குழப்பமும் ஏற்படுத்தப்பட்டு, நாட்டு மக்களின் மனங்களில் அவநம்பிக்கையீனத்தை ஏற்படுத்தி, ஜனநாயகத்தின் வழிமுறைகளை உடைத்தெரிந்துள்ளமையானது எதிர்காலத்தில் இதன் வடுக்கள் அச்சாணியாகவே இருக்கப்போகிறது. இன்று கட்சிமாறுகின்ற படலம் வெகுவாக நடந்து செல்கிறது. இதனைப் பார்க்கிறபோது நிலையான கொள்கை அற்றவர்களால் பாராளுமன்றத்தின் கதி கலங்கியிருக்கிறது. இதனை மாற்றவேண்டியது நாட்டு மக்களின் கைகளியே உள்ளது. கட்சிமாறுகின்ற கொள்கையற்றவர்கள் இருக்கின்ற பாராளுமன்றக் கொள்கைகளில் மாற்றம் காண விளைவது காலத்தின் அவசியமாகும். இன்று முஸ்லிம் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அடிக்கடி மாறி அமைச்சர்களாகவும், தொடர்ந்து அனைத்தையும் அனுபவிக்கின்றவர்களாகவும் இருந்து கொண்ட வரலாற்றுப் பின்னணியில் இன்று அவர்கள் ஒன்றுபட்டு இருப்பதாகக் கூறப்படுகின்றது.

கடந்த ஊவா மாகாணசபைத் தேர்தலின் போது இவர்கள் இதேபோன்று ஒன்றுபட்டோம் என்று கூறியிருந்தார்கள். ஆனால் அவர்களின் ஒற்றுமை ஒரு தேர்தலோடு கலைந்துவிட்டது. கடந்த தேர்தலில் ஒரே கட்சியின் சார்பாக கேட்டிருந்த போதிலும் சில பிரதேசங்களில் தனித்துவமாக தங்களை உருமாற்றிக் கொண்டனர். ஆனால் மேடைகளில் கடுமையான சொற்களுடன் மிகக் கடுமையாக முக்கியமான இரு முஸ்லிம் கட்சிகளும் தங்களை எதிரிகளாகவே பார்த்தனர். ஆனால் இன்று அவர்களும் விடாப்பிடியாக ஆளும் கட்சிக்கு எதிராக அதாவது யுஎன்பிக்கு ஆதரவாகவே தம்மை புடம்போட்டுள்ளனர். இது மக்கள் மத்தியில் பல்வேறு கேள்விகளை கேட்கத் தூண்டியிருக்கிறது. இன்றைய பிரதமர் மகிந்த அவர்களுடைய காலத்தில் சில முஸ்லிம் பிரதேசங்கள் பற்றியெறிந்தன. ஆனால் கடந்த ரணிலின் ஆட்சியில் இதே நபர்கள் மந்திரிகளாக இருந்தபோது நாட்டிலுள்ள பல நூற்றுக்கும் மேற்பட்ட பள்ளிவாசல்கள், பல முஸ்லிம் கிராமங்கள் பற்றியெரிந்தன. அப்போது உயர்நீதிமன்றம் செல்லாத இவர்கள் ஏன் இன்று ஒரு தனிப்பட்ட ஆட்சியாளர்களுக்கு ஆதரவாக உயர்மன்றம் சென்றிருக்கின்றமையை பார்க்கின்றபோது இவர்களிடமும் நிரந்தரமான கொள்கையோ, சமூகப்பற்றோ இல்லை என்றே நோக்க வேண்டியிருக்கிறது.

**தந்திமகன்**

முஸ்லிம்கள் எப்போதுமே சமாதானவாதிகளாகவே இந்நாட்டில் தொண்டு தொட்டு வாழ்ந்து வருகின்ற நிலையில் இன்று ஒரு கட்சிக்காக கடும்போக்குடன் காணப்படுவதைப் பார்க்கின்றபோது எதிர்காலத்தில் இவர்களுக்கு எதிரான கட்சி ஆட்சியமைக்கின்றபோது முஸ்லிம்களை வேறொரு கண்ணேடாத்தில் பார்க்க முற்படலாம். ஆகவேதான் முஸ்லிம்கள் ஒருபுறம், முஸ்லிம்கள் ஒருபுறமாக இருக்கின்றார்கள் என்பதை பெரும்பான்மையாளர்கள் தெரிந்திருப்பது அவசியமாகும் என்பதையும் இங்கு குறிப்பிடவேண்டியிருக்கிறது.

எதுவாக இருந்தபோதிலும் இன்றைய அரசியல் முரண்பாடுகளுக்குள் சிக்கித்தவிக்கின்ற அனைத்துக் கட்சிகளும், பாராளுமன்றத்தின் சம்பிரதாயங்களையும், ஜனநாயகப் பண்புகளையும் சீர்தூக்க வேண்டுமாக இருந்தால் பொதுத்தேர்தல் ஒன்றே தீர்வாகும். இன்று மக்கள் பாராளுமன்றத்தில் நடைபெற்ற விடயங்கள், மிளகாய்த்தூவல்கள் இடம்பெற்ற காட்சிகள், கத்திபொல் சண்டைகள், கூச்சலிடுகின்றவர்கள், சபாநாயகரின் கதிரையை புறட்டுகின்றவர்கள், கதிரையை உடைக்கின்றவர்கள், தன்நிலை மறந்து கடும்தொனியி;ல் பேசுகின்றவர்கள் போன்ற அனைத்தையும் மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றனர்.

எனவேதான், இனிவரும் தேர்தல்களின் போது மக்கள் யாருக்கு வாக்களிப்பார்கள் என்பதை நியாயத்தன்மைகொண்டு அனுப்புகின்றவர்களை சீர்தூக்கிப் பார்ப்பார்கள் என்பது மட்டும் உண்மையாகும். இந்த உண்மையை மக்கள் மத்தியிலிருந்து யார் ஆட்சியமைக்க வேண்டும் என்பதை மக்கள் ஆணைக்கு விடுவதே இன்றைய தீர்வாக அமையும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. இதனை ஜனாதிபதியவர்கள் மேற்கொள்ள வேண்டும் என்பதே அமைதியை விரும்புகின்றவர்களின் எதிர்பார்ப்பாகும்.

# கல்விச் சமஉரிமையின் ஆதரவாளர் ஏ.எம்.ஏ.அஸீஸ்

ஏ.எம்.ஏ.அஸீஸ் முஸ்லிம்களின் கல்விக்கு ஆற்றிய பங்களிப்பைப் பற்றி கல்விமான்கள், ஆசிரியர்கள், அவரது சகாக்கள் எனப் பலர் எழுதியுள்ளனர். எனினும், இலங்கையில் முஸ்லிம் பெண்களின் கல்வித் துறை விடயத்தில் அவருடைய சிந்தனைகள் பற்றி அறிந்திருப்பது அற்பமே. முஸ்லிம் பெண்களின் கல்வி விடயத்தில் அவருடைய பணிகளில் இருந்து பயனடைந்தமையினால், இலங்கையில் முஸ்லிம் பெண்களின் கல்வி மற்றும் அந்தஸ்து பற்றிய அவரது சிந்தனைகளை பகிர்ந்து கொள்வது மிகவும் பொருத்தமுடையதாகும்.

முஸ்லிம் சமுதாயத்தின் பின்னடைவுக்குப் பிரதான காரணம் கல்வி இன்மையே என அஸீஸ் மிக ஏலவே உணர்ந்திருந்தார். உயர்கல்வியைத் தொடருமாறு அவர் இளைஞர்களைத் தூண்டினார். அதே மனப்பாங்கு கொண்ட நபர்களுடன் இணைந்து வசதி குறைந்த மாணவர்களுக்கு உதவுவதற்கென புலமைப்பரிசில் ஒன்றை ஆரம்பித்தார். கல்வி மீது அன்னார் கொண்டிருந்த அக்கறை, அரச சிவில் சேவையிலிருந்து 1948 இல் முதிர்ச்சிக்கு முன்னதாக ஓய்வுபெற்று கொழும்பு ஸாஹிரா கல்லூரியின் அதிபர் பதவியை ஏற்க வழி கோலியது.

முஸ்லிம் சமூகத்தின் முன்னேற்றத்தை உறுதி செய்யும் நோக்கத்துடன் அவர், கல்வியில் கவனம் செலுத்தினார். ஸாஹிரா கல்லூரியில் நூல்கள் நிரம்பிய நூலகம் ஒன்றை உருவாக்க முற்பட்ட அஸீஸ், நல்ல கல்விக்கு வாசித்தல் முன் தேவை என்றார். வேறுபட்ட சித்தாந்தங்களைக் கொண்ட எல்லா சமூகத்தையும் சேர்ந்த அர்ப்பணிப்பும் செயற்திறனும் கொண்ட ஆசிரியர்களை நியமித்தார். அத்தோடு, ஒருவர் மற்றவருடைய மதத்யையும் கலாசாரத்தையும் புரிந்து கொள்ளும் முகமாகவும், சகிப்புத் தன்மைக்கும் இனஇணக்கப்பாட்டுக்கும் வழியமைக்கத் தக்கதாகவும் எல்லா மாணவர்களையும் இனவேறுபாடின்றி ஸாஹிராவில் சேர ஊக்குவித்தார். முஸ்லிம்கள் கிணற்றுத் தவளை போக்கைக் கொண்டிருக்கக் கூடாதென அன்னார் கூறினார்.

முஸ்லிம் பெண்களின் கல்வி பற்றிய நிலை என்ன?

அறிவையும் கல்வியையும் அடைந்து கொள்வதன் முக்கியத்துவம் பற்றிய தூர குர்ஆன் வலியுறுத்துகின்றது. அதனால் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் முஸ்லிம்களிடையே, விசேடமாக முஸ்லிம் பெண்கள் மத்தியில் கல்வித் தரத்தை விருத்தி செய்ய எண்ணிய, சித்திலெப்பை போன்ற பெருந்தகைகளினால் முஸ்லிம் பெண்களுக்கு கல்வி ஊட்டுவதில் சில முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. முஸ்லிம் பெண் பிள்ளைகளுக்கான முதல் பாடசாலை 1891இல் கண்டியிலும் அதனைத் தொடர்ந்து கம்பளையிலும், குருநாகலையிலும் சித்திலெப்பை அவர்களினால் ஸ்தாபிக்கப்பட்டன. பெற்றோர்களின் அசிரத்தை காரணமாக இப்பாடசாலைகள் செயலற்றுப் போயின.

**ஆங்கிலமூலம் மரீனா இஸ்மாயில்**
**தமிழ் வடிவம் என்.எம்.எம்.றெஸீன்**

எமது சகோதரிகளை இருளில் வைத்திருக்கும் வரை, ஒவ்வொரு குடும்பத்துக்கும் சமூகத்துக்கும் கல்வியினால் பெறப்படும் பிரயோசனங்களில் 50 சதவீதத்தை நாம் இழக்கின்றோம் என முஸ்லிம் மாதர் கல்வியின் ஆர்வமிக்க ஆதரவாளரான வைத்திய கலாநிதி எம்.சீ.எம்.கலீல் அவர்கள் எடுத்துரைத்தார்.

முஸ்லிம் பெற்றோர்கள் தமது புதல்விகளை பாடசாலைக்கு அனுப்பி வைப்பதற்கு ஏதுவாக, பெண்கள் பாடசாலைகளை நிறுவுமாறு சேர் ராஸிக் பரீத் அவர்கள் அரசாங்கத்தைத் தூண்டினார். எனினும், அப்பாடசாலைகளினால் பயன்பெற்றவர்கள் மிகவும் குறைந்த சதவீதத்தினரே. 1940ஆம் ஆண்டுகள் வரையும் கூட முஸ்லிம் பெண் பிள்ளைகளுக்கு கல்வி ஊட்டுவதற்கு எதிர்ப்பு நிலவியது.


சேர்.ராஸிக் பரீத் அவர்களின் ஊக்கத்தினால், 1946ஆம் ஆண்டு கொழும்பில் புதியதோர் இடத்தில் முஸ்லிம் மகளிர் கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டது. அதன் அதிபராக ஆயிஷா ரவூப் அவர்கள் நியமிக்கப்பட்டார். அக்கல்லூரி நிறுவப்பட்டதை அஸீஸ் வரவேற்றார். அவர் ஸாஹிராவில் அறிமுகப்படுத்திய அதேமுறையை அக்கல்லூரியும் கடைப்பிடிக்கும் என அவர் எதிர்பார்த்தார்த்தார். முஸ்லிம் பெண்களுக்கு கல்வி புகட்டுவதில் அது ஒரு பெரும் படியென அவருக்குத் தென்பட்டது.

பெருங்கவியும் தத்துவஞானியுமான அல்லாமா இக்பால் உரைத்தது போன்று கல்வி என்பது வாழ்க்கைக்கான தயார்படுத்தல் என்ற வகையில் தனவந்தர், ஏழை, ஆண், பெண் ஆகிய எல்லோரினாலும் வேண்டப்படுகின்றது என அஸீஸ் நம்பிக்கை கொண்டிருந்தார். பெண்களின் உயர் கல்விக்கும் பல்கலைக்கழக பட்டத்துக்கான உரிமைக்கும் அன்னார் பெரும் ஆதரவாளராக இருந்தார். அது அவருடைய கல்விப் பின்புலத்திலிருந்து எழுந்த கருத்தோட்டமாகும்.

அஸீஸ், யாழ்ப்பாண சோனகத் தெருவைச் சேர்ந்த கற்றறிந்த குடும்பத்தவர் பெண்கள் உட்பட. யாழ்ப்பாணக் குடும்பங்களில் பெரும்பாலானவை கற்ற குடும்பங்கள். அவை ஆங்கிலப் படிப்பு அற்றவையாயினும் அரபு, அரபுத் தமிழ் (அரபு அச்சரங்களில் எழுதப்படும் பல அரபுச் சொற்களினால் செழுமையூட்டப்பட்டது) என்பனவற்றில் நல்ல பரிச்சயமுடையவர்களாக இருந்தனர்.

12 ஆம் பக்கம் பார்க்க....





# வரலாற்றுத் துரோகங்களை தொடர்ந்தும் இழைத்து வரும் இஸ்லாமிய நாடுகள்

**சத்தார் எம் ஜாவித்**

ஒரு சமுகம் அழிந்து கொண்டிருப்பதை அதே சமுகம் பார்த்துக் கொண்டிருக்கும் மிகவும் மேசமானதொரு சமுகமாக இருப்பது உலகில் முஸ்லிம் சமுகம்தான் என்பதனை வார்த்தைகளால் சொல்ல முடியாது அந்தளவிற்கு மிகவும் படுமோசமான முறையில் இஸ்லாமிய நாடுகளிலும், இஸ்லாம் இல்லாத நாடுகளிலும் வாழும் முஸ்லிம்கள் அழிவிற்கும், துன்பத்திற்கும் உள்ளாக்கப்பட்டு வருகின்றனர்.

குறிப்பாக பலஸ்தீன் முஸ்லிம்களை எடுத்துக் கொண்டால் அவர்கள் இஸ்ரேல் படைகளால் திட்டமிட்டு அழிக்கப்பட்டு வருகின்றனர். கடந்த 70 வருடங்களாக இந்த மக்கள் ஒவ்வொரு நிமிடமும் இவ்வாறு அழிவை நோக்கிக் கொண்டு செல்லுகின்றனர். பலஸ்தீன் முஸ்லிம்களின் விடயத்தில் கருணை காட்டாது மனிதாபிமானமற்ற நாடுகளாக இஸ்லாமிய நாடுகள் இருந்து வருவதை துரோகத்தனம் என்று சொல்வதைவிட வேறு வார்த்தைகள் இல்லையென்றே கூறலாம்.



தமது இனத்தை அழிப்பதற்கு அந்நியப் படைகளுக்கு தாமே உதவிகளையும், சந்தர்ப்பங்களையும் வழங்கும் நாடுகளாகவும் ஒருசில இஸ்லாமிய நாடுகள் இருந்து வருவதானது முழு முஸ்லிம் சமுகமும் அழிவிற்கும், ஆபத்திற்கும் முகங்கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமைகளுக்கே செல்கின்றன. ஒருசிலர் விடுகின்ற தவறுகள் முழு அப்பாவி மக்களின் வாழ்வுரிமையை அநியாயமாக பறிகொடுக்கும் அளவிற்கு வழிவகுத்து விடுகின்றது. இவ்வாறான நிலைமைகள் பலஸ்தீன், ஹாஸா, சிரியா, எகிப்து, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், லிபியா உள்ளிட்ட இஸ்லாமிய நாடுகளில் அதிகமாக இடம்பெற்று வருகின்றன.

தற்கால யுகத்தில் உலகலாவிய ரீதியில் இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும் அழிக்கும் நடவடிக்கைகளில் இஸ்லாம் அல்லாத வல்லரசுகள் நேரடியாகவும், மறைமுகமாகவும் திட்டமிட்ட வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. இவ்வாறு இவர்கள் மேற்கொள்ளும் கபடத்தனங்களுக்கு ஒருசில இஸ்லாமிய நாடுகள் துணைபோவது முழு முஸ்லிம்களையும், இஸ்லாத்தையும் கொச்சைப்படுத்தி அழிவிற்கு வித்திடும் மகாபாதகமான நடவடிக்கைகள் என்றே கூறலாம்.

ஒருசில வல்லரசுகளால் துரத்தப்பட்டு நாடே இல்லாத சமுகமாக காணப்பட்ட இஸ்ரேலியர்கள் இஸ்லாமிய வசந்தத்திற்குள் அத்துமீறி வந்து இஸ்லாமியர்களின் பூர்வீகங்களை ஆக்கிரமித்து இஸ்ரேல் என்ற ஒரு நாட்டை ஏற்படுத்திக் கொண்டு இன்று பூர்வீகங்கள் பறிக்கப்பட்ட அந்த மக்களையே ஈவிரக்கமற்ற வகையில் பால் வேறுபாடின்றி கொன்று குவித்துக் கொண்டிருக்கும் இஸ்லாமிய எதிர்ப்புவாத நாசகார சக்திகளின் செயற்பாடுகளுக்கு உடந்தையாக இருக்கும் இஸ்லாமிய நாடுகள் கிஞ்சித்தும் கவலை கொள்ளாது தமது சமுகத்தையே ஈவிரக்கமற்ற முறையில் அழித்து வரும் நாடுகளுக்கு அடிமையாகி இருப்பது அவர்கள் ஒட்டுமொத்த இஸ்லாத்திற்கும் செய்யும் மாபெரும் துரோகமாகவே இருக்கின்றது.

இன்றைய யுகத்தில் வல்லரசுகள் தமது தேவைகளை நிறைவு செய்வதற்கும், தமது திட்டங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கும் இஸ்லாமிய நாடுகளை தாராளமாகவே பயன்படுத்திக் கொள்கின்றன. ஒருசில இஸ்லாமிய நாடுகள் ஆயுதக் கொள்வனவிற்கும், ஏனைய பொருட்களின் இறக்குமதிகளுக்கும் தமது எண்ணை வளத்தை தாரைவார்த்து அவர்களின் நிகழ்சி நிரல்களுக்கு செயற்படுவதன் மூலம் இந்த இஸ்லாமிய நாடுகள் இருப்பதால் இன்று இஸ்லாம் அந்நியர்களுக்கும், வல்லரசுகளுக்கும் விலைபோயுள்ளதாகவே இருப்பதை அவதானிக்க முடிகின்றது. இந்த நாடுகள் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் நிகழ்ச்சி நிரல்களுக்கு அமைவாக செயற்படுகின்றனவே தவிர இஸ்லாமியர்கள் என்ற வரையறைக்குள் இல்லாதவர்களாகவே இருக்கின்றனர்.

சுமார் 70 ஆண்டுகளுக்கு மேலாக பலஸ்தீன முஸ்லிம்கள் நாசகார இஸ்ரேல் ஆக்கிரமிப்பால் தமது இயல்பு வாக்கைகளை இழந்து உயிர்களை நாளாந்தம் பறிகொடுத்து கொண்டு நிம்மதியற்ற நிலையில் வாழ்வதுடன் அவர்களின் பொருளாதாரம், இருப்பிடம் அனைத்தையும் இழந்து கொண்டிருக்கிற விடயம் முஸ்லிம்கள் என்ற வகையில் கண்ணீர்விட வைக்கும் சம்பவங்களாக இருக்கின்றன. இவ்வாறதொரு துர்ப்பாக்கிய நிலையில் இஸ்லாத்திற்கும், முஸ்லிம்களுக்கும் எதிராக செயற்படும் வல்லரசுகளுக்கு இந்த இஸ்லாமிய நாடுகள் முஸ்லிம்களை ஒட்டுமொத்தமாக அழிக்கத்துடிக்கும் அவர்களுக்கு துணைபோவதும் அவர்களின் அராஜகங்களுக்கு உடந்தையாகவும் இருப்பது வேதனையான விடயங்களாகவே இருந்து வருகின்றன.

1948ஆம் ஆண்டு காலப்பகுதியில் இஸ்ரேலியர்கள் பலஸ்தீன மக்களின் பூமியை அத்துமீறி கைப்பற்றி அன்றிலிருந்து இன்று வரை மானிடம் ஜீரணித்துக் கொள்ளாத அளவிற்கு படுபாதகச் செயல்களையும், அராஜகங்களையும் கலிமாச் சொன்ன அந்த அப்பாவி முஸ்லிம்கள் மீது தமது அடாவடித் தனங்களை மேற்கொண்டு வருகின்றனர். பலஸ்தீன் மக்களின் வரலாற்றையும் இஸ்ரேல் படைகளினதும், இஸ்ரேல் அரசாங்கத்தின் கொடூர செயற்பாடுகளையும் நன்கறிந்து கொண்டுள்ள இஸ்லாமிய நாடுகளும், சர்வதேச சமுகமும், ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள், சர்வதேச மண்ணிப்புச் சபைகள் எல்லாம் பலஸ்தீன் மக்கள் விடயத்தில் மௌனம் காப்பதுடன் இதுவிடயத்தில் அவர்கள் மாற்றாந்தாய் மனப்பான்மையில் இருப்பதும் அவர்களின் மனிதாபிமானமற்ற செயற்பாடுகளாகவே இருப்பதாக சமுக ஆர்வளர்கள் கவலை வெளியிடுகின்றனர். மனித உயிர்களை அநியாயமாக பலியெடுப்பவர்கள் விடயத்தில் பெயரளவில் இந்த அமைப்புக்கள் இருக்கின்றனவே தவிர செயற்பாடுகளளில் கொலைகளாகவே இருக்கின்றன.



தமது இனம் அழிவின் பாதையில் செல்வது மட்டுமல்லாது ஈவிரக்கமற்ற வகையில் கொல்லப்படுவதை இஸ்லாமிய நாடுகள் கண்டும் காணாததுபோல் இருப்பதால் தாம் விரும்பியபடி இஸ்ரேல் அவர்களின் அடாவடித்தனங்களை செய்வதற்கு தூண்டும் செயற்பாடுகளாகவே அமைகின்றது. குறைந்தபட்சம் இஸ்லாமியர்கள் என்ற வகையில் தமது கண்டனங்களையும், எதிர்ப்புக்களையும் காட்டினால்கூட பாதிக்கப்படும் அந்த மக்கள் ஓரளவு நிம்மதி கொள்ள முடியும் ஆனால் வல்லரசுகளுக்கு துணைபோகும் இந்த இஸ்லாமிய நாடுகள் எரிகின்ற நெருப்பில் எண்னைவார்ப்பதுபோல் இருப்பது அந்த மக்களின் அழிவுகளுக்கு மேலும் வலுவூட்டும் செயற்பாடுகளாகவே இருக்கின்றன.

**தமது இனம் அழிவின் பாதையில் செல்வது மட்டுமல்லாது ஈவிரக்கமற்ற வகையில் கொல்லப்படுவதை இஸ்லாமிய நாடுகள் கண்டும் காணாததுபோல் இருப்பதால் தாம் விரும்பியபடி இஸ்ரேல் அவர்களின் அடாவடித்தனங்களை செய்வதற்கு தூண்டும் செயற்பாடுகளாகவே அமைகின்றது. குறைந்த பட்சம் இஸ்லாமியர்கள் என்ற வகையில் தமது கண்டனங்களையும் எதிர்ப்புக்களையும் காட்டினால்கூட பாதிக்கப்படும் அந்த மக்கள் ஓரளவு நிம்மதி கொள்ள முடியும்**

பலஸ்தீன மக்களின் பூர்வீகங்களில் இலட்சக்கணக்கான சட்ட விரோத குடியேற்றங்களை இஸ்ரேல் அரசும், இஸ்ரேலியப் படைகளும் மேற்கொண்டு வருவதற்கு அமெரிக்கா செயற்பட்டு வருவதும் உலக முஸ்லிம்கள் மத்தியில் ஒருவகையான வெறுப்புணர்வை மேலும் வழுவூட்டுவதாகவே இருந்து வருகின்றது. அமெரிக்கா முற்றிலும் இஸ்லாத்திற்கு முரணான நாடாகவே அது செயற்பட்டு வருகின்றது. அதிலும் தற்போதைய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம் முற்றிலும் இஸ்லாமிய எதிர்ப்புவாத ஒரு மனிதராக இருப்பதால் அவருக்கு இஸ்ரேல் முஸ்லிம்களை அழிப்பதற்கு கிடைத்த பொரியாகவே இருப்பதை காண முடிகின்றது.

நிராயுதபானிகளான பலஸ்தீன மக்கள் நவீன ஆயுதங்களால் நாளாந்தம் அநியாயமான முறையில் கொல்லப்பட்டு வருவவது விடயத்தில் அவர்களுக்கு ஆதரவாக இஸ்லாமிய நாடுகள் முன்வராது இருப்பதனால்தான் அவர்களை கொன்று குவிக்கும் இஸ்ரேல் இராணுவம் இன்று அராஜகங்களை வகை தொகடியின்றி மேற்கொண்டு வருகின்றனர். இஸ்ரேல் இராணுவம் மேற்கொள்ளும் அராஜகங்களுக்கு எதிராக தமது எதிர்ப்புக்களை மேற்கொண்டு வரும் பலஸ்தீன மக்களை பால் வேறுபாடின்றி தேவையற்ற வகையில் கைது செய்து சிறைகளில் அடைத்து வைத்து கடுமையான சித்திரவதைகளையும் மேற்கொண்டு வருகின்றமை, நியாயமற்ற வகையில் துப்பாக்கி ரவைகளால் கொன்று குவித்து பாரிய மனித உரிமைகளை அப்பட்டமாக மீறி வருகின்றதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.



இவர்கள் விடயத்தில் எந்தவொரு நாடும் குரல் கொடுக்காது இருக்கும் விடயத்தைப் பார்க்கும் போது உலகில் மனிதாபிமானமும், ஜனநாயகமும் அழிந்து சர்வாதிகாரமும், அராஜகமும் பாரியளவில் மனித உரிமை மீறல்களும் இடம் பெற்று வருகின்றதையே இன்று காண முடிகின்றது. இந்த விடயம் நீடிக்கப்படுமானால் அது உலக முஸ்லிம்களின் அழிவிற்கான ஆரம்பம்மாகவே இருக்கின்றது என்பததை இஸ்லாமிய நாடுகள் புரிந்து கொள்ள வேண்டும்.

பண பலமும், ஆள்பலமும் இருந்தும் இஸ்லாமிய நாடுகள் தமது கலிமாச் சொன்ன சமுகமே கண்முன்னே அழிக்கப்படுவதை இந்த இஸ்லாமிய நாடுகள் கண்டு கொண்டிருப்பதானது இந்த நாடுகளுக்கு முதுகெழும்பு இல்லை என்ற குற்றச்சாட்டே மக்களால் முன்வைக்கப்படுகின்றது. நிலவளத்திலும், கடல்வளத்திலும் முஸ்லிம்களுக்கு எதிராக இஸ்ரேல் கடுமையான தடைகளைப்போட்டு அந்த மக்களின் வாழ்வுரிமைக்கு துரோகமிழைத்து வருகின்றனர். மக்களின் அபிலாசைகள், அவர்களின் பாதுகாப்பு போன்ற சகல விடயங்களிலும் முற்றிலும் புறக்கணிக்கப்பட்ட மக்களாகவே பலஸ்தீன மக்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

சர்வதேசத்தின் சகல சட்டங்கனையும், கட்டளைகளையும் மீறி சர்வாதிகார முறையில் உலக நாடுகளுக்கும், முஸ்லிம்களுக்கும் அச்சுறுத்தலாக இருந்து கொண்டு அந்த மக்களின் வைத்திய பொருட்களைக் கூட பெற்றுக் கொள்ள முடியாதளவு மனிதாபிமானமற்ற வகையில் தடைகளைப் போட்டு மருந்துப் பொருட்களை அவதிப்படும் பலஸ்தீன், ஹாஸா பகுதி மக்களுக்கு கிடைக்காத வகையில் இவர்கள் மனிதாபிமானமற்ற முறையில் இருக்கும் விடயத்திலும் சர்வதேசம் மௌனம் காப்பதும் கவலையான சம்பவங்களாகவே இருக்கின்றன.

மனித உயிர்களை மதிக்க வேண்டும் என்ற சர்வதேச மனித உரிமைகள் சாசனத்திற்கு மதிப்பளிக்காது முற்றிலும் மாற்றமான முறையில் இஸ்ரேல் அரசு செயற்படுவதை ஐக்கிய நாடுகள் சபையும், மனித உரிமைகள் அமைப்புக்களும் கண்டனங்களைத் தெரிவிக்காது அவர்களின் அட்டூழியங்களை பார்த்துக் கொண்டிருப்பதால் மக்கள் மத்தியில் மேற்படி சர்வதேச அமைப்புக்கள் விடயத்தில் நம்பிக்கையற்ற வகையில் மக்களின் மனங்களில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதையும் அவதானிக்க முடிகின்றது.

இவ்வாறான நிலையில் இலங்கையில் உள்ள முஸ்லிம்கள் சிறுபான்மையாக இருந்தாலும் இங்கும் முஸ்லிம்களுக்கு பல்வேறுபட்ட அநியாயங்கள் ஒருசில இனவாதக் குழுக்களாலும், சமய அமைப்புக்களாலும் மேற்கொள்ளப்பட்ட வருவதை சுட்டிக்காட்டுவதுடன் இங்குள்ள முஸ்லிம்களும் ஒருசில ஏனைய இனங்களைச் சேர்ந்த மனிதாபிமானத்தை விரும்பும் சகோதர அமைப்புக்களும் பலஸ்தீன மக்களுக்காக இலங்கையின் பலஸ்தீன ஒருமைப்பாட்டு இயக்கத்துடன் இணைந்து ஐக்கிய நாடுகள் சபைக்கும், சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்களுக்கும் கடுமையான கண்டனங்களைத் தெரிவிப்பதுடன் பலஸ்தீன மக்கள் மீது இஸ்ரேல் மேற்கொள்ளும் அடாவடித் தனங்களுக்கு எதிராக குரல் கொடுப்பதுடகன் அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற வகையில் தமது ஒத்துழைப்புக்களை வழங்கி வருகின்றனர்.

இந்த வகையில் பலஸ்தீன மக்கள் நூற்றாண்டு கலமாக தமது உயிரைப் பாதுகாக்கவும். நிலத்தைப் பாதுகாக்கவும் அவலப்பட்டுக் கொண்டு அதற்காக இன்றுவரை பல்லாயிரக் கணக்கான உயிர்களை காவு கொடுத்து சிறியோர் முதல் முதியோர் வரை போராடி வரும் மக்கள் விடயத்தில் முஸ்லிம்கள் என்ற வகையில் இஸ்லாமிய நாடுகள் பொறுப்புக் கூறவேண்டியவர்கள் என்பதால் இந்த மக்களின் பிரச்சினைகளுக்கு நியாயமான முறையில் தீர்வு கண்டு இஸ்ரேல் இராணுவத்தின் அடாவடித்தனங்களை உடநடியாக நிறுத்தி அவர்கள் மேற்கொண்ட கொலைக் கலாசரா குற்றங்களுக்கு தண்டனை வழங்கி அந்த மக்களின் அழிவுகளுக்கும், இழப்புக்களுக்கும் இழப்பீடுகளை பெற்றுக் கொடுக்க வேண்டிய கடப்பாடு இஸ்லாமிய நாடுகளுக்கே உள்ளது.

எனவே வல்லரசுகளுக்கு அடிமையான இஸ்லாமி நாடுகள் தீர்வையும், அமைதியையும் எதிர்பார்க்கும் பலஸ்தீன் மக்களுக்கு உதவுவதில் தமது கவனத்தை செலுத்த வேண்டும். இஸ்லாம் அழியாது பாதுகாக்கப்பட வேண்டுமானால் இஸ்லாமிய எதிர்ப்புவாத நாடுகளுக்கு துணைபோகும் இஸ்லாமிய நாடுகள் தமது கொள்கைகளை மாற்றிக் கொண்டு செயற்படுவதே உலக அமைதிக்கும், சமாதானத்திற்குமான வழியாகும் எனலாம்.

# ஜனாதிபதி மீதான கொலை முயற்சியே

# தற்போதைய அரசியல் குழப்பங்களுக்கு மூலகாரணம்!

ஏகாதிபத்திய சக்திகள் இலங்கையில் தமக்கு சாதகமான ஆட்சி மாற்றம் ஒன்றைக் கொண்டு வரும் புதிய முயற்சியாக 2015 ஜனவரி 8 ஜனாதிபதி தேர்தலின் போது இரண்டு விடயங்களைக் கைக்கொண்டன.

ஒன்று, ஆட்சியில் இருந்த சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் நீண்டகால உறுப்பினரும், அக்கட்சியின் பொதுச் செயலாளருமான மைத்திரிபால சிறிசேனவை அக்கட்சியிலிருந்து வஞ்சகத்தனமாகப் பிரித்தெடுத்து ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தியது. அதற்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகவைப் பயன்படுத்தியது.

இரண்டாவது, ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதி தேர்தலில் தனது சொந்த வேட்பாளரை நிறுத்தாமல் மைத்திரியை பொது வெட்பாளராக ஏற்றுக் கொள்ள வைத்தது.

இத்தகைய நடவடிக்கைகள் மூலமே இலங்கையில் ஏகாதிபத்திய சக்திகள் தமது நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டன.

ஜனாதிபதி தேர்தலைத் தொடர்ந்து பதவியில் இருந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் கூடிய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தைக் கலைத்து 47 உறுப்பினர்கள் மட்டும் கொண்ட ஐ.தே.கவின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க புதிய ஜனாதிபதி மைத்திரியினால் பிரதமராக்கப்பட்டார். அப்பட்டமாக ஜனநாயத்தை மீறிய இச்செயல் செயல் குறித்து அப்போது ‘சர்வதேச சமூகம்’ எனப்படும் மேற்கு நாடுகள் எவ்வித எதிர்ப்பினையும் வெளிப்படுத்தவில்லை.

‘நல்லாட்சி’ என்ற பெயரில் மூன்றரை வருடங்களாக நடைபெற்ற ரணில் - மைத்திரி ஏகாதிபத்திய சார்பு அரசு நாட்டு மக்களுக்கு தேர்தல் காலங்களில் கொடுத்த எவ்வித வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை. மாறாக நாட்டு மக்கள் மேல் பலவிதமான வரிச்சுமைகள் ஏற்றப்பட்டன. விலைவாசி பல மடங்கு அதிகரித்தது. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்தது. ரூபாயின் மதிப்பு மிகவும் மோசமாக வீழ்ச்சியடைந்தது. நாட்டின் பொதுச் சொத்துக்கள் அந்நிய கொம்பனிகளுக்கு அறாவிலைக்குத் தாரை வார்க்கப்பட்டன. கல்வி, போக்குவரத்து மற்றும் சுகாதாரத் துறைகள் படிப்படியாக தனியார்மயப்படுத்தப்பட்டு வந்தன.

இன்னொரு பக்கத்தில் ஜனநாயக அரசியலுக்கு முரணாக ஐம்பதுக்கும் அதிகமான உறுப்பினர்களைக் கொண்ட கூட்டு எதிரணியைப் புறக்கணித்துவிட்டு 16 பேர் மட்டும் கொண்ட தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு எதிர்க்கட்சி அந்தஸ்து வழங்கப்பட்டது. பிரதமர் ரணில், ஜனாதிபதி மைத்திரியின் பல அதிகாரங்களை பலவந்தமாக எடுத்துக்கொண்டு எதேச்சாதிகாரமாக செயல்படத் தொடங்கினார். எதிர்க்கட்சியினரை ஒடுக்குவதற்காக அவர்கள் மீது வகைதொகையில்லாத பொய் வழக்குகள் போடப்பட்டன.

35 வருடப் போரின்போது கூட ஒழுங்காகத் தேர்தல்கள் நடந்து வந்த இலங்கையில் ‘நல்லாட்சி’ பதவிக்கு வந்தபின்னர் 3 வருடங்களாக உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்தப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வந்தன. பதவி முடிந்த மாகாண சபைகளுக்கும் இன்னமும் தேர்தல்கள் நடத்தப்படவில்லை. கடைசியாக ஒருவாறு பலத்த அழுத்தங்களுக்கு மத்தியில் கடந்த பெப்ருவரி 10இல் உள்ளூராட்சி தேர்தல்கள் நடத்தப்பட்ட போது ஆட்சிப் பங்காளிகளான இரு கட்சிகளும் படுதோல்வியடைந்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையிலான எதிரணி அமோக வெற்றி பெற்றது.



**தாயகன்**

இவ்வாறு ‘நல்லாட்சி’ என்று கூறப்பட்ட அரசு நடைமுறையில் நாசகார ஆட்சியாகவே கடந்த மூன்றரை வருடங்களாகச் செயற்பட்டது. உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் அரச கட்சிகளுக்கு ஏற்பட்ட தோல்வியைத் தொடர்ந்து அவற்றுக்கிடையே இருந்த மோதல் உக்கிரமடைந்தது. இருந்தாலும் ரணிலும் மைத்திரியும் ஆட்சியை ஏதோ ஒருவிதமாக ஓட்டி வந்தனர். சிறீலங்கா சுதந்திரக் கட்சியை நல்லாட்சி அரசிலிருந்து விலக்கும்படி எதிரணியினர் பலமுறை வலியுறுத்தியும் மைத்திரி ரணிலுடன் ஆட்சியைத் தொடர்ந்து கொண்டே இருந்தார்.

ஆனால் ஒக்ரோபர் 26ஆம் திகதி யாரும் எதிர்பாராதவிதமாக ரணிலை பிரதமர் பதவியிலிருந்து நீக்கிவிட்டு மகிந்த ராஜபக்சவை பிரதமர் ஆக்கினார் ஜனாதிபதி மைத்திரி. அதுமட்டுமல்லாமல் நாடாளுமன்றத்தை நொவம்பர் 16 வரையும் ஒத்தி வைத்தார். பின்னர் சடுதியாக நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு, 2019 ஜனவரி 5இல் பொதுத் தேர்தல் நடைபெறும் எனவும் அறிவித்தார்.

ஜனாதிபதி அடுத்தடுத்து எடுத்த இந்த அதிரடி நடவடிக்கைகள் எல்லாம் இலங்கை அரசியல் சக்திகளை மட்டுமின்றி சர்வதேச அரசியல் சக்திகளையும் திகைப்பில் ஆழ்த்தின. முன்னர் ஜனநாயகத்தின் காவலன் என அவை வர்ணித்த மைத்திரியை இப்பொழுது சர்வாதிகாரி என வர்ணிக்க ஆரம்பித்தன.

மைத்திரியின் நடவடிக்கைகள் அரசியல் சாசனத்துக்கு விரோதமானவை என அந்த சக்திகள் தொடர்ந்து கூப்பாடு போட்டு வருகின்றன. ஆனால் மைத்திரி எடுத்த நடவடிக்கைகள் அனைத்தும் அரசியல் சாசனம் அவருக்கு வழங்கியுள்ள அதிகாரத்தின் அடிப்படையிலேயே எடுக்கப்பட்டுள்ளன என நாட்டின் பெரும்பான்மையான அனுபவமிக்க சட்ட வல்லுனர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இந்த இடத்தில் ஒரு முக்கியமான கேள்வி எழுகின்றது. அதாவது மூன்றரை வருடங்களாக ரப்பர் போல ரணிலுடன் இழுபட்டுக் கொண்டிருந்த மைத்திரி ஒக்ரோபர் 26இல் ஏன் திடீரென இப்படியான அதிரடி நடவடிக்கையில் இறங்கினார் என்ற கேள்வி எழுகின்றது. அதுவும் ரணிலை பிரதமர் பதவியில் இருந்து அகற்றிய பின்னர் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில், ரணிலுடன் இணைந்து ஆட்சியமைத்த இரண்டொரு மாதங்களிலேயே அவருடன் இணைந்து வேலை செய்வது முடியாத காரியம் என்பதைத் தான் புரிந்து கொண்டதாகக் கூறும் மைத்திரி, அப்படியானால் விரைந்து நடவடிக்கை எடுக்காமல் ஏன் பொறுத்திருந்தார்.

2015 ஜனவரி 8இல் நாட்டு மக்கள் தனக்கு வழங்கிய தீர்ப்பை ஊதாசீனப்படுத்தக் கூடாது எனப் பொறுத்திருந்த மைத்திரி ஏன் ஒக்ரோபர் 26இல் பொங்கியெழுந்தார்? இங்குதான் உண்மை பொதிந்து கிடக்கிறது. உண்மை என்னவென்றால், தன்னையும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்சவையும், ராஜபக்ச குடும்பத்தின் ஏனைய உறுப்பினர்களையும் உள்நாட்டு - வெளிநாட்டு சக்திகள் கொலை செய்வதற்கு திட்டமிட்டு இருக்கிறார்கள் என்ற விடயம் அம்பலத்துக்கு வந்ததும்தான் நிலைமை கைமீறிப் போய்விட்டதை மைத்திரி சடுதியாக உணர்ந்தார்.

இந்தக் கொலைச் சதி சம்பந்தமாக பிரதி பொலிஸ் மாஅதிபர் ஒருவரும், இந்தியாவின் றோ என்ற உளவு அமைப்பின் தொடர்பாளர் ஒருவரும் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நாட்டின் ஆட்சித் தலைவரான ஜனாதிபதியை கொலை செய்யும்; சதி முயற்சியில் பிரதி பொலிஸ் மாஅதிபருக்கு தொடர்பு இருக்கின்றது என்ற தகவல் வந்த பின்பும் பொலிஸ் துறைக்கு பொறுப்பாக இருந்த பிரதமர் ரணில் அந்தப் பொலிஸ் அதிகாரி மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. பின்னர் பலத்த வலியுறுத்தலுக்கு பின்னரே அந்த அதிகாரி லீவில் அனுப்பப்பட்டார். அவரைக் கைது செய்து விசாரிக்கும்படி விடுத்த வேண்டுகோளையும் ரணில் உதாசீனப்படுத்தினார். பின்னர் தொடர்ச்சியான வலியுறுத்தலுக்குப் பின்னரே அந்த பொலிஸ் அதிகாரி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் தொடர்ந்து ஐந்து நாட்கள் தினமும் பலமணி நேரம் விசாரிக்கப்பட்டார். அந்த விசாரணையின் அடிப்படையில் அவர் சந்தேக நபராக இனம் காணப்பட்டு, கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதில் இன்னொரு முக்கியமான விடயம் என்னவெனில், இந்த பொலிஸ் அதிகாரி பற்றிய விசாரணை அறிக்கையை ஜனாதிபதி மைத்திரி கோரியும் பிரதமர் ரணில் அதை அனுப்பாது தவிர்த்துள்ளார். இவையெல்லாம் சேர்ந்து இந்த கொலை சதி முயற்சியில் ஐ.தே.கவுக்கு தொடர்பிருக்கலாம் என்ற

16 ஆம் பக்கம் பார்க்க....

---

## மட்டக்களப்பு..

07 ஆம் பக்கத் தொடர்ச்சி

வெளியேறி சென்றுள்ளமை தெரியவந்துள்ளது.

அவர் மீது சந்தேகம் கொண்ட பொலீசார் அவரை விசாரணை செய்த போது அவர் உண்மையிலேயே சுகவீனமுற்று இருந்ததாகவும் அவர் வழமையாக 1.10 மணியளவில் கடமை முடிந்து செல்பவர் எனவும் சம்பவ தினம் வழமை போன்றே அவர் சென்றுள்ளார் என கூறப்படுகிறது.

அவர் சென்றதன் பின்னரே குறித்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதால் அவர் செல்லும் வரை தாக்குதல் தாரிகள் காத்திருந்தார்களா? அவர் வழமையாக வெளியேறிச் செல்வதை தாக்குதல் நடத்தியவர்கள் முன்னரே அறிந்து வைத்திருந்து அவர் சென்றதன் பின்னர் தாக்குதல் நடத்தினார்களா? போன்ற பல்வேறு கேள்விகள் தொக்கி நிற்கிறது.

எது எப்படி இருப்பினும் குறித்த தாக்குதல் சம்பவம் தற்செயலாக நடந்த ஒன்று அல்ல அது மிகவும் திட்டமிடப்பட்டு நடத்தப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.



### தாக்குதலுக்கான பின்னனி காரணிகள் என்ன?

மட்டக்களப்பின் பல இடங்களில் பொலீஸ் சோதனைச் சாவடிகள் இருக்கும் போது மட்டக்களப்பு நகரையும் படுவான்கரைப் பிரதேசத்தையும் இணைக்கும் வலையிறவு பாலத்தில் அமைந்துள்ள பொலீஸ் சோதனைச் சாவடியை தாக்குதல் தாரிகள் தங்களது இலக்காக தேர்ந்தெடுத்து ஏன்?

அதுவும் இராணுவம் புலனாய்வு பிரிவு உள்ளிட்ட ஏனைய பாதுகாப்பு தரப்புகள் இருக்கும் போது பொலீசாரை தாக்குதல் இலக்காக தாக்குதல் தாரிகள் தேர்ந்தெடுத்தது ஏன்? அதுவும் வவுணதீவு பொலீசாரை குறிவைத்தது ஏன்? என்ற கேள்விகள் எழுகிறது.

இந்த தாக்குதல் சம்பவத்தின் சூத்திரம் ஒன்று உண்டு என்பதை பாதுகாப்பு தரப்பினரால் முன்னெடுக்கப்படும் விசாரணைகள் மூலம் தெரிய வரவாய்ப்புள்ளது.

### மாவீரர் தினத்தை நோக்கி திரும்பும் விசாரணைகள்!

தாக்குதல் சம்பவத்தை உடனடியாக தாண்டியடி மாவீரர் தினத்துடன் முடிச்சுப் போடும் வகையில் விசாரணைகள் நகர்வதை அவதானிக்க முடிகின்றது.

அதற்கான ஆதாரங்கள் இருக்கின்றதோ இல்லையோ என்பதை பாதுகாப்பு தரப்பினர் தான் விசாரணைகள் மூலம் கண்டுபிடிக்க வேண்டும் ஆனால் அந்த விசாரணைகள் சரியான பாதையில் செல்கிறதா? என்ற கேள்விகளும் எழுகிறது.

பொலீசார் மீதான தாக்குதல் சம்பவத்தை தொடர்ந்து உடனடியாகவே தாண்டியடி மாவீரர் தினத்தை முன்நின்று நடத்திய சிலரை விசாரணைக்காக அழைத்து அதில் அஜந்தன் என்பவரை தொடர்ந்தும் தடுத்து வைத்து விசாரணை நடத்தி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தாண்டியடி மாவீரர் தின நாள் நடைபெற்ற சமயத்தில் வவுணதீவு பொலீஸாருக்கும் மாவீரர் தின ஏற்பாட்டாளர்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டதனை தொடர்ந்து இந்த தாக்குதல் சம்பவம் நடைபெற்ற படியால் இந்த சம்பவத்தை மாவீரர் தினத்தை நடத்தியவர்கள் உடன் முடிச்சுப் போட சிலர் முனைகின்றனர்.

குறிப்பாக சிங்கள இனவாத ஊடகங்களும் இனவாத அரசியல் வாதிகளும் இந்த சம்பவத்தை மீண்டும் புலி வருது என்ற வகையில் அடையாளப்படுத்த முனைவதை அவதானிக்க முடிகின்றது.

அதற்கு ஏற்றால் போல் பாதுகாப்பு தரப்பினரும் செயற்படுவது தமிழ் மக்களின் பாதுகாப்பு குறித்த அச்சத்தினை தோற்றுவித்துள்ளது.

குறிப்பாக மாவீரர் தினத்தை ஒழுங்கு செய்தவர்களை தமிழீழ விடுதலைப் புலிகளுடன் முடிச்சுப் போட்டு கைது செய்யும் நிலை உருவாக்கப்படுகிறது என்ற அச்சம் நிலவுகிறது.

### துருவி துருவி விசாரணைக்கு உட்படுத்தப் படும் முன்னாள் போராளிகள்!

தாக்குதல் சம்பவத்தை தொடர்ந்து வவுணதீவு பிரதேசத்தில் உள்ள முன்னாள் போராளிகள் பலரை பாதுகாப்பு தரப்பினர் அவர்களது வீடுகளுக்கு சென்று துருவி துருவி விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதன் காரணமாக மட்டக்களப்பில் உள்ள முன்னாள் போராளிகள் அச்சம் அடைந்துள்ளனர். வழமை போன்று இந்த சம்பவத்தை முன்னாள் போராளிகள் மீது சுமத்தி அவர்களை அரசு கைது செய்து சிறையில் அடைக்கப்போகிறதா என்ற பயம் சகல முன்னாள் போராளிகள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

### அவசர அவசரமாக வருகை தந்த பொலீஸ்மா அதிபர்!

வவுணதீவு பொலீசார் மீதான தாக்குதலை தொடர்ந்து அவசர அவசரமாக பொலீஸ் மா அதிபர் மட்டக்களப்பிற்கு விஜயம் செய்து சம்பவ இடத்தை பார்வையிட்டதுடன் மாவட்ட பாதுகாப்பு தொடர்பாக மாவட்ட பொலீஸ் அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளார்.

பொலீஸ் மா அதிபரின் மட்டக்களப்பு விஜயம் வவுணதீவு சம்பவம் தேசிய ரீதியில் ஏற்படுத்தப்பட்டுள்ள முக்கியத்துவத்தை எடுத்து காட்டியுள்ளது.

### கருணா மீதான குற்றச்சாட்டு!

வவுணதீவு சம்பவத்திற்கும் கருணா அம்மானுக்கும் இடையே தொடர்வுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின பண்டார பாராளுமன்றத்தில் குற்றம் சாட்டியுள்ளார்.

ஆனால் அதனை கருணா அம்மான் மறுத்துள்ளார்.



பாதுகாப்பு தரப்பின் உள்ளக தகவல்களின் படி வவுணதீவு தாக்குதல் சம்பவத்திற்கும் தாண்டியடி மாவீரர் தினத்திற்கும் இடையே தொடர்வு உள்ளதா என்ற கோணத்திலும் விசாரணைகள் நடைபெறுவதாக தெரிய வந்துள்ளது.

மறு புறம் குறித்த தாக்குதல் சம்பவம் சட்டவிரோத கடத்தல்காரர்களின் செயற்பாடாக இருக்குமா? என்ற கோணத்திலும் விசாரணைகள் நடைபெற்று வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எது எப்படி இருப்பினும் தாங்கள் குற்றவாளிகளை நெருங்கி விட்டதாகவும் இன்னும் ஒரு வாரத்தில் குற்றவாளிகளை கைது செய்ய முடியும் என பாதுகாப்பு தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

எனவே வவுணதீவு பொலீஸ் சோதனைச் சாவடி மீனாத தாக்குதல் சம்பவத்தின் சூத்திரம் விரைவில் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு அதற்காண காரணங்கள் என்ன? கொலையாளிகள் யார்? போன்ற விடயங்கள் வெளிவரும் போது இந்த தாக்குதல் சம்பவத்தின் உண்மை உலகிற்கு தெரியவரும்.

அதுவரை குறித்த இரண்டு பொலீஸ் உத்தியோகத்தர்களும் பலி எடுக்கப்பட்டார்களா? பலி கொடுக்கப்பட்டார்களா? என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

---

## கல்வி...

10 ஆம் பக்கத் தொடர்ச்சி

இளம் சிறுமியர், சிறுவர்களுடன் மத்ரஸாக்களுக்குச் சென்று அண்மித்த பாடசாலைகளிலும் சேர்ந்தனர். எனினும் பருவமெய்திய பின்னர் பாடசாலைக் கல்வியை அவர்கள் தொடரவில்லை.

சோனகத் தெருவானது முஸ்லிம் பிரதேசம் என இனங்காணப்பட்டிருந்தாலும் தமிழ் சமூகத்துடன் பெருமளவு உறவும் நட்பும் நிலவியது. அஸீஸ் அவர்கள் வைத்தீஸ்வராக் கல்லூரியிலும் பின்னர் யாழ்ப்பாண இந்துக் கல்லூரியிலும் கல்வி பயின்றார். நிச்சயமாக இதன் காரணத்தினால் தான் அன்னார் தாராள மனமும் புரிந்துணர்வும் கொண்டவராகவும், எல்லாச் சமூகங்களுக்குமிடையிலும் நட்புறவையும் புரிந்துணர்வையும் வளர்ப்பதில் ஆர்வம் கொண்டவராகவும் திகழ்ந்தார்.

அல்லாஹ்வின் மீதான விசுவாசத்தையும் ஆண்களின் மட்டுமன்றி பெண்களினதும் கல்வியின் முக்கியத்துவம் பற்றி தனது தாயே தனக்கு ஊட்டியதாகவும் அஸீஸ் எப்போதும் பேசுபவராக இருந்தார். தாயின் வழிகாட்டலில் குடும்பத்தில் பிள்ளைகள் அனைவரும் குர்ஆனை ஓதவும், தமது பேச்சு மொழியாகிய தமிழில் அதன் கருத்தைப் படிக்கவும் செய்தனர். அரபுத் தமிழ் மற்றும் தமிழ் மொழியிலான ஆக்கங்களை வாசித்தனர்.

இக்காலப் பகுதியிலே அஸீஸ் பெண்கள் கல்வியைப் பற்றி ஆர்வம் கொள்ள ஆரம்பித்தார். தனது ஒன்றுவிட்ட சகோதரியான சித்தி கதீஜாவை லண்டன் மெட்ரிகுலேசன் பரீட்சைக்குத் தோற்றுமாறு ஊக்கப்படுத்தினார். அதற்காக அவர், யாழ்ப்பாண பரிசுத்த குடும்ப கன்னியர் மடத்தில் கல்வி கற்ற வழிசமைத்தார். இப்பரீட்சையில் சித்தியடைந்த அவர், காலத்திற்கேற்ப மேற்கொண்டு கல்வியைத் தொடரவில்லை.

உயர் கல்விக்கும், பல்கலைக்கழக பட்டத்துக்கும் பெண்களுக்குரிய உரிமைகள் மீது அஸீஸ் பிடிவாதமாக இருந்தார். பெண்களின் கல்விக்கு இடையூறாக இருந்த, பருவமடைந்த பின் பாடசாலைக்குப் போக அனுமதிக்காத மனப்போக்கைக் கொண்டு வந்த பர்தா (ஒதுங்கல்) முறையையும் இஸ்லாத்திற்கு பாதகமான சீதன முறையையும் அங்கீகாரம் பெறவில்லை. பர்தா முறை பெண்களின் கல்விக்குத் தடையாக இருந்தன. பருவமடைந்த பின் அவர்கள் பாடசாலைக்குச் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

அவர்கள் தமது வீட்டு வரையறைகளுக்குள் முடக்கப்பட்டு, தூய குர்ஆனை ஓதவும், ஹதீஸ்களை வாசிக்கவும் கற்றுக் கொடுக்கப்பட்டனர். ஆகக்கூடியது, இஸ்லாமிய கீதங்களைக் கற்றனர். இதனோடு இளம் வயதிலேயே விவாகம் செய்து கொடுப்பதற்காக பெண் பிள்ளைகளுக்கு சமையலும் தையலும் கற்றுக் கொடுக்கப்பட்டது.

1950 வரையிலும் கூட பர்தா முறை நிலவியதோடு, கடுமையாக கடைப்பிடிக்கவும் பட்டது. இத்தகையதொரு காலகட்டத்திலேயே அஸீஸ் அவர்கள், முஸ்லிம் பெண் கல்விக்காக உயரக் குரல் கொடுத்ததோடு, சீதன முறையையும் கடுமையாகச் சாடினார்.

கற்ற பெண்ணொருத்தி, தம்மை மேம்படுத்திக் கொள்ளும் ஒழுக்க விழுமியங்களுடன் கூடிய கல்வி கற்ற பிள்ளைகளை வளர்த்தெடுப்பாள் என்ற அசையாத நம்பிக்கையை அஸீஸ் கொண்டிருந்தார். அதுவே எழுச்சிக்கான மிகப்பெரிய தேடலாகும் என்பது அவரது கருத்தாகும். இந்தக் கருத்துக்களை தனது உரைகளிலும் எழுத்துக்களிலும் கருத்தரங்குகளிலும் கலந்துரையாடல்களிலும் வெளிப்படுத்தினார். அவருடைய முயற்சிகள் பெருமளவு வெற்றியளித்தன. இளம் பெண்கள் பலர் ஆசிரிய பயிற்சி பெற்றுக் கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

1950ஆம் ஆண்டுகள் தொடக்கம் அஸீஸ் அவர்களும், சித்திலெப்பை, டாக்டர் கலீல் மற்றும் சேர் ராசீக் பரீட் போன்ற சம கருத்துடையவர்களோடும் இணைந்து, உயர் கல்வியைத் தொடரும் சவாலை ஏற்று, பல்கலைக்கழக மற்றும் தொழிற்சார் தகைமைகளை அடைந்து கொள்ள விரும்பிய முஸ்லிம் பெண்களின் கல்வியை முன்னெடுத்துச் சென்றனர். அது அவர்களை சுதந்திரவாளிகளாக்கியது.

முன்னேற்றகரமான வாழ்க்கைத் தரத்தை அடையத்தக்கதாக, அவர்களுடைய குடும்பங்களுக்கு பங்களிப்பை வழங்கக் கூடியவர்களாயினர். கல்வி கற்பதற்கும், அவர்களுடைய சமூகத்தின் முன்னேற்றத்துக்கு உதவக்கூடிய வகையிலும் தமது பிள்ளைகளுக்கு கல்வித்துறையில் ஆர்வமூட்டும் இயலுமைகளை அவர்களுக்கு ஏற்படுத்தியது.

இந்தப் படித்த முஸ்லிம் மாதர், ஏனைய சமூகத்தின் படித்த பெண்களுக்கு இணையாக தன்னம்பிக்கையுடன் நிற்பதற்கு ஆற்றலுடையவர்களாக மாறினர். அவர்கள் பல்வேறு தொழிற்துறைகளில் ஈடுபட்டு பொறுப்பு வாய்ந்த பதவிகளையும் இன்று வகிக்கின்றனர். உயர் கல்வியைத் தொடர்வதற்கும் தொழில் பெற்றுக் கொள்வதற்கும் மற்றைய முஸ்லிம் பெண்களுக்கு முன்னுதாரணமாக இருந்து ஊக்கமும், ஆக்கமும் அளித்துள்ளனர்.

# மலையகத்தின் அபிவிருத்தி அரசியல்!

இந்த நாட்டை பொறுத்த வரையில் அரசியல் உரிமை இல்லாமல் நீண்ட நாட்கள் வாழ்ந்த ஒரே ஒரு சமூகம் மலையக பெருந்தோட்ட சமூகம் என்பதே உண்மையாகும். ஐம்பது வருடங்களுக்கு மேலாக வாக்குரிமை இல்லாமல் அரசியல் அனாதைகளாக வாழ்ந்ததன் காரணமாக இந்த மக்கள் மத்தியில் தமக்குள்ள அரசியில் உரிமை குறித்து உணர்வு முற்றாகவே மழுங்கடிக்கப்பட்டது. அவர்களை ஒன்று கூட்டி வைத்திருக்கவும், அவர்களின் தொழில் உரிமைகளை வென்றெடுக்கவும் அவர்கள் மத்தியில் இருந்த தொழிற் சங்கங்கங்களே அவர்களுக்கு அறிமுகமான ஒரே ஒரு அமைப்பாக இருந்தது. அதனால் அவர்கள் அனைத்திற்கும் தொழிற் சங்கங்களில் தங்கியிருக்க வேண்டிய நிலையில் இருந்தார்கள். தொழிற்சங்கங்களின் பொறுப்பு தொழிலாளர்களின் தொழில் உரிமைகளை வென்றெடுப்பதும் அதனை பாதுகாப்பதுமாகும் . ஆனால் தொழிலார்கள் தோட்டங்களுக்குள் அடைக்கப்பட்டு வெளித் தொடர்புகள் இல்லாத சூழலிலும், தோட்ட நிர்வாகங்கள் தொழிலாளர்களின் தொழிலோடு சம்பந்தப்பட்ட விடயங்களில் மட்டுமின்றி தொழிலாளரிரின் வாழ்வோடு சம்பந்தப்பட்ட அனைத்து விடயங்களிலும் அதாவது வீடு, பாதுகாப்பு, நீர் விநியோகம், சுகாதாரம், கல்வி என்பவற்றில் மட்டுமின்றி பிறப்பு இறப்பு, குடும்பம் திருமணம், அகிய அனைத்து விடயங்களிலும் தாக்கம் செலுத்தின. இதன் காரணமாக தொழிற்சங்கங்களும் இந்த அனைத்து விடயங்களிலும் தலையீடு செய்ய வேண்டிய நிலையே காணப்பட்டது. தமக்கு உதவி செய்யக்கூடிய அல்லது நிவாரணம் வழங்க கூடிய ஒரே நிவாரணமாக மக்களுக்கு தோன்றியது தொழிற்சங்கங்களே. இதனால் தமது தொழிற் பிரச்சனைகள் மட்டுமின்றி குடும்ப பிரச்சனைகள் உட்பட அனைத்து விடயங்களிலும் நிவாரணம் தேட தொழிற்சங்களையே நாடினர். இதுவே பெருந்தோட்ட மக்கள் மத்தியில் ஒரு கலாச்சாரமாகவே வேரூன்றி விட்டது. இன்று கூட மக்களின் கோயில் நிர்வாகம் உட்பட மதவிவகாரங்களில் கூட தொழிற்சங்கங்கள் ஆதிக்கம் செலுத்துவதும், அநேகமாக இந்த விவகாரங்களில் ஊழல் தலைவிரித்தாடவும் இதுவே காரணமாக இருக்கிறது. ஐம்பது வருடங்களுக்கு மேலாக வாக்குரிமை இன்றி அரசியல் அனைதைகளாக இருந்து நீண்ட போராட்டங்களுக்கு பின்னர் பிரஜா உரிமையும், வாக்குரிமையும் பெற்றாலும் கூட இன்று வரை கூட தொழிற்சங்களில் அனைத்திற்காகவும் தங்கிவாழும் கலாச்சாரத்தில் இருந்து விடுபட முடியாத நிலையே மக்கள் மத்தியில் காணப்படுகிறது. மக்கள் பிரஜாஉரிமையும் , வாக்குரிமையும் பெற்ற பின்னர் அரசியலில் பங்குபற்றும் உரிமை மக்களுக்கு கிடைத்தது. ஆனால் மிகவும் துரதிஸ்ட வசமாக தோட்டங்களில் இருந்த தொழிற் சங்கங்களே அரசியல் கட்சிகளாக மாறி அரசியலில் ஈடுபட்டதால் தொழிற் சங்கம் எது அரசியல் கட்சி எது என்பதை வேறு பிரித்து அறியமுடியாத சூழலுக்கு மக்கள் தள்ளப்பட்டனர். பெருந்தோட்டங்களில் செயல்பட்ட முக்கியமான தொழிற்சங்கங்கள் அனைத்துமே தமது தொழிற் சங்கத்தையே தமது அரசியலுக்காக மூலதனமாக பயன்படுத்திக் கொண்டதுடன் தொழிற்சங்கங்கள் வேறு, அரசியல் கட்சிகள் வேறு என்பதை மக்களுக்கு தெளிவு படுத்தவோ, மக்களை அரசியல் ரீதியாக அறிவூட்டுவதையோ கபடத்தனமாக தவிர்த்துக் கொண்டன. மிகவும் நீண்டகாலமாக அரசியலில் ஈடுபட முடியாமலும், வாக்குரிமையின் முக்கியத்துவத்தை உணர முடியாமலும் இருந்த மக்கள் மத்தியில் அரசியல் அறிவூட்டல் செய்ய ஒரு சில இடதுசாரி தொழிற்சங்கங்கள் தவிர மக்கள் மத்தியில் பெரும்பான்மை அங்கத்வர்களை கொண்ட எந்த ஒரு தொழிற் சங்கமும் முயற்சி செய்யவில்லை.

இவ்வாறு மக்கள் மத்தியில் அரசியல் அறிவையோ விழிப்புணர்வையோ ஏற்படுத்த இந்த தொழிற்சங்கங்கள் தவறியதன் காரணமாக ஏற்பட்டுள்ள விளைவுகள் என்ன?

கடந்த காலத்திலும் மிகவும் மெதுவானதும் குறைவானமான எண்ணிக்கையில் வீடுகள் அமைக்கப்பட்டது. தற்போது முன்னரைவிட அதிகமான எண்ணிக்கையில் வீடுகள் அமைக்கப்படுகின்றன. தோட்டங்களுக்கு செல்லும் பாதைகள் அமைக்கப்படுகின்றன. இவ்வாறு மக்களுக்காக பொது வசதிகள் செய்து கொடுக்கப்படும் போது அந்த சேவைகளை சம்பந்தப்பட்ட அமைச்சர் சார்ந்த அமைச்சே செய்கிறது. ஆனால் நிலைமை இப்படி இருக்க அந்த அமைச்சர் எந்த தொழிற்சங்கத்தை சார்ந்தவர் என்ற அடிப்படையில் அந்த தொழிற்சங்கமே அந்த அபிவிருத்தி பணிகளை செய்வதாக இன்று வரை மக்கள் கருதுவதால் சம்பந்தப்பட்ட தொழிற்சங்கத்தை அல்லது அது சார்ந்த அரசியல் கட்சியை சார்ந்தவர்;கள் மட்டுமே அந்த நிகழ்ச்சிகளில் பங்குபற்றுகிறார்கள் . பாதைகள் பொதுப் பாதைகள். எல்லோருக்கும் சொந்தமான பாதை என்ற உணர்வுடன் மக்கள் பங்குபற்றுவதில்லை. பங்களிப்பு செய்வதும் இல்லை. இதனால் பாதை திறப்பு அல்லது வீடு திறப்பு வைபவங்களில் தோட்டத்திலுள்ள அனைவரும் பங்குபற்றுவதில்லை. தோட்டங்களில் பாதையோ வீடோ அல்லது எந்த ஒரு அபிவிருத்திப் பணியையோ எந்தகட்சியை சார்ந்தவர் அமைத்தாலும் அல்லது செய்தாலும் அவர் அரசாங்கம் ஒதுக்கும் பணத்திலேயே அமைக்கிறார். அவர்கள் செய்யும் அனைத்து அபிவிருத்தி பணிகளும் அரசு பணத்திலே செய்யப்படுகின்றன என்ற விடயத்தை இதுவரை சம்பந்தப்பட்ட அமைச்சர்களோ அவர் சார்ந்த தொழிற் சங்கங்களோ மக்களிடம் சொல்வதில்லை. மாறாக இந்த அபிவிருத்தி பணிகளையெல்லாம் தங்கள் சொந்த பணத்தில் செய்வது போன்ற ஒரு தோற்றத்தையே அனைவருமே மக்கள் மத்தியில் ஏற்படுத்தி வந்தார்கள். இப்போதும் அதையே செய்கிறார்கள். ஆனால் உண்மை நிலையை என்ன வென்றால் எந்த அமைச்சரும் மாகாண, பிரதேச சபை உறுப்பினரும் தமது சொந்தப்பணத்தில் அல்லது ஆகக் குறைந்தது தமது தொழிற்சங்க பணத்தில் கூட எந்த ஒரு அபிவிருத்தி பணியையும் செய்வதில்லை, செய்ததும் இல்லை. பெருந்தோட்டங்களில் வீடோ, பாதையோ எதை அமைத்தாலும் அது மக்களின் வரிப்பணத்தில் அதாவது அரசாங்க பணத்தில் இருந்தே அமைக்கப்படுகிறது. இப்போதைய சூழ்நிலையில் கூட எந்த ஒரு மலையக அரசியல் வாதியும் தங்கள் அரசு அமைச்சர், அல்லது பாரளுமன்ற உறுப்பினர் அல்லது மாகாண சபை உறுப்பினர் என்ற வகையில் அரசினால் ஒதுக்கப்படும் பணத்திலேயே இந்த பணிகளை எல்லாம் செய்யப்படுகின்றன என்ற உண்மையை மக்களுக்கு சொல்லி மக்களை அரசியல்ரீதியாக விழிப்புணர்வு செய்வதில்லை. அமைச்சர் என்ற வகையிலோ பாராளுமன்ற அல்லது மாகாண சபை உறுப்பினர் என்ற வகையிலே அரசிடம் இருந்து மக்களுக்கு கிடைக்க வேண்டிய நன்மைகள் குறிப்பிட்ட அமைச்சரோ பாராளுமன்ற அல்லது மாகாண சபை உறுப்பினரோ பெற்றுக்கொடுப்பது அவருக்கு அரசியல் ரீதியாக சாதகமான விடயம் தான். அந்த நன்மையை அவர் பெறுவதில் தவறில்லை. அதுவே சரியான முறை. அதைவிடுத்து ஏதோ எல்லா அபிவிருத்தி பணிகளையும் தனது சொந்த பணத்தில் அல்லது தான் சார்ந்த தொழிற்சங்கத்தின் பணத்திலிருந்து செய்ததாக இனியும் மக்களிடம் காட்டுவதை மலையக அசரியல் வாதிகள் நிறுத்த வேண்டும்.

தற்போது நுவரெலியா மாவட்டத்தில் மேலதிகமாக பிரதேச சபைகள் உருவாகி இருப்பது பெருந்தோட்ட மக்களின் அரசியல் ரீதியான பங்களிப்பிற்கு மிகவும் வாய்ப்பான சூழலை ஏற்படுத்தி இருக்கிறது. பிரதேச சபை சட்டத்தில் 33ம் சரத்து திருத்தப்பட்டன் மூலம் பிரதேச சபைகளின் நிதிகள் இனி சட்டபூர்வமான முறையில் பெருந்தோட்ட அபிவிருத்திக்கு பயன்படுத்தப்படும் சாதகமான நிலை தோன்றி இருக்கிறது. பெருந்தோட்டங்களில் உள்ள மக்கள் பிணீரதேச சபை சம்பந்தப்பட்ட அனைத்து விடயங்களிலும் பங்களிப்பு செய்யவும், உரிமை கோரவும் முடியுமான சூழல் உருவாக்கப்பட்டிருக்கிறது. மலையக பெருந்தோட்ட மக்களில் அரசியல் வாழ்வில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தக் கூடியவையாக இந்த மாற்றங்கள் வந்திருக்ணீன்றன. உண்மையில்; இந்த மாற்றங்கள் மக்கள் உற்சாகத்துடன் கொண்டாட வேண்டிய மாற்றங்கள். ஆனால் இந்த மாற்றங்களில் ஏற்படக்கூடிய அரசியல் நன்மைகள் குறித்து மக்களை அறிவூட்டி மக்களை விழப்புணர்வூட்ட வேண்டும் என்ற உண்மையான ஆர்வம் மலையக மக்களை பிரதிநிதித்துவப்படும் எந்தவொரு அரசியல் கட்சியோ தொழிற்சங்கமோ செய்யவில்லை. இந்த மாற்றத்தை யார் தொடங்கினார்கள் என்ற விதண்டாவதத்தில் ஈடுபட்டிருக்கும் கீழத்தரமான சுயநல அரசியலை பாடர்க்க முடிகிறதே தவிர அடைந்துள்ள வெற்றியை குறித்து மக்களை அறிவூட்டும் பணியை எவரும் செய்யவில்லை. கிழக்கு மாகாணத்தில் சாய்ந்தமருது போன்ற இடங்கிலும் வேறு பகுதிகளிலும் பிரதேச சபைகளை உருவாக்குவது அல்லது பிரிப்பது தொடர்பான பிரச்கனைகளில் அந்த பிரதேச மக்கள் அனைவரும் கட்சி பேதமின்றி அணிதிரண்டு போராடினார்கள். முழு நாடும் இந்த மக்களின் கோரிக்கைகள் குறித்து தெரிந்து கொண்டன. அவர்கள் கட்சி பேதம் பார்க்காமல் தங்கள் பகுதி அரசியல் தலைவர்களை மக்களுக்கு முகம் கொடுக்க முடியாமல் நடுநடுங்கி இருக்கும் நிலையை ஏற்படுத்தினார்கள். பாராளுமன்றத்திலும் ஏன் ஜனாதிபதி மட்டத்தில் கூட இந்த பிரச்சனை எதிரொலித்தது அந்த அளவுக்கு மக்கள் அரசியல் எழுச்சியை வெளிக்காட்டினார்கள் இதனை பார்க்கும் போது நமது மக்கள் மத்தியில் இவ்வாறான ஒரு அரசியல் எழுச்சி ஏற்பட இன்னும் எத்தனை சகாப்த்தங்கள் போகுமோ என்ற ஆதங்கமே ஏற்படுகிறது. மக்களின் இந்த மந்த நிலைக்கு காரணம் முழுக்க முழுக்க சுயநல ;அரசியல் செய்யும் மலையக தலைமைகளே என்பதை எவரும் மறுக்க முடியாது.




இப்போது மலையகத்திலிருந்து அமைச்சாராக அல்லது பிரதி அமைச்சாராக இருக்கும் ஒருவர் எதை செய்தாலும் அவரை அரசாங்க அமைச்சாராக பார்க்காமல் தமது அல்லது மாற்று தொழிற்சங்கத்தை சார்ந்தவர் என்ற ரீதியிலேயே மக்கள் பார்க்கிறார்கள். மலையகத்தில் இருந்து வந்த அமைச்சர் அல்லது பாராளுமன்ற உறுப்பினர் என்றால் தான் இந்த நிலைமை. ஆனால் நாம் ஒரு வைபவத்திற்கு மத்திய அரசாங்கத்தின் கல்வி அமைச்சரையோ , சுகாதார அமைச்சரையோ அழைத்தால் அவர் பெருபான்மை சமூகத்தவராக இருந்தாலும் அவரை அரசின் அமைச்சராகத் தான் பார்க்கிறோம். வரவேற்பு கொடுக்கிறோம் . ஆனால் மலையகத்தில் இருந்து வரும் அமைச்சரை அல்லது பிரதி அமைச்சரை நாம் அமைச்சாராக பார்ப்பதில்லை. அவரை அவர் சார்ந்த தொழிற் சங்கத்தை பிரநிதித்துவப்படுத்துகிறவராகவே பார்க்கிறோம். இது அப்பட்டமான பிற்கோக்குத் தனமான, நமது அமைச்சர்களை நாமே குறைத்து மதிப்பிடும் முட்டாள்தனமான கொள்கை.

முன்பெல்லாம் தோட்டங்களில் பாதை அமைக்கும் போது அந்த பாதை அமைப்பிற்கு சிரமதானம் மூலம் பங்களிப்பு செய்யுமாறு மக்களை கேட்டால் கொந்தராத்துக்காரருக்கு அரசாங்க பணம் கிடைக்கிறது தானே நாங்கள் எதற்கு பங்களிப்புசெய்ய வேண்டும் என்று மக்கள் அந்த விடயத்திற்கு சொந்தம் கொண்டாடாமல் ஒதுங்கிக் கொண்டார்கள். அவ்வாறு பங்களிப்பு செய்வது மக்களின் பொறுப்பு என்பதை அரசியல் வாதிகள் மக்களுக்கு விழிப்புணர்வூட்டவில்லை. இதன் காரணமாக கட்சி சார்ந்த கொந்தராத்துக்காரர்கள் தங்களுக்கு அதிக இலாபத்தை பெற்றுக்கொள்ளும் நோக்கத்தோடு மிகவும் மோசமான முறையில் பாதைகளையும், பாலங்களையும் அமைத்தார்கள். இவ்வாறு தோட்டப்பகுதிகளில் அமைத்த பாதைகள், பாலங்கள் ஓரிரு வருடங்களிலேயே ; உடைந்து ஓட்டை உடைசலும் காணப்படுவதை நாம் இப்போது காண்கிறோம். இதற்கு காரணம் இந்த பொதுப்பணியில் மக்களின் பங்களிப்பு இல்லாமையே ஆகும். மக்களும் அரசியல் விழிப்புணர்வு இல்லாததால் ஏற்பட்ட விளைவு இது. இதே வேளையில் கிராமப்புறத்தில் இவ்வாறான அபிவிருத்தி பணிகள் நடக்கும் போது கிராமத்தவர் அனைவரும் தமது கிராமத்திற்கு அரசாங்கத்தின் மூலம் நன்மை கிடைக்கிறது என்ற அடிப்டையில் அந்த பணியில் கட்சி பேதமின்றி தங்களை ஈடுபடுத்திக் கொள்ளுகிறார்கள். மக்களே அபிவிருத்தி குழுக்களை அமைத்து அந்த பணிகளுக்கான கொந்தராத்துக்களை பெற்றுக் கொள்கிறார்கள். அந்த பணிகளை சிறப்பாக முடிப்பதற்காக சிரமானம் செய்கிறார்கள். கிராமத்தில் அனைவரும் இணைந்து கண்காணிப்புக் குழுக்களை அமைத்து கொந்தராத்துக்காரர்களின் பணிகளை கண்காணிக்கிறார்கள். இதனால் கொந்தராத்துக்காரர்களால் மோசடி செய்ய முடிவதில்லை. இதனால் தான் கிராமங்களில் அமைக்கப்படும் பாதைகள் மற்றும் , அபிவிருத்திப் பணிகள் தோட்டங்களில் உள்ளவை போன்று ஒரிரு வருடங்ளேயே பழுதடைந்து விடாமல் நீண்ட காலத்திற்கு நிலைத்திருக்கினறன. எனவே இந்த விடயத்தை கிராம மக்களிடம் இருந்து கற்றுக்கொள்ள பெருந்தோட்ட மக்களை தூண்ட வேண்டும். அவர்களை பயிற்றுவிக்க வேண்டும். கிராமங்களில் மக்கள் கிராமத்துக்கான அபிவிருத்தி வேலை என்று வரும் போது அவர்கள் பெருந்தோட்டப்பகுதிகளில் காணப்படுவது போன்று கட்சிரீதியில் அல்லது தொழிற்சங்க ரீதியில் பிரிந்து செயல்படுவதில்லை எனவே பெருந்தோட்டத்திலுள்ள மக்கள் தங்கள் தோட்டத்தில் நடக்கும் எந்தவொரு அபிவிருத்தி விடயமாக இருந்தாலும் அந்த காரியத்திற்கு தொழிற்சங்க வேறுபாடுகளை மறந்து அதில் நேரடி பங்களிப்பு செய்ய வேண்டும். அபிவிருத்திக் குழுக்களை அமைத்து கொந்தராத்துக்களை பெற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டும். சிரமதானம் மூலம் அல்லது வேறுவழிகளில் பங்களிப்பு செய்ய வேண்டும் .உதாரணமாக ஒருதோட்டத்திற்கு பாதை அமைப்பதாக இருந்தால் அதற்கு மக்கள் சிரமாதானம் மூலம் பங்களிப்பு செய்தால் பாதைகளை தரமுள்ள பாதைகளாகவும் சில வேளைடியில் அதிக தூரத்திற்கு அமைக்கமுடியும். அப்போது மக்களின் அபிவிருத்திக்காக செய்யப்படும் எந்த விடயமும் நமக்காக செய்யப்படும ;விடயம் என்ற சொந்தம் கொண்டாடும் மனப்பாங்கு நம் மத்தியில் ஏற்படும்.அத்தோடு மக்கள் அனைவரும் இணைந்து பணிகளை கண்காணிப்பதற்காக அமைப்பை ஏற்படுத்திக் கொண்டால் ஒப்பந்தக்காரர்களின் மோசடிகளை தடுத்து நிறுத்தி தரமான முறையில் வேலைகளை செய்து கொள்ள முடியும். சொந்தம் கொண்டாடும் கலாச்சரத்தை நம்முள் எற்படுத்திக் கொள்வதன் மூலம் மலையக தொழிற்சங்கவாதிகளும், கட்சிக்காரர்களும் இதுவரை செய்து வந்து சுயநல அடிப்படையிலான மோசடிகளை தடுத்து நிறுத்தி மக்களின் அபிவிருத்திக்காக ஒதுக்கப்படும் நிதியை முழுமையாக பயன்படுத்தி பலன் பெற முடியும்.

இந்த பின்னணியில் தோட்ட பகுதிகளில் நடைபெறும் எல்லா அபிவிருத்திபணிகள் மக்கள் எல்லோருக்கும் சொந்தம் என்று மக்களை நினைப்பதற்கு தூண்ட வேண்டும். எந்த அமைச்சரோ பாராளுமன்ற உறுப்பினர் மக்களுக்கு நன்மை பயக்கும் நல்ல காரியத்தை செய்தாலும் கட்சி தொழிற் சங்க பேதமின்றி மக்கள் எல்லோரும் பங்குபற்றி ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்ற உணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும்.. எந்த கட்சியை சார்ந்தவர்களாக இருந்தாலும் அமைச்சரை அமைச்சராக பாருங்கள். அவரை அரசியல் கட்சி பிரமுகராக பார்க்காதீர்கள் என்று மக்கள் அறவூட்டப்பட வேண்டும். அமைச்சர்களும் தாங்கள் அரசாங்க அமைச்சரே அன்றி எந்த ஒரு தொழிற்சங்கத்தை சார்ந்தவர் என்ற உணர்வு மக்களுக்கு ஏற்படாத வகையில் ஞானமாக நடந்து கொள்ள பழக வேண்டும். தமது தொழிற்சங்கத்தை சார்ந்த பரிவாரங்களை மட்டும் தம்மை சுற்றி வைத்துக்கொள்ளும் பழைய கலாச்சாரத்தை ஒழிக்க வேண்டும். ஆனால் இதனை இப்போது மலையகத்தில் இருக்கு எந்த தொழிற்சங்கமோ மலையக அரசியில் கட்சியோ செய்யப்போவதில்லை. இதனை மலையக புத்திஜீவிக்கள். சமூக நிர்வனங்கள், மதஸ்தாபனங்கள் என்பனவே செய்ய வேண்டும். தமது தலைவர்களை அவர்கள் தொழிற் சங்க ரீதியாக பார்க்காமால் அவர்கள் மலையக மக்கள் சார்பில் வகிக்கும் பதவி ரீதியாக மதித்து அவர்களிடம் இருந்து அரசியல் ரீதியாக பெற வேண்டிய நன்மைகளை பெறவேண்டிதன் அவசியம் குறித்து அவர்களை அரசியல் ரீதியாக அறிவூட்டும் பணிகளை எவ்வளவு வேகமாக செய்ய முடியுமோ அவ்வளவு வேகமாக செய்யப்படுவது அவசியமாகும்.

**எஸ்.வடிவழகி.**
**பொகவந்தலாவை**



# உங்களிடமிருந்து ஏன் நாங்கள் ஒதுங்கியே இருக்கிறோம்?

அன்பார்ந்த வெளியுலகுக்கு இன்னமும் 'நாகரிகமடையாத' சென்டினல் மக்கள் சார்பாக எழுதுவது,

நீங்கள் பல வருடங்களாக எங்களைத் தொடர்புகொள்ள விரும்புகிறீர்கள்.

எதற்கு? சென்டினல் தீவுக்கு நீங்கள் வரத் துடிப்பது ஏன்?

எங்களுக்கு உதவப்போவதாகச் சொல்கிறீர்கள். எங்களிடம் பல ஆயிரம் வருடங்களாகப் புதைந்திருக்கும் மனித குல வரலாற்றைப் புரிந்துகொள்ள முயல்வதாகச் சொல்கிறீர்கள்.

என்ன உதவிகளைச் செய்வீர்கள்? மனிதகுல வரலாற்றைப் புரிந்துகொண்டு நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

இதையெல்லாம் நீங்கள் செய்வது எங்கள் வாழ்வியலைச் சிறப்பிக்கவா? ஆனால், இப்போதே நாங்கள் நன்றாகத்தானே வாழ்கிறோம். எங்கள் சுதந்திரத்துக்கு எப்போதும் இடைஞ்சல் செய்துகொண்டே இருப்பதன் காரணம்தான் என்ன?

இன்று நீங்கள் வாழும் உங்கள் வீடு, உங்களுடைய நிலம் எதுவும் நாளை உங்களுக்குச் சொந்தமில்லை என்று கூறினால் ஏற்றுக்கொள்வீர்களா? நீங்கள் உண்டு உறங்கிக் கொண்டிருந்த இடம், ஆனந்தமாக உலவித்திரிந்து இயற்கையின் எண்ணற்ற பொக்கிஷங்களைக் கண்டு கற்றுணர்ந்த அமைதியான வாழ்வியலைச் சுமந்திருந்த இடம் நாளை சாலையாகவோ ஒரு தொழிற்சாலையாகவோ மாறினால்? இப்படியெல்லாம் நடக்கவா போகிறது!'' என்று நீங்கள் சொல்வீர்களேயானால் எங்களைப் போன்ற பழங்குடிகள் உங்களோடு தொடர்பு வைத்துக்கொண்டபோது நடந்தவற்றைப் பாருங்கள். அப்படியும் நடக்குமென்பதும் அதைவிட மோசமாகக்கூட நடக்குமென்பதும் புரியும். காலம் காலமாகத் தலைமுறைகள் தழைத்தோங்கிய நிலப்பகுதியைப் பிடுங்கும்போது அவர்களது அடையாளமும் அந்த நிலத்தில் நீங்கள் கட்டும் கட்டடத்துக்கான அஸ்திவாரத்தோடு புதைந்துவிடுகிறது.

நிலம் என்பது வாழ்க்கையை ஓட்டுவதற்குத் தேவைப்படும் ஓர் இடம் மட்டுமல்ல. இது ஓர் இனத்தின் வரலாறு. இங்குதான் எங்களின் மூதாதையர்கள் கலாசாரத்தை, அவர்கள் பின்பற்றிய பண்பாட்டை வளர்த்தெடுத்தனர். அந்தக் கலாசாரத்தை, அவர்களின் நடைமுறைகளைக் காலம் காலமாகக் காப்பாற்றி வருவது நுற்றாண்டுகள் பழைமைகொண்ட இந்த வாழிடமும் அதைச் சார்ந்துள்ள எங்கள் வாழ்வியலும் மட்டுமே. அதை நாங்கள் மாற்றிக்கொண்டால் இடத்துக்குத் தக்கவாறாக எங்கள் தொழிலையும் மாற்ற வேண்டும். அல்லது உங்கள் பேச்சைக் கேட்டுத் தொழிலை மாற்றினால் தொழிலுக்குத் தகுந்தவாறாக இடத்தை மாற்ற வேண்டும். இரண்டில் எதைச் செய்தாலும் எங்கள் இனத்தின் தனிச்சிறப்புகளை இழந்துவிடுவோம். அந்த ஆபத்தை உணர்ந்த நாங்கள் எதையும் மாற்ற விரும்பவில்லை.

நம் மூதாதையர்களின் வரலாற்றைச் சுமந்து வாழ்ந்துகொண்டிருக்கும் வாழும் பதிவுகளான எங்களில் (பழங்குடிகளில்) தற்போது உலகளவில் 37 கோடி பேர் மேற்குறிப்பிட்ட இன்னல்களைச் சந்தித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த லட்சணத்தில் எங்களுக்கு மட்டும் உங்களால் என்ன நன்மைகளைச் செய்துவிட முடியும்?

எங்களோடு இந்தத் தீவில் பல்லாயிரம் வருடங்களாக வாழ்ந்துவந்த சில இனங்களுக்கு நீங்கள் செய்த 'நன்மைகளை' உங்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதன்மூலம் எங்கள் இந்த அணுகுமுறைகள் ஏனென்று புரிந்துகொள்ளக் கொஞ்சம் முயலுங்கள்.

அகா-காரி, அகா-கோரா, அகா-போ, அகா-ஜெரு போன்றவர்களைக் கூட்டாகச் சேர்த்து அந்தமானியப் பழங்குடியினம் என்கிறீர்கள். ஆனால், எங்களுக்கு அவர்கள் ஒவ்வொருவரின் தனித்த ஆதி அடையாளங்களும் தெரியும். தெரிந்திருந்து என்ன பிரயோஜனம், அத்தனை பேரையும் சேர்த்து அவர்களின் மொத்த எண்ணிக்கை இப்போது எவ்வளவு தெரியுமா? அதிகபட்சம் ஐம்பது முதல் அறுபது பேர் மட்டுமே இருப்பார்கள். அதுவும் காரி, ஜெரு மக்கள் மட்டுமே. இருபது இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பே கோரா இனம் முற்றிலும் அழிந்துவிட்டது. எட்டு வருடங்களுக்குமுன் இறந்த போ இனத்தின் கடைசிப் பெண் மணியோடு அந்த இனமும் அவர்களின் மொழியும் அழிந்துவிட்டன.

முன்பே பல நூற்றாண்டுகளாகப் பல கடற்கொள்ளையர்கள் கடத்தல்காரர்களால் நாங்கள் தாக்குதல்களுக்கு உள்ளானோம். அதில் வேற்று மனிதர்கள் மீது ஒருவித பயமும் ஆபத்துணர்வுமே மேலோங்கியிருந்தது. அதைப் போலவே இருநூறு ஆண்டுகளுக்குமுன் வெள்ளைத் தோலோடு இருந்த சிலர் எங்கள் தீவில் கத்தி, துப்பாக்கிகளோடு கரையிறங்கினார்கள். ஆயுதங்களோடு வருபவர்களைப் பார்த்த எங்களுக்கு முதலில் எழுந்தது தற்காப்பு உணர்வே. அவர்களைத் தாக்கினோம். அதில் எங்களால் அவர்களில் சிலர் கொல்லப்பட்டார்கள். பல்லாண்டு காலமாக வேற்று நிலத்தவர்களால் கொலைகளையும், வன்கொடுமைகளையும் மட்டுமே அனுபவித்த எங்களுக்கு அதுதான் சரியாகத் தோன்றியது. அதற்குப் பழிவாங்க எங்கள் இனத்தில் நூற்றுக்கணக்கானவர்களைக் கொன்று குவித்தார்கள்.

அந்நியர்களிடம் ஆதிக்கவெறியையும் அதன் விளைவாக ரத்தக் கரைகளையும் கடற்கரை முழுக்கப் பரவிய ரத்த வாடையையும் மட்டுமே பரிசாகப் பெற்ற எங்களுக்கு அது பழகிவிட்டது. ஆனால், அவர்கள் கொண்டுவந்த தேங்காய், வாழை, புகையிலை, கஞ்சா போன்றவை அந்தமானியப் பழங்குடிகளை மயக்கிவிட்டன. அவர்கள் அந்நியர்களோடு நட்பு பாராட்டினார்கள். அவர்களை இங்கு குடியேற அனுமதித்தார்கள். நாங்கள் இங்கேயே பல ஆண்டுகளாக வாழ்பவர்கள். இந்த நிலத்தைத் தாக்குப் பிடிக்கப் போதுமான அளவுக்குத்தான் எங்கள் எதிர்ப்புசக்தி உள்ளது. அவர்கள் கொண்டுவந்த புதிய தொற்றுகளைச் சமாளிக்க முடியவில்லை. அதோடு அவர்களின் ஆதிக்கத்தை ஏற்கமறுத்த பழங்குடிகளைக் கொன்று குவித்தார்கள். எங்களை அடக்கி ஆள நினைத்தார்கள். அந்தமானிய இல்லங்களைத் தோற்றுவித்தார்கள். உங்களுக்கு ஒன்று தெரியுமா? ஆயிரக்கணக்கான காரி, கோரா, போ, ஜெரு மக்கள் அந்த இல்லங்களில் அடைக்கப்பட்டார்கள். அங்கு பிறந்த எங்கள் குழந்தைகளில் ஒன்றுகூட இரண்டு வயதைத் தாண்டி உயிர் பிழைத்திருக்கவில்லை. அவ்வளவு கொடுமைகள் எங்கள் சகோதர இனங்களுக்கு இழைக்கப்பட்டன. அதற்குப் பிறகும் அந்த ஆதிக்க வெறியர்களால் 'நவநாகரிக' மிருகங்களால் பல குடியேற்றங்கள் நிகழ்த்தப்பட்டன. எங்கள் சகோதர இனங்களின் வாழிடங்கள் பலவும் பறிக்கப்பட்டன. ஆயிரங்களில் வாழ்ந்த அவர்களின் எண்ணிக்கை சில நூறுகளாகக் குறைந்து தற்போது சில பத்துகளில் இன்றோ நாளையோ அழிந்துவிடும் நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அந்த நாகரிக மிருகங்கள் இழைத்த அநீதியின் வாழும் அடையாளங்களாக நிற்கும் அவர்களைப் பார்த்த பிறகும் எப்படி நாங்கள் வெளியுலகோடு தொடர்புகொள்வோம்?

இன்னொன்றையும் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். அந்தமானியப் பழங்குடியினம் என்று உங்களால் பொத்தாம் பொதுவாக அழைக்கப்படும் அந்தக் குழு எத்தனை இனங்களைக் கொண்டது தெரியுமா? எத்தனை வரலாறுகளை; எத்தனை மொழிகளை; எத்தனை வாழ்வியல்களை; எத்தனைக் காடறிவுகளைச் சுமந்திருந்தது தெரியுமா? மேற்குறிப்பிட்ட நான்கு இனங்கள் உட்பட அகா-கெடெ, அகா-கோல், ஒகோ-ஜுவோய், புஸிக்வார், பாலி, பீ என்றவற்றோடு சேர்த்து மொத்தம் பத்து பழங்குடியினங்கள் இருந்தன. இப்போது அவையெல்லாம் எங்கே போயின? இந்த ஆறு இனங்களும் 1920 முதல் 1930-க்குள் எப்படி ஒரேயடியாக அழிந்துபோயின? இருந்ததில் எட்டு பூர்வகுடியினங்கள் அழிந்துவிட்டன. அவர்களோடு அவ்வினங்களின் மூதாதையர்கள் சேர்த்து வைத்திருந்த அறிவுப் பொக்கிஷங்களும் அழிந்துவிட்டன. இதற்கெல்லாம் யார் காரணம்? இத்தனை அழிவுகளுக்கும் காரணம் உங்களைப் போன்ற நாகரிக மனிதர்கள்தானே? அவர்களின் வழித்தோன்றல்களான நீங்களும் இப்போது உலகளவில் மற்ற பழங்குடிகளுக்கு எவ்வளவு 'நன்மைகளை'ச் செய்துகொண்டு இருக்கிறீர்களென்றும் நாங்கள் அறிவோம். போகுமிடமெல்லாம் இயற்கையின் அழிவுக்கு வித்திடும் உங்கள் 'நன்றிக்குரிய' நாகரிகத்தையா நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்?

அவர்களைப் போலவே எங்களோடு வாழ்ந்த இன்னோர் இனம், ஓங்கே. இது நடந்து நூறு வருடங்கள் இருக்கும். ஒரு கப்பல் அவர்கள் நிலத்தில் கரையொதுங்கியது. வந்தவர்கள் எங்கள் மரங்களை வெட்டிக் கொண்டிருந்தார்கள். விழுந்த சருகுகளையும் ஆங்காங்கே மீண்டும் தழைக்கக்கூடிய கிளைகளை வெட்டியெடுத்தும் மட்டுமே பயன்படுத்தியவர்கள் ஓங்கே மக்கள். மரங்களை மொத்தமாகக் கொன்று குவித்த அந்தக் குழுவைப் பார்த்துக் கோபப்படாமல் அழைத்து வைத்துக் கொஞ்சிக் கொண்டிருப்பார்களா? அந்தப் பாவச்செயலில் ஈடுபட்டிருந்த எட்டு பேரையும் தாக்கினார்கள். தற்காப்புத் தாக்குதலுக்கு எதிர் தாக்குதல் வீரியமடையவே அவர்களும் கொல்லப்பட்டார்கள். அதற்குத் தண்டனை வழங்க வந்த குழு ஓங்கே இனத்தைச் சேர்ந்த எழுபது பேரைக் கொன்றது. எங்கள் நிலத்தில் வந்து எங்களுக்கே தண்டனை வழங்க அவர்கள் யார்? தங்கள் வீட்டைப் பாதுகாத்ததுதான் அவர்கள் செய்த குற்றமா?

அதற்குப் பிறகும் சமாதானம் செய்து அவர்களோடு நட்புக் கரங்களை நீட்டினார்கள் அந்த வேற்று நிலத்தவர்கள். அவர்கள் ஆக்கிரமித்த அந்தமானிய மக்களின் நிலங்களில் அவர்கள் கட்டிய துறைமுகத்திலேயே இவர்களுடனும் வர்த்தகம் மேற்கொண்டார்கள். தன்னைப் போன்றவர்களை அழித்த நிலத்தில் தானே இந்தத் துறைமுகம் தலைநிமிர்ந்து நிற்கிறது என்பதை மறந்த அவர்களும் அதே கதியைச் சந்தித்தார்கள். சர்க்கரை, புகையிலை என்று பலவற்றைக் காட்டி அவர்களை ஆசைக்கு அடிமையாக்கினார்கள். அதன்மூலம் அவர்களுக்கு அடிமையாக்கினார்கள். இப்படியாக அவர்களை ஏமாற்றிய அந்நியர்கள் நாற்பது வருடங்களுக்குமுன் அவர்களின் ஆதி நிலத்தில் பல நூறு சதுர கிலோமீட்டர்களைப் பிடுங்கி அதில் அரசாங்கக் கட்டடங்களைக் கட்டினார்கள். அதற்குப் பிறகு பல்லாயிரம் ஏக்கர்களைப் பிடுங்கி படகுத்துறை, சுற்றுலா, சாலைகள், கட்டுமானங்கள் என்று பலவற்றைச் செய்தார்கள். நாங்கள் எல்லோருமே வேட்டையாடுவதையும், மீன் பிடிப்பதையும், வனப் பொருள்களைச் சேகரிப்பதையுமே வாழ்வாதாரமாகக் கொண்டவர்கள். இந்த அநீதிகளைச் செய்தவர்களுக்கும் அது தெரியும். அப்படியென்றால் எங்களோடு நட்புறவு பாராட்டிய, எங்களுக்கு உதவ வேண்டுமென்ற 'தயாள' குணம்கொண்ட அந்த 'நல்லவர்கள்' செய்தவற்றில் எது எங்களுக்குப் பயனளித்தது? அவை எங்களுக்கானதல்ல. உங்களுக்கானது. தற்போது அவர்களின் எண்ணிக்கை வெறும் 101 பேர். இன்று எங்கள் இன்னொரு சகோதர இனமான இதே ஓங்கேவைச் சேர்ந்த கால்வாசிப் பெண்கள் மலடிகளாக்கப்பட்டுள்ளார்கள். எதிர்ப்புச் சக்தி குறைவான இவர்களுக்கு நீங்கள் தந்துள்ளது இதைத்தான். எங்கள் நிலத்தில் எங்களுக்கே இடம் கொடுக்காமல் ஒதுக்கிவிட்டு உங்கள் சுயநலத்துக்குப் பல செயல்களைச் செய்த உங்களையா நாங்கள் நம்ப வேண்டும்?

இந்த இரண்டு இனங்களை விடவும் மோசமான கொடுமைகளைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள் ஜாரவா மக்கள். முதல்முறையாக நாகரிக மனிதர்கள் அந்தமானுக்கு வந்தபோது மற்ற இனங்களின் எதிர்ப்பில் பாதியைக்கூட இவர்கள் காட்டவில்லை. அதேசமயம், அந்த நாகரிகக் குடியிருப்புகள் எங்கள் நிலத்தில் செய்த மாற்றங்களை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அந்தப் புதிய அந்நியக் குடியிருப்புகளில் இருந்து விலகிப் போய்க்கொண்டே இருந்தார்கள். ஆனாலும், புதிதாகக் குடியேறிய நாகரிக மனிதர்கள் அவர்களை ஒவ்வோர் இடமாகத் துரத்திக் கொண்டேயிருந்தார்கள். தங்கள் வாழிடத்திலிருந்து மேற்கே இடம்பெயர்ந்து சென்றவர்களைத் தெற்கே துரத்தியடித்தார்கள். அதையும் தங்கள் ஆளுகைக்கு உட்படுத்தி ஜாரவா மக்களை வடக்கே துரத்தினார்கள். அங்காவது எங்கள் சகோதரர்களை நிம்மதியாக வாழவிட்டார்களா? இவர்கள் ஏற்கெனவே பொருளாசையைத் தூண்டி அடிமையாக்கி வைத்திருந்த எங்கள் அந்தமானியச் சகோதரர்களை வைத்துப் பலவந்தமாக அடிமையாக்குவதும் அப்புறப்படுத்துவதுமாக அட்டூழியங்கள் தொடர்ந்தன. அந்தமானியச் சகோதரர்களைச் சொல்லிக் குற்றமில்லை. அவர்கள் போதைகளுக்கு அடிமையாகி இருந்தார்கள். அது பொருள்களின் மீதான போதை. அவ்வளவு விரைவில் அவர்களை விடுவிக்கவில்லை. இப்படியாகத் தொடர்ந்த கொடுமைகளைப் பொறுக்க முடியாமல் திருப்பி அடிக்கத் தொடங்கினார்கள். இப்படியாகத் தொடர்ந்த சண்டைகளைக் காரணம் காட்டிச் சுமார் அறுபது வருடங்களுக்குமுன் சில நூறு பேரே இருந்த அந்த இனத்தில் 37 ஜாரவா மக்களைக் கொன்று குவித்ததும் இங்கே குறிப்பிட வேண்டிய கொடுமைகளில் முக்கியமானது.

எங்களுக்கு அவநம்பிக்கையை மட்டுமே தந்துவிட்ட உங்களோடு, பூமியை ஓயாது வன்கொடுமை செய்துகொண்டிருக்கும் உங்களோடு தொடர்புகொள்ள நாங்கள் விரும்பவில்லை. எங்களைத் தனியாக வாழவிடுங்கள் என்று நாங்கள் கேட்கவில்லை. நாங்கள் தனியாக இல்லை. இங்கு இயற்கை அவளாகவே இருக்கிறாள். அவள் எங்களுக்குத் துணை நிற்கிறாள். அவளோடும் அவள் பெற்றெடுத்த காடு, மலையோடும், நீரோடும், மற்ற உயிர்களோடும் ஆனந்தமாக வாழ்கிறோம். அதைத் தொந்தரவு செய்யாதீர்கள் என்றுதான் கேட்கிறோம். இல்லை எச்சரிக்கிறோம். நாங்கள் சென்டினல் மக்கள். நாங்கள் காவலாளிகள். இறுதிவரை இந்த நிலத்தை அதன் இயற்கையைக் காத்து நிற்போம்.

## II தமிழ்...

09 ஆம் பக்கத் தொடர்ச்சி

தெரிவித்தார்.

இந்த இடமாற்றம், சட்டத்துக்கு எதிரானது என்பதோடு, அது சவாலுக்கு உட்படுத்தப்படும். அவரது விசாரணைகளை முடக்குவதற்காகவே அவர் இடமாற்றப்பட்டார் என, நாம் உறுதியாக நம்புகிறோம்.

ஒக்டோபர் 26, 2018க்குப் பின்னர் நாட்டில் இடம்பெற்ற அரசியல் மாற்றங்களோடு, இவ்விடமாற்றமும் நெருக்கமான தொடர்பைக் கொண்டுள்ளது எனத் தெரிகிறது.

சட்டத்தரணிகளாக, மிகவும் மதிக்கப்படுபவரும் திறமையைக் கொண்டவருமாகவும், தனது கடமைகள் தொடர்பில் உயர்ந்த அர்ப்பணிப்பைக் கொண்ட ஒருவராகவும், நிஷாந்த சில்வாவை நாம் அடையாளம் காண்கிறோம்.

யாழ்ப்பாணத்தில், வித்தியா சிவலோகநாதன் மீதான வன்புணர்வு, அவரின் கொலை தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதில், நிஷாந்த சில்வா வெளிப்படுத்திய அர்ப்பணிப்பை, 3 பேர் கொண்ட நீதிபதிகள் குழாம் பாராட்டியிருந்தது என, சிரேஷ்ட சட்டத்தரணியான வெலிமுன தெரிவித்தார்.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் விசாரணையொன்று நடத்தப்பட்டு, புனையப்பட்ட வதந்திகளான விடுதலைப் புலிகளுடனான தொடர்பு என்பதைப் பயன்படுத்தி, முக்கியமான அதிகாரியான நிஷாந்த சில்வாவை நீக்கி, நிஷாந்த சில்வாவை இடமாற்றம் செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட சேவைத் தேவைப்பாடு என்ற விடயத்தை வெளிப்படுத்த வேண்டியேற்படும் என்ற நிலை காணப்பட்ட நிலையில், பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்குக் கடிதமெழுதிய பொலிஸ்மா அதிபர், நிஷாந்த சில்வா விடயத்தில் தன்னுடைய பங்கை மட்டுப்படுத்தும் வகையில் முயன்றார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹேமசிறி பெர்ணான்டோவுக்கு, நவம்பர் 19, 2018இல் எழுதிய கடிதத்தில், நிஷாந்த சில்வா விவகாரம் தொடர்பாக, ஜனாதிபதி, பாதுகாப்புப் பணியாட்தொகுதியின் பிரதானி, சி.ஐ.டி தலைமைத்துவம் ஆகியோருடன் தான் கொண்டிருந்த கலந்துரையாடல்களை, பொலிஸ்மா அதிபர் மீள ஞாபகப்படுத்தினார்.

நவம்பர் 13, 2018 அன்று நடைபெற்ற தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில், தமிழீழ விடுதலைப் புலிகளுடன் உறுதியான தொடர்புகளை நிஷாந்த சில்வா கொண்டிருக்கிறார் எனவும், இதன் காரணமாக, சி.ஐ.டியில் அவரைத் தொடர்ந்தும் வைத்திருப்பது ஆபத்தானது எனவும், பாதுகாப்புப் பணியாட்தொகுதியின் பிரதானி அட்மிரல் விஜேகுணரத்ன குறிப்பிட்டாரென, பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

அட்மிரல் விஜேகுணரத்ன, நவம்பர் 16ஆம் திகதி, தனக்கு அழைப்பெடுத்து, விடுதலைப் புலிகளுடனான தொடர்புகளைக் கொண்டிருக்கிறார் என்ற குற்றச்சாட்டுக்கு மத்தியிலும், சி.ஐ.டியில் நிஷாந்த சில்வா தொடர்ந்தும் பணியாற்றுவது தொடர்பில் தனது கண்டனத்தை வெளிப்படுத்தினார் என, பொலிஸ்மா அதிபரின் கடிதம் தெரிவிக்கிறது.

இந்த அழைப்பின் பின்னரேயே, நிஷாந்த சில்வா தொடர்பிலான அறிக்கையைக் கோர வேண்டியேற்பட்டது என, பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கான கடிதத்தில், பொலிஸ்மா அதிபர் குறிப்பிடுகிறார்.

அதன் பின், நிஷாந்த சில்வா தொடர்பில், சி.ஐ.டியின் பொறுப்பதிகாரி ரவி செனவிரத்னவிடமிருந்து கிடைக்கப்பெற்ற அறிக்கை தொடர்பிலும், பொலிஸ்மா அதிபர் குறிப்பிடுகிறார்.

இந்த அறிக்கையின்படி, தமிழீழ விடுதலைப் புலிகளுடனோ அல்லது குற்றவியல் செயற்பாடுகளுடனோ, நிஷாந்த சில்வாவுக்குத் தொடர்புள்ளது என்ற குற்றச்சாட்டை உறுதிப்படுத்தும் வகையிலான ஆதாரங்களோ அல்லது புலனாய்வுத் தகவல்களோ இல்லையென, பொலிஸ்மா அதிபர் தெரிவிக்கிறார். எனவே, நிஷாந்த சில்வாவுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் அடிப்படையற்றன எனவும் உறுதியற்றன எனவும், பொலிஸ்மா அதிபர் முடிவுசெய்கிறார்.

இருந்த போதிலும், நிஷாந்த சில்வாவின் இடமாற்றம் தொடர்பில், தனக்கு வேறு தெரிவுகள் இருந்திருக்கவில்லை என, பொலிஸ்மா அதிபர் தெரிவிக்கிறார்.

விடயதானத்துக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற அடிப்படையில், ஜனாதிபதியின் பணிப்புரையினதும் ஆலோசனையினதும் அடிப்படையில், தொலைபேசிச் செய்தி இலக்கம் 128 மூலமாக, நவம்பர் 18, 2018 அன்று, சி.ஐ.டியிலிருந்து நிஷாந்த சில்வாவை, நீர்கொழும்பு பொலிஸ் பிரிவுக்கு, சேவைத் தேவைப்பாடு அடிப்படையில் இடமாற்றம் செய்வதற்கான உத்தரவை வழங்கினேன் என, பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டார்.

இந்தக் கடிதம் மூலமாக, தன்னை நிலைநிறுத்துவதற்கு, பொலிஸ்மா அதிபர் முயன்றார். இந்தக் கடிதம், பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு விநியோகிக்கப்பட்டு, பிரதியொன்று ஜனாதிபதியின் செயலாளர் உதய செனவிரத்னவுக்கு வழங்கப்பட்ட சிறிது நேரத்தில், மாபெரும் அதிர்ச்சியொன்று ஏற்பட்டது.

கொல்லப்பட்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் மகள் அஹிம்சா விக்கிரமதுங்க, கொழும்பில் இடம்பெற்று வந்த நிகழ்வுகளைக் கவனித்து வந்ததோடு, நிஷாந்த சில்வாவைப் புகழ்ந்து, அவரது இடமாற்றத்தைக் கண்டித்து, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எழுதிய கடிதத்தை முடிக்கும் நிலையில் காணப்பட்டார்.

அஹிம்சாவின் கடிதம், நவம்பர் 20, 2018, செவ்வாய்க்கிழமை எனத் திகதியிடப்பட்டிருந்தது. அன்று காலையில், இலங்கை நேரப்படி நள்ளிரவுக்குச் சற்றுப் பின்னர், அக்கடிதத்தை அனுப்பினார்.

அக்கடிதத்தை எழுதும் முடிவுக்கு வந்தமை தொடர்பில், இப்பத்திரிகைக்குப் பிரத்தியேகமாகக் கருத்துத் தெரிவித்த அஹிம்சா, ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதும் அம்முடிவை எடுத்தமைக்கான காரணத்தை விளங்கப்படுத்தினார்.

எனது தந்தை தொடர்பான விசாரணைகளில், நிஷாந்தவையும் சி.ஐ.டியின் இன்னோர் அதிகாரியையும் சந்திக்கும் வரையில், எனக்கு நம்பிக்கையிருந்திருக்கவில்லை.

எனது வாக்குமூலத்தைப் பெறும் போது அவர் (நிஷாந்த), மிகவும் பொறுமையாகவும் முழுமையாகக் கவனிப்பவராகவும் தீர்மானமிக்கவராகவும் இருந்தார்.

விசாரணையின் ஒவ்வொரு விடயத்தையும், தனது விரல் நுனிகளில் அவர் வைத்திருந்தார். அத்தோடு அவர், தீர்வுகளையும் வழங்கினார் என, அஹிம்சா குறிப்பிட்டார்.

எனது கடிதம், வேண்டுகோளாகவே அமையவிருந்தது. அவரது முடிவை மாற்றுமாறு, ஜனாதிபதியிடம் மன்றாடவிருந்தேன்.

ஆனால், அம்முடிவின் பின்னால் என்ன இருந்தது என்பதை நான் அறிந்த பின்னரும், நிஷாந்தவின் பின்னால் சுயாதீன நிறுவனங்கள் உறுதியான நின்றதன் பின்னரும், சரியானதைச் செய்வதற்கு மன்றாடத் தேவையில்லை என நான் உணர்ந்தேன் என, அவர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதிக்கு அஹிம்சா எழுதிய கடிதத்தில், தனது தந்தையின் கொலை தொடர்பான விசாரணையில், நிஷாந்த சில்வாவின் பங்கை, மிகுந்த கவனத்துடன் விவரித்தார்.

குறித்த இடமாற்ற உத்தரவு, பொலிஸ்மா அதிபரிடமிருந்து வந்திருப்பதாகக் கூறினாலும் கூட, ஜனாதிபதியின் கோரிக்கையின் அடிப்படையில், தயக்கத்துடனேயே இந்த உத்தரவை வழங்கினார் என்பதை, அவர் (பொலிஸ்மா அதிபர்) வெளிப்படுத்தத் தவறியிருக்கவில்லை எனக் குறிப்பிட்டார்.

உயிரிழந்த எனது தந்தை லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பான பிரதான விசாரணையாளராக, நிஷாந்த சில்வாவை எனக்குத் தெரியும்.

எனது தந்தை, ஜனவரி 8, 2009 அன்று - அதாவது, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வகையில் நீங்கள் பதவியேற்பதற்குச் சரியாக 6 ஆண்டுகள் முன்பாக - அடித்துக் கொல்லப்பட்டார்.

எனது தந்தை உள்ளிட்ட மோசமான கொலைகளைத் தீர்ப்பதாக வாக்குறுதியளித்தே நீங்கள் வென்றீர்கள் என, அஹிம்சாவின் கடிதம் தொடர்ந்திருந்தது.

பின்னர், நவம்பர் 20, 2018, செவ்வாய்க்கிழமை முற்பகல் வேளையில், ஏற்கெனவே தேசிய பொலிஸ் ஆணைக்குழுவால் விளக்கம் கோரப்பட்டிருந்த நிலையில், அஹிம்சாவின் கடிதம், ஊடகங்களைப் புரட்டிப் போட்டிருந்தது.

பல அரசியல், சிவில் சமூகக் குழுக்களும், இந்த இடமாற்றத்துக்கான கண்டனத்தில் ஒற்றுமையாக இருந்தன. இந்நிலையில், பொலிஸ்மா அதிபரின் அலுவலகத்திலிருந்து, ஒரு பக்கத்தில் அமைந்த கடிதமொன்று, சி.ஐ.டிக்கு வந்திருந்தது. குறித்த அஞ்சலுறை, நவம்பர் 20ஆம் திகதி முற்பகலிலேயே வந்திருந்தாலும் கூட, அந்த ஆவணத்தின் உள்ளடக்கங்களை வைத்துப் பார்க்கும் போது, முன்னைய நாளில் அது தயாரிக்கப்பட்டிருந்தது என்பது தெரிந்தது. அந்தத் திகதி, பல இடங்களில் கையால் எழுதப்பட்டிருந்தது. குற்றப் புலனாய்வுப் பிரிவிலிருந்து நிஷாந்த சில்வாவை இடமாற்றம் செய்வதற்காகத் தன்னால் முன்னர் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை, மீளப்பெறுவதாக, அக்கடிதத்தில் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர தெரிவித்திருந்தார். இதற்காகக் குறிப்பிடப்பட்டிருந்த காரணம், மென்மையான ஒன்றாகவே இருந்தது: சேவைக்கான தேவைப்பாடுகள் காரணமாக என, அந்தக் காரணத்தை, பொலிஸ்மா அதிபர் தெரிவித்திருந்தார்.

நன்றி: இணையத்தளம்

# 3 அல்ல... 90 கொலைகள்! அதிரவைக்கும் வாக்குமூலம்



டெக்ஸாஸ் சிறையில் பலத்த போலீஸ் பாதுகாப்போடு ஒரு முதியவர் தினமும் விசாரணை அறைக்கு அழைத்துச்செல்லப்படுகிறார். 3 கொலை செய்த குற்றத்துக்காக ஆயுள் தண்டனை பெற்று சிறை வாசம் அனுபவித்து வரும் அந்த முதியவரின் பெயர் சாமுவேல் லிட்டில் (வயது 79). விசாரணை அறையில் சாமுவேல் அளித்த வாக்குமூலங்கள் அனைத்தும் விசாரணை அதிகாரிகளை மிரளச் செய்துள்ளன. அந்த அறையில் சாமுவேல் பேசப் பேச விசாரணை அதிகாரிகளுக்கு வியர்த்து கொண்டிருக்கிறது. 3 கொலைகள் அல்ல மொத்தம் 90 கொலைகள் என அதிரவைக்கிறார் லிட்டில். கடந்த காலங்களை அசைபோடும் சாமுவேல் கொலை செய்த இடங்கள், கிராமங்கள் குறித்த தகவல்களை அடுக்கிக் கொண்டிருக்கிறார். குற்றவாளிகளை மிரளவைத்த அந்த அறை தற்போது சாமுவேலின் வாக்குமூலத்தைக் கேட்டு மிரண்டுபோயுள்ளது.

ஜனவரி, 1978 ல் நான்கு குழந்தைகளுக்குத் தாயான 36 வயதுப் பெண் ஒருவர் கழுத்தறுப்பட்ட நிலையில் நிர்வாணமாக இறந்து கிடக்கிறாள். சரியாக 4 வருடங்களுக்குப் பிறகு ஆகஸ்ட் 1982-ம் ஆண்டு மரியன் பகுதியில் ரோஸி ஹில் என்ற 21 வயதுப் பெண் கழுத்தறுக்கப்பட்ட நிலையில் சடலமாகக் கண்டெடுக்கப்படுகிறாள். முதல் சம்பவம் நடந்த இடத்துக்கும் இதற்கும் 500 மைல் தொலைவு. 14 வருடங்களுக்குப் பிறகு மெலிசா தாமஸ் என்ற பெண் 1996-ம் ஆண்டு ஜனவரி மாதம் கழுத்தறுக்கப்பட்டு கொலை செய்யப்படுகிறாள். 18 வருட இடைவெளியில் மூன்று கொலைகள். இந்தக் கொலைவழக்கில் சாமுவேலை காவல்துறை கைது செய்கிறது.

2014, செப்டம்பர் மாதம் சாமுவேல் மீதான குற்றங்கள் லாஸ் ஏஞ்சல்ஸ் நீதிமன்றத்தில் நீருபிக்கப்படுகிறது. நீதிமன்றம் இவருக்கு முன்று ஆயுள் தண்டனை வழங்கித் தீர்ப்பு வழங்குகிறது. சாமுவேல் சிறையில் கம்பிகளுக்குப் பின்னால் தனது முதுமை காலத்தை கழிக்க தொடங்குகிறார். டி.என்.ஏ வின் அடிப்படையில் இந்த வழக்கில் அவர் சிக்கினார். இந்நிலையில் 1994- ஆண்டு நடைபெற்ற ஒரு கொலையில் இவரின் டி.என்.ஏ சிக்குகிறது.1994-ல் டெக்சாஸில் டென்சி கிறிஸ்டி என்ற பெண் கழுத்தறுக்கப்பட்டு கொலை செய்யப்படுகிறார். இந்தக் கொலையில் லிட்டில் டி.என்.ஏ இருப்பது தெரியவருகிறது.

சாமுவேலின் தாய் சிறையில் இருந்தபோது அவர் பிறந்ததாகக் கூறப்படுகிறது. சாமுவேல் லிட்டில் முதன்முறையாகத் தனது 16 வயதில் குற்றவழக்கில் சிறைவாசம் அனுபவித்துள்ளார். 1957 - 1975 இடைப்பட்ட காலகட்டத்தில் சுமார் 25 முறை சிறை சென்றுள்ளார். வீடற்ற சாமுவேல் தனது இளமைக்காலத்தின் பெரும் பகுதியை சிறையில் அனுபவித்துள்ளார். திருட்டு, கற்பழிப்பு, போலீஸ் அதிகாரியைத் தாக்கியது உள்ளிட்ட சிறு சிறு குற்றங்களுக்கு சிறைத் தண்டனை பெற்றுவந்துள்ளார்.




சாமுவேல் லிட்டில் நிறைய கிரிமினல் வழக்கில் கைது செய்யப்படுகிறார். ஆனால் நீதிமன்றத்தில் அவர் மீதான குற்றங்கள் நீருபிக்கப்படாததால் அவர் விடுவிக்கப்பட்டுள்ளார். 6 அடி உயரம் கொண்ட பாகுவான உடலைக்கொண்ட லிட்டில் காசுக்காக குத்துச்சண்டை போட்டிகளிலும் பங்கேற்றுள்ளார். போதை மருந்துக்கு அடிமையானவர்கள், விபசாரங்களில் ஈடுபடுபவர்கள்தான் சாமுவேலின் குறி. 1982-ம் ஆண்டு மரியன் பகுதியில் கொல்லப்பட்ட ரோஸி ஹில்லை இரவு விடுதியிலிருந்துதான் அழைத்துச் சென்றுள்ளார் சாமுவேல்.

1976-ல் ஸ்மித் என்ற பெண்ணை லிட்டில் கடத்திச் சென்று பாலியல் வன்கொடுமை செய்தார். இதுதொடர்பாக அந்தப் பெண் காவல்நிலையத்தில் புகார் தெரிவித்துள்ளார். அந்தப் பெண்ணைக் கடத்திய லிட்டில் அவரின் ஆடைகளைக் கொண்டே அவரின் கைகளை கட்டியுள்ளார். அவரது கைகளை இரும்பு ராடுகளுக்கு பின்னால் கட்டியுள்ளார். அவரிடமிருந்து தப்பித்துதான் காவல்நிலையத்தில் புகார் தெரிவித்துள்ளார். கைது செய்யப்பட்டபோது தான் அந்தப் பெண்ணைத் தாக்க மட்டுமே செய்தேன் என போலீஸில் வாக்குமூலம் கொடுத்துள்ளார். இந்த வழக்கில் மூன்று மாதம் சிறைத் தண்டனை அனுபவித்து உள்ளார்.


1982-ல் மெலிண்டா என்ற பெண்ணின் மரணத்தில் இவர் மீது காவல் துறை சந்தேகப் பார்வை விழுகிறது. அந்தப் பெண்ணை இறுதியாக லிட்டில் அழைத்துச் சென்றதாக இரண்டு பெண்கள் வாக்குமூலம் அளிக்கின்றனர். நீதிமன்றத்தில் ஆதாரம் சமர்பிக்க முடியாததால் இவர் விடுதலையாகிறார். இந்தத் தகவல்கள் அமெரிக்காவில் வெளியாகும் ஆங்கில நாளிதழ்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சக்கர நாற்காலியில் அமர்ந்திருக்கும் லிட்டில் விசாரணை அறையில் தான் செய்த குற்றங்களை அடுக்கிக்கொண்டிருக்கிறார். தான் எந்த வாகனத்தைப் பயன்படுத்தினேன் கொலை செய்யப்பட்ட பெண்களின் முகங்கள் ஆகியவற்றை வரைந்துகாட்டுவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சாமுவேல் லிட்டிலின் குற்றங்கள் அனைத்தும் நீருபிக்கப்பட்டால் அமெரிக்க வரலாற்றில் ஒரு கொடிய சீரியல் கில்லராக இவரது பெயர் இருக்கும் என அதிகாரிகள் கூறுகின்றனர்.

# சென்டினெல்கள் ஆபத்தானவர்களா?





அந்தமானில் உள்ள சென்டினெல் மக்கள், வெளிநபர்களை விரோதத்துடன் அணுகுபவர்கள் என்று அறியப்பட்டவர்கள். எனினும், 1970-கள் முதல் சென்டினெல் தீவுக்கு 26 முறை மானுடவியலாளர்கள் சென்றிருக்கிறார்கள். சமீபத்தில் வடக்கு சென்டினெல் தீவில் கொல்லப்பட்ட அமெரிக்க சுற்றுலாப் பயணி ஜான் ஆலனின் உடலை மீட்கும் விஷயத்தில் அந்தமான் நிகோபார் நிர்வாகத்துக்கு மானுடவியலாளர்கள் உதவிவருகிறார்கள். அவர்களில் சிலர் இந்திய மானுடவியல் ஆய்வு மையத்தை (ஏஎன்எஸ்ஐ) சேர்ந்தவர்கள்.

கடந்த வெள்ளிக்கிழமை, இந்திய மானுடவியல் ஆய்வு மையத்தின் தலைவர் சி.ரகுவைத் தொடர்புகொண்ட அந்தமான் நிகோபாரின் டிஜிபி தீபேந்திர பதக், சென்டினெல் மக்களை அணுகும் விஷயத்தில் அவரது ஆலோசனைகளைக் கேட்டிருக் கிறார். ஏஎன்எஸ்ஐ மையத்தைச் சேர்ந்தவர்கள், டி.என்.பண்டிட்டிடம் இது தொடர்பாக ஆலோசித்து வருகிறார்கள். அனுபவம்வாய்ந்த மானுடவியலாள ரான டி.என்.பண்டிட், 1970-களில் வடக்கு சென்டினெல் தீவுக்கு அதிகாரபூர்வமான முதல் பயணத்தை மேற்கொண்டவர். அதைத் தொடர்ந்து அந்தத் தீவுக்கு மானுடவியலாளர்கள் இதுவரை 26 முறை சென்றுவந்திருக்கிறார்கள். 24 முறை சென்டினெல் மக்களுடன் தொடர்புகொண்டிருக் கிறார்கள். சென்டினெல் மக்களுடனான சந்திப்புகள் குறித்து ஏஎன்எஸ்ஐ வெளியிட்ட ‘மிகவும் ஆபத்தான நிலையில் இருக்கும் பழங்குடியினக் குழுக்கள்: சலுகைகள் மற்றும் சிக்கல்கள்’ எனும் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இப்புத்தகத்தில் சென்டினெல் மக்கள் தொடர்பான அத்தியாயத்தை எழுதியிருக்கும் ஆன்ஸ்டைஸ் ஜஸ்டின், 1986 முதல் வடக்கு சென்டினெல் தீவுக்கு 10-க்கும் மேற்பட்ட பயணங்களில் பங்கேற்றவர். அந்தமான் நிகோபார் தீவுகளில் மிகவும் ஆபத்தான நிலையில் இருக்கும் பழங்குடியினக் குழுக்களில் (பிவிடிஜி) மிகவும் தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் இருப்பவர்கள் சென்டினெல் பழங்குடியினர் என்று அதில் அவர் குறிப்பிட்டிருக்கிறார். கிரேட் அந்தமானி பழங்குடியினர், ஓங்கே, ஜாரவா, நிகோபாரி பழங்குடியினர், ஷோம்பென் பழங்குடியினர் ஆகியோரும் அந்தப் பட்டியலில் உள்ளனர்.

1970 மார்ச்சில் வடக்கு சென்டினெல் தீவுக்கு முதன்முதலாகப் பயணித்தபோது டி.என்.பண்டிட்டுடன் ஓங்கே பழங்குடியினத்தைச் சேர்ந்த மூன்று பேரும் சென்றனர். எனினும், சென்டினெல் மக்களுடன் அவர்களால் எந்த வகையிலும் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள முடியவில்லை. இதை அந்த அத்தியாயத்தில் ஆன்ஸ்டைஸ் ஜஸ்டின் குறிப்பிட்டிருக்கிறார். இப்புத்தகத்தில் 2004 சுனாமிக்கு முந்தைய 22 பயணங்களும் சுனாமிக்குப் பிறகான நான்கு பயணங்களும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. குறைந்தபட்சம் ஏழு பயணங்களின்போது நட்பற்ற முறையில் சென்டினெல் மக்கள் நடந்துகொண்டதை ஆராய்ச்சியாளர்கள் கண்டனர். ஆராய்ச்சியாளர்கள் மீது சென்டினெல் மக்கள் அம்பெய்த சம்பவங்களும் அம்பெய்யப்போவதாக மிரட்டிய சம்பவங்களும் நடந்தன. அந்தப் பயணங்களின்போது சென்டினெல் மக்களுக்கு இளநீர், வாழைப்பழங்கள், இரும்புக் கம்பிகள் போன்றவற்றை ஆராய்ச்சியாளர்கள் அன்பளிப்பாக வழங்கினர்.

காலப்போக்கில், சென்டினெல் மக்களின் குணத்தில் மாறுதல் ஏற்பட்டது. 1990 முதல் அவர்கள் தொடர்புகொள்வதற்கு ஏற்றவர்களாக இருந்துவருகிறார்கள். அம்பெய்யும் சம்பவங்கள் குறைந்துவிட்டன என்றும் அந்த அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சென்டினெல் பழங்குடியினர் வசிக்கும் வனப்பகுதி யிலிருந்து புகை வந்த காட்சி, கடற்கரைக்கு வரும் சென்டினெல் மக்கள் அன்பளிப்புகளை எதிர்பார்த்து சைகை செய்வது, அன்பளிப்புகளை கடற்கரையிலோ அல்லது ஆழமில்லாத நீர்ப்பரப்பிலோ வைத்துவிடுமாறு சைகை செய்வது என்று தாங்கள் பார்த்த பல்வேறு விஷயங்களை ஆராய்ச்சியாளர்கள் பதிவுசெய்திருக்கிறார்கள். நிகோபாரி பழங்குடியினத்தைச் சேர்ந்தவரான ஆன்ஸ்டைஸ் ஜஸ்டின், 2005 மார்ச் 9-ல் சென்டினெல் தீவின் வடக்குக் கரைக்கு அருகே சென்டினெல் மக்களுடனான தனது கடைசிச் சந்திப்பு பற்றி கூறியிருக்கிறார். அன்பளிப்புப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள மகிழ்ச்சியுடன் கழுத்தளவு நீரில் இறங்கி சென்டினெல் பழங்குடியினர் எங்களை நோக்கி வந்தனர் என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

சென்டினெல் மக்கள் விஷயத்தில், மிகுந்த கவனத்துடனான அணுகுமுறையைக் கொண்டிருக் கிறது அந்தமான் நிர்வாகம். 2005-க்குப் பிறகு அந்தப் பகுதிக்கு அதிகப் பயணங்கள் மேற்கொள்ளப்படவில்லை. அரசு நிர்வாகத்தின் கண்காணிப்பு இல்லாததன் காரணமாக சட்டவிரோத வேட்டைக்காரர்களின் தொந்தரவுக்கு சென்டினெல் மக்கள் ஆளாவதாகக் குறிப்பிடுகிறார் ஆன்ஸ்டைஸ் ஜஸ்டின். சென்டினெல் தீவில் 2012-ல் மட்டும் 11 முறை சட்டவிரோத வேட்டைக்கார்கள் பிடிபட்டதை, தானே பதிவுசெய்திருப்பதாகக் கூறுகிறார்.


சென்டினெல் மக்களுக்குத் தனி மொழி உண்டு. ஜாரவாக்கள், ஓங்கேக்களைவிட அதிகமாகக் கடலைச் சார்ந்து வாழ்பவர்கள் சென்டினெல்கள். 56.97 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்ட இந்தத் தீவைச் சுற்றி இருக்கும் கடலில் வில், அம்புகள், ஈட்டிகளைக் கொண்டு மீன் பிடிக்கிறார்கள் என்று ஏஎன்எஸ்ஐ வெளியிட்டிருக்கும் புத்தகம் கூறுகிறது. காட்டுப் பன்றிகள், கடல் ஆமைகள், மீன்கள் ஆகியவற்றை வேட்டையாடி உண்ணும் சென்டினெல்கள், வேர்கள், கிழங்குகள், தேனைச் சேகரிக்கிறார்கள். துடுப்புகளைக் கொண்டு படகைச் செலுத்துவது சென்டினெல்களுக்குப் பரிச்சயமில்லாத விஷயம் என்று ஜஸ்டினும் பிற ஆராய்ச்சியாளர்களும் கருதுகிறார்கள். படகில் நின்றுகொண்டு கம்புகளால் கடல் நீரைக் கலக்கி மீன் பிடிப்பதை மட்டும் அறிந்துவைத்திருக்கிறார்கள்.

ஏஎன்எஸ்ஐ-யின் பொது இயக்குநராக இருந்த டி.என்.பண்டிட்டுக்குத் தற்போது 84 வயதாகிறது. 1970-ல் ஓங்கே பழங்குடியினத்தைச் சேர்ந்த மூவருடன் சென்டினெல் தீவுக்குச் சென்ற அனுபவத்தை நினைவுகூர்கிறார். படகில் இருந்தபடியே சென்டி னெல்களுடன் அவர்களுடைய மொழியில் பேசுமாறு ஓங்கேக்களிடம் சொன்னோம். இதனால், சென்டினெல்கள் கடும் கோபமடைந்தனர். பயந்துபோன ஓங்கேக்கள் படகில் மறைந்துகொண்டனர் என்கிறார் அவர்.

சென்டினெல் தீவுக்குச் செல்லும் குழுவினர், விரைவாகச் சென்று கடற்கரையில் அன்பளிப்புகளை வைத்துவிட்டு உடனடியாகத் திரும்பிவிடுவார்கள் என்று கூறியிருக்கும் டி.என்.பண்டிட், நாங்கள் அங்கு தங்கியிருக்கப்போவதில்லை என்பதை உணர்ந்ததும் அவர்கள் அம்பெய்வதை நிறுத்திவிட்டனர் என்று குறிப்பிடுகிறார். தங்கள் நிலத்தை ஆக்கிரமிக்க வருகிறார்கள் என்று கருதினால் சென்டினெல்கள் ஆவேசமடைந்துவிடுவார்கள் என்று சொல்லும் அவர், நமது நாட்டின் ஒரு பகுதியில் கற்காலத்தைச் சேர்ந்த சிறிய மக்கள் குழு இத்தனை ஆண்டுகாலம் வாழ்ந்துவருவது நமது அதிர்ஷ்டம் என்று கூறுகிறார்.

**‘தி இந்து’ ஆங்கிலம்**

# ஆய்வு வாழ்வு நேர்மையும் வேறுவேறல்ல!



ஐராவதம் மகாதேவன் தமிழுக்குத் தந்த மிகச் சிறந்த கொடை அவருடைய ஆய்வு நூல் -Early Tamil Epigraphy: From the Earliest Times to the Sixth Century AD கிட்டத்தட்ட நாற்பதாண்டு உழைப்பில் உருவானது இது. 1966-லேயே மகாதேவன் தமிழ் பிராமிக் கல்வெட்டுகளைப் பற்றி கள ஆய்வு மேற்கொண்டு கல்வெட்டுகளின் திரட்டு ஒன்றை 1968-ல் வெளியிட்டிருந்தார்.

பின் வந்த காலத்தில் புதிய கல்வெட்டுகள், மட்பாண்டத்தில் பொறிக்கப்பட்ட எழுத்துகள் ஆய்வு உலகத்துக்குத் தெரியவந்ததும், மீண்டும் ஒரு விரிவான கள ஆய்வை 1990-களில் மேற்கொண்டு, குகைகுகையாகப் போய், கல்வெட்டுகளை அவற்றின் அமைவிடத்திலேயே ‘படித்து’ விரிவான ஆய்வுக்கு உட்படுத்தி, பதினைந்து ஆண்டுகள் கையெழுத்துப் பிரதியை உருவாக்கச் செலவிட்டு எழுதிய நூல் அது.

இந்த ஆய்வை ‘க்ரியா’ வெளியிட்டது அதன் பேறு. நூலை அச்சுக்குத் தயார்செய்யக் கிட்டத்தட்ட ஒரு ஆண்டுக்கும் மேலாக மகாதேவனுடன் இணைந்து வேலை செய்ய எனக்குக் கிடைத்த வாய்ப்பு மிகவும் அரியது; அவருடன் இருக்கும் ஒவ்வொரு மணி நேரமும் நீங்கள் கற்றுக்கொண்டே இருப்பீர்கள் என்பது என் அனுபவம்.

மகாதேவனின் வேகத்துக்கு ஈடுகொடுப்பது நம்மை நாமே மேம்படுத்திக்கொள்வது. அவருடைய உழைப்பு அசாத்தியமானது. ஆறு மாத காலம் தினமும் மூன்று மணி நேரம் கையெழுத்துப் பிரதியை வரிவரியாகப் படிப்போம். நாம் கேட்கும் கேள்விகளைக் கவனத்துடன் கேட்பார்; பொறுமையாகப் பதில் சொல்வார். மாற்றுக் கருத்துகளைக் கவனத்துடன் பரிசீலிப்பார். ஏற்கத் தகுந்தவற்றைத் தயக்கமில்லாமல் ஏற்றுக்கொள்வார். எனக்கும் அவருக்கும் இடையே நிறைய வாக்குவாதம் நிகழும். நீ சொல்வது ஒவ்வொன்றைப் பற்றியும் கவனமாக யோசிக்கிறேன், அதனால் நான் எப்போதும் உன்னுடன் முரண்படுகிறேன் என்று நினைக்காதே என்பார்.

அவருடைய புலமை ஒழுக்கம் மிக அரியது. தான் எழுதும் ஒவ்வொரு வாக்கியத்துக்கும் தான் பொறுப்பேற்க வேண்டும் என்பது அவர் கொள்கை. அதேமாதிரி, அவர் தரும் ஒவ்வொரு தகவலும் சரியாக இருக்க வேண்டும் என்பதில் அவர் பெரும் அக்கறை கொண்டிருந்தார்.

நேரம் தவறாமை அவருக்கு மிக முக்கியம். ‘பத்து மணிக்கு வருகிறேன்’ என்று நான் சொல்லியிருந்தால், 9.55-க்கே தயாராக இருப்பார். பிறரும் தன்னைப் போல நேரம் தவறாமையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பார். வாக்குத் தவறாமையும் அவருடைய உயர்ந்த பண்புகளில் ஒன்று. இந்தப் புத்தகம் பதிப்பிக்கப்பட்ட கதையையே உதாரணமாகச் சொல்லலாம்.

இந்த நூலை அவர் எழுதிக் கொண்டிருந்தார் என்பதைக் கேள்விப்பட்டு, 2000-ம் ஆண்டு அவரை அணுகி, க்ரியா இந்த ஆய்வை வெளியிட விரும்புவதைத் தெரிவித்தேன். க்ரியா வெளியிட்டால் மகிழ்ச்சி அடைவேன் என்று சொல்லி, அவரும் தன் ஒப்புதலைத் தந்தார். அப்போது அவர் நூலின் சில இயல்களை மட்டுமே எழுதியிருந்தார்.

இதனிடையே க்ரியா இந்நூலை வெளியிடப்போகிறது என்று கேள்விப்பட்ட ஹார்வர்டு பல்கலைக் கழகப் பேராசிரியர் மைக்கேல் விட்சல், அவர் அப்போது பதிப்பித்துக்கொண்டிருக்கும் ‘ஹார்வர்டு கீழை நூல்கள் வரிசை’யில் (Harvard Oriental Series) வெளியிட மகாதேவனிடம் இந்நூலைக் கேட்டார்.

ஹார்வர்டு கீழை நூல்கள் வரிசையில் ஒரு அறிஞரின் நூல் வெளியிடப்படுவது அறிவுலகில் மிக உயரிய கௌரவங்களில் ஒன்றாகக் கருதப்படுவது. முழுமை அடையாத ஒரு கையெழுத்துப் பிரதியைப் பார்வையிடாமல்கூட ஹார்வர்டு தன்னுடைய புகழ்மிக்க கீழை நூல்கள்

16 ஆம் பக்கம் பார்க்க....

# யாரிடமும் பேசவில்லை; காயம் அவரை அதிகம் பாதித்துள்ளது!

இந்திய அணி தற்போது ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. முதலில் நடைபெற்ற டி20 தொடர் 1-1 என சமனில் முடிவடைந்தது. இதைத் தொடர்ந்து டெஸ்ட் தொடர் வரும் 6 -ம் தேதி தொடங்கவுள்ளது. அதற்கு முன்னதாக இந்திய அணி தற்போது பயிற்சி ஆட்டம் ஒன்றில் விளையாடி வருகிறது.



சிட்னியில் நடைபெற்று வரும் இந்தப் பயிற்சிப் போட்டியில் மழை காரணமாக முதல் நாள் ஆட்டம் கைவிடப்பட்டது. இரண்டாம் நாளில் முதலில் களமிறங்கிய இந்திய அணி 358 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தது. அதிகபட்சமாக ப்ரித்வி ஷா 66 ரன்கள் எடுத்தார். மேலும், புஜாரா, கோலி, ரஹானே மற்றும் ஹனும விகாரி ஆகியோர் அரைசதம் அடித்தனர். இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி 6 விக்கெட் இழப்புக்கு 356 ரன்கள் எடுத்தது.

இந்த நிலையில், இந்தப் போட்டியில் இந்திய தொடக்க ஆட்டக்காரரான ப்ரித்வி ஷாவுக்கு ஃபீல்டிங் செய்யும் போது காயம் ஏற்பட்டது. வலியால் துடித்த அவரை, மைதானத்திலிருந்து மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். காலில் ஏற்பட்ட காயத்துக்கு ஓய்வு தேவை என மருத்துவர்கள் தெரிவித்தனர். இதன் பின்னர் முதலாவது டெஸ்ட் போட்டியில் ப்ரித்வி விளையாடமாட்டார் என பி.சி.சி.ஐ அதிகாரபூர்வமாக அறிவித்தது.

ஆஸ்திரேலியத் தொடருக்கு முன்னதாக உள்நாட்டில் நடைபெற்ற வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் ஷா அதிரடியாக விளையாடி அனைவரது கவனத்தையும் ஈர்த்தார். இதன் காரணமாக ஆஸ்திரேலிய தொடருக்கும் தேர்வானார் இந்த 19 வயது இளம் வீரர். ஆனால், காயம் காரணமாக முதலாவது டெஸ்ட் போட்டியில் விளையாட முடியாமல் போனதில், ப்ரித்வி ஷா வருத்தத்தில் இருக்கிறார். காயத்துக்குப் பின்னர் யாரிடமும் ஷா அதிகமாகப் பேசவில்லை என்கிறார் அஷ்வின்.

இது தொடர்பாக அஷ்வின் செய்தியாளர்களிடம் பேசுகையில், ‟ப்ரித்வி ஷாவுக்கு காலில் கொஞ்சம் வீக்கம் உள்ளது. அவருக்குக் காயம் ஏற்பட்டது சற்று மோசமான ஒன்றுதான். இளம் வீரரான அவர், இந்திய அணிக்காக விளையாட முதல்முறையாக ஆஸ்திரேலியா வந்திருக்கிறார். நிச்சயம் இது அவருக்குக் கடினமான ஒன்றாகத்தான் இருக்கும். இந்த காயத்துக்குப் பின்னர் அவர் சக வீரர்களிடம் அதிகமாகப் பேசவில்லை. அமைதியாக இருக்கிறார். முதல் போட்டியில் அவர் ஆடாதது இந்திய அணிக்கு இழப்பா என்று கேட்கிறார்கள். நான் அப்படி நினைக்கவில்லை. ஒருவர் இல்லை என்றால் மற்றொருவருக்கு வாய்ப்பு கிடைக்கும். அவ்ளோ தான் என்றார்.

ப்ரித்வி ஷா இல்லாத நிலையில், ராகுலுடன் முரளி விஜய் களமிறங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது. அல்லது பார்த்திவ் படேல் களமிறக்கப்படலாம். மற்றொரு இளம் வீரரான ஹனும விகாரி, கேப்டன் கோலி தன்னை ஓப்பனிங்கில் களமிறங்கச் சொல்லத் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ளார். ஆடுகளத்தின் தன்மை, வீரர்களின் செயல்பாடு முதலியவை கொண்டு பிளேயிங் லெவன் தேர்வு செய்யப்படும்.

# இந்திய அணியில் ஏதோ ஒன்று குறைகிறது

இந்திய அணியினரே ஜாக்கிரதை... ஆஸி. பவுலர்கள் உங்கள் தொண்டைக்குழியைக் குறிவைப்பார்கள் என்று சமீபத்தில் பிரபல கிரிக்கெட் இணையதள பத்தியில் எச்சரித்திருந்த ஆஸ்திரேலிய முன்னாள் கேப்டன் இயன் சாப்பல், மீண்டும் இந்திய அணியில் ஏதோ ஒன்று மிஸ்ஸிங், அதனால் ஆஸ்திரேலியாவைத்தான் என்னால் வெற்றி வாய்ப்பு உள்ள அணியாகக் கூற முடிகிறது என்று தெரிவித்துள்ளார்.

சவுரவ் கங்குலி 2001 தொடரில் 17 டெஸ்ட்களில் தொடர்ச்சியாக வென்ற ஸ்டீவ் தலைமை ஆஸி. அணியின் வெற்றியை இடையூறு செய்து தொடரை 2-1 என்று கைப்பற்றியது முதல்.. பிறகு 2004 தொடரில் அங்கு சென்று 1-1 என்று சமன் செய்ததோடு ஆஸி. க்கு சொந்த மண்ணில் தோல்விபயத்தைக் காட்டியதையடுத்தே இந்திய, ஆஸ்திரேலிய தொடர் என்றாலே ஒரு சுவாரசியமான பகைமை உருவானது. இந்தத் தொடரில் இது டிசம்பர் 6ம் தேதி அடிலெய்ட் டெஸ்ட் முதல் புதுப்பிக்கப்படும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் இயன் சாப்பல் ஈஎஸ்பிஎன் கிரிக் இன்போ இணையதள விவாதம் ஒன்றில் கூறியதாவது:

நான் ஆஸ்திரேலியா அணியைத்தான் வெற்றி வாய்ப்பு உள்ள அணியாகக் கருதுகிறேன், ஆனால் என்னிடம் ஏன் என்று கேட்காதீர்கள், இப்படிக் கூறுவதற்கு அறிவுபூர்வமான காரணம் என்னவெனில் இங்கிலாந்தில் இந்திய அணி தோல்வியடைந்தது எனக்கு ஏமாற்றம் அளித்தது. அந்தத் தொடரை இந்தியா வென்றிருக்க வேண்டும்.

திறமை மட்டத்தில் நிச்சயமாக இந்த ஆஸ்திரேலிய அணியை இந்தியா வீழ்த்தத்தான் வேண்டும், ஆனால் ஏதோ ஒன்று இந்திய அணியில் மிஸ்ஸிங். இன்னொரு விஷயம் ஆஸ்திரேலியாவின் வலுவான பந்து வீச்சு.



ஆஸி. பந்து வீச்சு பிரமாதமாக உள்ளது, ஆஸ்திரேலியாவில் அது நிரூபிக்கப்பட்ட ஒன்றாக உள்ளது. ஆஸ்திரேலியாவில் இந்தியப் பந்து வீச்சு இன்னமும் நிரூபிக்கப்படவில்லை.

எனக்கு இந்தத் தொடரில் விராட் கோலியின் பேட்டிங்தான் சுவாரசியமாக எதிர்நோக்க வைக்கிறது. ஆஸ்திரேலிய பவுலர்கள், விராட் கோலி பேட்டிங் இந்தப் போட்டியை நான் ஆவலுடன் எதிர்நோக்குகிறேன். கடந்த முறை கோலி இங்கு அருமையாக ஆடினார்.

இன்னொரு விஷயம் இந்திய அணிக்குச் சாதகம் இந்த முறை பந்து வீச்சு வலுவாக உள்ளது. அவர்கள் பந்துகளை ஸ்விங் செய்பவர்கள். இங்கு இங்கிலாந்து போல் அவர்களுக்கு உதவியிருக்குமா என்பது சந்தேகமே, ஆகவே அவர்கள் இங்கு எப்படி வீசுகிறார்கள் என்பதைப் பார்க்க ஆவலாக இருக்கிறேன். ஆகவே விராட் கோலி பேட்டிங், இந்தியப் பந்து வீச்சு இந்தத் தொடரில் மிகப்பெரிய கதையை எழுதவுள்ளது.

ரவிசாஸ்திரி கூறுவது போல் இந்தியாவிலிருந்து வந்த அணிகளில் இது கொஞ்சம் பெட்டர் அணிதான். வேகப் பந்து வீச்சாளர்களுக்கு இந்த சூழல் உதவும், இந்தியாவிலிருந்து இதுவரை வந்த வேகப்பந்து கூட்டணியை விட இப்போது வலுவாக உள்ளது.

ஆனால் பேப்பரில் இந்தியாவுக்குச் சாதகமாக பல அம்சங்கள் இருந்தாலும் அதனை களத்தில் எப்படி செயல்படுத்துகிறார்கள் என்பதே முக்கியம்.

ஆஸ்திரேலிய அணி இந்த டெஸ்ட் தொடரில் 350-400 ரன்களை ஒரு இன்னிங்சில் எடுப்பார்கள் என்பதை ஒரு மிகப்பெரிய நம்பிக்கைவாதிதான் சொல்ல முடியும். அவர்கள் எப்போதாவஹ்டு 350 ரன்கள் எடுத்தால் அதற்கெ பலரும் ஆச்சரியப்படுவார்கள், நானும் அதில் ஒருவன்.

ஹார்திக் பாண்டியா இந்திய அணிக்கு ஒரு சமநிலையை வழங்கினர். ஆஸ்திரேலியாவில் 3வது வேகப்பந்து வீச்சாளராக அவர் இருக்கும் போது அடிலெய்ட், சிட்னியில் 2 ஸ்பின்னர்களை இந்திய அணி விளையாடச் செய்ய முடியும். இந்த மைதானங்களில் 5 பவுலர்கள் எப்போதும் உதவிகரமாகவே இருக்கும்.

இவ்வாறு கூறினார் இயன் சாப்பல்.

# ‘ஜென்டில்மேன்’ கிரிக்கெட் ஆடினால் சத்தியமாக வெல்ல முடியாது: லாங்கர் மீது மைக்கேல் கிளார்க் காட்டம்



முன்னாள் ஆஸ்திரேலிய அணி கேப்டன் மைக்கேல் கிளார்க், சமீபத்திய ஆஸ்திரேலிய அணியினரின் ஒழுக்கக் கட்டுப்பாட்டு விதிகளை கடுமையாகச் சாடியுள்ளார். அனைவருக்கும் பிடித்த அணியாக இருக்க வேண்டுமா? அல்லது அனைவரும் மதிக்கக் கூடிய அணியாக இருக்க வேண்டுமா? என்று ஜஸ்டின் லாங்கர், டெஸ்ட் கேப்டன் டிம் பெய்ன் ஆகியோருக்கு கேள்வி எழுப்பியுள்ளார்.

தென் ஆப்பிரிக்காவில் பால் டேம்பரிங் செய்து முன்கூட்டியே எதிரணியைத் திட்டமிட்டு, மோசடி செய்து வெல்லும் மோசமான உத்தியினால் இன்று வார்னர், ஸ்மித், பேங்கிராப்ட் வீட்டில் உள்ளனர். இதனையடுத்து களத்துக்கு உள்ளேயும் வெளியேயும் ஒழுக்கக் கட்டுப்பாடு விதிகள், வீரர்கள் உடன்படிக்கை, கருத்தொருமித்தல், ‘‘உயர்தர நேர்மை’’ என்று லாங்கரும், டிம் பெய்ன் மற்றும் கிரிக்கெட் ஆஸ்திரேலியா செயலில் இறங்கியது.

இதனால், பாவம் ஆஸ்திரேலியா, ஸ்லெட்ஜிங் செய்ய முடியாமல் அதற்குப் பதிலாக அசட்டுச் சிரிப்பையே களத்தில் உதிர்த்து வருகின்றனர்.

இந்நிலையில் இந்தியாவுக்கு எதிராக 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடக்கவிருக்கையில், மைக்கேல் கிளார்க் இந்த ஒழுக்க விதிகள் மீது காட்டம் காட்டியுள்ளார்.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் தங்களைப் பிறர் விரும்புவார்களா இல்லையா என்ற கவலையை விட்டு விட வேண்டும். மாறாக நம் அணியை மதிக்க வேண்டும் என்பது பற்றிய கவலையே உண்மையான கவலை. உங்களுக்குப் பிடித்திருக்கிறதோ, இல்லையோ கடினமான முறையில் ஆடுவதுதான் ஆஸ்திரேலிய பாணி, அது தான் நம் ரத்தத்தில் கலந்துள்ளது.

ஆஸ்திரேலிய பாணியிலிருந்து வெளியேறினால் உலகில் மற்ற அணிகளுக்கு நம்மைப் பிடிக்கும், அடுத்தவர்களுக்கு பிடித்தமான அணியாக இருப்போம், ஆனால் வெல்ல மாட்டோம், சத்தியமாக வெல்லப்போவதில்லை. எல்லோரும் வெற்றியையே விரும்புகின்றனர் என்றார் மைக்கேல் கிளார்க்

# டாஸ் போடுவதற்கு காற்சட்டையுடன் வந்த இந்திய கப்டன்

விராட் கோலி என்றாலே ஏதாவது சர்ச்சை கிளம்பியபடியே தான் இருக்கும், அதுவும் இது ஆஸ்திரேலிய பயணம் அல்லவா, அனைவரது பார்வைகளும் கேமராக்களும் அவர் மீதுதான் இருக்கும் என்பதை அவர் உணர்ந்தவராகத் தெரியவில்லை.

விராட் கோலியிடம் இன்னொரு பிடிவாத குணமென்னவெனில் ஒரு விஷயம் விமர்சிக்கப்படுகிறதா, அந்த விமர்சனம் சரியாக இருக்கும் பட்சத்தில் அவர் மன்னிப்போ வருத்தமோ தெரிவித்ததில்லை.

இந்நிலையில் கிரிக்கெட் ஆஸ்திரேலியா அணியுடனான பயிற்சி போட்டி முதல் நாள் ஆட்டம் முழுதும் மழையால் நடைபெறவில்லை, இன்று 2ம் நாள் ஆட்டம் நடைபெற்றது. அனுபவமற்ற கத்துக்குட்டி பந்து வீச்சில் இந்தியா ஆல் அவுட் ஆனது வேறு கதை.

ஆனால் டாஸ் போட வரும் போது ஏதோ வாக்கிங் போவது போல் அவர் ஷார்ட்ஸ் அணிந்து வந்தது பார்ப்பதற்கு அசிங்கமாக இருந்ததாக நெட்டிசன்கள் பாய்ந்துள்ளனர்.

அதுவும் பிசிசிஐ இணையதளம் இந்தப் புகைப்படத்தை வேறு வெளியிட்டு தம்பட்டம் அடித்ததும் நெட்டிசன்கள் மத்தியில் நல்லதாகப் பார்க்கப்படவில்லை. பலரும் மரியாதை குறைவான செயல் என்று விராட் கோலியை கடுமையாகச் சாடியுள்ளனர். இழிவானது, மரியாதைக் கெட்டத்தனம், இந்த நடத்தை மன்னிக்க முடியாத்து என்று பிரகாஷ் என்பவர் தன் ட்வீட்டில் சாடியுள்ளார்.

ஒரு நாட்டின் கிரிக்கெட் அணியின் கேப்டன் அந்நாட்டு தூதுவருக்குச் சமம் என்று கருதப்படும் நிலையில் அரைகுறையாக ஷார்ட்ஸ் அணிந்து டாஸ் போட்டது பலரையும் புண்படுத்தியுள்ளது என்கிறார் இன்னொரு ட்விட்டர்வாசி.

## ஜனாதிபதி...

12 ஆம் பக்கத் தொடர்ச்சி

திடமான சந்தேகம் ஜனாதிபதி மைத்திரிக்கு எழுந்தது நியாயமானதே. இந்த நிலைமையில் ரணில் அதிகாரத்திலிருப்பது மிகவும் ஆபத்தானது என்ற முடிவுக்கு அவர் வந்திருந்தால் அது யதார்த்தமானது.

‘நல்லாட்சி’அரசில் 2015 ஜனவரி 8 முதல ஒன்றாக இணைந்திருந்தவர்கள் ஜனாதிபதியை ஏன் கொலை செய்ய திட்டமிட்டார்கள் என்ற கேள்வி பலருக்கும் எழுவது நியாயமானது. எல்லாவற்றுக்கும் அரசியல் அடிப்படைதான் காரணம் என்றபடியால் இதற்கும் அரசியல் அடிப்படைதான் காரணம்.

ஐ.தே.கவுக்கும் அதன் வெளிநாட்டு எஜமானர்களுக்கும் உள்ள முதலாவது பிரச்சினை இவ்வருடம் பெப்ருவரி 10இல் நடைபெற்ற உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் கூட்டு எதிரணி பெற்ற அமோக வெற்றியாகும். இந்த தேர்தலில் கூட்டு எதிரணி 46 வீதம் வரையிலான வாக்குகளைப் பெற்றிருந்தது. அதே நேரத்தில் மைத்திரி தலைமையிலான சிறீலங்கா சுதந்திரக் கட்சி அணி சுமார் 15 வீதமான வாக்குகளைப் பெற்று மூன்றாவதாக வந்திருந்தது. இந்த நிலைமை எதைக் காட்டுகிறது என்றால், சுதந்திரக் கட்சி மைத்திரி அணி, மகிந்த அணி என பிளவுபடாமல் இருப்பின் அடுத்த பொதுத் தேர்தல் - ஜனாதிபதித் தேர்தல் என்பவற்றில் 60 வீதத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று அவர்கள் வெற்றியீட்டுவர் என்ற உண்மையை எடுத்துக் காட்டியது. அதைத் தடுப்பதே உள்நாட்டு - வெளிநாட்டு பிற்போக்கு சக்திகளின் தந்திரோபாயமாக இருந்து வந்துள்ளது. ஆனால், முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் புதல்வரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச அண்மையில் தெரிவித்த கருத்தின்படி, மைத்திரி - மகிந்த தரப்புக்கு இடையில் பெப்ருவரி உள்ளூராட்சி தேர்தல் நடந்த கையோடு ஒற்றுமைப் பேச்சுவார்த்தை ஆரம்பித்துவிட்டது. ஏற்கெனவே நல்லாட்சி அரசுக்குள் ரணிலுக்கும் மைத்திரிக்கும் இடையில் முரண்பாடு முற்றிவிட்ட நிலையில், இந்த ஒற்றுமைப் பேச்சுவார்த்தை வெற்றியில் முடியலாம் என்ற வலுவான சந்தேகத்தை ஐ.தே.கவுக்கும் அதன் சகாக்களுக்கும் ஏற்படுத்திவிட்டது.

மக்கள் ஆதரவு தமக்கு எள்ளளவும் இல்லை என்ற நிலையில் பிற்போக்கு சக்திகள் மாற்று வழியைத் தேட ஆரம்பித்துள்ளனர். அந்த மாற்றுவழிதான் ஜனாதிபதி கொலை முயற்சி.

இலங்கையின் அரசியல் சாசனப்படி அதிகாரத்திலிருக்கும் ஜனாதிபதி ஒருவர் இறக்க நேரிட்டால், அல்லது அவர் பதவி விலகினால், பிரதமர் பதவியில் இருப்பவரே இயல்பாக அடுத்த ஜனாதிபதி தேர்தல்வரை ஜனாதிபதியாக பதவி வகிப்பார். அதன்படிதான் 1990இல் அப்போதைய ஜனாதிபதியாக இருந்த ஆர்.பிரேமதாசவை புலிகள் தற்கொலைக் குண்டுதாரி மூலம் கொலை செய்துவிட, பிரதமராக இருந்த டி.பி.விஜயதுங்க ஜனாதிபதியானார். எனவே இன்றைய சூழலில் ஜனாதிபதி மைத்திரியை கொலை செய்துவிட்டால் இயல்பாகவே பிரதமர் பதவியில் இருக்கும் ரணில் ஜனாதிபதியாக வருவார். பின்னர் அவர் தனக்குள்ள நிறைவேற்று அதிகாரங்களைப் பயன்படுத்தி அடுத்து வரும் பொதுத் தேர்தல், ஜனாதிபதி தேர்தல் எனபனவற்றில் ஐ.தே.க. வெற்றியீட்ட முயற்சிக்க முடியும்.

மைத்திரியை கொலை செய்தாலும், ராஜபக்ச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கவுக்கு சவாலாக இருப்பார்கள். புலிகளுடனான போரில் அரசாங்கத்தை வெற்றிக்கு இட்டுச் சென்றவர்கள் என்ற வகையில் நாட்டு மக்கள் மத்தியில் அவர்களுக்கு அபரிமிதமான செல்வாக்கு உள்ளதென்பதை யாரும் மறுத்துவிட முடியாது. அரசியல் சட்டத்தின் 19ஆவது திருத்தத்தின்படி மகிந்த ராஜபக்ச ஜனாதிபதித் தேர்தலில் மூன்றாவது முறையாகப் போட்டியிட முடியாவிட்டாலும், புலிகளுடனான போரில் தீர்க்கமான பாத்திரம் வகித்த அவரது சகோதரரான முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய போட்டியிட்டு வெற்றிபெறக்கூடிய வாய்ப்பு இருந்தது. அதற்கான முயற்சிகளும் நடந்து வந்தன. அதுமாத்திரமின்றி மகிந்தவின் இன்னொரு சகோதரரும், முன்னாள் சபாநாயகருமான சமல் ராஜபக்சவின் பெயரும் அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக பிரஸ்தாபிக்கப்பட்டு வந்தது. இந்தச் சூழ்நிலையில்தான் ஜனாதிபதி மைத்திரியை மட்டுமின்றி, கோத்தபாய ராஜபக்ச உட்பட ராஜபக்ச குடும்ப உறுப்பினர்கள் அனைவரையும் தீர்த்துக்கட்ட முயற்சி எடுக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

ஏகாதிபத்திய - பிற்போக்கு சக்திகளைப் பொறுத்தவரையில், போலியான நாடாளுமன்ற ஜனநாயகம் தங்களுக்கு சாதகம் இல்லாமல் அமையும் போது, நேரடி பலாத்காரத்தில் இறங்கியதற்கு உலக வரலாற்றில் பல உதாரணங்கள் உண்டு. கொங்கோவின் பட்ரிஸ் லுமும்பாவில் தொடங்கி, இலங்கையின் பண்டாரநாயக்க, சிலியின் அலண்டே, இந்தியாவின் இந்திரா காந்தி, பங்களாதேசின் முஜிபுர் ரஹ்மான் என உதாரணங்கள் உண்டு.

இந்த நிலைமைகளில், இலங்கையின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அந்த நாட்டின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பதவி நீக்கம் செய்தது, நாடாளுமன்றத்தைக் கலைத்தது, பொதுத் தேர்தலுக்கு திகதி குறித்தது எல்லாமே இலங்கையின் அரசியல் சாசனத்துக்கு அமைவாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மட்டுமல்லாது, அரசியல் ரீதியாக இலங்கையின் தேசிய சுதந்திரம், சுயாதிபத்தியம், பிரதேச ஒருமைப்பாடு, மக்களின் இறையாண்மை, ஜனநாயக அரசமைப்பு என்பனவற்றைப் பாதுகாக்க எடுத்த அத்தியாவசிய நடவடிக்கைகளாகும்.

இலங்கை ஜனாதிபதியின் இந்த நடவடிக்கைகளை இலங்கையிலும், உலகம் முழுவதிலும் பரந்து வாழும் ஏகாதிபத்திய - எதிர்ப்பு முற்போக்கு சிந்தனையுள்ளவர்களும், ஜனநாயகத்தை நேசிப்பவர்களும் எந்தவித தயக்கமும் இன்றி ஆதரிப்பது கடமையாகும்.

இலங்கை ஜனாதிபதியின் நடவடிக்கைகளை அரசியல் சாசனத்துக்கு முரணானது, ஜனநாயகத்துக்கு விரோதமானது என ஓலமிடுபவர்கள் அனைவரும் ஆடு நனைகிறது என்று ஓலமிடும் ஓநாய்க்கு சமமானவர்கள். உண்மையில் அரசியல் சாசனத்தையும் ஜனநாயக நெறிமுறைகளையும் மீறி செயற்பட்டுக் கொண்டிருப்பவர்கள் பிரதம மந்திரி பதவி போன பின்பும் பிரதமர்களின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான அலரி மாளிகையை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் ரணில் விக்கிரமசிங்கவும், நாடாளுமன்ற சம்பிரதாயங்களையும் நடைமுறைகளையும் மீறி செயற்பட்டுக் கொண்டிருக்கும் அவரது கட்சியைச் சார்ந்த சபாநாயகர் கரு ஜெயசூரியவும் தான்.

தற்போது இலங்கையில் நடைபெறும் போராட்டம் என்பது ஏகாதிபத்திய, பிற்போக்கு சக்திகளுக்கும், இலங்கை மக்களுக்கும் இடையில் நடைபெறும் வாழ்வா சாவா என்ற ஒரு ஜீவ மரணப் போராட்டமாகும்.

நன்றி: இணையம்

## ஆய்வு...

15 ஆம் பக்கத் தொடர்ச்சி

வரிசையில் வெளியிட முன்வந்தது, உலக அறிஞர்களிடையே மகாதேவனின் புலமைக்கு எவ்வளவு மதிப்பிருந்தது என்பதை நமக்குச் சொல்லிவிடக்கூடியது.

இது மகாதேவனை ஒரு இக்கட்டில் சிக்கவைத்தது. அவர் சொன்னார்: ‘‘ஹார்வர்டு வெளியிடுவது எனக்குக் கிடைக்கும் பெரிய கௌரவம்; ஆனால், அப்படி அவர்கள் அழைப்பை நான் ஏற்றால் அது உனக்கு நான் கொடுத்த வாக்கை மீறுவதாகும்.

அவர் சங்கடம் எனக்குப் புரிந்தது. நான் சொன்னேன்: நிச்சயம் அது உங்களுக்குக் கிடைக்கும் பெரிய கௌரவம் தான். நீங்கள் ஹார்வர்டு வாய்ப்பை ஏற்றுக்கொண்டால் நானும் மகிழ்வேன். ஆனால், சில விஷயங்களை நீங்கள் பரிசீலிக்க வேண்டும். முதலாவதாக, ஹார்வர்டு ஒரு நூலை வெளியிட்டால் அதன் காப்புரிமை ஹார்வர்டுக்குப் போய்விடும்; இந்த நூல் - இந்த அறிவுப் புதையல் தமிழ் மண்ணுக்குச் சொந்தமானது. நீங்கள் இதை மறுஅச்சு செய்ய நினைத்தால் ஹார்வர்டின் அனுமதி பெற வேண்டும் என்ற நிலை சரியல்ல; காப்புரிமையை நீங்கள் வைத்திருப்பதுதான் உசிதமானது. இரண்டாவதாக, இந்தப் புத்தகம் அச்சாகும்போது நீங்கள் அதை மேற்பார்வையிட வேண்டும் என்பது முக்கியம். ஏனென்றால், ஒரு கல்வெட்டு தலைகீழாக அச்சிடப்படலாம்; இந்தப் புத்தகம் மற்ற புத்தகங்களைப் போல் இல்லை. ஹார்வர்டில் அச்சானால் இது சாத்தியமா?

இதை மகாதேவன் ஆமோதித்தார். மறுநாள் என்னிடம் சொன்னார். நீ சொன்னது ரொம்பச் சரி. இதை ஹார்வர்டுக்கும் தெரிவித்துவிட்டேன். இப்போது க்ரியாவுடன் இணைந்து நூலை வெளியிட ஹார்வர்டு விரும்புகிறது. நீ என்ன சொல்கிறாய்? நான் சொன்னேன், எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. ஆனால், சில விஷயங்களை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். கையெழுத்துப் பிரதியை நீங்களும் நானும் இங்கேதான் இறுதிசெய்வோம். அதில் நாம் இந்தியப் பதிப்புத் துறையில் பின்பற்றும் பிரிட்டிஷ் ஸ்பெல்லிங்கைத்தான் பின்பற்றுவோம், அமெரிக்க ஸ்பெல்லிங் அல்ல. அவர்கள் கையெழுத்துப் பிரதியில் எந்த மாற்றமும் செய்யக் கூடாது. அடுத்து, முகப்புப் பக்கத்தில் க்ரியாவின் பெயர்தான் முதலில் இடம்பெற வேண்டும், ஹார்வர்டு பெயர் அல்ல.

இவை நியாயமானவை என்று மகாதேவன் கருதினார். அதைப் பேராசிரியர் விட்சலுக்கும் தெரிவித்தார். அவர்களும் இதை ஏற்றுக்கொண்டார்கள்.

மகாதேவனின் ஆய்வு நேர்மை என்பது வாழ்வு நேர்மையோடும் பிணைந்தது!

‘க்ரியா’ எஸ்.ராமகிருஷ்ணன்

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் (தனியார்) நிறுவனத்தின் ஜாஎல, மினுவான்கொட வீதி, 302/1/A இலக்கத்தில் அமைந்துள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டு 02.12.2018 ஞாயிற்றுக்கிழமை அன்று வெளியிடப்பட்டது.

## வீட்டுத்தோட்ட பயனாளிகளுக்கான விழிப்பூட்டல் கருத்தரங்கு





**கிண்ணியா நிருபர்**

மூதூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட 42 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட வீட்டுத்தோட்டம் செய்கின்ற 420 சமுர்த்தி பயனாளிகளில் மேலும் 42 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கான விழிப்பூட்டல் கருத்தரங்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

பிரதேச செயலாளர் எம். முபாரக் அவர்களின் தலைமையில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இந்நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர், உதவித்திட்டமிடல் பணிப்பாளர், சமுர்த்தி முகாமையாளர் மற்றும் விவசாய போதனாசிரியர், கருத்திட்ட உதவியாளர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், வீட்டுத்தோட்ட பயனாளிகள் ஆகியோர் கலந்துகொண்டுள்ளனர்.

அரசாங்க சுற்றறிக்கைக்கமைவாக தெரிவுசெய்யப்பட்டுள்ள 42 பயனாளிகளுக்கும் வீட்டுத்தோட்ட ஊக்குவிப்புக்காக 5000/= பெறுமதியான விதைகள், விவசாய உபகரணங்கள் என்பன எதிர்வரும் நாட்களில் வழங்கிவைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் உரையாற்றிய பிரதேச செயலாளர் குறிப்பிடுகையில் மூதூர் பிரதேசத்தில் விவசாய செய்கைக்கு ஏற்றவாறான பல ஏக்கர் நிலங்கள் காணப்படுகிறது. இதனை இங்குள்ள மக்கள் சிறப்பாக பயன்படுத்தி முன்னேற முடியும். மேலும் விவசாயத்தில் ஈடுபடுவோரில் அதிகமானோர் வயதுமுதிர்ந்தவர்களாகவே காணப்படுகிறார்கள். இந்நிலை மாறி இளைய சமூகமும் இவ்வாறான விவசாய செய்கைகளில் ஈடுபட வேண்டும். அதுபோல் முதியவர்கள் அவர்களை பயிற்றுவிக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

மேலும் இவ்வாறான சிறந்த முயற்சிகளுக்கு தன்னாலான முழுமையான ஒத்துழைப்புகளை தர முடியும் எனவும் குறிப்பிட்டார்.




## திருமலை வைத்தியசாலைக்கு பணிப்பாளர் நியமனம்

திருகோணமலை பொது வைத்தியசாலையின் பணிப்பாளராக டொக்டர் எம். டி. ஏ. ரொட்ரிகோ தமது கடமைகளை பொறுப்பேற்றார்.

கிழக்கு மாகாண சபையின் கீழ் இயங்கிவந்த திருகோணமலை பொது வைத்தியசாலை தற்பொழுது மத்திய அரசாங்கத்தின் கண்காணிப்பின் கீழ் கொண்டுவரப்பட்டதையடுத்து இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இவர், ஏற்கனவே எம்பிலிப்பிட்டிய பொதுவைத்தியசாலை, கஹவத்த தள வைத்தியசாலை, திஸ்ஸமகாராம தள வைத்தியசாலை போன்ற வைத்தியசாலைகளில் பணிப்பாளராக கடமையாற்றியதுடன், வைத்திய துறையில் மட்டுமல்லாது நிர்வாகத்துறையிலும் சிறந்த ஆளுமை மிக்கவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அத்துடன், நோயாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் வைத்தியசாலையின் குறைபாடுகள், நோயாளிகளுக்கிடையே திருப்தியின்மை போன்ற விடயங்கள் தொடர்பாக தனக்கு அறியத்தருமாறும் பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

### பட்டிருப்பு வலயம் சாதனை

**பெரியகல்லாறு நிருபர்**

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையே மாகாண ரீதியில் நடைபெற்ற சமூக விஞ்ஞான பொது அறிவுப் போட்டியில் அனைத்துப் பிரிவகளிலும் 7 முதலிடங்களையும், 5இரண்டாம் இடங்களையும் 5 மூன்றாம் இடங்களையம் பெற்று சாதனை பரிந்தள்ளதாக பட்டிரப்பு வலய கல்விப் பணிப்பாளா ஆர். சுகிதராஜன் தெரிசித்தார்.

## கிண்ணியாவில் டெங்கு நோயற்ற பாடசாலைகள் தெரிவு

**சேனையூர் நிருபர்**

கிண்ணியா நகர சபை பிரதேசத்தில் 2018 இந்த வருடத்தில் டெங்கு நோய்யற்ற பாடசாலையாக மூன்று பாடசாலைகள் கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தால் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதில் கிண்ணியா பெண்கள் மகா வித்தியாலயம் -முதலாமிடத்தையும், இஹ்ஸானியா மகளிர் வித்தியாலயம் - இரண்டாம் இடத்தையும், அல் ஹிரா முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலயம் - மூன்றாடம் இடத்தையும் பெற்றுக் கொண்டுள்ளன.

அதேவேளை டெங்கு நோயின் ஆபத்து குறித்து மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் பாடசாலை மாணவர்களுக்கிடையில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தால் நடாத்தப்பட்ட சித்திரப் போட்டியில் இஹ்ஸானியா மகளிர் வித்தியாலயம் முதலாம் - மூன்றாம் இடங்களையும் அல் ஹிரா முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலயம் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

இவர்களுக்கான பணப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கும் வைபவம் நேற்று (29) பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி ஏ.எம். அஜீத் தலைமையில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த வைபவத்தில், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் வி. கயல்விழி, கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளர், கிண்ணியா நகர சபைத் தலைவர், கிண்ணியா பிரதேச கடற்படைத் தளபதி ஆகியோர் அதிதியாகக் கலந்து கொண்டனர்.

## மாணவர் கலை நிகழ்வுகளுடன் சிறப்பாக நடைபெற்ற காத்தான்குடி அஷ்- ஷுஹதா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா



**காத்தான்குடி நிருபர்**

காத்தான்குடி மட்/மம/அஷ்- ஷுஹதா வித்தியாலத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா பாடசாலை அதிபர் எம்.சீ.எம்.முனீர் தலைமையில் காத்தான்குடி ஹிஸ்புழ்ழாஹ் மண்டபத்தில் இடம்பெற்றது.

நடந்து முடிந்த தரம் ஐந்து புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு நினைவுச்சின்னமும் பரிசில்களும் வழங்கப்பட்டதுடன் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

அத்துடன் பாடசாலையில் சிறப்பாக பணியாற்றிய ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்களுக்கும் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டது.

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது

**குருமண்வெளி நிருபர்**

கொழும்பு பல்கலைக்கழகத்தின் இலங்கை களப்பறவைகள் குழுவின் விலங்கியல் சூழல் விஞ்ஞானப்பிரிவும் கொழும்பு மேற்கு ரொட்டரிக் கழகமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள பாடசாலை மாணவர்களுக்கிடையிலான இயற்கை அன்னைக்காக விழித்தெழுங்கள் எனும் தொனிப் பொருளிலான உயிர்ப்பல்வகைமையைப் பேணும் விழிப்புணர்வுப் பிரசாரசித்திரப் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் அங்கீகாரத்துடன் உயிர்ப்பல்வகைமைக்கான அச்சுறுத்தல்கள், நிலவளங்களின் பேண்தகு நிலையான பாவனையும் பாதுகாப்பும், நீர்வளங்களின் பேண்தகு நிலையான பாவணையும் பாதுகாப்பும் ஆகிய கருப் பொருட்களில் ஒன்றினை மையப்படுத்தியதாக தரம் 1முதல்5 மற்றும் தரம் 6முதல்9 இதரம் 10 முதல்13 ஆகிய மூன்று பிரிவுகளை உள்ளடக்கியாக ஏ 3 தாளில் சித்திரங்களை வரைந்து பொருத்தமான வர்ணங்களை உபயோகித்து பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் எதிர்வரும் ஜனவரி 10 திகதிக்கு முன்னர் பிள்ளைகளின் சித்திரப் போட்டி இத.பெ.இ 1490, இலங்கை களப்பறவைகள் குழு, விலங்கியல் சூழல் விஞ்ஞானப்பிரிவு, கொழும்பு பல்கலைக்கழகம் குமாரதுங்க முனிதாச மாவத்தை இகொழும்பு -03 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுள்ளனர்.

## சிறப்பாக நடைபெற்ற கிழக்கு மாகாண கலாசார விழா







**கல்லடி நிருபர்**

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மண்முனைப்பற்று பிரதேச செயலகம்,பிரதேச கலாசார பேரவை இணைந்து நடாத்திய 2018ஆம் ஆண்டுக்கான கலாசார விழா மட்டக்களப்பு,ஆரையம்பதியில் சிறப்பாக நடைபெற்றது.

தமிழ்-முஸ்லிம் மக்களின் கலைகலாசாரங்களை வெளிப்படுத்தும் வகையிலும் இன ஐக்கியத்தினை பேணும் வகையிலும் இந்த கலாசார விழா ஆரையம்பதி நந்தகோபன் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி சத்தியானந்தி நமசிவாயம் தலைமையில் நடைபெற்ற இந்த கலாசார விழாவிற்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் எம்.உதயகுமார் கலந்துகொண்டார்.

சிறப்பு அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர் திருமதி நவரூபரஞ்சனி முகுந்தன்,ஆரையம்பதி மாவட்ட வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் அல்மேடா, மண்முனைப்பற்று கோட்டக்கல்வி பணிப்பாளர் கே.நல்லதம்பி, மூத்த கலைஞர் மு.கணபதிப்பிள்ளை உட்பட பலர் கலந்துகொண்டனர்.

நிகழ்வின் ஆரம்பத்தில் வரவேற்பு நடனமாக நாட்டுக்கூத்து ஆடப்பட்டு வரவேற்கப்பட்டமை அனைவரையும் வெகுவாக கவனர்ந்தன.

இதன்போது மண்முனைப்பற்றின் சிறப்பினை வெளிப்படுத்தும் வகையில் சிகரம் என்னும் நூலும் வெளியிடப்பட்டதுடன் மண்முனைப்பற்று பிரதேசத்தில் கலைத்துறை மற்றும் வைத்திய துறைக்கு பங்களிப்பு செய்த ஐந்து கலைஞர்கள்,நாட்டு வைத்தியர் இரு இனங்களினை சேர்ந்தவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன் கலாசார விழாவினையொட்டி கலைக்கழகங்கள்,மாணவர்கள் மத்தியில் நடாத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்றவர்களும் இதன்போது பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வின்போது இரு இன கலைஞர்களின் பல்வேறு கலை நிகழ்வுகள் நடைபெற்றமை சிறப்பம்சமாகும். இதன்போது மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் எம்.உதயகுமார் மண்முனைப்பற்று வயோதிபர் சங்கத்தினால் கௌரவிக்கப்பட்டார்.

## பட்டிருப்பு பாலத்தினை புனரமைக்குக

**பா.மோகனதாஸ்**

மண்முனை தென் எருவில் பற்று களுவாஞ்சிக்குடி பிரதேச செயலக சபை எல்லைக்குட்பட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குரிய பட்டிருப்புப் பாலம், உடைந்த நிலையில் காணப்படுவதாக பொது அமைப்புகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

பாலத்தின் அடித்தள தூண்கள் சுவர்கள் உடைந்து பாலத்தின் பாதை வெடிப்புற்று, கடந்த ஐந்து வருடங்களாகியும் இற்றை வரை கவனிப்பாரற்ற நிலையிலேயே கிடப்பதாக பிரதேசத்தின் சமூக மட்ட குழுக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பாலத்திற்கு முன்னால் பாரம் குறைந்த வாகனங்கள் என்ற பதாதை பலகையிருந்தும் கனரக வாகனங்கள் பாலத்தை கடப்பதாக பொதுமக்களால் சுட்டிக்காட்டப்படுகிறது.

## பரீட்சை பெறுபேறுகளின் தோல்விகள் கல்விக்கான முற்றுப் புள்ளி அல்ல

**சேனையூர் நிருபர்**

இன்றய கால ஒட்டத்தில் கல்வி ஒரு கடைவியாபாரமாகி விட்டது. இலவசக்கல்வி என்ற பெயரில் பெரும் வியாபாரம் நடப்பதை அனைவரும் அறிவோம் இந்த நிலையில் தமிழருக்கு அசையாத ஒரு சொத்தாக இருப்பது கல்வி மட்டுமே, ஒரு காலத்தில் கிறீஸ்தவ மத திணிப்பும் தரமான கல்வியும் ஆங்கிலேயரால் ஏற்படுத்தப்பட்டது இவற்றை முறையாக வளமாக்கிக் கொண்டவர்கள் தமிழர்களே, அதுவே பேரினவாதிகளின் சிந்தையை தூண்டியது அதன் பிரதிபலிப்புகளில் ஒன்றுதான் யாழ் நூலக எரிப்பு என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

பரீட்சையில் அடைவு மட்டத்தை அடையாத புள்ளிகளை பெற்ற மாணவர்கள் சோர்வடைந்து கல்வியை தொடராமல் விடக்கூடாது இதற்கான முழுப் பலத்தையும் ஊக்கத்தையும் பெற்றோர், ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் போன்றோர் ஏற்படுத்த வேண்டும் என திருகோணமலை மாவட்ட பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான நிதியத்தின் தலைவர் கனகசபை தேவகடாட்சம் திங்கட்கிழமை (26) திருகோணமலை, கும்புறுப்பிட்டி கனிஷ்ட பாடசாலையின் 05 தர புலமைப்பரிசில் மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வில் சிறப்பு விருந்தினராக சிறப்புரையாற்றும் போது குறிப்பிட்டார்.

பாடசாலை அதிபர் எஸ். விக்னேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிழக்கு மாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மனோகரன் உட்பட கௌரவ, சிறப்பு விருந்தினர்கள் பலர் கலந்து சிறப்பித்தனர்.

## ஒளிவிழா

**துறவேந்தியமேடு நிருபர்**

பட்டிருப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட பெரிய கல்லாறு மெ.மி.த பெண்கள் பாடசாலை ஏற்பாடு செய்துள்ள ஒளி விழாவும் பரிசளிப்பு விழா நிகழ்வும் வித்தியாலயத்தின் முதல்வர் மு.சந்திரசேகரம் தலைமையில் பெரிய கல்லாறு அல்பா மண்டபத்தில் நடைபெற்றது

நிகழ்வில் பிரதம அதிதியாக பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகத்தின் நிருவாகத்திற்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி.மயில்வாகனம் அவர்களும்.விசேட அதிதிகளாக பட்டிருப்பு கல்வி வலய மண்முனை தென் எருவில்பற்று களுவாஞ்சிகுடி கோட்டக் கல்விப் பணிப்பாளர் ரீ.அருள்ராஜா மற்றும் சேவைக் கால ஆசிரியர் ஆலோசகர்கள் மற்றும் பெரிய கல்லாறு கிராமத்தினை பிரதி நிதித்துவப்படுத்தும் கிறிஸ்தவ தேவாலயங்களின் போதகர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது மாணவர்களின் கலை நிகழ்வுகள், ஜெபம், வேத வாசிப்பு, பைபிள்வாசிப்பு, ஆசீர்வாதம் வழங்குதல், நத்தார் தாத்தா வருகை, பரிசுப் பொருட்கள் வழங்குதல் ஆகிய நிகழ்வு நடைபெற்றது.

## பணத்தை வாங்கி கட்டாக்காலி மாடுகளை மேய விடாதே - மக்கள் வீதியில் போராட்டம்

**வாழையூர் ந.குகதர்சன்**

மட்டக்களப்பு புனானை பிரதேச விவசாயிகளின் வயல் நிலங்களை கட்டாக்காளி மாடுகள் சேதப்படுத்துவதை தடுக்குமாறு கோரி இன்று திங்கட்கிழமை மட்டக்களப்பு கொழும்பு பிரதான வீதியில் விவசாயிகள் போராட்டத்தை நடாத்தினர்.

வாகரை மற்றும் கிரான் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட புனானை, இலுக்குவட்டை, குளத்துவட்டை, மயிலந்தன்னை, பொத்தானை உட்பட்ட விவசாயிகளின் விவசாய செய்கையை கட்டாக்காளி மாடுகள் சேதப்படுத்தி வருகின்றது.

புனானைக்குட்பட்ட பகுதிகளில் 450 ஏக்கர் பெரும்போக விவசாய நிலங்களில் விவசாயிகள் மழையை நம்பி விவசாயம் செய்து வரும் நிலையில் வெளிமாவட்டம் மற்றும் உள்ளூர் மாவட்ட பிரதேச வாசிகளின் மாடுகள் வயலுக்குள் ஊடுறுவுவதால் வேளான்மை பாதிக்கப்படுகின்றது.

அத்தோடு கட்டாக்காளி மாடுகளை துரத்திச் செல்லும் போது இரவு நேரங்களில் யானைகள் விவசாயிகளை துரத்தும் சம்பவங்களும் இடம்பெற்று வருகின்றது. இதனால் விவசாயிகள் பல்வேறு இன்னல்களை அனுபவித்து வருகின்றனர்.

இதனை தடுக்குமாறு கோரி விவசாயிகள் மட்டக்களப்பு கொழும்பு பிரதான வீதியில் இருந்து 100 மீற்றர் தூரம் வரை நடந்து சென்று பின்னர் புணாணை வனஇலாகா அலுவலகத்திற்கு முன்பாக வீதியில் ஒரு பக்கத்தை மறைந்து அமர்ந்து போராட்டம் நடாத்தினார்கள்.

இதன்போது பலமுறை முறையிட்டும் நடவடிக்கை எடுக்காதது ஏன்?, உரிய அதிகாரிகளே எமது பகுதியில் இருந்து கால்நடைகளை வெளியேற்றவும், கால்நடைகளுக்கு ஒதுக்கப்பட்ட மேய்ச்சல் தரை பகுதிக்கு கொண்டு செல்ல உதரவு இடுங்கள், விவசாயத்திற்கு ஒத்துழைக்காத கால்நடை உரிமையாளர்களை கைது செய், எமது பகுதி மேய்ச்சல் தரையா? விவசாய நிலமா? அதிகாரிகளே பதில் கூறு



என்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளுடன் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

மேலும் பணத்தை வாங்கி கட்டாக்காளி மாடுகளை மேய விடாதே?, அடிக்காதே அடிக்காதே விவசாயிகளின் வயிற்றில் அடிக்காதே என்ற கோசங்களை எழுப்பியவாறும் விவசாயிகள் ஆர்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

பலதரப்பட்ட இடங்களில் கடனாகவும், நகைகளை அடகு வைத்தும் விவசாயம் செய்து வரும் எங்களுக்கு யானைகளால் தொல்லைகள் குறைவாக காணப்பட்டாலும், கட்டாக்காளி மாடுகளால் தாங்கள் அதிகம் பாதிக்கப்படுவதாக விவசாயிகள் கருத்து தெரிவிக்கின்றனர்.அத்தோடு கட்டாக்காளி மாடுகள் தொடர்பாக கட்டாக்காளி மாடுகள் உரிமையாளர்களுடன் உரையாடும் போது அவர்கள் தங்களை தாக்க முற்படுவதாகவும், இவ்விடயம் தொடர்பில் பல்வேறு அரச அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளிடம் தெரிவித்தும் இதுவரை எந்தவித பயனும் இல்லை என தெரிவிக்கின்றனர்.

எனவே மூவின மக்கள் இணைந்து இங்கு விவசாயம் செய்து வரும் நிலையில் இவ்விடயம் தொடர்பில் அரச அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகள் தங்களின் நிலைமையை கருத்தில் கொண்டு உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்க முன்வருமாறு விவசாயிகள் கேட்டுக் கொள்கின்றனர்.




## மூதூர் அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாடல்

**மூதூர் நிருபர்**

2020 ஆம் ஆண்டிற்கான புதியதொரு அபிவிருத்திமிக்க மூதூரை உருவாக்கும் இலக்கோடு, மூதூர் பிரதேச செயலாளரின் தலைமையில் மூதூர் பிரதேச செயலகத்தி



னால் செயற்திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இக்கருத்திட்ட உருவாக்கத்தில் மூதூர் தழுவிய சமூக அமைப்புகள், மதஸ்தாபனங்கள், அரசியல்வாதிகள், கல்வியலாளர்கள், சமூக ஆர்வலர்கள் அனைவரினதும் ஆலோசனைகளையும் அவர்களால் திட்டமிடப்பட்டுள்ள செயற்திட்டங்களையும் உள்வாங்கியே இப்பணி முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதன்அடிப்படையிலான கலந்துரையாடல் பிரதேச செயலாளர் எம்.முபாரக் அவர்களின் தலைமையில் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் பி. அறபாத் அவர்களின் பங்குபற்றுதலோடும் நடைபெற்றது. இந்நிகழ்வில் மூதூர் பிரதேச சபை உறுப்பினர்கள், சமூக நிறுவன அமைப்புகளினது அங்கத்தவர்கள், மதத் தலைவர்கள் என பலரும் கலந்துகொண்டு தங்களது ஆலோசனைகளையும், செயற்திட்ட அறிக்கைகளையும் முன்வைத்தமை குறிப்பிடத்தக்கது.

## நீரை மக்கள் சிக்கனமாக பாவிக்கவேண்டும்





**பெரியநீலாவணை நிருபர்**

ஒரு யுனிட் குடிநீருக்கு அரசாங்கம் 45 ரூபாவை செலவு செய்கிறது. பொது மக்களிடம் இருந்து 8 ரூபா மட்டுமே அறவிடப்படுகிறது என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கிழக்கு மாகாண பிரதி முகாமையாளர் எஸ்.அப்துல் றசீட் தெரிவித்தார்

இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழு ஏற்பாடு செய்த பொது மக்களின் கருத்துக்களை கேட்டறிவதற்கான ஒன்று கூடல் அம்பாறை மொன்டி ஹோட்டலில் நடைபெற்றது.

இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் சாலிய மெத்தியூ தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தெருவிளக்கு, மின்சாரம், குடிநீர் மற்றும் பெற்றோலியம் தொடர்பாக பாவனையாளர்கள் எதிர் நோக்கும் தடைகள் குறித்து கேட்டறியப்பட்டதுடன் திணைக்களங்களின் தலைவர்கள் பலரும் உரையாற்றினார்கள். இதன் போது உரையாற்றிய தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கிழக்கு மாகாண பிரதி முகாமையாளர் இதனை தெரிவித்தார். இங்கு தொடர்ந்து உரையாற்றுறும் போது,

அம்பாறை மாவட்டத்தில் 81 வீதமும், மட்டக்களப்பில்61 வீதமும், திருகோணமலையில்50 வீதமுமான குடிநீர் இணைப்புக்கள் தற்போது வழங்கப்பட்டுள்ளன.

திருகோணமலை மாவட்டத்திற்கு தேவையான குடிநீரை கந்தளாய் குளத்திலிருந்தும், மட்டக்களப்பில் உன்னிச்சை குளத்திலிருந்தும், அம்பாறை மாவட்டத்தில் இக்கினியாகல சமுத்திரத்திலிருந்தும் பெறுகிறோம்.

ஒரு வீட்டுக்கு குடிநீர் வழங்குவதற்காக 5 இலட்சம் ரூபாய் நிதியினை அரசாங்கம் செலவு செய்கிறது. பொதுமக்களுக்கு சுத்தமான குடிநீரை வழங்குவதற்காக நாம் பல செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம். சாதரணமாக ஒரு வீட்டுக்கு வழங்கப்படும் குடிநீரில் 0.2 வீதம் குளோறின் இருந்தால் அது சுத்தமான குடிநீராகும்.

ஒரு யுனிட் அதாவது ஆயிரம் லீட்டர் குடிநீரை உற்பத்தி செய்வதற்காக அரசாங்கம் 45.00 ரூபாவை செலவு செய்கிறது. ஆனால் பொதுமக்களிடம் இருந்து 8.00 ரூபா மட்டுமே அறவிடப்படுகிறது. இதனால் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தற்போது 250 மில்லியன் ரூபா நட்டத்தில் இயங்குகிறது.

இந்தக் கூட்டத்தில் இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தமித்த குமாரசிங்க, உதவிப் பணிப்பாளர் ஜயசூரியன் உட்பட மாகாண திணைக்களங்களின் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரச உத்தியோகத்தர்கள், ஊடகவியலாளர்கள், பொதுமக்கள் என சுமார் 700 பேர் இதில் கலந்து கொண்டனர்.

## முன்னோற்பாடுகளுடன் மக்களை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்

**மருதமுனை நிருபர்**

அம்பாறை மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலக அனர்த்த நிவாரண சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் கிராம மட்ட அனர்த்த முகாமைத்துவ குழு உறுப்பினர்களுக்கான அனர்த்த அபாய மதிப்பீடு, அனர்த்த நிலைமைகளின் போது எவ்வாறு காப்பாற்றுவது என்பது பற்றிய செலமர்வு அம்பாறை மாவட்ட செயலகத்தின் பிரதான கூட்ட மண்டபத்தில் மாவட்ட செயலாளர் டி.எம்.எல்.பண்டாரநயக்கா தலைமையில் நடைபெற்றது.

இதன் போது உரையாற்றிய மாவட்ட செயலாளர் வடகிழக்கு பருவபெயர்ச்சி காலனிலை தொடர்பான பிரதேச மட்டத்திலான விழிப்புணர்வுகளோடு நின்று விடாமல் தொடர்ச்சியான அனர்த்த முன்னோற்பாடுகளுடனும் மக்களை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என்பதுடன் பாதுகாப்பான இடங்களையும் தயார் நிலையில் வைத்திருக்கும் படியும் வேண்டிக் கொண்டார்.

மேலும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் எ.எஸ்.எம்.சியாத் உரையாற்றுகையில்;

பிரதேச செயலகத்தின் பொதுத் தகவல்களை உரிய முறையில் சேகரித்து அவைகளை மதிப்பீடு செய்து சரியான திட்டங்களை தயார் செய்ய வேண்டும். தகவல் சரியாகவும், உண்மையாகவும் இருக்கும் போது தான் மதிப்பீடுகள் சரியாக இருக்கும். வேலைகளை இலகுவாகவும், விரைவாக செய்து முடிக்க முடியும்.

## கடற்கரை கரப்பந்து ஆளுநர் வெற்றிக்கிண்ணம் -2018

**கிண்ணியா நிருபர்**

கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித்த போகொல்லாகமவின் வழிகாட்டுதலின் கீழ் மாகாணத்தில் கடற்கரை கரப்பந்து விளையாட்டினைப் பரவலாக்கும் செயற்றிட்டத் திற்கமைவாக மாகாண சுற்றுலா பயணிகள் அதிகார சபையின் அனுசரனையுடன், விளையாட்டுத்திணைக்களம் ஏற்பாடு செய்துள்ள கடற்கரை கரப்பந்து ஆளுநர் வெற்றிக்கிண்ணம் -2018 நிகழ்வு அட்டாளைச் சேனை கடற்கரையில் ஆரம்பமானது.





இரண்டாம் நாள் நிகழ்வில் கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் என்.எம்.நௌபீஸ், மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஏ.எச்.எம்.அன்ஸார், அட்டாளைச் சேனை பிரதேச செயலக செயலாளர் ஏ.எஸ்.லியாகத் அலி போன்றோர்கள் பங்கேற்று ஆரம்பித்து வைத்தனர்.

கிழக்கு மாகாணத்தை உள்ளடக்கிய வகையில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் இப் போட்டிகள் இடம் பெறவுள்ளதுடன் மாவட்ட மட்டம், மாகாண மட்டம் எனவும் பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாக மாகாண விளையாட்டுத் திணைக்கள பணிப்பாளர் என்.எம்.நௌபீஸ் தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர்;

ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும் ஆண்கள் பிரிவுகளை கொண்ட 30 அணியினரும் 10 பெண்கள் அணிகளும் பங்குபறவுள்ளன. ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் இறுதி மாகாண சுற்றுக்கு ஆண்கள் அணி 04 ம் பெண்கள் அணி 04 உம் தெரிவு செய்யப்படவுள்ளனர்கள்.

மாவட்ட அடிப்படையிலும் இறுதிப் போட்டிகள் நடைபெற்று கிண்ணங்கள் வழங்கப்படும்.

கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறையினையும் விளையாட்டுத்துறையினையும் மேம்படுத்தும் பொருட்டு குறித்த விளையாட்டுப்போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

விசேடமாக இப்போட்டிகள் ஊடாக விளையாட்டுத் திறமைகளை வெளிக்கொணர ஆண், பெண் விளையாட்டு வீரர்களுக்கான ஒரு களமாக அமைகிறது. கரப் பந்து விளையாட்டு மூலமாக கிழக்கு மாகாணத்தில் மூவினங்களுக்குள்ளும் ஒரு நல்லிணக்கம் ஏற்படுவதற்கான வாய்ப்பாகவும் இது காணப்படுகிறது என்றார்.

## வீதியினை புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

**துறவேந்தியமேடு நிருபர்**

நாவிதன்வெளி பிரதேச செயலக நிருவாக எல்லைக் குட்பட்ட அன்னமலை முதல் ஏழாம் கிராமம் வரையான சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம் கொண்ட தார் வீதியானது பல வருடங்களுக்கு முன்னர் புனரமைக்கப்பட்ட நிலையில் தற்போது குறித்த வீதியானது பிரயாணம் செய்ய



முடியாதளவிற்கு குண்டும் குழியுமாக காணப்படுவதாக பிரதேச மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கிட்டங்கிப் பாலத்தினைக் கடந்து குடியேற்றக் கிராமங்களான 7ம் கிராமம், 11ம் கிராமம், 13ம் கிராமம், 15ம் கிராமம் இமாலையர்கட்டு இசின்னவத்தை, நெடியவட்டை, ஆணைகட்டியவெளி , பூச்சிக்கூடு மற்றும் தம்பலாவத்தை, மண்டூர் கிராமங்களுக்கு செல்லும் பிரதான தரைமார்க்கமான பாதையாக குறித்த வீதியானது காணப்படுகிறது.

குறித்த வீதியின் அருகே நாவிதன்வெளி மகாவித்தியாலயம் காணப்படுவதுடன் இப்பாடசாலையில் கல்வி கற்குக் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் ,பொது மக்கள் அசௌகரியத்திற்கு மத்தியில் பிரயாணம் செய்வதாக குறிப்பிடுகின்றனர்.பிரதேச மக்களின் நலனினைக் கருத்திற்கொண்டு குறித்த வீதியினை துரிதமாக புனரமைப்பதற்கு பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொது அமைப்புக்கள் கோரிக்கையினை முன்வைக்கின்றனர்.

## மாற்றுத்திறனாளிகளின் தேவையினை நிறைவேற்றுமாறு கோரிக்கை

**துறவேந்தியமேடு நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரையினை பிரதி நிதித்துவப்படுத்தும் பட்டிப்பளை பிரதேச செயலகப்பிரிவிலுள்ள மாற்றுத்திறனாளிகளின் நலனினை மேம்படுத்துவதற்கான திட்டத்தினை முன்னெடுப்பதற்கு அரசாங்கத்தினைப் பிரதி நிதித்துவப்படுத்துகின்ற அதிகாரிகள் முன்வர வேண்டுமென மாற்றுத் திறனாளிகள் கோரிக்கையினை முன்வைக்கின்றனர்.



பட்டிப்பளை பிரதேசத்தில் சுமார் ஐந்நூறுக்கு மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் காணப்படுகின்ற நிலையில் மிகக் குறைந்தளவானவர்களுக்கு மாத்திரமே அரசாங்கத்தினால் உதவிகள் வழங்கப்படுவதாகவும் பலருக்கு அரசாங்கத்தினால் எதுவிதமான உதவிகளும் வழங்கப்படவில்லை என்பது பாதிக்கப்பட்டுள்ள மாற்றுத்திறனாளிகளின் வேதனையாகும்.

ஆட்சி அதிகாரங்களை ஏற்கின்ற எந்தவொரு அரசாங்கமும் மாற்றுத்திறனாளிகள் துயர் போக்குவதற்கு தவறிவிடுகின்றனர்.சமுகத்தில் மாற்றுத் திறனாளிகள் சுய கௌரவத்துடன் வாழ்வதற்கான வழி வகைகள் செய்து கொடுக்கப்பட வேண்டியது ஒவ்வொருவருடைய கடமையும் பொறுப்புமாகும்.

கடந்த கால யுத்தம் அதிகளவான மாற்றுத் திறனாளிகளை படுவான்கரையில் உருவாக்குவதற்கு காரணமாக அமைந்துள்ளது.மனிதராகப் பிறந்த யாவரும் தாம் பிறந்த மண்ணில் சுப போகங்களை அனுபவிக்கும் போது உடல் அங்கங்களில் ஒன்றினையோ இபலவற்றினையோ இழந்த நிலையில் எதுவிதமான தொழில் வாய்ப்புக்களும் இல்லாத நிலையில் மாற்றுத்திறனாளிகள் வீட்டுக்குள் முடக்கியக்கிடக்கும் அவல நிலை ஏற்பட்டுள்ளதாக மாற்றுத்திறனாளிகள் கவலையினையும் வேதனையினையும் வெளிப்படுத்துகின்றனர்.

தமது கோரிக்கையினை அரசாங்கத்திற்கு மாத்திரமல்லாது அரச அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தும் வகையில் எதிர்வரும் தினத்தில் பட்டிப்பளை பிரதேச செயலகத்திற்கு முன்பாக கண்டனப் பேரணியினை நடாத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாக மாற்றுத் திறனாளிகள் தெரிவித்தனர்.

## சுத்தமான குடிநீரினைப் பெற்று தருமாறு மக்கள் கோரிக்கை

**துறவேந்தியமேடு நிருபர்**

நாவிதன்வெளி பிரதேச செயலக நிருவாக எல்லைக்குட்பட்ட குடியிருப்புமுனை கிராமத்தில் குடிநீர் பெறுவதில் மக்கள் அசௌகரியத்தினை எதிர்கொள்வதாக குறிப்பிடுகின்றனர்.

மீன்பிடி மற்றும் மாடு வளர்ப்பு இவிவசாயம் போன்ற தொழில்களை ஜீவனோபாயத் தொழிலாக மேற்கொள்ளும் குறித்த கிராமத்தில் சுமார் 50ற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். பிரதேச சபை மூலமாக வறட்சியான காலங்களில் குடிநீர் வழங்கப்படுவதாகவும் ஏனைய காலங்களில் குடிநீரினைப் பெறுவதற்கு அயற் கிராமங்களான 7ம் கிராமம் மற்றும் வீட்டுத்திட்ட கிராமத்திற்கு நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்;ளதாக மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். தமது கிராமத்தில் காணப்படுகின்ற தண்ணீர் சிறந்த முறையில் பருகுவதற்கு உகந்த வகையில் காணப்படாமையே இதற்கு முக்கிய காரணமாகும்.

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற அனைவருக்கும் சுத்தமான குடி நீர் வழங்கும் துரித அபிவிருத்திட்டத்தில் குறித்த கிராமத்தினை முன்னினைப்படுத்தி துரிதமான குடிநீர் பெறுவதற்கு பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பது கிராம மக்களின் வேண்டுகோளாகும்.










தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட சாதனையாளர்கள்இலக்கிய வாதிகள் கலைஞர்கள் கௌரவிப்பும் கலை நிகழ்வும் பிரதேச செயலாளர் ஜே ஸ்ரீபதி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் திட்டமிடல் பணிப்பாளர் கல்வி அதிகாரிகள் முக்கி பிரமுவர்கள் கலந்து சிறப்பித்ததையும் திறமைசாளிகளின் கலை நிகழ்வும் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டதை படத்தில் காணலாம்.

படம்: முள்ளிப்பொத்தானை நிருபர்

# நீரிழிவு தொடர்பான விழிப்புணர்வு நடைபவனியும் இலவச வைத்திய சேவையும்






**மீனோடைக்கட்டு நிருபர்**

அகில இலங்கை வை.எம்.ஏ.பேரவை மற்றும் அட்டாளைச்சேனை வை.எம்.எம்.ஏ. இணைந்து நடாத்திய சர்வதேச நீரிழிவு தின நிகழ்வும், நடைபவனியும், நஞ்சற்ற உணவு வலயப்பிரகடனச் செயலமர்வும் நிந்தவூர் அரசாங்க ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கே.எல்.எம்.நக்பரின் வழிநடாத்தலின்கீழ் அட்டாளைச்சேனையில் வை.எம்.எம்.ஏ தலைவரும், அதிபருமான எம்.ஐ.எம். றியாஸ் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக இலங்கை ஆயுர்வேத திணைக்கள ஆணையாளர் கே.டி.சி.எஸ்.குமாரதுங்க கலந்துகொண்டு ஆரம்பித்து வைத்தார்.

நீரிழிவு நோய் தொடர்பான விழிப்புணர்வு நடைபவனி அட்டாளைச்சேனை பிரதேச செயலக முன்றலில் ஆரம்பிக்கப்பட்டு அக்கரைப்பற்று கல்முனை பிரதான வீதி வழியாக மீனோடைக்கட்டு டாக்டர் ஜலால்டீன் வித்தியாலயத்தை சென்றடைந்து அங்கு இடம்பெற்ற இலவச வைத்திய சேவையையும் ஆரம்பித்து வைத்தனர்.

அங்கு நடைபெற்ற இலவச வைத்திய சேவையை பெற்றுக்கொள்வதற்காக பல நூற்றுக்கணக்கான பொது மக்களும், பாடசாலை மாணவர்களும் கலந்துகொண்டு இரத்தப் பரிசோதனை, உயர் குருதி அமுக்கம் மற்றும் அழுத்தம், தொற்றா நோய் தொடர்பான வைத்திய பரிசோதனைகளை மற்றும் ஆலோசனைகளை பெற்றுக்கொண்டது அதற்கான இலவச மருந்து வகைகளையும் பெற்று பயனடைந்தனர்.

நிந்தவூர் அரசாங்க ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் கே.எல்.எம்.நக்பர் தலைமையிலான வைத்தியக் குழுவினரால் இந்த மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு அட்டாளைச்சேனை பிரதேசத்திலுள்ள அல் முனீறா பெண்கள் உயர் பாடசாலை, தேசிய பாடசாலை, டாக்டர் ஜலால்டீன் வித்தியாலயம் போன்ற பாடசாலைகளுக்கு தலா 50 வீதம் மருத்துவ தாவரங்களும் இலங்கை ஆயுர்வேத திணைக்கள ஆணையாளர் கே.டி.சி.எஸ்.குமாரதுங்கவினால் வழங்கி வைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத்அலி, அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவையின் போதைப்பொருள் திட்டத் தவிசாளர் எஸ்.தஸ்தக்கீர்,அம்பாறை மாவட்டப் பணிப்பாளர் கே.எல்.சுபையிர், அட்டாளைச்சேனை வை.எம்.எம்.ஏ செயலாளர் ஏ.எல்.கியாஸ்தீன், பொருளாளர் எம்.ஐ.ஹாசீம், உபதலைவர்எம்.எச்.எம்.சுபையிர், உட்பட இலங்கை இராணுவத்தினர், கடற்படையினர், பொலிசார் உள்ளிட்ட பல உயர் அதிகாரிகள் உத்தியோகத்தர்கள் அதிபர்கள் ஆசிரியர்கள் எனப்பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.




# அளவை, நிறுவையில் மோசடி செய்வது பெரும்பாவமும் தண்டனைக்குரிய குற்றமுமாகும்

**அஸ்லம் எஸ்.மௌலானா**



அளவை, நிறுவையில் மோசடி செய்வது இஸ்லாத்தின் பார்வையில் பெரும்பாவமும் தணடனைக்குரிய குற்றமுமாகும் என மௌலவி ரி.ஆர். நௌபர் அமீன் தெரிவித்தார்.

கல்முனை பொதுச் சந்தை வர்த்தகர் சங்கம் ஒழுங்கு செய்திருந்த வருடாந்த மீலாதுன் நபி விழா சந்தை கட்டிடக் தொகுதியில் சங்கத் தலைவர் ஏ.பி.ஜமாலதீன் தலைமையில் நடைபெற்றது. இதில் மார்க்க சொற்பொழிவாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப், மாநகர சபை உறுப்பினர் எம்.எஸ்.எம்.சத்தார், பொறியியலாளர் ரி.சர்வானந்தன், பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸின் இணைப்புச் செயலாளர் நௌபர் ஏ.பாவா, கல்முனை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி எஸ்.எம்.சம்சுதீன், சந்தை வர்த்தகர் சங்க செயலாளர் ஏ.எல்.கபீர், மேற்பார்வை உத்தியோகத்தர் ஏ.எல்.எம்.இன்ஸாட், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் அப்துல் அஸீஸ் உட்பட பிரமுகர்கள் பலரும் வர்த்தகர்களும் பங்கேற்றிருந்தனர். இதன்போது வர்த்தகர்கள் மற்றும் பொது மக்களுக்கு மீலாத் கந்தூரியும் வழங்கப்பட்டது.

அங்கு மௌலவி நௌபர் அமீன் தனது மார்க்க சொற்பொழிவில் மேலும் கூறியதாவது;

வியாபாரத்தில் நீதி, நியாயமாக நடந்து கொள்ளுமாறு அல்குர்ஆனும் முஹம்மத் நபி (ஸல்) அவர்களும் எச்சரித்துள்ளனர். வியாபாரத்தில் மோசடி செய்து உழைக்கும் பொருளாதாரம் ஹராமாகும். அதனால்தான் இஸ்லாம் அதற்கு தடை விதிக்கிறது.

அளவை, நிறுவையில் மோசடி எதுவும் இடம்பெற்று விடக்கூடாது என்பதற்காக அரசாங்கமும் தராசுகளை பரிசோதிக்கின்ற நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றது. அதில் தவறிழைப்போர் குற்றவாளிகளாக பார்க்கப்படுகின்றனர். தண்டனையும் வழங்கப்படுகிறது. இஸ்லாம் இதனை தண்டனைக்குரிய குற்றமாக என்றோ பிரகனப்படுத்தி விட்டது என்றார்.

# சாய்ந்தமருது இளைஞர் பயிற்சி நிலையத்தினால் இலவச கருத்தரங்கு

**கல்முனை நிருபர்**

2018ம் ஆண்டு கா.பொ.த (சா/த) பரீட்சையை முதல் முறையாகவும் மேலதிக முறையாகவும் தோற்றவுள்ள மாணவ மாணவிகளுக்கு முற்றிலும் இலவசமாக ஆங்கில பாட கருத்தரங்கு சாய்ந்தமருது இளைஞர் பயிற்சி நிலையத்தினால் அண்மையில் நடாத்தப்பட்டது.



இக் கருத்தரங்கு சம்மாந்துறை உயர் தொழிநுட்பவியல் நிறுவனத்தின் ஆங்கில விரிவுரையாளர் எம்.வீ. நௌசாத் தலைமையில் நடைபெற்றது. இதற்கு பிரதம அதிதியாக சாய்ந்தமருது இளைஞர் பயிற்சி நிலையத்தின் நிலையப் பொறுப்பதிகாரியும் உதவிப் பணிப்பாளருமான எஸ். எம்.ஏ. லத்தீப் கலந்து கொண்டதுடன் சிறப்பு அதிதிகளாக முன்னாள் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினரும் இப் பயிற்சி நிலையத்தின் உத்தியோகத்தருமாகிய கபூர் அன்வர், சாய்ந்தமருது இளைஞர் பயிற்சி நிலையத்தின் ஆங்கில பாட விரிவுரையாளர் எம்.ஆர். எம்.சதீம், சம்மாந்துறை தொழிநுட்பக் கல்லூரி ஆங்கில பாட போதனாசிரியர் எம்.எப்.ஆசிர் அஹமட் மற்றும் இப்பயிற்சி நிலையத்தின்உத்தியோகத்தர்களும், விரிவுரையாளர்களும் கலந்து கொண்டார்கள்

இவ் கருத்தரங்கில் சாய்ந்தமருது, கல்முனை, மருதமுனை, சென்றல் கேம், சம்மாந்துறை, நிந்தவூர் பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் 250 க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகளும் கலந்து கொண்டதும் குறிப்பிடத்தக்தாகும்.

# பாடசாலையில் நீண்ட காலமாக மைதானத்தின் மத்தியில் காணப்பட்டு வந்த பெரிய கற்களை அகற்றும் பணி தீவிரம்

**கந்தளாய் நிருபர்**

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் வலயக் கல்வி அலுவலகத் திற்குட்பட்டட தி/ஆயிஷா மகளீர் மகா வித்தியாலயத்தில் நீண்ட காலமாக மைதானத்தின் மத்தியில் காணப்பட்டு வந்த பெரிய கற்களை அகற்றி புனர் நிர்மாணம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அப் பாடசாலையில் அதிபர் எம்.சி.நசூர்தீன் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக்கின் கம்பெரலிய வேலைத்திட்டத்தின் பத்து இலட்சம் ரூபாய் நிதியொதுக்கீட்டில் மைதானத்தை புனரமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும்,

இப்பாடசாலை திருகோணமலை மாவட்டத்தின் சேருவிலத் தொகுதியிலே ஒரேயொரு மகளீர் பாடசாலை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்,குறிப்பிட்டகாலத்தில் இப்பாடசாலை முண்ணனியில் திகழ்ந்து வந்துள்ளதாகவும் அப்பாடசாலையின் அதிபர் தெரிவித்தார்.

இப்பாடசாலையில் பௌதிக வளப் பற்றாக் குறைகள் காணப்படுகின்றன அதாவது அராதனை மண்டபம்,ஆசிரியர் விடுதி,மற்றும் விஞ்ஞான ஆய்வுகூடம் போன்ற குறைபாடுகளும் காணப்பட்டு வருவதாகவும் அப்பாடசாலையின் முதல்வர் எம்.சி.நசூர்தீன் தெரிவித்தார்.




**மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியில் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும் கற்பித்த ஆசிரியர்களையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு மாணவர்களின் பெற்றோர்களின் ஏற்பாட்டில் படசாலையில் நடைபெற்றது. 192 புள்ளிகளுடன் மாவட்டமட்டத்தில் ஐந்தாம் இடத்தினை பெற்ற மாணவி அஸ்ரப் அம்னா செய்னப் என்ற மாணவிக்கு வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். அப்துல் ஜெலீல் பரிசு வழங்குவதையும் அருகில் பாடசாலையின் அதிபர் பி.எம்.எம்.பதுறுத்தீன், பிரதி அதிபர் எம்.எம்.முஸம்மில் உட்பட பெற்றோர்கள் நிற்பதையும் காணலாம்**

**படம்: பெரியநீலாவனை நிருபர்**

# மண்முனை மேற்கில் நடைபெற்ற பௌர்ணமி கலை விழா

**அமிர்தகழி நிருபர்**

மட்டக்களப்பு மாவட்ட செயலகமும், மண்முனை மேற்கு,வவுணதீவு பிரதேச செயலகமும் இணைந்து நாடாத்திய பௌர்ணமி கலை விழா வவுணதீவு பிரதேசத்தின் நாவற்காடு கிராமத்தில் மிக கோலாகலமாக இடம்பெற்றது.

இக் கலை விழா கலாசார உத்தியோகத்தர் எம்.சிவானந்தராஜாவின் ஒழுங்கமைப்பில், மண்முனை மேற்கு பிரதேச கலாசார பேரவையின் தலைவரும் பிரதேச செயலாளருமான எஸ். சுதாகர் தலைமையில் நடைபெற்றது.

மட்டக்களப்பு நகரில் நடைபெற்று வந்த இந்த பௌர்ணமி கலைவிழா நகரங்களில் மட்டுமன்றி கிராமங்களிலும் நடைபெறவேண்டும் எனும் நோக்குடன் கடந்த சில மாதங்களாக மாவட்டத்திலுள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளில் தொடராக நடைபெற்றுவருகின்றது.

இந் நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட செயளாளர் எம்.உதயகுமார், மாவட்ட செயலக உதவி மாவட்ட செயலாளர் ஏ.நவேஸ்வரன், மண்முனை மேற்கு பிரதேச சபை தவிசாளர் எஸ்.சண்முகராஜா, மாவட்ட கலாசார இணைப்பாளர் ரி.மலர்செல்வன் உள்ளிட்டோர் அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தொல்லியல் ஆய்வாளர் கலாபூசணம் செல்வி கே.தங்கேஸ்வரி கலைத்துறைக்கு ஆற்றிய சேவைக்காக பிரதேச கலாசார பேரவையின் சார்பில் அரசாங்க அதிபரால் பொன்னாடை அணிவித்து நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்

இக் கலை விழா நிகழ்வில் பாரம்பரிய கலைகளாக கும்மி, வசந்தக் கரகம், பறை இசைத்தல், கிராமியப் பாடல், கவிதைகள், நாட்டுக் கூத்து உள்ளிட்ட பல கலை நிகழ்வுகள் இடம்பெற்றது.







# மாற்றுத்திறனாளிகள் தினம் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது

**க.விஜயரெத்தினம்**

கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் திங்கட்கிழமை(3.12.2018) காலை 8.30 மணியளவில் மட்டக்களப்பு தன்னாமுனை மியானி மண்டபத்தில் மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வுகள் நடைபெறவுள்ளது.

மைலம்பாவெளி பிள்ளையார் ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகும் பேரணியுடன் நிகழ்வுகள் நடைபெறவுள்ள இந் நிகழ்வில், கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகல்லாகம,மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மா.உதயகுமார்,சமூக சேவைகள் திணைக்கள உத்தியோகஸ்தர்கள்,உள்ளிட்டோர் அதிதிகளாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

மாற்றுத்திறனாளிகளின் கலாச்சாரச் நிகழ்வுகள், செயற்பாடுகள்,பரிசளிப்புகள் நடைபெறவுள்ளது.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் சுயதொழிகளில் ஈடுபடுவோர் தங்களின் பொருளாதார இலக்குகளை எட்ட முடியும்; மட்டு.அரச அதிபர் தெரிவிப்பு

**க.விஜயரெத்தினம்**

மட்டக்களப்பு மாவட்ட மக்கள் சுயதொழிலை சிறப்பாக முன்னெடுக்கும் போது பொருளாதார இலக்குகளை முன்னெடுக்க முடியும்.யுத்தத்தினால் எம்மக்களின் பொருளாதாரம் அழிக்கப்பட்டாலும் சுயதொழில்களை சிறப்பாக செய்து தங்களின் குடும்பங்களின் பொருளாதார இலக்குகளை மட்டக்களப்பு மாவட்ட மக்கள் முன்னெடுக்கின்றார்கள்.இது பாராட்டப்படவேண்டியதாகும் என மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மா.உதயகுமார் தெரிவித்தார்.

மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகப்பிரிவிற்குட்பட்ட மீனவர்களுக்கு தோணிகள் வழங்கி வைக்கப்பட்டன. அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் :-

மீனவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் வகையில் இத்தோணிகள் இன்று வழங்கி வைக்கப்படுகின்றது.

பிரதேசத்திற்குட்பட்ட 25மீனவர்களுக்கு குறித்த தோணிகள் வழங்கப்படவுள்ள நிலையில், முதற்கட்டமாக 12மீனவர்களுக்களுக்கு தோணிகள் வழங்கிவைக்கப்படுகின்றது.இதனை இப்பிரதேச மீனவர்கள் சரியாக பயன்படுத்தி சுயதொழிலை சிறப்பாக முன்னெடுக்கும் போது பொருளாதாரம் மேம்படுத்தப்படும்.பொருளாதாரத்தை மட்டக்களப்பு மாவட்ட மக்கள் ஈட்டிக்கொள்வதில் கரிசனை செலுத்த வேண்டும்.சுயதொழில்கள் மூலம்தான் அதிகமான குடும்பங்கள் முன்னேற்றம் கண்டுவருகின்றது.




## கல்முனை சன்ப்ரைட் இளைஞர் கழகத்தின் முன் மாதிரி மிக்க வேலைத்திட்டம்

**எம்.என்.எம்.அப்ராஸ்**

கல்முனை சன்ப்ரைட் இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் இறை இல்லங்களை அழகுபடுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ் கல்முனை முஹைதீன் ஜும்மாப்பள்ளிவாசல் வளாகத்தில் சிரமதான நிகழ்வு இடம் பெற்றது.

மேலும் இந்நிகழ்வில் கல்முனை சன்ப்ரைட் இளைஞர் கழகத்தின் ஏராளமான உறுப்பினர்கள் கலந்து கொண்டது தங்கள் பங்களிப்பை வழங்கினர்.மேலும் இவ்வாறான சமூகப் பணிகள் தொடர்ந்தும் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் எதிர்வரும் நாட்களில் கல்முனை கடற்கரை பகுதிகள், மையவாடிகளும் சிரமதான பணிகளில் மேற்க் கொள்ளப்படும் என அவ் அமைப்பின்



வேலைத் திட்டங்களுற்க்கான தலைவர் ஏ.ஆர்.ஏ. ஜவ்சான் தெரிவித்தார் மேலும் இவ் சிரமாதான பணியில் கலந்து கொண்ட மற்றும் ஒத்துழைத்த அனைவருக்கும் கழகத்தின் செயலாளர் என்.எம்.அப்ரின் நன்றிகளை தெரிவித்தார்.

## பெண்கள் அரபிக் கல்லூரிக்கு கணனிகள் அன்பளிப்பு

**ஏ.ஜி.அப்துல் கபூர்**

கட்டார் நாட்டின் மத்திய வங்கியில் நிதிப் பகுப்பாய்வாளராகக் கடமையாற்றும் அட்டாளைச்சேனையைச் சேர்ந்த ஹஸரத் உமர் அலியாரின் பேரனான எம்.எச். அஸ்கர் அவர்கள் அக்கரைப்பற்று மன்பஉல் கைறாத் பெண்கள் அரபிக் கல்லூரி மாணவிகளின் பயன்பாட்டுக்கென 15 கணனி இயந்திரங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இக் கணனி இயந்திரங்களை அரபிக் கல்லூரிக்கு கையளிக்கும் நிகழ்வுகல்லூரி கேட்போர் கூடத்தில் மன்பஉல் கைறாத் பெண்கள் அரபிக் கல்லூரி தலைவர் எம்.எச்.அபூத் தாஹிர் தலைமையில் இடம் பெற்றது.

இதன்போது நிதிப் பகுப்பாய்வாளர் எம்.எச்.அஸ்கர் அவர்களின் தந்தை உமர் அலி ஹஸைன் அவர்கள் கலந்து கொண்டு கணனி இயந்திர தொகுதியை மன்பஉல் கைறாத் பெண்கள் அரபிக் கல்லூரி தலைவர் எம்.எச்.அபூத் தாஹிர் மற்றும் அரபிக் கல்லூரி பணிப்பாளர் சபை உறுப்பினர்களிடம் கையளித்தார்

இந் நிகழ்வில் அரபிக் கல்லூரி வளவாளர்களான எம்.ஜி.றுஸான், எஸ்.எம். அபுல் காஸிம் மற்றும் கல்லூரி பணிப்பாளர் சபை உறுப்பினர்களான எஸ்.எம்.ஏ.கபூர், எம்.ஏ.எம். தாஹா, எம்.ஸாலிஹ், ஏ.பைறூஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.



156 மாணவிகள் கல்வி கற்கும் இவ் அரபிக் கல்லூரிக்கு எதிர்காலத்தில் போக்குவரத்துக்கான வாகன வசதிகளையும், நிரந்தர நிருவாக கட்டிடம் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிளையும் ஏற்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் எம்.எச். அஸ்கர் அவர்களின் தந்தை உமர் அலி ஹஸைன் அரபிக் கல்லூரி தலைவர் உள்ளிட்ட பணிப்பாளர் சபை உறுப்பினர்களிடம் உறுதியளித்தார்.



## அஷ்ரப் வைத்தியசாலை ஏற்பாட்டில் நீரிழிவு விழிப்புணர்வு ஊர்வலம்





**அஸ்லம் எஸ்.மௌலானா**

நவம்பர்-14 ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்ட சர்வதேச நீரிழிவு தினத்தை முன்னிட்டு கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை ஒழுங்கு செய்திருந்த விழிப்புணர்வு ஊர்வலம் வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் ஏ.எல்.எப்.ரஹ்மான் தலைமையில் நடைபெற்றது.

கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை முன்றலில் இருந்த ஆரம்பிக்கப்பட்ட இந்த ஊர்வலம் நெடுஞ்சாலை வழியாக சாய்ந்தமருது வைத்தியசாலை வரை சென்று, மீண்டும் அஷ்ரப் வைத்தியசாலையை வந்தடைந்தது. இதன்போது நீரிழிவு நோய் தொடர்பில் மக்களை விழிப்பூட்டும் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

இந்த விழிப்புணர்வு ஊர்வலத்தில் அஷ்ரப் வைத்தியசாலையின் சிரேஷ்ட வைத்தியர்களான டாக்டர் எம்.எஸ்.எம்.மாஹிர், டாக்டர் எம்.எம்.பாறூக், டாக்டர் முஹம்மட் நியாஸ் உட்பட தாதியர் மற்றும் ஊழியர்கள் பலரும் பங்கேற்றிருந்தனர்.

## தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாண சான்றிதழ் வழங்கும் வைபவம்





**கல்முனை நிருபர்**

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 2018ம் (ஜனவரி - ஜூன்) 1ம் கட்டதுக்கான கிழக்கு மாகாண சான்றிதழ் வழங்கும் வைபவம் மாகாணப் பணிப்பாளர் டீ.எம்.சிசிர குமார தலைமையில் கடந்த வாரம் சாய்ந்தமருது கமுகமு றியாலுல் ஜன்னா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

உதவிப் பணிப்பாளர் எஸ்.எம்.ஏ. லத்தீபின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் சாய்ந்தமருது, புதுக்குடியிருப்பு பயிற்சி நிலையங்களில் பாடநெறிகளை பூர்த்தி செய்த இளைஞர் யுவதிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டது.

இதன் போது தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் மிக நீண்ட காலம் சேவையாற்றியதுடன், உதவிப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்ற எஸ்.எம்.ஏ. லத்தீபின் நீண்ட கால சேவையை பாராட்டி அவருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது.

இங்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உத்தியோகத்தர்கள், போதனாசிரியர்கள், பாடசாலை அதிபர்கள், இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

## குடி நீர் திட்டத்துக்கான அங்குரார்ப்பண நிகழ்வு



**கிண்ணியா நிருபர்**

கிண்ணியா பைசல் நகர் நபவி பள்ளி வாயல் பின் வீதிக்கான பிரதான குடி நீர் குழாய் இணைப்பு பெற்றுக் கொடுக்கப்பட்டது.

குறித்த குழாய் நீர் பதிப்பதற்கான அங்குரார்ப்பண நிகழ்வு கிண்ணியா நகர சபை உறுப்பினர் எம். எம்.நிவாஸ் தலைமையில் ஆரம்பமானது.

மக்களின் நீண்ட நாள் குடி நீர் பிரச்சினை அப்பகுதியில் நிலவி வந்ததையிட்டு புதிய குடி நீருக்கான குழாய் நீர் வேலைத் திட்டத்தை நகர சபை உறுப்பினர் எம்.எம். நிவாஸ் ஆரம்பித்து வைத்தார்.

இக் குழாய் நீர் திட்டத்தால் 100 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயனடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

## கிண்ணியா பிரதேச கலை இலக்கிய விழா





**கிண்ணியா நிருபர்**

கிண்ணியா பிரதேச கலை இலக்கிய விழா அண்மையில் கிண்ணியா மத்திய கல்லூரியின் அப்துல் மஜீத் மண்டபத்தில் இடம் பெற்றது.

கிண்ணியா பிரதேச செயலக ஏற்பாட்டில் பிரதேச செயலாளர் எம்.எச். ஹனி தலைமையில் குறித்த நிகழ்வு இடம் பெற்றது.

கலை இலக்கிய போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கும் பரிசளிப்பு வைபவமும் கலைஞர்கள் கௌரவிப்பு நிகழ்வும் இதன்போது நடை பெற்றது.

இவ் நிகழ்வில் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் திருமதி வளர்மதி இரவீந்திரன் மற்றும் கிண்ணியா நகர சபை தவிசாளர் எஸ்.எச்.எம்.நளீம், பிரதேச சபை தலைவர் எம்.எச்.எம்.சனூஸ் உட்பட பலர் பங்கேற்றனர்.

## ஆயிரம் பெண் ஆளுமைகளை உருவாக்கும் செயற்திட்டம்

**மூதூர் நிருபர்**

ஆயிரம் பெண் ஆளுமைகளை உருவாக்கும் செயல்திட்ட அங்குராப்பண நிகழ்வு மூதூரில் மிகவும் சிறப்பான முறையில் நூற்றுக்கணக்கான பெண்களின் பங்குபற்றலுடன் இடம்பெற்றது.

சேர்ஃப்-லங்கா நிறுவனத்தின் பெண்கள் பிரிவு செயல் திட்டத்திற்கான இணைப்பாளர் என்.எப்.அகீதா (மூதூர் பிரதேச சபை உறுப்பினர் மற்றும் விசேட கல்வி ஆசிரியை) இன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதீதியாக கொழும்பு ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பொறியியலாளரும் சேர்ஃப்-லங்கா நிறுவனத்தின் ஸ்தாபகரும் நிறைவேற்று பணிப்பாளருமான எந்திரி.இஹ்ஸான் ஜவாஸன் கலந்துகொண்டு ஆயிரம் பெண் ஆளுமைகளை உருவாக்கும் செயல்திட்டம் தொடர்பான விளக்கத்தையும் வழங்கினார்.

இந்த நிகழ்வானது எதிர்வரும் காலங்களில் மூதூர், தோப்பூர், சம்பூர் ஆகிய பிரதேசங்கள் உள்ளிட்ட 42 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் படிப்படியாக நடைபெறவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மூன்று சக்கர சைக்கிள் அன்பளிப்பு



**மூதூர் நிருபர்**

அகில இலங்கை ரீதியாக பல மாவட்டங்களில் தனது செயற்பாடுகளை இன, மத வேறுபாடுகளுக்கப்பாளும் தமது சேவைகளை கட்சிதமாக முன்னெடுத்து வரும் அசாத் பவுண்டேசன் மற்றும் மனித உரிமைகள் சமாதானத் தூதுவர்கள் அமைப்பின் உதவியூனூடாக பெறப்பட்ட மூன்று சக்கர சைக்கிளினை தோப்பூர் அல்லைநகர் பிரதேசத்தில் மிகவும் வறுமைக் கோட்டில் வசித்து வருகின்ற இரண்டு கால்களும் இயாலாத ஒரு நபருக்கு மூதூர் அசாட் பவுண்டேசன் மற்றும் மனித உரிமைகள் சமாதான தூதுவர்களின் மூதூர் கிளை உறுப்பினர்களால் மூதூர் காரியாலயத்தில் வைத்து வழங்கப்பட்டது.

இது போன்ற இன்னும் பல அபிவிருத்தி வேலைகளும் இவ்வமைப்பினால் முன்னெடுக்கப்படுமென அவ்வமைப்பின் மூதூர் கிளைக்கான பொருளாலர், செயலாளர்களான பாரி மௌலவி மற்றும் அதன் செயலாளர் இஹ்சான் என்பவரும் தெரிவித்தனர்.

## டெங்கு ஒழிப்பிற்காக கரையோத்தை சிரமதானம் செய்யும் பணி





**கிண்ணியா நிருபர்**

கிண்ணியா நகரசபையின் தவிசாளர் மற்றும் கிண்ணியா பொது சுகாதார அதிகாரியும் இணைந்து டெங்கு நுளம்புகள் பெருகுவதை தடுக்கும் வகையில் கிண்ணியா பீச் கரையோரம் சுத்தம் செய்யும் பணி இடம் பெற்றது.

இச் சிரமதான பணியானது டெங்கு நுளம்பு அபாயத்தை கட்டுப் படுத்தும் நோக்கில் பாதுகாப்பு நடவடிக்கை கருதி மேற்கொள்ளப் பட்டது.

கரையோர பகுதியில் உள்ள சிரட்டை, பிளாஸ்டிக் போத்தல்கள் உட்பட கழிவுப் பொருட்களை அகற்றி டெங்கு நோயில் இருந்து பாதுகாப்புப் பெறும் நோக்கில் விசேடமாக கரையோர சிரமதான பணி இடம் பெற்றது.

இதில் கிண்ணியா நகர சபை தவிசாளர் எஸ்.எச்.எம்.நளீம், கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எம்.எம்.அஜீத், பொது சுகாதார பரிசோதகர்கள், கிண்ணியா நகர சபை ஊழியர்கள் என பலரும் பங்கேற்றார்கள்.

## சட்ட விரோத மண் அகழ்வில் ஈடுபட்டோர் கைது

**கல்முனை நிருபர்**

சவளக்கடை பொலிஸ் பிரிவிற்குட்ட பிரதேசத்தில் அனுமதிப் பத்திரமின்றி சட்டவிரோதமாக ஆற்று மண் ஆகழ்வில் ஈடுபட்ட சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன்,இதற்காக பயன்படுத்திய ஒரு உழவு இயந்திரமும், ஒரு டிப்பர் வாகனமும் கைப்பற்றப்பட்டுள்ளதாக சவளக்கடை பொலிஸார் தெரிவித்தனர்.

சவளக்கடை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து சவளக்கடை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.எம்.எம்.நஜீம் தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது நாவிதன்வெளி பிரதேசத்தினை சேர்ந்த ஒரு உழவு இயந்திரமும் சம்மாந்துறையை பிரதேசத்தினை சேர்ந்த ஒரு டிப்பர் வாகனமும் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அதனுடன் தொடர்புடைய இரு நபர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## தென்கிழக்கு பல்கலையில் விஞ்ஞான ஆராய்ச்சி அமர்வு

**அஸ்லம் எஸ்.மௌலானா**

தென்கிழக்குப் பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞான பீடத்தின் ஏழாவது வருடாந்த விஞ்ஞான ஆராய்ச்சி அமர்வு அதன் பீடாதிபதி கலாநிதி யூ.எல்.செய்னுடீன் தலைமையில் பிரயோக விஞ்ஞான பீட கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

கலாநிதி கே.கோமதிராஜின் வழிநடத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக உபவேந்தர் பேராசிரியர் எம்.எம்.எம்.நாஜீம் கலந்து கொண்டதுடன் விஷேட பேச்சாளராக அடிப்படை கற்கைகள் நிறுவனத்தின் ஆராய்ச்சி பேராசிரியர் சாவித்ரி குமார் கலந்து கொண்டு உரையாற்றினார்.

ஒன்றிணைக்கப்பட்ட அபிவிருத்திக்கான பல்துறை விஞ்ஞான ஆராய்ச்சி எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற குறித்த ஆராய்ச்சி அமர்வில் 39 ஆராய்ச்சி கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டன.







# வவுனியா மாவட்ட விசேட காணி மத்தியஸ்தர்களாக 45 பேர் நியமனம்





**வவுனியா நிருபர்**

மத்தியஸ்தர் சபை ஆணைக்குழுவினால் வவுனியா மாவட்ட விசேட காணி மத்தியஸ்தர்களாக 45 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வு நீதி அமைச்சின் வவுனியா மாவட்ட மத்தியஸ்த பயிற்சி உத்தியோகத்தர் எஸ்.விமலராஜா தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

எல்.எல்.ஆர்.சீ அறிக்கையின் பரிந்துரைக்கு அமைவாக வவுனியா மாவட்ட காணி பிணக்குகளை தீர்க்கும் முகமாக நீதி அமைச்சின் கீழ் மத்தியஸ்தர் சபை ஆணைக்குழுவினால் விசேட காணி மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகத்தேர்வு இடம்பெற்று மத்தியஸ்தர்களாக தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்த நிலையில் தெரிவுசெய்யப்பட்ட 45 விசேட காணி மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களுக்கும் இதன்போது நியமனம் வழங்கப்பட்டது.

இதன் தவிசாளராக இ.நவரட்ணம் அவர்களும் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

இந்நிகழ்வில் மத்தியஸ்தர் சபை ஆணைக்குழுவின் தலைவர் இளைப்பாறிய நீதியரசர் கெக்ரர் எஸ் யாப்பா, மத்தியஸ்த சபை ஆணைக்குழுவின் ஆணையாளர் நிமல் திசநாயக்கா, மத்தியஸ்தர் சபை ஆணைக்குழுவின் ஆணையாளர் எம்.சேரமசுந்தரம், மத்திய சபை ஆணைக்குழுவின் செயலாளர் ரஜனீ அத்தபத்து, மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், மத்தியஸ்தர் சபை ஆணைக்குழுவின் ஆலோசகரும், சட்டத்தரணியுமான எம்.திருநாவுக்கரசு, ஆசியான் நிறுவனத்தின் நிகழ்ச்சி திட்ட இணைப்பாளர் எம்.ஜயந்த, மத்தியஸ்தர் சபை நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் மத்தியஸ்தர் சபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# வடக்கு தந்தி

## ‘எழு நீ’ நிகழ்வு அரசியல் மயப்படுத்துவதை எண்ணி கவலை கொள்கின்றோம்; தமிழ் மா மன்றம்!

**க.மதி**

‘எழு நீ’ நிகழ்வு அரசியல் மயப்படுத்துவதை எண்ணி கவலை கொள்கின்றோம் என தமிழ் மா மன்றம் தெரிவித்துள்ளது.

வவுனியா நகரசபையினால் பெரும் சர்ச்சைக்கு மத்தியில் 140 பேருக்கு வழங்கப்படவுள்ள எழு நீ விருது தொடர்பாக தமது மன்றத்தின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தி வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

இவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வவுனியா நகரசபையினரின் ‘எழு நீ’ விருதுகள் 2018 தொடர்பாக கருத்துக்களும், விமர்சனங்களும் சமூக வலைத்தளங்களில் பரவலாக பகிரப்படுவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. இது தொடர்பில் ஒரு பதிவு செய்யப்பட்ட கலை இலக்கிய மன்றமாகத் தமிழ் மாமன்றத்தின் நிலைப்பாட்டினை தெளிவுபடுத்த வேண்டிய ஒரு கடப்பாடு இருக்கின்றது.

இது தொடர்பில் தமது எட்டுக் கோரிக்கையினை சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன் குறித்த நிகழ்வு அதன் தன்மைக்கு மாறாக அரசியல் மயப்படுத்தப்படுவதனை அவதானித்து கவலையடைவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் தமது உறுப்பினர்கள் தனிப்பட்ட ரீதியில் தமிழ் மாமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தாத வகையில் பொது நிகழ்வுகளில் அல்லது வேறு மன்ற நிகழ்வுகளில் கலந்துகொள்வதை நாம் மதிக்கின்ற அதேவேளை அதை அவர்களுடைய உரிமையாகக்கருதுகின்றோம்.

எனவே ‘எழு நீ’ பண்பாட்டு விழாவிலிருந்து தமிழ் மாமன்றம் அமைப்பு சார்ந்து நடுநிலையோடு ஒதுங்கியிருக்கின்றது என்பதையும் எமது மன்ற உறுப்பினர்கள் யாராவது பங்கேற்பின் அது அவர்களுடைய தனிப்பட்ட விருப்பின் அடிப்படையில் சுய பங்கேற்பாகவே அமையும்.

# முறிகண்டி பிள்ளையார் ஆலய அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் அமைச்சர் தலைமையில் நடைபெற்றது



முறிகண்டி பிள்ளையார் ஆலய வளாகத்தினை அபிவிருத்தி செய்வது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஆலய வளாகத்தில் இடம்பெற்றது

முறிகண்டி பிள்ளையார் ஆலய வளாகத்தினை அபிவிருத்தி செய்வது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஆலய வளாகத்தில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடல் மீள்குடியேற்றம் மற்றும் இந்து கலாச்சார அலுவல்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றது. குறித்த கலந்துரையாடலில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர், ஒட்டுசுட்டன் பிரதேச செயலாளர், இந்து கலாச்சார அலுவல்கள் திணைக்கள அதிகாரிகள், கோவில் நிர்வாகத்தினர், வர்த்தக சங்கத்தினர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது கோவில் அமைந்துள்ள பகுதியில் உள்ள கடைகளை பொருத்தமான இடத்திற்கு மாற்றுதல், வளாகத்தினை அபிவிருத்தி செய்தல், போக்குவரத்து வசதிகள், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் உள்ளிட்ட விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. குறித்த கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களிற்கு கருத்து தெரிவித்த அமைச்சர், கோவில் அபிவிருத்தி தொடர்பில் பல கோரிக்கைகள் முனன் வைக்கப்பட்டதாகவும், அவற்றை நிவர்த்தி செய்வது தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

# அச்சுவேலியில் குடியிருப்புக்களில் வெள்ள நீர் புகுவதை தடுப்பது தொடர்பில் கவனம்

அச்சுவேலி தெற்கில் வீடுகளுக்குள் வெள்ள நீர் பாதிப்பு பற்றி நீர்ப்பாசனத்திணைக்களத்தின் பொறியிலாளரை பாதிப்புக்கள் உணரப்பட்ட இடங்களுக்கு அழைத்துச்சென்று எதிர்காலத்திற்கான முன்னாயத்தங்கள் பற்றி ஆராய்ந்ததாக வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத்தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

அச்சுவேலி பகுதியின் கரதடி வீதி மற்றும் யாழ் - பருத்தித்துறை வீதியின் ஒருமருங்கில் உள்ள முழங்கன் இந்து மயனத்தினை அண்மித்த பகுதிகளில் வெள்ளநீர்ப்பாதிப்பு உள்ளது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கைகக்கு இடையூறுகள் ஏற்படுகின்றன. இந்நிலையில் இவ்விடயம் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் உப தவிசாளரும் வட்டார உறுப்பினருமான மகேந்திரலிங்கம் கபிலனின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

இதனையடுத்து தவிசாளர், நீர்ப்பாசனத்தினைக்கள பொறியிலளாளர் சர்வானந்தன் சர்வராஜாவின் கவனத்திற்குக் கொண்டு சென்றதையடுத்து எதிர்காலத்தில் மழைநீரையும் கடலுக்குச் செல்லாது தவிர்க்கின்ற அதேவேளை மக்களின் குடியிருப்புப் பகுதிகளுக்கும் வெள்ள நீர் உட்புகாதவாறு நடவடிக்கை எடுப்பது பற்றி எம்முடன் பிரதேசத்திற்கு வருகைதந்து நேரில் நிலைமைகளை பார்வையிட்டிருந்தார்.



இதன் ஊடாக இப்பகுதிகளில் குடியிருப்பு நிலங்களுக்குள் மழை வெள்ளம் செல்லாதவாறு அமைக்கவேண்டிய மண் அணைகள் தொடர்பில் அரச அதிபர் ஊடாக நீர்ப்பானத்தினைக்களம் செயற்றிட்டத்தினை இப்பகுதிகளுக்கு ஏற்படுத்துவது பற்றி கவனம் செலுத்தப்பட்டது.

# கட்டாக்காலி மாடுகளால் போக்குவரத்துக்கு சிரமம்



கிளிநொச்சி நகர் மற்றும் இரணைமடு சந்தி உள்ளிட்ட ஏ9 வீதியில் கட்டாக்காலி மாடுகள் வீதியின் நடுவில் நிற்பதால் பெரும் சிரமங்கள் ஏற்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

கரைச்சி பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட குறித்த பகுதிகளில் இவ்வாறு கட்டாக்காலி மாடுகள் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் செயற்படுவதாகவும், அதனை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எவையும் ஏற்படுத்தப்படவில்லை எனவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஏ9 வீதி ஊடாக போக்குவரத்து அதிகளவில் இடம்பெற்ற வரும் நிலையில் இவ்வாறு வீதியின் நடுவில் மாடுகள் காணப்படுவதால் பல்வேறு விபத்துக்கள் இடம்பெற்று வருவதாகவும், இதனால் தமது வாகனங்கள் சேதமடைவதோடு, பல மாடுகள் இறந்தும், காயப்பட்டும் வருவதாகவும் மக்கள் குறிப்பிடுகின்றனர்.



**முறிகண்டி தென்னிந்திய திருச்சபை பாலர் பகல் பராமரிப்பு நிலைய ஒளிவிழா நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. குறித்த நிகழ்வு முறிகண்டி தென்னிந்திய திருச்சபை ஆலயத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் புனித பப்ரிஸ் திருச்சபையின் ஊழியர் பிரதம விருந்தினராக கலந்து கொண்டிருந்ததுடன், தென்னிந்திய திருச்சபை ஊழியர்கள், பெற்றோர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.**

# கிளிநொச்சி நகரில் புதிதாக அமைக்கப்பட்ட பசுமை பூங்கா மக்கள் பாவனைக்கு



கிளிநொச்சி நகரில் புதிதாக அமைக்கப்பட்ட பசுமை பூங்கா மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டது. நகர அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் 40 மில்லியன் நிதியில் புதிதாக அமைக்கப்பட்ட குறித்த பூங்கா கரைச்சி பிரதேச சபையிடம் கையளிக்கப்பட்டது. குறித்த பூங்காவினை மக்கள் பாவனைக்கு திறந்து விடும் நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் உரையாற்றிய வேழமாலிகிதன் கருத்து தெரிவிக்கையில்,

தேசிய தலைவன் பிறந்தநாளில் இந்த பூங்காவை திறந்து வைப்பதில் மகிழ்வடைவதாக தெரிவித்தனர். இந்த பூங்கா அமைக்கப்பட்டுள்ள பகுதிக்கு முன்பாக உள்ள நினைவு தபி அமைந்துள்ள பகுதி, முன்னர் லெப்டினன் கேணல் சந்திரன் அவர்களின் நினைவாக அமைக்கப்பட்ட பூங்காவாகும். குறித்த பூங்கா அமைந்துள்ள பகுதியில் நினைவு தூபி அமைக்கப்பட்டது. அதனை பார்வையிட வருபவர்களிற்காக இந்த பூங்கா திட்டமிட்டு அமைக்கப்பட்டது. இன்று மக்களின் பாவனைக்காக இதை இந்த நல்ல நாளில் திறந்து வைக்கப்படுகின்றமை மகிழ்ச்சி அளிப்பதாக தெரிவித்தனர்.

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு உதவி

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களிற்கு உலருணவு பொதிகள் வழங்கும் நிகழ்வு கிளிநொச்சியில் இடம்பெற்றது.

கனடா புலம் பெயர் உறவுகளின் ‘உறங்கா விழிகள்’ அமைப்பின் உதவியுடன் கிளிநொச்சி மாவட்ட மாற்று திறனாளிகள் அமைப்பின் ஏற்பாட்டில் குறிதத் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது யுத்த்தினால் பாதிக்கப்பட்ட தெரிவு செய்யப்பட்ட 300 குடும்பங்களிற்கு 4000 ரூபா பெறுமதியான உலருணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டது, இந்நிகழ்வில் மு.பா உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், எஸ் கஜேந்திரன், மணிவண்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் உரையாற்றிய கஜேந்திரகுமார், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு இவ்வாறு சிறிய சிறிய உதவிகளை செய்து அவர்களை முன்னேற்ற முடியாது. பாதிக்கப்பட்ட அனைவரிற்கும் உதவிகள் கிடைக்க கூடியவாறு அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என குறிப்பிட்டார்.






## வவுனியாவில் நடைபெற்ற தொழில் சந்தை

தேசிய இளைஞர் சேவை மன்றமும் தொழில் வழிகாட்டல் ஆலோசனை நிலையமும் வவுனியா பிரதேச செயலகமும் இணைந்து நடாத்திய மாபெரும் தொழில் சந்தை குருமன்காடு கலைமகள் மைதானத்தில் இளைஞர் சேவைகள் மன்றத்தின் மேலதிக உதவி பணிப்பாளர் சிசிர செனவிரட்ண அவர்களின் தலைமையில் நடைபெற்றது.



இவ் ஆரம்ப நிகழ்வின் பிரதம அதிதியாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் ஹனிபா, சிறப்பு அதிதிகளாக மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் திரேஷ்குமார், வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா, வவுனியா தெற்கு பிரதேச செயலாளர் ஜானக, மாவட்ட இளைஞர் கழக சம்மேளன முன்னாள் தலைவரும் வவுனியா நகர சபையின் உறுப்பினருமான சுந்தரலிங்கம் காண்டீபன் ஆகியோரும் கௌரவ அதிதிகளாக நைட்டா பணிப்பாளர், சமூர்த்தி உத்தியோகத்தர் ரமேஸ் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

நிகழ்வின் ஒழுங்கமைப்பு பணிகளினை வவுனியா பிரதேச இளைஞர் சேவை அதிகாரி தே.அமுதராஜ், வவுனியா தெற்கு பிரதேச இளைஞர் சேவை அதிகாரி அஜித் சந்திரசேன, இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீகரன் கேசவன் ஆகியோர் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## விக்கியை அழைத்ததால் ‘எழு நீ’ நிகழ்வை புறக்கணிக்கும் கூட்டமைப்பு

**க.மதி**

வவுனியா நகரத்தின் மத்திய பேருந்து நிலையத்தை சரியான முறையில் கையாண்டு முடிவுகளை எடுத்து செயற்படுத்த தவறியதையடுத்து வவுனியா நகருக்கு வரவேண்டிய ஒரு கோடி ரூபாவை நகரசபை இழந்துள்ளதுடன் பலநூறு பேருக்கு வேலை வாய்ப்புக்களும் இழக்கப்பட்டுள்ளது. பல வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுள்ளது. இவற்றுக்கு காரணமான முன்னாள் வடமாகாண முதலமைச்சரை எவ்வாறு அழைத்து எழு நீ நிகழ்வை நடாத்துவது?

இவ்வாறு நகரசபையின் 8ஆவது சபை அமர்வில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நகரசபை உறுப்பினர் தி. செந்தில் ரூபன் இவ்வாறு கேள்வியை எழுப்பியதுடன் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர்கள் இந்நிகழ்வை புறக்கணிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

முன்னாள் வடமாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரன் தற்போது ஒரு அரசியல் கட்சியின் செயலாளராகவும் செயற்பட்டு வருகின்றார். சபை உறுப்பினர்களைவிட தலைவரின் தன்னிச்சையான முடிவால் 13பேர் வெளியில் இருந்து குழுவிற்கு தெரிவுசெய்யபட்டுள்ளனர். அவர்களது விபரங்கள் சபைக்கு முன்வைக்கப்பட்டு சபையின் அனுமதி பெறப்பட்டிருக்க வேண்டும் அது நடைபெறவில்லை. இது தொடர்பான கலந்துரையாடல், கூட்டங்களிற்கு சரியானமுறையில் அழைப்பு விடுக்கபடவில்லை.

நகரசபையின் பெயரைபயன்படுத்தி நிகழ்விற்கான நிதி சேகரிக்கபட்டுள்ளது. மூத்த முக்கியமான கலைஞர்கள் புறக்கணிக்கபட்டுள்ளனர். ஈபிஆர்எல் எவ், ஈரோஸ் போன்ற கட்சிகளிற்கு ஆலோசனைக்குழுவில் முக்கிய இடம் வழங்கப்பட்டுள்ளது.

முன்னாள் முதல்வர் விக்கினேஸ்வரனை முதன்மை விருந்தினராக கொண்டு வந்திருப்பது, அரசியல் நோக்கத்துடனேயே என்பதை உறுதியாக தெரிவிக்கிறோம். எனவே அரசியல் நோக்கமுள்ள சட்டரீதியற்ற நிகழ்வை நாங்கள் புறக்கணிக்கின்றோம்.

இந்நிலையில் அவரை அழைப்பது அரசியல் சார்ந்ததாகவே காணப்படுகின்றது வவுனியாவிலுள்ள பல அரசியல் கட்சி சாராதவர்களின் பெயர்களை பரிந்துரைத்திருந்தோம் ஆனால் அவர்களில் எவரையும் பிரதம விருந்தினராக பெயர் குறிப்பிடவில்லை. முன்னாள் முதலமைச்சரை பிரதம விருந்தினராக அழைப்பது தொடர்பாக சபையின் விவாதிக்கப்படவில்லை. இந்நிலையில் எவ்விதமான முன்மொழிவுகளையும் சபையில் பெறப்படாமல் அழைப்பதையே நாம் எதிர்க்கின்றோம். எனவே அரசியல் சாராத ஒருவரை அழைத்து நிகழ்வை செயற்படுத்துவதையே நாங்கள் எதிர்பார்க்கின்றோம். இவ்வாறு மேலும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் நகரசபைத்தலைவர் கருத்துத் தெரிவிக்கும்போது,

எழு நீ நிகழ்விற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டு விட்டது இது தொடர்பாக அனைத்து விளக்கங்களும் கொடுக்கப்பட்டுள்ளது கலாபூசணம் விருது பெற்றவர்களுக்கு நகரசபை விருது வழங்குவது என்பது ஏற்றுக்கொள்ள முடியாத விடயம்.

காரணம் கலாபூசணம் விருது இலங்கையில் ஒரு சிறந்த விருது நீண்ட நாட்களின் பின்னர் இவ்வாறு குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது ஏற்றுக்கொள்ள முடியாத வியடம். ஆரம்பத்திலேயே இவ்வாறான ஒரு நிகழ்வு தேவையற்றது என்று தெரிவித்திருக்க வேண்டும். இன்னும் சில தினங்களில் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

தற்போது பிரதம விருந்தினரை மாற்றுவது என்பது சாத்தியமடையாத விடயமாகவே காணப்படுகின்றது ஒருவரை அழைத்துவிட்டு தற்போது நீங்கள் வரவேண்டாம் என்று தெரிவிக்க முடியாது என்று மேலும் தெரிவித்தார்.

## ஹரிஸ்ணவிக்கு நீதி கிடைக்கவில்லை

வவுனியாவில் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் வீட்டில் தனியாக இருந்தபோது பாலியல் வல்லுறவிற்விற்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ள வவுனியா விபுலானந்தா கல்லூரி மாணவியான கெங்காதரன் ஹரிஸ்ணவி 14வயதில் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இந்நிலையில் அவரது வழக்கு விசாரணைகள் வவுனியா நீதவான் நீதிமன்றில் இடம்பெற்று வருகின்றது.

அண்மையில் இவ் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள நிலையில் எவ்வித முன்னேற்றமும் இன்றி எதிர்வரும் 30.04.2019 அன்றைய தினத்திற்கு வழக்கு விசாரணைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக ஹரிஸ்ணவியின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் குறித்து ஹரிஸ்ணவியின் சித்தி மேலும் தெரிவிக்கும்போது,

கடந்த 2016 ஆம் ஆண்டு இரண்டு வருடங்களுக்கு முன்னர் பாலியல் வன்புணர்விற்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ள ஹரிஸ்ணவியின் வழக்கு விசாரணைகளில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. வழக்கு விசாரணைகள் திகதியிடப்பட்டு செல்லப்படுகின்றதே தவிர வழக்கு விசாரணைகளில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. இதனால் காலதாமதம் ஏற்படுகின்றதே தவிர குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை.

இடம்பெற்ற விசாரணைகளின்போதும் சட்டமா அதிபருக்கு இவ்வழக்கு விசாரணையை துரிதப்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த வழக்கு விசாரணைகளின் போதும் இவ்வாறு சட்டமா அதிபருக்கு கடிதம் அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் இன்றும் இதே போலவே தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் வழக்கு விசாரணைகளில் எவ்வித முன்னேற்றங்களும் ஏற்படவில்லை எமது மகளின் படுகொலையுடன் தொடர்புபட்டுள்ளதாக சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபரும் இன்றைய வழக்கு விசாரணைக்காக சமூகமளித்திருந்தார்.

இந்நிலையில் கடந்த இரண்டு வருடங்கள் கடந்த நிலையிலும் இன்று வரையிலும் வழக்கில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை பாலியல் வன்புணர்வு செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட ஹரிஸ்ணவிக்கு நீதி கிடைக்கவில்லை குற்றவாளி சமூகத்தில் நடமாடிக்கொண்டிருக்கின்றார். என்று கண்ணீருடன் மேலும் தெரிவித்துள்ளார்.

## பாதுகாப்பற்ற கருத்தரிப்பை இல்லாதொழிப்போம்; வவுனியாவில் பெண்கள் போராட்டம்








பெண்களுக்கெதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கான சர்வதேச தினத்தினை முன்னிட்டு பெண்களுக்கும் பெண் பிள்ளைகளுக்கும் எதிரான வன்முறைகளை ஒழிப்போம் எனும் தொனிப்பொருளில் டாபிந்து கெலக்டிவ் அமைப்பினரின் ஏற்பாட்டில் வவுனியா இரண்டாம் குறுக்குத்தெருவில் இகவனயீர்ப்பு போராட்டமொன்று இடம்பெற்றதுடன் அதன் பின்னர் நெல்லிஸ்டார் விருந்தினர் விடுதியில் பெண்களுக்கான விழிப்புணர்வு கருந்தரங்கும் நடைபெற்றது.

இந் நிகழ்வில் டாபிந்து கெலக்டிவ் அமைப்பின் பிரதிநிதிகள், டிரான்ஸ்பரன்சி இன்டர்நெஷனல் அமைப்பின் பிரதிநிதி, குடும்பநல உத்தியோகத்தர்கள் வவுனியா மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலுள்ள ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரியும் பெண்கள், பெண்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

ஆடைத்தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்கள் எதிர்கொள்ளும் பால்நிலை வன்முறைகள், பெண்களுக்கு எதிரான வன்முறைகள், அவற்றில் இருந்து எவ்வாறு தம்மை பாதுகாத்து கொள்ளலாம் , தேவையற்ற கர்ப்பங்களை எவ்வாறு தவிர்த்தல், குடும்பத்திட்டமிடல் முறைகள் சட்டவிரோதமான கருக்கலைப்பினால் ஏற்படும் பாதகமான விளைவுகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது

## வலி கிழக்கு தவிசாளர் அலுவலகத்தில் மாவீரர்களுக்காக உறுதியுரை



வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் விடுதலைப்போரில் ஆகுதியாகிய வீரமறவர்கள் நினைவுகூரப்பட்டுள்ளதுடன் தவிசாளர், உப தவிசாளர், உறுப்பினர்கள் உறுதியுரையும் எடுத்துக்கொண்டனர்.

பிரதேச சபையின் தவிசாளர் அலுவலகத்தில் ஒன்று தவிசாளர் மற்றும் வருகைதந்த உறுப்பினர்கள் ஒன்றுகூடினர்.

அக வணக்கத்துடன் ஆரம்பித்த நிகழ்வுகளில் தவிசாளர் தியாகராஜா நிரோஷ், உப தவிசாளார் மகேந்திரலிங்கம் கபிலன் ஆகியோரைத் தொடர்ந்து உறுப்பினர்கள் மெழுகுவர்த்திகளை ஏந்தி மாவீரர்களை அஞ்சலித்தனர்.

அகவணக்கத்தினைத் தொடர்ந்து அஞ்சலிநிகழ்வில் கலந்துகொண்ட பிரதேச சபை உறுப்பினர்கள், தனித்தனியே உறுதியுரை எடுத்துக்கொண்டனர். மாவீரர்களை இந் நாளில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாம் அஞ்சலிக்கின்றோம். மாவீரர்கள் எமது மண்ணுக்காக தம்மையே அர்ப்பணித்தார்கள். உடல் பொருள் ஆவி என சகலவற்றினை எமது மக்களின் விடிவிற்காக அர்ப்பணித்தார்கள். அவர்களை நாம் ஒவ்வொரு துளியும் நாம் நினைவுகூர்ந்து எமது மக்கள் பணியினை அர்ப்பணிப்புடனும் இலட்சியத்துடனும் முன்னெடுப்போம் என உறுதியுரையளித்தனர்.

## வவுனியாவில் குப்பை அகற்றும் நடவடிக்கை ஆரம்பம்

**வவுனியா நிருபர்**

வவுனியா நகரசபையினால் பிரதி ஞாயிற்றுக் கிழமைகளில் விஷேட குப்பை அகற்றும் நடவடிக்கை ஒன்று இடம்பெறவுள்ளதாக நகர உப பிதா சு.குமாரசுவாமி தெரிவித்துள்ளார்.



வவுனியா நகரசபை வேலைப்பகுதி, சுகாதாரப்பகுதி ஊழியர்களின் மாதாந்தக் கூட்டம் நகர உப பிதா தலைமையில் இடம்பெற்றபோது அதில் முடிவெடுக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கும்போது,

வவுனியா நகர சபையினால் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் வீடுகள், தெருக்களிலுள்ள ஏனைய குப்பைகள் அகற்றும் நடவடிக்கை ஒன்று விஷேடமாக ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஏனைய கிழமை நாட்களில் வழமையான அன்றாட குப்பை அகற்றும் நடவடிக்கையில் நகரசபை ஊழியர்களினால் இடம்பெற்று வரும் நிலையில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் இவ்வாறு விஷேடமாக ஒவ்வொரு பகுதிகளைத் தெரிவு செய்து அங்கிருக்கும் ஏனைய குப்பைகளை அகற்றுவதற்குரிய நடவடிக்கை இடம்பெறவுள்ளது.

இதற்கென நீளமான உழவு இயந்திரப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளது. இதனைப்பயன்படுத்தி வைரவப்புளியங்குளம் பகுதியில் இவ்விஷேட குப்பை அகற்றும் நடவடிக்கை மேற்கொள்ளபடவுள்ளது.

இந்நடவடிக்கை தொடர்ச்சியாக ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் இடம்பெறவுள்ளது. எனவே பொதுமக்கள் தமது அன்றாட குப்பைகளை விட்டு ஏனைய குப்பைகளை குப்பை அகற்ற வரும் ஊழியர்களிடம் வழங்கி நகரசபை ஊழியர்களுக்கு ஒத்துழைப்புக்களை வழங்குமாறு மேலும் தெரிவித்துள்ளார்.











**கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் 25 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்களின் பங்கு பற்றலுடன் உணர்வுபூர்வமாக மாவீரர் தினம் நினைவேந்தப்பட்டது. கனகபுரம் பகுதியில் அமைந்துள்ள மாவீரர் தின நிகழ்வில் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பெருமளவான மக்கள் கலந்து கொண்டனர். இருபத்தைந்து ஆயிரத்திற்கு அதிகமான மக்களின் பங்கு பற்றலுடன் குறித்த நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது. இதன் போது பிரதான சுடரினை மாவீரர் பிரிகேடியர் தீபனின் தந்தையான வேலாயுதம் பிள்ளை அவர்கள் ஏற்றி வைத்தார். தொடர்ந்து மாவீரர்களின் நினைவு சுடர்களை மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் ஏற்றி உணர்வு பூர்வமாக கடைப்பிடித்தனர்.**

# குழந்தை காட்டிய காதலி

பழைய நினைவை மீட்டுக்கொண்டு உறங்கியதால் காலையில் தாமதமாக எழநேரிட்டது வழமைக்கு மாறாக பேருந்து கூட நேரத்துக்கு மாறாக வந்து போய்விட்டது தனியார் வாகனமொன்றில் அலுவலகம் சென்றேன் அங்கு அதிகாரி வாகனம் நிறுத்த பட்டு இருந்தது.

இது என்னடா இண்டைக்கு நேரத்தோடு இந்த மனிசன் வந்திருக்கான் என்று எண்ணிய படி உள்நுழைகிறேன் வார்த்தைகளை உதறித்தள்ளுகின்றார் குனிந்த படி நின்றேன் போய் இரு என்றவுடன் இருக்கையில் அமர்ந்தேன்

முக நூல் பக்கத்தை திறந்தால் தினகரன் மாமாவின் புதினங்களை பார்த்து விட்டு திரும்புகின்றேன் எருமை மாடாட்டம் அதிகாரி தலையை அசைத்தபடி செல்கின்றார் .என்ன சகுனம் டா எதை செய்தாலும் தவறாகவே இருக்கிறதே யென்று முணுமுணுத்துக் கொண்டே வேலையைத்தொடங்கினேன் அன்று என்னவோ தெரியல எதை செய்தாலும் தவறாகவே இருந்தது அன்றைய காலை இனிமையாக இரா விட்டால் சூனியத்தால பாதிக்கப்பட்டவர்கள் போல தான் இருக்கும்

லீசிங் போட்டாவது ஒரு வைக் வாங்க வேண்டும் என புலம்பியே பேரூந்தை பார்த்து நிற்கின்றேன் அடிச்சி புடிச்சி ஏறினேன் பின்னால போங்க என்று நடத்துனர் கத்திக்கொண்டு இருக்கின்றான் அந்த நேரம்

குழந்தையின் அழுகையை தாய் எவ்வளவோ முயற்சி செய்தும் அழுகையை நிறுத்துவது போல இல்லை எனது கையடக்க தொலை பேசியும் அழுகிறது யாரென பார்க்கையில் குழந்தை கைபேசியை கண்டு அழுகையை நிறுத்தி விட்டது பைக்கேற்றில் வைக்க மீண்டும் அழுகின்றது

அழுகையை நிறுத்த குழந்தையிடம் கைபேசி கைமாறுகின்றது ஆனந்தத்தில் மூழ்கின்றது குழந்தை

சிந்தனை திசை மாறுகின்றது தரிப்பிடம் வந்ததும் இறங்கிய பின் கைபேசியைத்தேடுகின்றேன். ஒகோ குழந்தையிடம் கொடுத்ததை திரும்பப் பெற வில்லையே சங்கடத்துடன் வீட்டுத்தொலை பேசியில் அழைப்பை ஏற்படுத்தினேன் பேசியது எனது கைபேசி மழலை கலந்த மங்கைக்குரலொன்று.

அக்கா இது என்னுடைய போண் தான் உங்க குழந்தை அழுகையை நிறுத்த கொடுத்தேன் மறந்து இறங்கி விட்டேன் ..

அய்யோ என் குரல் உங்களுக்கு அக்கா குரல் போலவா தெரிகிறது நான் குழைந்தையின் சித்தி ..ஒ..ஒ... சாரிங்க

நான் சொல்லும் இடத்துக்கு வந்து எடுத்து போங்கள் என்றாள்

சரி நான் நாளை வாறேன் என்றேன் !

**மட்டுநகர் கமல்தாஸ்**

அவர்களின் முகவரியைச்சொன்னாள்

எனது வீட்டு தொலைபேசிக்கு அழைப்பு வந்தது

அதே குரல் அழைத்தது ஆனால் வேறு இலக்கம் பெயரை தெரிந்து கொள்வதற்காக

ஹலோ யார் நீங்க ?

நான் உங்க தொலை பேசி வைத்திருக்கும் ஆள் என்றாள்

உங்கள் பெயர் ? அது தேவையில்லை

இன்று வருவதாக சொன்னீங்க வரவில்லையே என்று தான் கால் பண்ணினேன் .

வேலை அதிகமானதால் வர முடிய வில்லை நாளைக்கு நிச்சயமாக வருவேன் என்றேன்

நான் குறுந்தகவல் போட்டு இருந்தேன் நாளை வருவேனென்று நீங்கள் பார்க்க வில்லையா ?

நீங்க உங்க போணுக்கு லாக் போட்டு இருக்கீங்க எப்படி பார்ப்பது என்றாள்

ஒ...ஒ... மறந்திட்டேன் ..என் இதயத்துக்குள் செல்ல இந்த கடவுச்சொல்லை அழுத்தி உள்நுழையுங்கள் என்றேன்.

உங்களுக்கு அதிகம் சிரமம் போல என்று வினாவினேன் உடனே !ஆமாம் உங்கள் போண் அதிகம் அழுகின்றது நீங்கள் இல்லமால் சிரமமாகத்தான் உள்ளது என்றாள்

அப்படியா? என்று என் தொடர்பை துண்டித்து விட்டேன் .

நாளை கண்டிப்பாக போக வேண்டும் எனது கைபேசியை எடுப்பதை விட அந்த அழகிய குரலுக்கு சொந்தமானவளை காண ஆவல் அதிகமாகிறது

மறு நாள் காலை.

அவர்களுடைய வீட்டுக்கு சென்று இருந்தேன் உப சரிப்பு அன்பாயிருந்தது.

அழகிய குரலுக்கு சொந்தமானவளைக்கண்டவுடன் அடையாளம் கண்டு விட்டேன்.

பிடியுங்கள் உங்கள் இதயத்தை என்றாள்.

மெல்ல சிரிப்போடு பெற்றுக்கொண்டேன்.

இதயமோ இடமாறி விட்டது அந்த அழகு வதனத்திலும் அன்பு உபசரிப்பிலும் நான் சொன்ன வார்த்தையை சில மாற்றங்களுடன் தகவல் அனுப்பியிருந்தாள் உங்கள் இதயத்துக்குள் நுழையச்சொன்னீங்க நுழைந்தேன் ஆனால் என்னால் திரும்ப வரமுடிய வில்லை எப்படி வருவது என சிணுங்கல் சிரிப்போடு வந்திருந்தது உள்பெட்டிக்குள் ஒரு சேதி.

கைபேசிக்காரி காதலியானாள் காதலுக்கு வழியமைத்த கைக்குழந்தை கடவுளானது.

அன்று போல் என்னால் அலைபேசியை தவறி விட்டு இருக்க முடியவில்லை அந்த குரலோடு கலந்து விட்டுகிடந்தது எனது வாழ்க்கை.

நான் ஒரு வைக் வாங்கிய முதல் நாள் அவளை முதல் முதல் ஏற்ற வேண்டும் என மனம் உத்தரவு இட்டது அதற்காக அவளை சந்தித்தேன் அவர்கள் ஊரின் கோயிலில் வைக்குக்கு பட்டுக்கட்டிய பின் இருவரும் ஒரு இனிமைப் பயணம் சென்றோம் கடற்கரையில் கைகோர்த்து நடக்கும் காதலர்களானோம் அலையை அவள் கால் தொடும்போது அவள் என் கரத்தினை இறுக பிடித்திருந்தாள் அந்த நேரம் என் மனதுக்குள் ஒரு சத்தம் இது போன்று என்னை கைவிடாது பிடித்துகொள்வாயா? என கேட்டது சமுத்திரத்தை சாட்சியாக்கி சத்தியம் செய்தேன் மனதுக்குள் உன்னை பார்த்துக்கொள்வேன் என்று அதன் பிறகு வராத பிரச்சனைகள் இல்லை எல்லாமே தோர்த்துப்போனது உண்மையான காதலிலிருந்து.

காதலியை காட்டிய குழந்தை தான் எங்களுடைய குழந்தைக்கு விளையாட்டுக்காட்டுகின்றது.

# கற்பித்தலில் உளவியல் பற்றிய அறிவு ஆசிரியருக்கு அவசியமா?

கல்வி உளவியலின் முக்கிய நோக்கம் உளவியல் எண்ணக்கருக்களையும் ஆய்வு முறைகளையும் கொண்டு கற்றல் கற்பித்தல் பிரச்சனைகளை ஆராய்தாகும். இதன் காரணமாக இவ்வுளவியலின் மையப்பொருள் கற்றல் ஆகும். கல்வி உளவியல் திறமையான கற்றலுக்கு தேவையான பொருத்தமான நிலைமைகளை உருவாக்க முற்படுகின்றது.

முறைசார் கற்பித்தலின் முதல் படி ஆசிரியர்களே ஆகும். அந்தவகையில் மாணவர்களின் உளம் பற்றி அறிந்து கொண்டு அதற்கு ஏற்றவண்ணம் கல்வியை வழங்குவதற்கு கற்பித்தலுக்கான உளவியல் பற்றிய அறிவு ஆசிரியருக்கு அவசியமானதாகும். ஆசிரியரது பணி பிள்ளையின் உள செயற்பாட்டுடன் தொடர்புறுகிறது அவர் பெற்றோர் போன்று பிள்ளைகளை காப்பவர். என்ற அர்த்தத்தோடு குறிப்பிடப்படுகின்றார். ஆசிரியர் பாடசாலையில் தந்தையாக அல்லது தாயாகச் செயற்பட நேரிடுவதுண்டு. அப்பொழுதுதான் மாணவர்களின் உளவியல் ரீதியான விடயங்களை ஒரு ஆசிரியர் என்ற வகையில் அறிய முடியும்.



உதாரணமாக ஓர் ஆசிரியர் 40 பேருக்கு தாயாகும் போது முகம் கொடுக்கும் பாரதூரமான சந்தர்ப்பங்களில் பிள்ளைகளில் உளத்தாக்கம் ஏற்படாத விதத்தில் செயற்பட வேண்டும். உளவியல் சாடர்ந்த அறிவு வேறு எந்த ஒரு தொழிலிலும் அவ்வளவு தூரம் செல்வாக்கு பெறுவதில்லை.

ஆசிரியர் தமது கற்பித்தலின் போது சில உளவியல் அறிவுகளை பயன்படுத்த வேண்டியவர்களாக உள்ளார்கள். பிள்ளைகளின் மூலாதர தேவைகள்இ அவர்கள் நடத்தையை பாதிக்கும் பல்வேறு காரணிகள்இ அவர்களின் உடல்இ உளஇ மனவெழுச்சிஇ சமூக விருத்திகளின் இயல்புகள் பற்றியும் எப்படி அவர்கள் கற்கின்றனர்இ எவ்வகையான சூழல்கள் அவர்களின் கற்றலைத் தூண்டக்கூடியன என்பன பற்றியும் ஓர் ஆசிரியர் அறிந்திருக்க வேண்டும்.

அந்தவகையில் பிள்ளையின் மூலாதாரமான தேவை என்று பார்க்கின்ற போது ஒரு பிள்ளைக்கு சிறந்த அறிவுஇ வினைத்திறனான திறன்இ சிறந்த மனப்பாங்கு என்பனவற்றை ஏற்படுத்த வேண்டும். எடுத்துக்காட்டாக ஒவ்வொரு மாணவணினது அறிவுஇ திறன்இ மனப்பாங்கு என்பன வேறுபட்ட தன்மை கொண்டு காணப்படும். அதாவது மணவன் எந்த வழிகளில் அறிவை பெறலாம் என்று அந்த வழிகளை ஆசிரியர்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். சிறந்த முறையில் கற்றலை விளங்கிக் கொண்டு அதற்கான பயனையும் இலக்கையும் அடையும் மனப்பாங்கினை உருவாக்க வேண்டும். இந்தவகையில் கற்பித்தல் உளவியலானது வகுப்பறை ஆசிரியர்களுக்கு அவசியமான ஒன்றாகவே காணப்படுகின்றது. உதாரணமாக தற்காலத்தில் தேடிக்கற்கும் வாய்ப்பினை பல்கலைக்கழகங்களில் ஏற்படுத்தபட்டுள்ளது. இதனால் மாணவனின் அறிவாற்றல் வளர்க்கப்படுகின்றது.

மேலும் அவர்களுடைய நடத்தையை பாதிக்கும் பல்வேறு காரணிகள் காணப்படுகின்றது. அந்தவகையில் அகக்காரணிஇ புறக்காரணி என பிரித்து பார்க்க முடியும். அதற்கு ஆதாரமாக ஒரு மாணவன் இடைவிலகி சென்றுள்ளான் என்றால் அதற்கு குடும்ப சூழல் ஒரு காரணமாகவும் மனதளவில் ஏதோ ஒரு விடயத்தில் பாதிப்புக்கு உட்பட்டு இருந்தால் அம்மாணவனுக்கு ஏற்பட்ட பிரச்சினையை ஆராய்ந்து அவனுக்கு சரியான தீர்வை பெற்றுக்கொடுத்து கற்பதற்குரிய வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும். எனவே இவ்வாறான பிரச்சினைகளை இணங்கண்டு அதற்கு சரியான தீர்பினை வழங்குதற்கு ஆசிரியருக்கு கற்றலில் உளவியல் முக்கியமான ஒன்றாக காணப்படுகின்றது.

கற்பித்தலில் பாட விடயமே முக்கியமென்று கூறுகின்றார்கள். ஒருஆசிரியர் தனது மாணவருக்கு கணித பாடத்தை கற்பிக்கின்றனர் என வைத்துக் கொள்வோம். இந்நிகழ்ச்சியில் ஆசிரியர் குறித்த மாணவனின் அறிவுஇ திறன்இ மனப்பாங்கு ஆகியவற்றை வளர்ப்பதற்கு கணித பாடத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்துகின்றனர். ஆகவே ஆசிரியர் கணித பாடத்தில் சிறந்த தேர்ச்சி உடையவராயிருத்தல் வேண்டும்.

அத்துடன் இப்படத்தின் மூலம் மாணவவிடம் என்னஎன்;ன மாற்றங்கள் எவ்வாறு ஏற்பாடு செய்யலாம் எனவும் அறிந்திருத்தல் வேண்டும். எனவே ஆசிரியருக்கு பாட அறிவும் அத்துடன் கற்பிக்கும் முறைகளும் முக்கியம் என்பது புலனாகின்றது.

அதனையடுத்து மாணவர்கள் உடல் ரீதியான விருத்தியில் மாறுதல்கள் காணப்படுகின்றன. உதாரணமாக வகுப்பறையில் ஒரு சில மாணவர்கள் கண் பார்வை குறைந்தவர்களாக காணப்படுவார்கள். சிலர் கேட்டல் தன்மை குறைந்தவர்களாக காணப்படுர்கள். இவர்கள் தமக்கு இவ்வாறான பிரச்சினை இருக்க என்பதனை ஆசிரியரிடமோ வெளியிடத்திலோ வெளிப்படுத்த வெட்கப்படுவார்கள். எனவே இதனை கவனத்தில் கொண்டு திரையிலோ அல்லது கரும்பலகையிலோ எழுத்துக்களின் அளவை குறிப்பிட்ட அளவில் கோடுதல் வேண்டும். பேசும்போது சத்தமாக பேசுதல் இல்லாவிட்டால் அதற்கான மின்உபகரணத்தை பயன்படுத்தல் வேண்டும். எனவே இவ்வாறு உடல் ரீதியான மாறுதல்களை அறிய ஆசிரியருக்கு உளவியல் அறிவு அவசியமானதாகும்.

மேலும் மாணவர்கள் உளரீதியாகவும் மனப்பாங்கு ரீதியாகவும் மாறுபட்டவர்களாக காணப்படுகின்றார்கள். அந்தவகையில் மாணவர்களை ஊக்குவித்தல் வேண்டும். மாணவரின் கற்றலிலோ வெளிக்கள செயற்பாட்டிலோ ஊக்கலை ஏற்படுத்தினால் ஒரு செயலை ஊக்கத்துடன் தொடங்குவாரானால் அதில் கூடியளவு முன்னேற்றத்தையடைவான். உதாரணமாக பாடசாலையில் ஒவ்வொரு தவனைப் பரீட்சையிலும் முதலாம்இ இரண்டாம்இ மூன்றாம் இடங்களை பெறுபவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும். என்று அவர்களுக்கு ஊக்கத்தைக் கொடுத்து அவர்கள் அந்த பரிசை பெறுவதற்கு என்றே ஊக்கத்துடன் கற்பார்கள். எனவே சமூகத்தில் சிறந்த நற்பிரடிஇ ஒன்று உருவாக்க ஊக்கல் கற்பித்தல் உளவியலில் முக்கியமுடையதாக காணப்படுகின்றது. ஆகவே கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இது அவசியமான ஒன்றாக அமைகின்றது.

மாணவர் எந்த வேளையைச் செய்தாலும் அதன் இலக்கையும் அதனைச் செய்வதால் என்ன பயன் கிடைக்கும் என்பதனையும் திட்டமாக அறிந்திருத்தல் வேண்டும். வளர்ந்த பிள்ளைகளுக்கு இலக்குகள் சேய்மையில் இருக்கலாம். ஆனால் சிறுவர்களுக்கு அது அவ்வேலை முடிந்தவுடன் அடையக்கூடியதாக கால அண்மையில் இருத்தல் வேண்டும். குறித்த இலக்கை அடைவதற்கு பல படிகள் இருக்குமானால் ஒவ்வொரு படியிலும் வெற்றி பெற்று இறுதி இலக்கை அடையுமாறு கற்றலின் விரைவை மாணவர்கள் கட்டுப்படுத்தவர். அவர்கள் மனம் தளரும் வேளைகளில் ஆசிரியர்கள் போதிய உச்சாகத்தை கொடுக்க வேண்டும். உதாரணமாக சாதாரண தர பரீட்சையில் சித்தி பெற்றால் உயர் தர பரீட்சைக்கு செல்லலாம். அதில் சித்தி பெற்றால் பல்கலைக்கழக அனுமதியைப் பெறல். இவ்வாறு ஆசிரியர் கற்பித்தலில் இலக்கு நோக்கிய மனப்பாங்கை உருக்குதனால் எதிர்காலத்தை ஒரு மாணவன் சிறப்பாக அமைத்துக் கொள்ள முடிகின்றது.

ஆசிரியர்களுக்கு கற்பித்தலில் உளவியல் அறிவு தேவைப்பட காரணமாக அமைவது மாணவர்களின் அடைவுமட்டத்தை மதிப்பீடு செய்வதற்காகும். அந்த வகையில் எவற்றைக் கணிக்க எண்ணப்படுகின்றதோ அவற்றையே கணிப்பிடுமாறும் திட்டமிடப்படல் வேண்டும். அத்தோடு திட்டவட்டமான திட்டம் உருவாக்கப்படல் வேண்டும்;. எடுத்துகாட்டாக வகுப்பறையில் கணிப்பீடு நடைபெறுகின்றது என்றால் ஒரு பாடதிதிட்டம் அனைத்தையும் மேவிபரவியதாக வினாக்களும் செயற்பாடுகளும் அமைக்கப்பட்டு மாணவரின் பங்குபற்றலுக்கு இடமளிக்கப்பட்டு முடிவுகளை தெளிவாக பதிவு செய்தல்.

மாணவர் மரவு வழியில் கொண்டுள்ள ஊக்கிகள்இ தேவைகள் ஆகியன காணப்படுகின்றன. உடன் பிறந்த அகவூக்கிகளுடன் சமூகத்தில் கற்கப்படும் சமூகவூக்கிகளையும் ஆசிரியர் கற்பித்தலில் பொதுவாகப் பயன்;படுத்தலாம்; பிறரிடமிருந்து அன்பையும் கணிப்பையும் பெறுதல்இ தீரச் செயல்களில்திறமையைக் காணபித்தல்இ பிறரால் ஏற்றுக்கொள்ளப்படுதல் ஆகிய சமூகவூக்கிகள் மாணவனின் கற்றலை ஊக்குவன. எனவே கற்பித்தலில் உளவியல் அவசியமாதாகும்.

பிள்ளைகளின் மன அழுத்தம்இ மனப்போட்ட பிரச்சினைகளை கண்டறிய ஆசிரியரிடத்து கற்பித்தல் உளவியல் முக்கியமான ஒன்றாகும். அந்தவகையில் கருமங்களில் ஒருவன் பெறும் வெற்றி தோல்விகள் அவனுடைய ஊக்கத்தை பாதிக்கும் மற்றும் அவா நிலையும் இதனோடு தொடர்புபடுகின்றது. உதாரணமாக பரீட்சையில் 100 புள்ளிகள் பெற முயன்ற மாணவன் 95 புள்ளியை பெற்றாலும் அதனை தோல்வியாகவே கருதுவான். ஆனால் 50 புள்ளிகள் பெற முயன்ற மாணவன் 50 புள்ளிகளைப் பெற்றாலே அதனை பெரும் வெற்றியாகவே கருதுவான். இங்கு வெற்றி என்பது வெகுமதி தோல்வி என்பது தண்டனையாகும். இவ்வாறான மனப்போராட்டங்கள் ஏற்படுத்தப்பட்டு தோல்வியில் சில மாணவர்கள் துவண்டு விடுகின்றார்கள். இவ்வாறு இல்லாமல் தோல்வியின் அடுத்த படி வெற்றி என மாணவனுக்கு மனத்தையிரியத்தை கொடுத்து மனப்போராட்டத்தில் இருந்து விடுவிக்க கற்றலில் உளவியல் அவசியமானதாகும்.

அத்துடன் முதிர்ச்சியும் கற்றலும் ஒன்றையொன்;று சார்ந்த நிகழ்ச்சிகளாகும். பிள்ளைகள் குறித்த விடயத்தை கற்பதற்கு வேண்டிய உடல்இ உளஇ மனவெழுச்சி முதிர்ச்சிகளைக் கொண்டு அதற்குரிய ஆயத்த நிலையை அடையாத போது அவ்விடயத்தை கற்பிப்பதில் பயனில்லை. எல்லோரும் ஒரே வேகத்தில் முதிர்வடைவதில்லை. என்பதையும் வகுப்பிலுள்ள மாணவர்கள் ஒரே வயதுடையவர்களானாலும் அவர்களிடத்தில் தனியாள் வேறுபாடுகள் உண்டென்பதையும் ஆசிரியர் அறிந்திருத்தல் நன்று. உதாரணமாக சில மாணவர்கள் கலைப்பிரிவையும் சில மாணவர்கள் விஞ்ஞானப்பிரிவையும் நாடிச் செல்கின்றார்கள். இது தனியாள் ஒருவனின் வேறுபாடுகளான கற்றல் உபாயங்கள்இ அணுகுமுறைகள்இ கற்றலுக்கான திறன்கள் என்பனற்றின் அடிப்படையில் பிரிக்கப்படுகின்றது. இவ்வாறான தனியாள் வேறுபாடுகளை அறிய ஆசிரியர்களுக்கு கற்பித்தலில் உளவியல் அவசியமானதாகும்.

மாணவனின் முன்னேற்றத்தில் அவர்களின் அவாநிலைகள் முக்கிய இடம்பெறுவதாகவும் அவர்கள் ஏற்படுத்தும் அவாநிலைகள் பல்வேறு காரணிகளில் தங்கியுள்ளதாகவும் ஆய்வுகளில் அறியப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக பொருளாதார வசதி குறைந்த மாணவருக்கு உயர் நிலைப் பள்ளியில் கற்பதற்கு கிடைக்கும் வாய்ப்பே பெரிய வெற்றியாக இருக்கும். ஆனால் பணவசதியுள்ள மாணவருக்கு அது ஒரு பொருட்டாக தோன்றாது. அவர்களுக்குப் பல்கலைக்கழகக் கல்வியே ஓரளவு திருப்தியான குறிக்கோளாகயிருக்கும். இவ்வாறு மாணவனின் பல்வேறு பின்னனிக் காரணிகளைப் பொறுத்தே அவாநிலைகளும் அமையும். ஒவ்வொருவரும் தமது ஆற்றல்இ தகைமைஇ வசதி ஆகியவற்றுக்குக் ஏற்றவாறு அவாநிலைகளை அமைப்பதாலேயே முன்னேற்றமுண்டு ஆற்றலுக்கு அப்பாற்பட்ட அவாநிலைகளால் தேல்வியே ஏற்படும். இவற்றை ஆசிரியர் மனதில் வைத்து மாணவர் அவாநிலைகளை ஏற்படுத்துவதில் ஆசி;ரி;யர் வழிகாட்ட வேண்டும் எனவே ஆசிரியருக்கு கற்பி;த்தலில் உளவியல் அவசியமானதாக அமையும்.

தனது மாணவரை ஆசிரியர் புரிந்து கொள்வது அவசியமாகும் மாணவர்ன் திறன்கள்இ அடைகள்இ வீட்டுச்சுழல் ஆகிய தரவுகளை ஆசிரியர் பெற்று அவர்களை புரிந்துகொண்டாலேயே அவர்களின் தராதரத்திற்கு ஏற்றவாறு கற்பிக்க முடியும். ஒவ்வெருவரையும் தனித்தனியே கற்பிப்பது சிரமமெனினும் ஆசிரியர் சில உத்திகளை கையாளலாம். வகுப்பறையில் திறமைக்கேற்ற ஒவ்வொரு பாடத்திற்கும் சிறு சிறு தொகுதிகளை ஆக்கி அவற்றுகேற்ப கற்றற் பணிகளை கொடுக்கலாம் குறைபாடு உடையோரை இனங்கண்டு அவர்களுக்கு ஏற்றவாறு உதவிகளை வழங்க வேண்டும் வீட்டு வேலைகளும் வெளிக்கள வேலைகலும் தனி வேறுபாடுகளுக்கு ஏற்றவாறு கொடுக்கப்பட வேண்டும்.

மேலும் மாணவர்களின் அறிவுஇ திறன்இ மனப்பாங்கு என்பனவற்றை நவீன யுகத்தை கருத்தில் கொண்டு வளர்ப்பதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். ஆசிரியர் பாடத்திட்ட வரையறையில் இருந்து சற்று வெளியே சென்று மாணவர்களுக்கு மேலதிக அறிவை வழங்க வேண்டும். ஆகவே வகுப்பறை ஆசிரியருக்கு கற்பித்தலில் உளவியல் அவசியமாகும்.

**த.சபிதா**
**கல்வியியல் சிறப்பு கற்கை**
**கல்வி பிள்ளை நலத்துறை**
**கிழக்கு பல்கலைக் கழகம்**




# விஜயின் சவால்

நீங்கள் இணையத்தில் கசியவிட்டும்கூட படம் ப்ளாக் பஸ்டர் ஹிட் அடித்திருக்கிறது. எங்ககிட்ட மோதாதீங்க என 'டாக்ஸிவாலா' வெற்றி விழாவில் பேசியுள்ளார் நடிகர் விஜய் தேவரகொண்டா.

தெலுங்கில் விஜய் தேவரகொண்டா நடிப்பில் நவம்பர் 17-ம் தேதி வெளியாகியுள்ள படம் 'டாக்ஸிவாலா'. ராகுல் சங்கிரிட்யான் இயக்கியுள்ள இப்படத்தை, ஃபன்னி வாஸ், வம்சி கிருஷ்ண ரெட்டி மற்றும் பிரமோத் இணைந்து தயாரித்துள்ளனர்.

இப்படத்துக்கு கிராபிக்ஸ் பணிகள் அதிகமாக இருந்ததால், நீண்ட நாட்களாகத் தயாரிப்பில் இருந்தது.

ரிலீஸுக்குத் தயாரான நிலையில், யாரும் எதிர்பாராத விதமாக 'டாக்ஸிவாலா' படம் இணையத்தில் திருட்டுத்தனமாக வெளியிடப்பட்டது. பல மாதங்களுக்கு முன்பே இப்படம் எங்கள் கையில் வந்தது. படம் திரைக்கு வந்து 2 வாரங்கள் கழித்து வெளியிடலாம் என்ற எண்ணத்தில் தான் இருந்தோம்.

சிலரது செயல்பாடுகளால் இப்போதே வெளியிட்டு விட்டோம். இதற்கு வருந்துகிறோம் என்று இப்படத்தை வெளியிட்ட தமிழ் ராக்கர்ஸ் குழு இணையத்தில் தெரிவித்திருந்தது.

இதனால், படக்குழு மட்டுமல்ல, ஒட்டுமொத்த தெலுங்குத் திரையுலகமே அச்சத்தில் உறைந்தது. படம் திட்டமிட்டபடி ரிலீஸ் செய்யப்பட்டது. ஆனால், எதிர்பார்த்ததைவிட படம் ஹிட்டானது. இதனைக் கொண்டாடும் வகையில், வெற்றி விழா நடந்தது. அதில் பேசிய விஜய் தேவரகொண்டா, நான் திரும்பி வருவேன் என்று சொன்னால் நிச்சயமாக வருவேன். எங்கள் படத்தை இணையத்தில் கசியவிட்ட ராக்கர்ஸ், ரூலர்ஸ் எல்லோரும் மன்னித்துவிடுங்கள். எங்களுடன் மோதாதீர்கள். நீங்கள் லீக் செய்தும்கூட படம் ப்ளாக் பஸ்டர் ஹிட் ஆகியிருக்கிறது என்றார்.

மேலும், படங்கள் திரைக்கு வருவதில் நிலவும் பொதுவான சிக்கல்கள் குறித்துப் பேசினார்.

'டாக்ஸிவாலா' இணையத்தில் லீக் ஆனபோது துணைநின்ற அனைத்து திரை நட்சத்திரங்களுக்கும் நன்றி கூறினார்.



# நாயகனாகும்

நிகழ்ச்சி தொகுப்பாளராக பணியாற்றி வரும் ரியோ, தமிழ் திரையுலகில் நாயகனாக அறிமுகமாகிறார். இப்படத்தை சிவகார்த்திகேயன் தயாரிக்கிறார்.

'சிவகார்த்திகேயன் புரொடக்‌ஷன்ஸ்' என்ற தயாரிப்பு நிறுவனம் தொடங்கி படங்கள் தயாரிக்கத் தொடங்கியிருக்கிறார் சிவகார்த்திகேயன். முதல் படமாக அருண் ராஜா காமராஜ் இயக்கத்தில் உருவாகியுள்ள 'கனா' படத்தை தயாரித்திருக்கிறார். இப்படம் டிசம்பர் வெளியீடாக திரைக்கு வரவுள்ளது.

தற்போது 2-வது படத்தின் தயாரிப்பைத்
சிவகார்த்திகேயன். இதில், விஜய் தொலைக்க
தொகுப்பாளராக முன்னணியில் இருக்கும் ரி
நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

இப்படத்தை 'ஸ்மைல் சேட்டை' யூ-டியூ
கார்த்திக் இயக்கவுள்ளார். இவரது இயக்கத்தி
படம் இது. இதன் படப்பிடிப்பு பூஜையுடன்
தொடங்கப்பட்டுள்ளது.

நாயகியாக ஷெரின், நாசர், ராதாரவி, ஆர்.
உள்ளிட்டோர் ஒப்பந்தம் செய்யப்பட்டு இருக்கி
திவாளராக யு.கே.செந்தில்குமார், எடிட்டராக
பணிபுரியவுள்ளனர்.

நிகழ்ச்சி தொகுப்பாளராக இருந்து தான் பட
முன்னேறி தற்போது முன்னணி நாயகனாக வ
வகார்த்திகேயன். அதைப் போலவே, இப்போது
நிகழ்ச்சி தொகுப்பாளரையும் நாயகனாக்கி அழ
றார்.




# ராஜமௌலியின் அடு

'பாகுபலி' படத்துக்குப் பிறகு தனது அடுத்
சரண், ஜூனியர் என்.டி.ஆர். என்ற இரண்டு முன்
இதன் படப்பிடிப்பு கடந்த நவம்பர் 19-ம் தே
புகைப்படத்தை வெளியிட்டு, அதனை உறுதிப்ப
கதை விஜயேந்திர பிரசாத், எடிட்டர் ஸ்ரீகர் பிர
சாபு சிரில், கிராபிக்ஸ் சூப்பர்வைசர் ஸ்ரீனிவாஸ்
மற்றும் இயக்குநர் எஸ்.எஸ்.ராஜமௌலி என்று
இன்னும் பெயரிடப்படாத இந்தப் படம், தற்
முதல் எழுத்தைச் சேர்த்து இப்படி அழைத்து வரு
இந்நிலையில், 'ராம ராவண ராஜ்யம்' என இ
படுத்தி எடுக்கப்படும் இந்தப் படத்தில், ராம் சர
ஆனால், அதிகாரபூர்வ அறிவிப்பு இன்னும் வெ
'பாகுபலி' படத்தின் 2 பாகங்களுக்குப் பிறகு
பார்ப்பு ஏற்பட்டுள்ளது.









# விஸ்வாசம் 'தூக்கு' துரை

# காஜல் பட சிக்கல்

காஜல் அகர்வா
துள்ள தெலுங்கு பட
இதில் பெல்லம்கொ
நிவாஸ் ஹீரோ. மற்
யினாக மெஹ்ரின் ந
வில்லன் வேடத்தில்
நீல்நிதின் முகேஷ் ந
றார். சீனிவாஸ் மாமி
யுள்ளார்.

இந்த படம் டிசம்
திரைக்கு வரும் என
கப்பட்டது. இந்நிலை
காரணங்களால் பட
தள்ளிப்போகிறது எ
வட்டாரத்தில் தகவ

ஆனால் இதை ப
மறுத்துள்ளது. படத்
எதுவும் இல்லை. தி
7ம் தேதி திரைக்கு வ
தெரிவிக்கப்பட்டுள்ள

# 'அக்னி தேவ்' அரசியல்



'அக்னி தேவ்' படத்தின் ட்ரெய்லரில் இடம்பெற்றுள்ள வசனம் குறித்தும் அந்தப் படம் குறித்தும் பேசியிருக்கிறார் இயக்குநர் ஜான் பால் ராஜன்.

'சென்னையில் ஒருநாள் 2' படத்தின் இயக்குநர் ஜான்பால் ராஜன், தற்போது சாம் சூர்யா என்பவருடன் இணைந்து, 'அக்னி தேவ்' என்ற படத்தை இயக்கியிருக்கிறார். பாபி சிம்ஹா, ரம்யா நம்பீசன், மதுபாலா மற்றும் பலர் நடித்திருக்கும் இந்தப் படத்தின் ட்ரெய்லர் கடந்த சில தினங்களுக்கு முன் வெளியானது. படத்தின் அரசியல் வசனங்கள் அரசியல்வாதிகளை நேரடியாகவே குறிப்பிடும் விதத்தில் இருக்கவே, படம் குறித்து இயக்குநர் ஜான்பால்;

'சென்னையில் ஒருநாள் 2' படத்தின்போது நானும் எழுத்தாளர் ராஜேஷ் குமாரும் இணைந்து 'அக்னி தேவ்'படத்தின் ஒன்லைன் கதையை உருவாக்கி வெச்சிருந்தோம். ராஜேஷ் குமார் எழுதிய ஒரு நாவலை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கிய ஒன்லைன் அது. இப்படத்தை, நானும் குறும்பட இயக்குநர் சாம் சூர்யாவும் சேர்ந்து இயக்கியிருக்கோம். இவர் என் உறவினர். 'நாளைய இயக்குநர்' நிகழ்ச்சியில் கலந்துகொண்டு விருதுகள் வென்றவர். 'சென்னையில் ஒருநாள் 2' படத்தையே நானும் இவரும் சேர்ந்துதான் இயக்குவதாக இருந்தது. அது முடியாம போச்சு. இப்போ, 'அக்னி தேவ்' மூலமா அது சாத்தியமாகியிருக்கு. படத்துல, குரு என்ற கேரக்டரில் பாபி சிம்ஹா நடிச்சிருக்கார். அவரைத் தவிர வேற யாரையும் இந்தக் கேரக்டருக்காக நாங்க அப்ரோச் பண்ணலை.

படத்துல வர்ற சகுந்தலா தே
நல்லாயிருக்கும்னு தோணுச்சு.
அவங்க நெகட்டிவ் கேரக்டர் ப
அப்ரோச் பண்றப்போ, அவங்க
கிடைச்சா, நடிக்கலாம்னுதான் இ
சொன்னதும், உடனே ஓகே செ
மூணு விதமான சாயலை வெளி
இந்தக் கதைக்கு முக்கியமான கே
படத்துக்காக அவங்களுக்கு விரு
உழைச்சிருக்காங்க. ஒரு காட்சியை
வாங்க. படத்துல, சகுந்தலா தேவி
இருந்தாலும், ஹீரோவா இந்தப்
சிம்ஹா.

'குந்தலா தேவி கேரக்டர் ஒரு
வுபடுத்துதே.

ட்ரெய்லரைப் பார்த்துட்டு பல
லலிதா அம்மாவை ஞாபகப்படுத்
தவறான கண்ணோட்டம். ஏன்னா
படத்துலகூட சகுந்தலா தேவி கே
ணியில ஜெயலலிதா, இந்திரா க

## ...ம் ரியோ

...தொடங்கியுள்ளார்
...ாட்சியில் நிகழ்ச்சி
...யா, நாயகனாக

... சேனல் புகழ்
...ல் உருவாகும் முதல்
...சென்னையில்

...ஜ.விக்னேஷ்காந்த்
...றார்கள். ஒளிப்ப
...லிஃபர் ஆகியோர்

...டப்படியாக
...ம் வருகிறார் சி
...து மற்றொரு
...குப் பார்த்திருக்கி

## 'மாநகரம்' இயக்குநருடன் கார்த்தி



கடந்த வருடம் (2017) மார்ச் மாதம் வெளியான படம் 'மாநகரம்'. லோகேஷ் கனகராஜ் இயக்கிய இந்தப் படத்தைத் தொடர்ந்து தன்னுடைய இரண்டாவது படத்தின் பணிகளில் கவனம் செலுத்தி வருகிறார் லோகேஷ் கனகராஜ். இந்தப் படத்தையும் எஸ்.ஆர்.பிரகாஷ் பாபு மற்றும் எஸ்.ஆர்.பிரபு இருவரும் தயாரிக்கின்றனர். இதில் கார்த்தி ஹீரோவாக நடிக்கலாம் என்று கூறப்படுகிறது. விரைவில் அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கார்த்தி தற்போது அறிமுக இயக்குநர் ரஜத் ரவிசங்கர் இயக்கத்தில் நடித்து வருகிறார்.

இதில் கார்த்தி ஜோடியாக ரகுல் ப்ரீத்சிங் நடிக்கிறார். இந்தப் படத்துக்குப் பிறகு லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் நடிப்பார் கார்த்தி என்று கூறப்படுகிறது.

## ...த்த படம்

...த படத்தின் கதை விவாதம் மற்றும் முதற்கட்டப் பணிகளில் கவனம் செலுத்தி வந்தார் ராஜமௌலி. ராம் ...னணி தெலுங்கு நாயகர்களை இணைத்து இயக்கப் போவதாக முதலில் அறிவித்தார்.

...தி தொடங்கியது. ராம்சரண், ஜூனியர் என்.டி.ஆர் ஆகியோருடன் படப்பிடிப்பு தளத்தில் தான் இருக்கும் ...டுத்தினார் ராஜமௌலி.

...ரசாத், ஒளிப்பதிவாளர் கே.கே.செந்தில்குமார், இசையமைப்பாளர் கீரவாணி, தயாரிப்பு வடிவமைப்பாளர் ... மோகன், ஆடை வடிவமைப்பாளர் ரமா ராஜமௌலி, வசனம் சாய் மாதவ் புரா - கார்க்கி, திரைக்கதை ...படத்தின் தொழில்நுட்பக் குழுவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

...்போது 'ஆர்.ஆர்.ஆர்.' என்று அழைக்கப்பட்டு வருகிறது. இரண்டு நாயகர்கள் மற்றும் ராஜமௌலியின் ...கின்றனர்.

...ந்தப் படத்துக்குத் தலைப்பு வைக்கப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. ராமாயணத்தை மையப் ...ண் ராமனாகவும், ஜூனியர் என்.டி.ஆர். ராவணனாகவும் நடிக்கின்றனர் என்றும் தகவல் கிடைத்துள்ளது. ...ியாகவில்லை.

... ராஜமௌலி இயக்கத்தில் உருவாகும் படம் என்பதால், இப்படத்துக்கு இந்திய அளவில் பெரும் எதிர்

## இம் முறையும் கனவு கைகூடவில்லை



தளபதி 63ல் தான் நாயகியாக நடிக்கவில்லை என நடிகை ராஷ்மிகா வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார். சர்கார் படத்தைத் தொடர்ந்து அட்லி இயக்கத்தில் புதிய படமொன்றில் நடிக்க இருக்கிறார் நடிகர் விஜய். அட்லியின் இயக்கத்தில் அவர் நடிக்கும் மூன்றாவது படம் இது என்பதால், ரசிகர்களிடையே அதிக எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

இப்படத்தில் நயன்தாரா நாயகியாக நடிப்பது ஏற்கனவே படக்குழுவால் உறுதி செய்யப்பட்டு விட்டது. இரண்டாவதாக வேறொரு நடிகையும் நடிக்கவுள்ளதாக தெரிகிறது. அது தெலுங்கு நடிகை ராஷ்மிகா தான் என சமூகவலைதளங்களில் ஒரு தகவல் வைரலானது.


ஆனால், அது உண்மையில்லை டிவிட்டர் பக்கம் வாயிலாக நடிகை ராஷ்மிகா விளக்கமளித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில், 'தமிழ் ரசிகர்களின் அன்புக்கு நன்றி, விஜய்யுடன் நடிக்கும் கனவு இந்த முறை நிறைவேறவில்லை. விரைவில் அங்கு (தமிழில்) அறிமுகமாவேன்' என அவர் தெரிவித்துள்ளார். ராஷ்மிகாவின் இந்தப் பதிவால் அவரது ரசிகர்கள் பெரும் வருத்தம் அடைந்துள்ளனர். விஜய் படம் மூலமாக அவர் தமிழில் அறிமுகமாவார் என ஆசையாக இருந்தனர். ஆனால், அது பொய் என ஆகிவிட்டதால், விரைவில் அவர் தமிழில், அதுவும் விஜய் ஜோடியாக அறிமுகமாக வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து வருகின்றனர். ராஷ்மிகா தெலுங்கில் வெற்றிப்படமான கீதாகோவிந்தம் படத்தில் விஜய் தேவர்கொண்டா ஜோடியாக நடித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மீ டூ நடிகை ஒருவருக்கு பட வாய்ப்புகள் வந்து குவிய காரணம் இருக்கிறதாம். அண்டை மாநிலத்தில் உள்ள பிரபலங்கள் மீது பாலியல் புகார் தெரிவித்ததால் பிரபலமானார் ஒரு நடிகை. அந்த மாநிலத்து திரையுலகினர் அவரை ஒதுக்கவே மூட்டை முடிச்சுடன் கிளம்பி சென்னைக்கு வந்து செட்டிலாகிவிட்டார். தமிழ் திரையுலகை சேர்ந்த சிலர் மீதும் அம்மணி பாலியல் புகார் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அம்மணி சென்னைக்கு வந்த பிறகு அவரின் வாழ்க்கையே மாறிவிட்டது. சொகுசு பங்களா, ஆடம்பர கார் என்று ராணி போன்று வாழ்கிறார். வாழ்க்கையை ரசித்து ரசித்து வாழ்கிறார். தமிழ் படங்களில் நடிக்க ஒப்பந்தம் ஆகியுள்ளார். இந்த மாற்றத்திற்கு பின்னால் ஒரு முக்கிய காரணம் உள்ளதாம். அந்த நடிகைக்கு எடுத்த எடுப்பில் லட்சங்களில் சம்பளம் கொடுக்கிறார்களாம். தமிழ் திரையுலகை சேர்ந்த மேலும் பலரின் லீலைகள் குறித்த விபரங்களை வெளியிடுவேன் என்ற அவர் அதை கண்டுகொள்ளவே இல்லை. அந்த விபரங்களை எல்லாம் வெளியிடாமல் இருக்கத் தான் அவருக்கு பட வாய்ப்பு, பெத்த சம்பளமாம். சென்னைக்கு வந்த வேகத்தில் அவருக்கு ஒரு பெரிய இடத்து ஆதரவு கிடைத்துள்ளது. அவரின் ஆதரவில் அம்மணியின் கெரியர் சூப்பராக பிக்கப்பாகி வருகிறது. கோலிவுட்டில் ஒரு ரவுண்டு வர வேண்டும் என்ற நடிகையின் ஆசை இவ்வளவு சீக்கிரத்தில் அதுவம் இவ்வளவு எளிதில் நிறைவேறும் என்று அவர் கூட எதிர்பார்த்திருக்க மாட்டார். சென்னைக்கு வந்த பிறகு நடிகை மீ டூ என்பதையே மறந்துவிட்டார். கிடைக்கும் வாய்ப்புகளை பயன்படுத்தி வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்று நடிப்பில் மட்டும் கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறார்.

★★★★★

புதிய படங்களுக்கு சிபாரிசு செய்யும் நடிகர்களுக்கு மிட்நைட் பார்ட்டி கொடுத்து அசத்தி வருகிறாராம் பெரிய வார்த்தையை பேராகக் கொண்ட நடிகை. கூத்துப் படமொன்றில் அறிமுகமானவர் தான் அவர். முதல் படத்தில் அவரது அழகும், நடிப்பும் பேசப்பட்டாலும் தொடர்ந்து அவருக்கு சொல்லிக் கொள்ளும்படி படவாய்ப்புகள் அமையவில்லை. இதனால் தமிழில் நல்ல இடத்தைப் பிடிக்க என்ன செய்யலாம் என யோசித்துள்ளார் நடிகை. மிட் நைட் பார்ட்டி அவரது ஞாபகத்திற்கு வந்தது. கூத்துப் படமொன்றில் அறிமுகமானவர் தான் அவர். முதல் படத்தில் அவரது அழகும், நடிப்பும் பேசப்பட்டாலும் தொடர்ந்து அவருக்கு சொல்லிக் கொள்ளும்படி படவாய்ப்புகள் அமையவில்லை. இதனால் தமிழில் நல்ல இடத்தைப் பிடிக்க என்ன செய்யலாம் என யோசித்துள்ளார் நடிகை. மிட் நைட் பார்ட்டி அவரது ஞாபகத்திற்கு வந்தது. இதனால் புதிய பட வாய்ப்புகளுக்கு சிபாரிசு செய்யும் நடிகர்களுக்கு மிட்நைட் பார்ட்டி என சத்தமில்லாமல் அறிவித்தார் நடிகை. இதனால் பல மெகா படங்கள் அவருக்கு கிடைத்து வருகிறது. கோலிவுட்டில் அவருக்கு மார்க்கெட்டும் அதிகரித்துள்ளது. தொடர்ந்து தனது லிஸ்ட்டில் இன்னும் பல நடிகர்களின் பெயர்களை வைத்திருக்கிறாராம் நடிகை. அடுத்தடுத்து அவர்களது படங்களில் நடிப்பது தான் நடிகையின் எதிர்காலத் திட்டமாம். புதிய படவாய்ப்புகளுக்காக ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாய் முயற்சித்துக் கொண்டிருக்க, நடிகையின் ஐடியா நன்றாகவே வேலை செய்கிறது. இதனால் தாங்களும் இதே முறையைப் பின்பற்றலாமா என வளர்ந்து வரும் நடிகைகள் பலர் யோசித்து வருகிறார்களாம்.

## ராக்கியின் திடீர் திருமண அறிவிப்பு



நடிகர் நானா படேகர் பாலியல் தொல்லை தந்ததாக புகார் கூறினார் நடிகை தனுஸ்ரீ தத்தா. இந்நிலையில் தனுஸ்ரீ தன்னை பாலியல் பலாத்காரம் செய்ததாகவும் அவர் ஒரு லெஸ்பியன் எனவும் புகார் கூறி அதிரடி கிளப்பினார் நடிகை ராக்கி சாவந்த். இதையடுத்து இருவருக்கும் மோதல் எழுந்தது. ராக்கி மீது நஷ்ட ஈடு கேட்டு தனுஸ்ரீ தத்தா வழக்கு தொடர்ந்தார். இந்த பிரச்னை ஒருபக்கம் ஓடிக்கொண்டிருக்க திடீரென்று தனது திருமண அழைப்பிதழை இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டிருக்கிறார் ராக்கி சாவந்த்.

தீபக் கலால் உடன் வரும் டிசம்பர் 31ம் தேதி லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் எங்கள் திருமணம் நடக்கிறது என திருமண அழைப்பிதழில் குறிப்பிட்டிருக்கிறார் ராக்கி சாவந்த். இதுகுறித்து தீபக் கூறும்போது,'ராக்கி சாவந்த் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் எங்களது திருமண அழைப்பிதழ் வெளியிட்டிருக்கிறார். அதற்கு உங்கள் வாழ்த்து மெசேஜ் தெரிவியுங்கள்' என குறிப்பிட்டிருக்கிறார். திருமணம் குறித்து ராக்கி கூறும்போது,'தீபக்குடனான திருமணம் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடக்கிறது. இதில் பாலிவுட் நட்சத்திரங்கள் பங்கேற்க அழைத்து வருகிறேன்' என்றார்.

## மீண்டும் சேரன்



சமீப நாட்களாக சேரன் சமூக வலைத்தளத்தில் அதிக ஆர்வம் காட்டுகிறார். தற்போது ஒரு படத்தை இயக்கி முடித்துள்ள அவர் கூறுகையில், 'ஒரு படம் இயக்கி முடித்துவிட்டேன். வரும் டிசம்பர் 12ம் தேதி என் பிறந்த நாளில் அது பற்றி முறையாக தெரிவிக்கிறேன்' என்றார். தற்போது சேரன், மழை பட இயக்குனர் ராஜ்குமார் இயக்கும் 'ராஜாவுக்கு செக்' என்ற படத்தில் நடித்து வருகிறார்.

## ...த்திற்கு ...?

...ல் நடித் ...டம் கவச்சம். ...ண்டா சாய்ஸ்ரீ ...றொரு ஹீரோ ...டித்துள்ளார். ... இந்தி நடிகர் ...டித்திருக்கி ...ில்லா இயக்கி

...ம்பர் 7ம் தேதி ... அறிவிக் ...லயில் சில ...ம் பிப்ரவரிக்கு ...ன டோலிவுட் ...ல் பரவியது. ...பட நிறுவனம் ...துக்கு பிரச்னை ...ட்டமிட்டபடி ...வரும் என ...ளது.

## கதையை சாதகமாக்கிக் கொள்ளும் ஹீரோயின்கள்

திரையுலகில் 1970, 80ம் ஆண்டுகள் கோல்டன் பீரியட், கதையில் பெண் கதாபாத்திரத்துக்கு முக்கியத் துவம் தரப்பட்டால் அதை இந்த காலத்து ஹீரோயின்கள் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள் கின்றனர் என்றார்



நடிகை ஜான்வி கபூர். நடிகை ஸ்ரீதேவி மகள் ஜான்வி. ஸ்ரீதேவி எதிர்பாராத மரணத்துக்கு பிறகு ஜான்வி நடிக்க வந்திருக்கிறார். அவர் நடித்த தடக் இந்தி படம் வெளியாகி வெற்றி பெற்றது. தற்போது புதிய படத்தில் நடிக்கிறார். இந்நிலையில் ஜான்வி அளித்த பேட்டியில் கூறியதாவது: அந்த காலத்து படங்கள் தான் என்னை மிகவும் கவர்ந்திருக்கிறது.

1970, 80களின் காலம் திரையுலகின் கோல்டன் பீரியட் (பொற்காலம்). அதனுடன் ஒப்பிடும்போது இன்றைய சினிமா துறை பெரிய அளவில் மாறியிருக்கிறது. பொற்காலத்தில் வந்த படங்களைப் பார்ப்பது எனக்கு மிகவும் பிடிக்கும். அன்றைக்கு கதை சொல்லப்பட்ட விதம் இன்றைய திரையுலகுடன் ஒப்பிடும் போது மிகவும் மாறுபட்டிருந்தது. இன்னும் நேர்மையாக சொல்லவேண்டுமென்றால் சினிமாவுலகம் தற்போது வர்த்தக ரீதியாகிவிட்டது.

அந்த வர்த்தகத்தின் பிடியில்தான் எல்லோரும் இன்று சூழப்பட்டிருக்கிறோம். நடிப்பும், கதையும் முன்பைவிட முன்னேற்றத்திற்குட்பட்டதாக இருக்கிறது. எனது தாயார் ஸ்ரீதேவி உள்ளிட்ட பல நடிகைகள் பெண்களுக்கான முக்கிய கதாபாத்திரம் கொண்ட படங்களில் நடித்திருக்கிறார்கள். அப்போதெல்லாம் அதை கதையாக மட்டுமே பார்த்தார்கள். ஒரு பெண் கதாபாத்திரம் எப்படி முன்னிலைப் படுத்தப்படுகிறது, சமுதாயத்தில் வாழ என்ன முயற்சி மேற்கொள்கிறது என்ற எண்ணித்தால் தான் அதைப் பார்த்தார்கள்.

அந்த கதைகளுக்கு பின்னால் ஹீரோயினுக்கு முக்கியத்துவமுள்ள கதை என்று யாரும் சொல்லிக்கொண்டதில்லை. ஆனால் தற்போது அதுபோன்ற கதை அம்சமுள்ள படங்களை நடிகைகள் தங்களுக்கு வசதியாக ஹீரோயினுக்கு முக்கியத்துவமுள்ள கதை என்று சொல்லிக் கொள்கிறார்கள். அந்த காலத்து நடிகைகள் ஒருவருக்கொருவர் தனித்திறமை வாய்த்தவர்களாக இருந்தார்கள். இவ்வாறு ஜான்வி கூறினார்.



## ...படமல்ல!

...வி கேரக்டரை மதுபாலா பண்ணா... ஏன்னா, தமிழில் இதுவரைக்கும் ...ண்ணலை. தவிர, நான் அவங்களை ...ும் ஒரு நல்ல நெகட்டிவ் கேரக்டர் ...ருந்தாங்க. 'அக்னி தேவ்' கதையைச் ...ால்லிட்டாங்க. படத்துல மதுபாலா ...ிப்படுத்தியிருக்காங்க. அவங்கதான், ...கரக்டர்னுகூட சொல்லலாம். இந்தப் ...து கிடைக்கும்ங்கிற நம்பிக்கையில ... நான்கைந்து விதமா நடிச்சுக்காட்டு... கேரக்டருக்கு அதிக முக்கியத்துவம் ...டத்துல சூப்பரா நடிச்சிருக்கார் பாபி

...க்கியமான அரசியல்வாதியை நினை...

...ரும், சகுந்தலா தேவி கேரக்டர் ஜெய...த்துறதா சொல்றாங்க. இது ரொம்பத் ..., ஜெயலலிதா என் இன்ஸ்பிரேஷன். ...ரக்டர் வர்ற காட்சிகளுக்குப் பின்ன...ாந்தி படங்களைப் பயன்படுத்திருக்கேன்

**டைட்டில் மூலமா என்ன சொல்ல வர்றீங்க?**


அக்னி தேவ்னா, 'நெருப்புக்கு இறைவன்'னு அர்த்தம். படத்துல வர்ற எல்லாக் கேரக்டருக்கும் நெருப்போட சம்பந்தம் இருக்கும். காமெடி கேரக்டர்ல வர்ற சதீஷுக்கு உதயா, ரம்யா நம்பீசனுக்கு தீபா, பாபி சிம்ஹாவுக்கு குரு... இப்படி 'அக்னி'யை சம்பந்தப்படுத்திதான் பெயரும் வெச்சிருக்கேன்.

**படம் பேசவிருக்கும் அரசியல் என்ன?**

ஆணவக் கொலையை மையமாகக் கொண்ட படம் இது. அதைத் தேவையான அளவுக்குச் சொல்லியிருக்கோம். தவிர, அவையாவும் உண்மைகள்தான். இப்போ நடக்கிற சமூக அவலங்களும் படத்துல இருக்கும். எந்த அரசியல் கட்சியையும் நான் குறிப்பிட்டுப் பேசலை. 5 வருடம் ஆட்சியில இருக்கிறவங்க மக்களுக்குப் பண்றது என்ன, அவங்க பண்ற விஷயங்கள் மக்களை எப்படிப் பாதிக்குதுனு சொல்லியிருக்கோம். முழுப் படத்தையும் கோயம்புத்தூர்ல எடுத்து முடிச்சிருக்கோம்.

**ட்ரெய்லரில் இருக்கிற சில வசனங்கள் சில அரசியல்வாதிகளைத் தாக்குற மாதிரி இருக்கே?**

படத்துல மதுபாலா மேடம் மாற்றுத் திறனாளியா வர்றாங்க. அதனால, 'என் வீல்சேர் டயரை நக்கிட்டு கிடக்கிறதா இருந்தா கிடங்க'னு வசனம் வெச்சிருக்கேன். இது யாரையும் புண்படுத்துறதுக்காக அல்ல!




## செல்வாவின் வேண்டுகோள்

'என்.ஜி.கே' படம் தொடர்பாக சூர்யா ரசிகர்களுக்கு, இயக்குநர் செல்வராகவன் தனது ட்விட்டர் பக்கத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

செல்வராகவன் இயக்கத்தில் சூர்யா, ரகுல் ப்ரீத் சிங், சாய் பல்லவி உள்ளிட்ட பலர் நடிப்பில் உருவாகி வரும் படம் 'என்.ஜி.கே'. ட்ரீம் வாரியர் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்து வருகிறது. இப்படத்தின் படப்பிடிப்பு இயக்குநர் செல்வராகவனுக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் நிறுத்தப்பட்டது.

மீண்டும் டிசம்பர் முதல் வாரத்தில் தொடங்க படக்குழு ஆயுத்தமாகி வருகிறது. அதுவே இறுதிக்கட்டப் படப்பிடிப்பாக இருக்கும் என்றும், டிசம்பர் மாத இறுதிக்குள் ஒட்டுமொத்த படப்பிடிப்பும் முடிக்கப்படும் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில் அவ்வப்போது சூர்யா ரசிகர்கள், அடுத்த 'என்.ஜி.கே'அப்டேட் என்று படக்குழுவினரிடம் சமூக வலைதளத்தில் கேள்வி எழுப்பி வந்தார்கள். மேலும், சிலர் மீம்ஸ்கள் தயார் செய்தும் வெளியிட்டார்கள்.

இது தொடர்பாக இயக்குநர் செல்வராகவன் தனது ட்விட்டர் பக்கத்தில், என் மனமார்ந்த வேண்டுகோள். நாங்கள் அமைதியாக, கடுமையாக உழைத்து வருகிறோம். அப்டேட்டுகள் சரியான நேரத்தில் வரும். மூன்று நாளைக்கு ஒரு முறையோ, வாரா வாரமோ வராது.. எங்களுக்கு நீங்கள் பக்க பலமாக இருந்தால் எங்கள் இலக்கை நோக்கி இன்னும் கடுமையாக உழைக்கும் பலம் எங்களுக்குக் கிடைக்கும் என்பதை நான் உறுதியாக நம்புகிறேன் என்று தெரிவித்துள்ளார்.


# நீரிழிவுக்குப் பழங்கள் நல்லதா?

ஒருவர் ஒரு நாளைக்கு 15 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்தாலே நீண்ட ஆயுள், மற்ற அனுகூலங்கள் சாத்தியம் என்கிறது யு.சி. இர்வின் ஆய்வறிக்கை. அதிகபட்சமாக 45 நிமிடங்கள் உடற்பயிற்சிசெய்தால் இன்னும் கூடுதல் பலன்களைப் பெறமுடியும்.

மிக அதிக சத்து கொண்ட அரிதான உணவுப் பொருட்களில் ஒன்று பாதாம். வைட்டமின் இ-யில் உள்ள ஆர்.டி.ஏ. (ரெகமண்டட் டயட்டரி அலவன்ஸ்)-ல் 75 சதவீதத்தை பாதாம் கொண்டுள்ளது. மற்ற விதை உணவுப் பொருட்களைவிட கால்சியம் சத்தையும் அதிகம் வைத்துள்ளது. புற்றுநோயை எதிர்க்கும் வைட்டமின் பி 17-ம் உள்ளது. மக்னீசியம், துத்தநாகம், இரும்பு, பொட்டாசியம், நார்ச்சத்து நிறைந்தது பாதாம்.

ஓர் ஆய்வில், சர்க்கரை அளவு அதிகமுள்ள சாப்பாட்டுக்குப் பிறகு சிலருக்கு ஒரு துண்டு பழத்தைக் கொடுத்து பயோமெட் சென்ட்ரலில் ஆய்வு நடத்தியபோது, உணவுக்குப் பின்னான சர்க்கரை அளவு 15 முதல் 30 தவீதம் குறைவதைக் காணமுடிந்தது. தினசரி இரண்டு வேளைகள் கொஞ்சம் பழத்துண்டுகளை உட்கொள்வது நீரிழிவு நோயாளிகளுக்குப் பலனைத் தருவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

காபி, எனர்ஜி டிரிங்லை தவிர்க்க வேண்டும். நெஞ்செரிச்சல் தரும் கார உணவைச் சாப்பிட வேண்டாம். மதுவும், அதிக புரத உணவுகளும் கூடாது. தண்ணீரும் அதிகம் குடிக்கக் கூடாது. அடிக்கடி கழிவறைக்கு எழுந்து செல்ல வேண்டியிருக்கும்.



# அதிகப் பசிக்கு காரணமான அமிலச்சுரப்பு!

## இரைப்பைப் புண்

இது உணவுக்குழலின் இறுதிப் பகுதி. இரைப்பை, முன்சிறுகுடல், மெக்கலின், பக்கப்பை ஆகிய நான்கு இடங்களில் வரும். இரைப்பையில் ஹைட்ரோகுளோரிக் அமிலமும் பெப்சின் என்சைமும் அளவுக்கு அதிகமாகச் சுரக்கும்போது இரைப்பையிலும் முன்சிறுகுடலிலும் உள்ள சிலேட்டுமப் படலம் சிதைந்து புண்ணாகிறது. இதுதான் பெப்டிக் அல்சர்.

இரைப்பைப் புண் ஏற்பட பல காரணங்கள் உள்ளன. 'ஹெலிக்கோபாக்டர் பைலோரி' (Helicobacter pylori) எனும் கிருமி காரணமாக இரைப்பைப் புண் ஏற்படுவதுதான் இப்போது அதிகம். அசுத்தமான குடிநீரில் இவை வசிக்கும். அதைக் குடிப்போரின் உடலில் பாக்டீரியா தொற்றிக்கொள்ளும். இது இரைப்பைப் புண்ணை உண்டாக்கும்.

மது அருந்துதல், புகைப்பிடித்தல், காரம் நிறைந்த உணவு, புளிப்பு மிகுந்த உணவு, மசாலா கலந்த உணவு, எண்ணெயில் வறுத்த உணவு போன்றவற்றை அதிக அளவில் உண்பது, குளிர்பானம், காபி, தேநீர் பானங்களை அதிகப்படியாகக் குடிப்பது, ஆஸ்துமா, மூட்டு வலிகளுக்குத் தரப்படும் ஸ்டீராய்டு மாத்திரைகள், தலைவலிக்குத் தரப்படும் ஆஸ்பிரின், அனால்ஜின், இபுபுரூஃபன் போன்ற வலிநிவாரணி மாத்திரைகள் ஆகியவற்றை மருத்துவரின் ஆலோசனையின்றி அடிக்கடி சாப்பிடுவது போன்றவற்றால் பெப்டிக் அல்சர் வருகிறது.



உணவை நேரம் தவறிச் சாப்பிடுவது, சூடாகச் சாப்பிடுவது, அவசர அவசரமாகச் சாப்பிடுவது போன்ற தவறான உணவுப் பழக்கங்களாலும் இவ்வாறு புண் ஏற்படலாம். எலுமிச்சை, நெல்லிகாய், கடுக்காய் போன்ற புளிப்புச் சுவை உடையவற்றை அதிகமாகச் சாப்பிட்டாலும் இந்த நோய் ஏற்படும். சில மூலிகை மருந்துகளை நீண்ட காலம் சாப்பிடுவதும் இந்த நோய்க்கு வழி அமைக்கும்.

இவற்றுடன் 'ஜோலிங்கர் எலிசன் நோய்த் தொகுப்பு' (Zolinger Ellison Syndrome) காரணமாகவும் பெப்டிக் அல்சர் வருகிறது. சிலருக்குப் பரம்பரை காரணமாகவும் இது ஏற்படுகிறது. குறிப்பாக, உறவினர்களுக்குள்ளே திருமணம் செய்து கொண்டவர்களின் வாரிசுகளுக்கு இந்நோய் ஏற்பட மற்றவர்களைவிட மூன்று மடங்கு அதிக சாத்தியம் உள்ளது. 'ஓ' ரத்தப்பிரிவு உள்ளோருக்கு இயற்கையிலேயே இரைப்பையில் அமிலச் சுரப்பு அதிகமாக இருப்பதால், இவர்களுக்குச் சிறுவயதிலேயே இது வந்துவிடுகிறது. மனக்கவலை, மனஉளைச்சல், அதிகமாக உணர்ச்சிவசப்படுதல், கோபம், பரபரப்பு, ஓய்வில்லாதது போன்ற காரணங்களாலும் இது பலரையும் பாதிக்கிறது.

'என்டோஸ்கோபி பரிசோதனை' (Gastro endoscopy) மூலமும், ரத்தப் பரிசோதனையில் ஹெச். பைலோரி கிருமிக்கு எதிரணுக்கள் (Antibody) உள்ளனவா என்பதைக் கண்டறிவதன் மூலமும் உங்கள் பாதிப்பை உறுதிசெய்து, அதற்கேற்ப சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம். தற்போது அமிலச்சுரப்பு அதிகமாவதன் வழியாக ஏற்படும் அல்சருக்கு முழுமையான தீர்வு தருவதற்கு நவீன மருந்துகள் நிறைய உள்ளன. ஆனால், உங்களுக்கு எதனால் அடிக்கடி அல்சர் ஏற்படுகிறது என்ற காரணத்தைக் களைந்தால் மட்டுமே நோய் குணமாகும். அதற்கு உங்கள் உணவுமுறையையும் வாழ்க்கைமுறையையும் மருத்துவரின் ஆலோசனைப்படி மாற்றிக்கொள்ளுங்கள்.

## பெருங்குடல் அழற்சி

இந்த நோய் ஐபிஎஸ் (IBS), ஐபிடி (IBD) என்கிற இரு பிரச்சினைகளால் ஏற்படுவது வழக்கம். பாக்டீரியா தொற்று, தவறான உணவுப் பழக்கம், உணவு ஒவ்வாமை, கவலை, பயம், பதற்றம், மன அழுத்தம், மனச்சோர்வு போன்ற உளவியல் காரணங்கள், ஹார்மோன் சுரப்பில் மாற்றம் போன்றவற்றால் இவை ஏற்படுகின்றன. 'கொலோனோஸ்கோபி பரிசோதனை' (Colonoscopy) மூலம் இவற்றை உறுதி செய்யலாம்.

இவற்றுக்கு மாத்திரை மருந்துகளைத் தேடி மருத்துவமனைகளுக்கு ஏறி இறங்குவதைவிட, புகைப்பழக்கத்தைக் கைவிடுதல், தினமும் நடைப்பயிற்சி மேற்கொள்வது போன்ற வாழ்வியல் மாற்றம், நார்ச்சத்து நிறைந்த காய்கறி மற்றும் பழங்களைச் சாப்பிடுதல், செரிமானப் பிரச்சினைகளை உண்டாக்கும் கொழுப்பு உணவைத் தவிர்ப்பது, தயிர் போன்ற புரோபயாடிக் உணவைச் சாப்பிடுதல் என சரியான உணவுப் பழக்கத்தைக் கைகொள்ளுதல், மன அமைதிக்கு உதவும் யோகா, தியானம் போன்ற பயிற்சிகளை மேற்கொள்வது ஆகியவைதான் நல்ல தீர்வைத் தரும்.

# நீரிழிவு நோயாளிகளின் கண்களில் ஏற்படும் பாதிப்புகள்



கண் அழுத்த நோய் (glaucoma) நீரிழிவு நோயாளிகளை அதிகம் பாதிக்கிறது. இது எந்தவிதமான அறிகுறிகளையும் வெளிப்படுத்தாமல் தாக்கும் என்பதால் இதனை 'சைலண்ட் கில்லர்' என்று சொல்வார்கள். நமது கண் பந்து போன்றது. அதில் விழித்திரவம் சுரக்கிறது. அது சீராக சுரந்து, உடலுக்குள் கலக்கவேண்டும். அதிகமாக சுரந்தாலோ, சுரக்கும் திரவம் உடலுக்குள் செல்வது தடைபட்டு தேங்கினாலோ கண் அழுத்தம் ஏற்படும்.

உடலில் நீரிழிவு நோய் உருவாகி, அது கட்டுக்குள் இல்லாதபோது, விழித்திரவம் வெளியேறும் இடத்தில் ஒருவித புரோட்டீன் படிந்து, வெளியேற விடாமல் தடுத்துவிடுகிறது. இது 'டைப் -2' நீரிழிவு நோயாளிகளை அதிகம் பாதிக்கும். இரு கண்களும் பாதிக்கப்படலாம். பெரும்பாலும் சர்க்கரை நோயாளிகளை 40 வயதுக்கு மேல் இந்த நோய் தாக்கக்கூடும். முதலில் ஓரப்பார்வை குறையும். பின்பு படிப்படியாக பார்வைத்திறன் இழப்பு தோன்றும்.

கண் அழுத்த நோய் அதிகரித்தால், கண்களை மூளையோடு தொடர்புபடுத்தும் பார்வை நரம்பும் பாதிக்கும். கண் வலியும் தோன்றும். கண் அழுத்தத்தை நவீன பரிசோதனைகள் மூலம் கண்டறிந்து, அழுத்தத்தை குறைத்து சீராக்கி, வலியையும் குறைக்கவேண்டும். பார்வை பறிபோகும் அளவுக்கு விட்டுவிட்டால், சிகிச்சையால் பலன் ஏற்படாது.

நீரிழிவு நோயாளிகளை அதிகம் பாதிப்பது, 'டயாபெட்டிக் ரெட்டினோபதி' எனப்படும் விழித்திரை நோய். இதனை இரு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று: புதிய ரத்தக் குழாய்கள் உருவாகும் பாதிப்பு. இரண்டு: கண்ணின் மேக்குலா பகுதியில் தண்ணீர் சேருவதால் உருவாகும் 'மேக்குலர் இடீமா' என்ற பாதிப்பு. இவை இரண்டுமே கவனத்துடன் கையாளவேண்டிய நோய்களாகும்.

புதிய ரத்தக் குழாய்கள் உருவாகும் நோய்க்கு 'ப்ரோலிபோரட்டிவ் டயாபெட்டிக் ரெட்டினோபதி' (proliferative diabetic retinopathy) என்று பெயர்.

சர்க்கரை நோயால் இது உருவாகும். உடலில் சர்க்கரையின் அளவு அதிகரிக்கும்போது ரத்தக் குழாய்களின் தன்மை மாறி ரத்த ஓட்டத்தில் இடைஞ்சல் ஏற்படும். அப்போது கண் நரம்புகளுக்கு ரத்தத்தின் வழியாக ஆக்சிஜன் கிடைப்பது தடைபடும். இந்த சிக்கலை சரிசெய்ய உடலே புதிய ரத்தக் குழாய்களை உருவாக்கும். திடீரென்று உருவாகும் இந்த அவசர ரத்தக் குழாய்களின் சுவர் பலமின்றி இருக்கும். அதன் வழியாக கண்களை நோக்கி ரத்தம் செல்லும்போது, குழாய் வெடித்து ரத்தம் கண்களுக்குள் பரவிவிடும்.

நோயாளிக்கு இந்த பாதிப்பு எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை கண்டறிய கண்ணுக்குள் ஆஞ்சியோ செய்து பார்க்கவேண்டும். அதன் மூலம் புதிய ரத்தக்குழாய்கள் உருவாகியிருப்பதை கண்டறிந்து சிகிச்சை மேற்கொள்ளலாம். இந்த சிகிச்சையில் விழித்திரை ஒல்லியாக்கப்படும். அதன் மூலம் கண்களுக்கு தேவையான ஆக்சிஜன் அளவு குறையும். புதிய ரத்தக்குழாய்களுக்கு அதனால் வேலை குறைந்து அவை செயலிழந்துவிடும். அதன் மூலம் கண் பார்வைத்திறனை பாதுகாத்திடலாம். சர்க்கரை நோயாளிகளுக்கு ரத்தத்தில் பசைத்தன்மை அதிகரிக்கும். அந்த பசைத்தன்மை விழித்திரையை இழுப்பதாலும் கண்களில் பாதிப்பு ஏற்படும். இதனை சரிசெய்ய 'விட்ரெக்டமி' (vitrectomy) என்ற அறுவை சிகிச்சையை செய்ய வேண்டியதிருக்கும்.

சர்க்கரை நோய் அதிக காலம் இருந்தால், அது அவ்வப்போது கட்டுப்பாட்டிற்குள் இல்லாமல் இருந்தால், ரத்த அழுத்தம், சிறுநீரக பாதிப்பு, அதிக கொழுப்பு, கர்ப்பகாலத்தில் சர்க்கரை நோய் காணப்படுதல், உடல் பருமன், ரத்த சோகை, மதுப்பழக்கம் போன்றவை இருந்தால் விழித்திரை பாதிப்பு ஏற்படக்கூடும். அதனால் இத்தகைய பாதிப்புகள் உடலில் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளுங்கள். ஏன்என்றால் 40 முதல் 55 வயதானவர்களுக்கு கண்பார்வைக் குறைவு ஏற்பட டயாபெட்டிக் ரெட்டினோபதி காரணமாக இருக்கிறது.

மேக்குலர் இடீமா எனப்படும் நீர் சேரும் நோய் பற்றி இனி பார்ப்போம். நமது ரத்தக்குழாய் சுவர்களில் நிறைய 'செல்'கள் இருக்கின்றன. அவை ஒன்றோடு ஒன்றாக ஒருங்கிணைந்து பலமாக இருக்கும். அதனால் ரத்தக்குழாய்களில் ரத்தத்தோடு செல்லும் தண்ணீர் செல்களை தாண்டி வெளியே வராது.

சர்க்கரை நோய் ஒருவரை தாக்கும்போது செல்களை இணைக்கும் சந்திப்புகள் பலவீனமாகி, தண்ணீர் வெளியே வந்து செல்களில் படியத் தொடங்கும். கண்களுக்கு செல்லும் ரத்தக்குழாய்களில் இப்படி தண்ணீர் வெளியேறினால் கண்பார்வை பாதிப்பு ஏற்படும். இதுதான், மேக்குலர் இடீமா! இப்போது கண்சிகிச்சை துறையில் பெரும் முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. கண்களை தொடாமலே பரிசோதனைகளை செய்யலாம். முதலிலே கண்டறிந்தால், பார்வைத்திறனை மேம்படுத்திடவும் செய்திடலாம்.

# தேவையற்ற கொழுப்புகளை நீக்கும் கரட்

தினமும் ஒரு கரட் சாப்பிடுவதன் மூலம், உடலில் உள்ள தேவையற்ற கொழுப்புகளை அகற்றலாம் என்பது அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது.



இயற்கையாகவே இனிப்புத் தன்மை கொண்ட கரட்டை சமைத்து மட்டுமல்ல, பச்சையாகச் சாப்பிடவும் பலரும் விரும்புவர்.

கரட்டை விரும்பிச் சாப்பிடுபவர்களுக்கு அது வழங்கும் நற்பலன்கள் ஏராளம்.

கரட்டை அதிகம் உணவில் எடுத்துக் கொள்பவர்களுக்கு கொழுப்புத் தொல்லையும், ஆண்மைக் குறைவு பிரச்சினையும் நெருங்கவே நெருங்காது.

கரட்டை சமைத்து உண்பதை விட, பச்சையாகச் சாப்பிடும்போது அதில் பெரும்பான்மையான சத்துகள் விரயம் ஆகாமல் நம்மை வந்து சேரும்.

கரட்டில் வைட்டமின் ஏ சத்து நிறைந்துள்ளதால், இது ஆரோக்கியமான கண்களுக்கும், சருமத்துக்கும், உடல் வளர்ச்சிக்கும் மிகவும் உதவுகிறது.

இதில் நிறைந்துள்ள பீட்டா கரோட்டீன், கொழுப்பைக் கரைக்கும் திறன் கொண்டது.

தினமும் ஒரு கரட் சாப்பிடுவதன் மூலம், உடலில் உள்ள தேவையற்ற கொழுப்புகளை அகற்றலாம் என்பது அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

கரட், ரத்தத்தைச் சுத்தப்படுத்துவதுடன், விருத்தியும் அடையச் செய்கிறது. மேலும், குடல்புண்கள் வராமல் தடுக்கிறது. வாய் துர்நாற்றத்தை தடுக்கிறது.

கரட் மற்றும் சர்க்கரை வள்ளிக்கிழங்கை உண்பதன் மூலம் மார்பகப் புற்றுநோய் அபாயத்தில் இருந்து தப்பிக்கலாம் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

பாதி வேகவைத்த முட்டையுடன், கரட் மற்றும் தேன் கலந்து சாப்பிட்டுவந்தால் ஆண்மைச் சக்தி அதிகரிக்கும்.

கரட் சாறுடன் எலுமிச்சைச் சாறு கலந்து சாப்பிட்டால் பித்தக் கோளாறுகள் நீங்கும்.

கரட்டில் உள்ள வைட்டமின் ஏ-யில் இருந்து பெறப்படும் ரெட்டினாய்க் அமிலம், புற்றுநோய் உண்டாக்கும் செல்களை ஆரம்ப நிலையிலேயே அழித்துவிடும்.

மஞ்சள்காமாலை குணமாக தினமும் கரட் சாறு அருந்துவது நல்லது.

பெண்களுக்கு மாதவிடாயின்போது ஏற்படும் உதிரப் போக்கை கரட் கட்டுப்படுத்துகிறது.

உருளைக்கிழங்கை விட கரட்டில் ஆறு மடங்கு சக்தி அதிகம் இருக்கிறது. இது எளிதில் ஜீரணமாகிறது, எலும்புகளை வலுப்படுத்துகிறது.

சருமத்துக்குப் பொலிவைத் தந்து, தோலில் ஏற்படும் சுருக்கத்தை கரட் நீக்குகிறது.




# கெட்டவையும் நல்லவைகளாகும்!

சில பழக்கங்கள் நம்மோடு தொடர்ந்து வரும். அவற்றின் நன்மை, தீமை தெரியாமலே இயல்பாகவே அவற்றைச் செய்து வருவோம். அப்படிப்பட்ட சில பழக்கங்கள் பற்றியும், அவற்றால் ஏற்படும் நன்மை, தீமை பற்றியும் பார்ப்போம்...

பகல் நேர உறக்கம்: சில நேரங்களில், களைப்பின் காரணமாக பகல் வேளையிலேயே ஒரு குட்டித் தூக்கம் போட நேரலாம். இது கெட்ட பழக்கமாகக் கருதப்பட்டாலும், இதனால் நன்மைகளும் இருக்கின்றன. உடம்பில் உடனடியாக சோர்வு நீங்கி தெம்பு கிடைக்கும். மனம் தெளிவடையும்.



காபி: பலருக்கும் சூடாக ஒரு கப் காபி பருகுவது மிகவும் பிடித்த பழக்கம். அடிக்கடி காபி அருந்துவது நிச்சயம் கெடுதல்தான். ஆனால் அளவோடு காபி பருகுவது, நீரிழிவு, அல்சைமர், கல்லீரல் புற்றுநோய் போன்றவற்றின் பாதிப்புகளைக் கட்டுப்படுத்த உதவுவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

பயம், பதற்றம்: பயம், பதற்றம் போன்ற எதிர்மறை உணர்வுகள் மனதின் ஆரோக்கியத்தைப் பாதிக்கும். ஆனால் இந்த உணர்வுகள் ஓர் உடனடி வலிநிவாரணியாகச் செயல்படுவதாக டாக்டர் ரிச்சர்ட் ஸ்டீபன்ஸ் கூறுகிறார்.

பகல் கனவு: 'நமக்கு அப்படி நடந்தால் எப்படி இருக்கும்.... இப்படி நடந்தால் எப்படி இருக்கும்' என்று இன்பமான பகல் கனவில் மூழ்குவது சிலரின் வழக்கம். இது தற்காலத்தை மறந்து, கற்பனையில் காலத்தைப் போக்கும் வீணான செயல் என்று கூறப்படலாம். ஆனால், பகல் கனவால் கற்பனைத் திறன் அதிகரிப்பதாகவும், மூளையின் சுறுசுறுப்பு கூடுவதாகவும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

சூயிங்கம் மெல்லுதல்: சூயிங்கம் மெல்லுவதை ஒரு நல்ல பழக்கமாகக் கருத முடியாது. இப் பழக்கம் நமக்கு பொது இடங்களில் மரியாதை பெற்றுத் தராது. ஆனால் சூயிங்கம் மெல்லுவதால் உடலின் சக்தியும், மூளையின் செயல்பாடும் அதிகரித்து, மன அழுத்தம் குறைவதாக டாக்டர் கின் யா குபோ என்ற ஆய்வாளர் அடித்துக் கூறுகிறார்.

வீடியோ கேம்: குழந்தைகள் வீடியோ கேம் விளையாடுவதை பெற்றோர் விரும்ப மாட்டார்கள். ஆனால் வலிப்பு நோய், புற்றுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் வீடியோ கேம் விளையாட மருத்துவர்கள் அனுமதிக்கிறார்கள். அதன் மூலம், அவர்களின் கண்களுக்கும் கைகளுக்கும் இடையே ஓர் ஒருங்கிணைப்பு உருவாகும் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.

# உடல் உஷ்ணத்தை குறைக்கும் மோர்!

மோரில் உள்ள சில புரதங்கள் கொழுப்பு குறைவதற்கும் கிருமி நாசினியாகவும், வைரஸினை எதிர்ப்பதாகவும் இருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன.

உடல் வறண்டு இருக்கும் நேரத்தில் ஏதாவது ஜில்லென குடித்தால் போதும் என்று இருக்கும். ஏனெனில் நம்மை அறியாமலேயே நாம் வறண்டு இருப்போம். சக்தியின் அளவும் குறைந்து இருக்கும். இதன் காரணமே ஏதாவது குடித்தால் போதும் என்ற நினைப்பு எழும்.

★ கொழுப்பற்ற தயிர் மிகவும் நல்லது. மோர் மிக மிக நல்லது. நாள் ஒன்றுக்கு இரண்டு கிளாஸ் மோராவது குடியுங்கள். ஆனால் வீட்டில் செய்யப்படும் கொழுப்பு நீக்கிய மோர் ஒரு நல்ல உணவு. அதில் அனைத்துச் சத்துக்களும் உள்ளன. இது நிதானமாகவே குடலில் உறிஞ்சப்படுகிறது.

★ குடலில் உள்ள மசாலா உணவுகளை கழுவி எடுத்துவிடும். பொதுவில் இதில் சீரகம், இஞ்சி, கொத்தமல்லி, பெருங்காயம் போன்றவற்றினை சேர்ப்பது வயிற்றுக்கு மேலும் நன்மை பயக்கின்றது.



உடல் உஷ்ணத்தினை குறைக்கின்றது.

★ குடலில் ஒட்டிக் கொள்ளும் எண்ணெய் பிசுபிசுப்பினை சுத்தமாய் நீக்கி விடுகின்றது.

★ ஜீரண சக்தியினை கூட்டுகின்றது.

★ வயிற்று உபாதைகளை நீக்குகின்றது.

★ உடலில் நீர் சத்து குறையாமல் இருக்க உதவுகின்றது.

★ உடலில் கல்ஷியம் சத்து கிடைக்க பெரிதும் உதவுகின்றது.

★ வைட்டமின் சத்துக்கள் நிறைந்தது. பிகாம்ப்ளெக்ஸ், டி சத்து நிறைந்தது. ஒருமுறை மோர் எடுத்துக் கொள்வது சுமார் 20 சதவீதம் சில வைட்டமின் சத்துக்களை தந்து விடுகின்றது.

# பொருள் புதிது

### சுமை தூக்கும் ட்ரோன்




அதிக எடை சுமக்கும் ட்ரோனை உருவாக்கியுள்ளது ரஷிய நிறுவனம். அவசர காலங்களில் இதன் மூலம் மக்களை காப்பாற்றலாம். 250 கிலோவரை சுமக்கும். பெட்ரோலில் இயங்கும். 3000 மீட்டர் உயரம் வரை பறக்கும்.

### கையடக்க ஃபேன்



குளிர்ச்சியான காற்றை அளிக்கும் கையடக்க ஃபேன். உடற்பயிற்சி செய்கையில் அல்லது வெளியிடங்களில் இருக்கும்போது குளிர்ச்சியான காற்று தேவைக்கு பயன்படுத்தலாம். உடலில் எந்த இடத்திலும் ஆடைகளில் சொருகிக் கொள்ளலாம்.

### ஏர் போன் பெட்டி



ஏர் போனை சரியாக பராமரிப்பவர்கள் குறைவு. சுருட்டி வைத்திருக்கும் ஏர்போனை ஒவ்வொரு முறையும் பிரித்து எடுப்பதற்கு பதில் அதற்கான பெட்டியை உருவாக்கியுள்ளனர். ஏர்போனை சிக்கல் இல்லாமல் எடுக்கவும், வைக்கவும் உதவும்.

### இரும்பு இழை டயர்



டைட்டானியம் நிக்கலால் உருவாக்கப்பட்ட டயரை நாசா உருவாக்கியுள்ளது. மணல் பாங்கான இடங்கள், கரடு முரடான இடங்கள், அனைத்து கால நிலைக்கும் இந்த டயர் தாக்குபிடிக்கும். இந்த டயருக்கு காற்று தேவையில்லை. நூற்றுக்கும் மேற்பட்ட இரும்பு இழைகளால் பிணைக்கப்பட்டுள்ளது. இதற்கு முன் குட்இயர் டயர் நிறுவனத்தில் பணியாற்றியபோது ஸ்பிரிங் டயரை உருவாக்கிய ஆராய்ச்சியாளர் ஒருவர் நாசாவுக்காக இந்த டைட்டானியம் டயரை உருவாக்கியுள்ளார். செவ்வாய் கிரகத்துக்கு அனுப்பும் ஆராய்ச்சி வாகனத்தில் இந்த டயர்களை நாசா பொருத்த உள்ளது.

### எலெக்ட்ரிக் சைக்கிள் சாலை



எலெக்ட்ரிக் ஸ்கூட்டர், சைக்கிள்கள் அதிகரித்தாலும் சாலைகளில் போக்குவரத்து நெரிசலை குறைக்க முடியவில்லை. இதற்காக பிஎம்டபிள்யூ நிறுவனம் புதிய தீர்வை கண்டுபிடித்துள்ளது. புகையில்லாத, மின் வாகனங்களுக்கான உயர்மட்ட பாதையை சீனாவில் அறிமுகம் செய்கிறது. இந்த பாதை முழுவதும் ஹைபர்லூப் மாதிரி கண்ணாடியால் மூடப்பட்டிருக்கும். சீனாவின் ஷாங்காய் நகரில் 20 கிமீ நீளத்துக்கு, இரண்டு தடங்களில் இந்த பாதையை அமைக்க உள்ளது. 'விஷன் C3 வே' என பெயரிட்டுள்ள இந்த பாதை, பார்க்கிங் வசதியுடன் நகரின் அனைத்து முக்கிய இடங்களையும் இணைத்துச் செல்லும்.


## ஒளிப்படத்தை மாற்றும் செயலி




ஒளிப்படங்களைக் கலைவடிவமாக மாற்றும் செயலிகளின் வரிசையில் இப்போது புலோட்டோகிராப் செயலியும் சேர்ந்துள்ளது. வழக்கமாக வீடியோ படங்களுக்குப் பயன்படுத்தப்படும் நுட்பம், செயலி ஒளிப்படங்களுக்கும் பயன்படும்வகையில் விரிவாக்கப்பட்டுள்ளது. இந்தச் செயலி, ஒளிப்படங்களில் உள்ள குறிப்பிட்ட பகுதியை மட்டும் அசையும் தன்மை கொண்டதாக மாற்றித் தருகிறது. படத்தின் எந்தப் பகுதியையும் அனிமேஷன்போலவும் மாற்றிக் கொள்ளலாம். இந்த உருவாக்கத்தை சமூக ஊடகங்களில் பகிரலாம்.

விவரங்களுக்கு: goo.gl/kf2XCQ

## வீடியோவையும் திருத்தலாம்!



வீடியோ என்றால் யூடியூப் மட்டுமே என்று இருந்தது ஒரு காலம். இப்போது ஃபேஸ்புக், இன்ஸ்டாகிராம் எனப் பல்வேறு சமூக ஊடக சேவைகளில் வீடியோக்களைப் பகிர முடிகிறது. எந்தத் தளத்தில் வேண்டுமானாலும் வீடியோக்களைப் பகிரலாம் என்றாலும், பகிரும் வீடியோ குறிப்பிட்ட சேவைக்கு ஏற்ப இருப்பது நல்லது. இந்தக் குறையைப் போக்கும் வகையில் காப்விங் இணையதளம் வீடியோக்களைக் குறிப்பிட்ட சேவைகளுக்கு ஏற்ப மாற்றித் தருகிறது. இந்தத் தளத்தில் மாற்ற விரும்பும் வீடியோவைப் பதிவேற்றிவிட்டு, அதை ட்விட்டர், இன்ஸ்டாகிராம் அல்லது ஃபேஸ்புக்குக்கு ஏற்ப மாற்றிக்கொள்ளலாம். மூல வீடியோவின் தரத்தில் பாதிப்பில்லாமல் மாற்றித் தருகிறது இந்தத் தளம்.

இணைய முகவரி: goo.gl/6W1rxE

# வேகத்தை அதிகரிக்கும் ஜிமெயில் இரகசியங்கள்

கூகுள் வழங்கும் ஜிமெயில் சேவை பற்றி உங்களுக்குத் தெரிந்திருக்கும். ஜிமெயில் லேப்ஸ் தெரியுமா? அது வழங்கும் உப சேவைகளைப் பற்றி தெரியுமா? இந்த சேவைகளைப் பயன்படுத்துவதன் மூலம் இமெயில் செயல்திறனை அதிகப்படுத்திக் கொள்ளலாம்.

'சுவாரசியமான சோதனை விஷயங்கள்' என்று ஜிமெயில் லேப்ஸ் பற்றி கூகுள் குறிப்பிடுகிறது. இது புதிய சேவைகளுக்கான சோதனைக்களம் எனப் புரிந்துகொள்ளலாம்.அனுப்பிய இமெயிலைத் திரும்பப் பெற வழி செய்யும், 'அன்சென்ட்'(Unsent) வசதி உள்ளிட்ட சேவைகள் இந்தச் சோதனைக்கூடத்தில் உதயமானவைதாம். எல்லா சேவைகளும் ஜிமெயில் வசதிகளாக அறிமுகமாவதில்லை என்றாலும், சோதனைக்கூட சேவைகளை முயன்று பார்ப்பது பயனுள்ளதாகவே இருக்கும்.



### எப்படி அணுகுவது?

ஜிமெயில் லேப்ஸ் சோதனை வசதியை ஜிமெயிலின் 'டெஸ்க்டாப்' வடிவில் மட்டுமே அணுக முடியும். ஜிமெயில் லேப்ஸ் வசதியைப் பெற, ஜிமெயில் கணக்குக்குள் நுழைந்து கியர் ஐகானை கிளிக் செய்து, செட்டிங்ஸ் பகுதியை கிளிக் செய்ய வேண்டும். பின்னர் லேப்ஸ் பகுதியை கிளிக் செய்தால், அதற்கான தனிப் பக்கத்தை அடையலாம். அதில் வரிசையாகக் காணப்படும் சேவை அம்சங்களிலிருந்து தேர்வு செய்து, மாற்றத்தைச் சேமித்துக்கொண்டால் அந்த வசதியைப் பயன்படுத்தலாம். இந்த சேவை தேவையில்லையென்றால், அதை எளிதாக நீக்கிவிடலாம்.

### இன்பாக்ஸ் பல

ஒரே ஒரு இன்பாக்ஸுக்குப் பதில் பல இன்பாக்ஸை உருவாக்கிக்கொள்ள முடிந்தால் வசதியாக இருக்கும் அல்லவா? 'மல்பிட்பிள் இன்பாக்ஸ்' அம்சம் மூலம் இதை ஜிமெயில் லேப்ஸ் சாத்தியமாக்குகிறது. இதன் மூலம் இமெயில்களைப் பல்வேறு தலைப்புகளின் கீழ் தனித்தனி இன்பாக்சாகப் பிரித்துக்கொள்ளலாம். மெயிலை வகைப்படுத்தி தொகுப்பதன் மூலம் பல இன்பாக்ஸ்கள் இருப்பதுபோன்ற தோற்றம் கிடைத்தாலும், நடைமுறையில் இது பயனுள்ளதாகவே இருக்கும்.

இந்த வசதியைத் தேர்வு செய்த பிறகு மெயிலைப் பயன்படுத்தும்போது, செட்டிங்ஸ் பகுதிக்குச் சென்று பல இன்பாக்ஸ் அமைப்பை ஏற்படுத்திக்கொள்ளலாம். அதன் பிறகு குறிச் செ ாலுக்கு ஏற்ப மெயில்களை வகைப்படுத்திக் கொள்ளலாம்.

### கீபோர்ட் குறுக்குவழிகள்

இணைய பயன்பாட்டில் பிரவுசர் குறுக்குவழிகள் மிகவும் பிரபலமானவை. ஒன்றுக்கும் மேற்பட்ட கிளிக் தேவைப்படக்கூடிய இடங்களில் அவற்றை உடனே அணுக குறுக்குவழிகள் கைகொடுக்கின்றன. ஜிமெயில் செயல்பாடுகளை விரைவுப்படுத்திப் பிரத்யேகக் குறுக்குவழிகளும் இருக்கின்றன. இவற்றோடு உங்களுக்கான குறுக்குவழிகளை அமைத்துக்கொள்ள கூகுள் வழி செய்கிறது. செட்டிங்ஸ் பகுதியில் 'கீபோர்ட் ஷார்ட்கட்ஸ்' எனும் பகுதிக்குச் சென்றால், தேவையான குறுக்குவழிகளை அமைத்துக்கொள்ளலாம்.

### ஓரே பதில்

இமெயில்களின் தன்மைக்கு ஏற்ப அவற்றுக்கான பதில்கள் மாறும். சில மெயில்களுக்கு ஒரே விதமான பதில்களை அனுப்பும் நிலையும் இருக்கலாம். இதுபோன்ற சூழலில் ஒரே விதமான பதிலை மீண்டும் அடிப்பது அலுப்பூட்டும். இதைத் தவிர்க்க 'கேண்ட் ரஸ்பான்ஸ்' வசதியைப் பயன்படுத்தலாம். நிர்ணயிக்கப்பட்ட பதில்கள் தேவைப்படும் மெயில்களுக்கு, அவற்றை மீண்டும் டைப் செய்யாமல் இந்த வசதியை கிளிக் செய்து அதே பதிலை அனுப்பிவிடலாம். இந்த வசதியை உருவாக்கிகொண்ட பிறகு கம்போஸ் பகுதிக்கு அருகே இதற்கான பட்டனைக் காணலாம்.

### ஸ்மார்ட் லேபில்கள்

மெயில்களைப் பிரிக்க அவற்றுக்கான ஸ்மார்ட் லேபிள்களை உருவாக்கிக்கொள்ளலாம். நிதி, சமூகம், பயணம், அலுவலகம் என லேபிள்களுக்கு ஏற்ப இன்பாக்ஸில் வரும் மெயில்கள் தானாக வகைப்படுத்தப்படும். எந்த வகையான மெயில் தேவையோ அதை மட்டும் கிளிக் செய்து பார்க்கலாம். ஸ்மார்ட் லேபிள் தலைப்பின் கீழ் இந்த வசதியைப் பெறலாம்.

பலரும் கூகுள் காலாண்டரைப் பயன்படுத்தலாம். நிகழ்ச்சிகளைத் திட்டமிட, சந்திப்புகளை ஏற்பாடு செய்ய எனப் பலவற்றுக்கும் நாட்காட்டி வசதியைப் பயன்படுத்தலாம். ஆனால், நாட்காட்டி வசதியை ஒவ்வொரு முறையும் தனியே அணுகுவதைத் தவிர்க்க, ஜிமெயிலுக்குள்ளேயே அதைக் கொண்டுவரும் வசதியை லேப்ஸ் சேவையிலிருந்து அமைத்துக்கொள்ளலாம். ஜிமெயிலிலிருந்து வெளியேறாமலே நாட்காட்டியில் தகவல்களைச் சேர்க்க இது உதவுகிறது. இந்த வசதியை உருவாக்கிக்கொண்ட பிறகு, நாட்காட்டி சேவைக்கான வசதி இன்பாக்ஸ் இடப்பக்கத்தில் மூன்று புள்ளிகளாகத் தோன்றும்.

இமெயில்களில் இன்னமும் திறக்கப்படாமல் இருக்கும் மெயில்கள் எத்தனை என்பதை உடனடியாக அறியும் வசதியை அன்ரெட் மெசேஜ் சேவை மூலம் பெறலாம். மெயில்களை நட்சத்திரக் குறியிட்டு அடையாளப்படுத்துவது போலவே இன்னும் பலவற்றுக்கான 'குவிக் லிங்க்ஸ்' இணைப்புகளையும் உருவாக்கிக்கொள்ளலாம்.

ஜிமெயில் லேப்ஸ் பகுதிக்குச் சென்று கொஞ்சம் பொறுமையாக அலசி ஆராய்ந்தால், உங்கள் ஜிமெயில் பயன்பாட்டை இன்னும் மேம்படுத்திக்கொள்ள முடியும்.

பேஸ்புக் தளத்தில் கமெண்ட்களில் நண்பர்களை டேக் (tag) செய்ய புதிய ஷார்கட் விரைவில் வழங்கப்பட இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

பேஸ்புக் பதிவுகளின் கமெண்ட்களில் நண்பர்களை டேக் செய்ய புதிய ஷார்கட் அம்சத்தை வழங்க பேஸ்புக் பணியாற்றி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. அதன்படி கமெண்ட்களில் நண்பர்களின் பெயரை டைப் செய்யும் முன் எனும் குறியீடை டைப் செய்து டேக் செய்யும் படி வழங்கப்படுகிறது.சமீபத்தில் வெளியாகியுள்ள புதிய தகவல்களின் படி பேஸ்புக் கமெண்ட்களில் மென்ஷன் ஏ ஃபிரெண்ட் என்ற பெயரில் பிரத்யேக பட்டன் வழங்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதை கிளிக் செய்தால் பயனர்களின் நண்பர்கள் பட்டியல் தோன்றும், இதை ஸ்கிரால் செய்து டேக் செய்ய முடியும்.

## 12 நிமிடங்களில்...

ஸ்மார்ட்போன் சார்ஜிங் பிரச்சனை நீண்ட காலமாக தீர்க்க முடியாத ஒன்றாக இருந்து வருகிறது. பல்வேறு ஸ்மார்ட்போன்களிலும் சார்ஜ் சீக்கிரம் தீர்ந்து போவது அல்லது முழுமையாக சார்ஜ் ஆக நீண்ட நேரம் ஆவது போன்ற பிரச்சனை இன்றும் இருந்து வருகிறது.

சமீபத்தில் வெளியாகும் சில ஸ்மார்ட்போன்களில் வேகமாக சார்ஜ் செய்ய பல்வேறு பெயர்கள் கொண்ட தொழில்நுட்பம் வழங்கப்பட்டு வருகிறது என்றாலும் இவை பேட்டரியை குறைந்த நேரத்தில் முழுமையாக சார்ஜ் செய்யும் அளவு திறன் கொண்டிருப்பதில்லை.

அந்த வகையில் சாம்சங் அறிமுகம் செய்துள்ள புதிய தொழில்நுட்பம் ஸ்மார்ட்போன் பேட்டரிகளை 15 நிமிடங்களுக்குள் முழுமையாக சார்ஜ் செய்யும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. சாம்சங் மேற்கொண்டுள்ள புதிய ஆய்வுகளில் ஸ்மார்ட்போன்களை குறைந்த நேரத்தில் முழுமையாக சார்ஜ் செய்ய முடியும் என கண்டறியப்பட்டுள்ளது.

தென்கொரிய நிறுவனம் கண்டறிந்துள்ள புதிய வகை பேட்டரி பொருளானது, வழக்கமான லித்தியம் அயன் பேட்டரிகளை விட வேகமாக சார்ஜ் செய்யும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. சாம்சங் கண்டறிந்துள்ள புதிய பொருள் கிராஃபைன் பெல் என அழைக்கப்படுகிறது. சாம்சங் இதில் பயன்படுத்தும் பொருள் வழக்கமான லித்தியம் அயன் பேட்டரிகளை விட ஐந்து மடங்கு வேகமாக சார்ஜ் செய்யும்.

தற்போது பயன்படுத்தப்படும் பேட்டரிகள் முழுமையாக சார்ஜ் செய்ய குறைந்தபட்சம் ஒரு மணி நேரம் எடுத்துக் கொள்ளும், ஆனால் கிராஃபைன் பால் முழுமையாக சார்ஜ் செய்ய 12 நிமிடங்களே ஆகும் என சாம்சங் தெரிவித்துள்ளது. மேலும் இதன் திறன் 45 சதவிகிதம் வரை வளர்ச்சியை பெறும் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நீட்டிக்கப்பட்ட திறன், மற்றும் ஃபாஸ்ட் சார்ஜிங் திறன்கள் இணையும் போது ஸ்மார்ட்போன் மட்டுமின்றி எலெக்ட்ரிக் வாகனங்கள் மற்றும் உயர் ரக பேட்டரிகள் பயன்படுத்தும் இதர சாதனங்களிலும் இவற்றை பயன்படுத்த முடியும். தற்சமயம் வரை இந்த பொருள் ஆய்வு செய்யப்படும் நிலையில், கிராஃபைன் பால் சார்ந்த தொழில்நுட்பங்களை பாதுகாப்பாக பயன்படுத்த முடியுமா என்பதில் சாம்சங் மிகவும் கவனமாக இருப்பதாக கூறப்படுகிறது.




# உங்கள் வை–பையை பாதுகாப்பது எப்படி?

வைபை என்க்ரிப்ஷன் ப்ரோடோகால் நிஅக2 முறையில் பிழை இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. வைபை மூலம் பாதிப்பை ஏற்படுத்தும் இந்த பிழை மூலம் வைபை நெட்வொர்க்கில் இணைந்திருப்போரின் தகவல்களை ஹேக்கர்கள் திருட முடியும் என்பது தெரியவந்துள்ளது.



புதிய வைபை பிழை KRACK என அழைக்கப்படுகிறது. இந்த பிழையானது நிஅக2 ப்ரோடோகால் மீது பாதிப்பை ஏற்படுத்தும். குறிப்பிட்ட சேவைகள் மட்டுமின்றி அனைத்து வகையான நவீன வைபை நெட்வொர்க்களையும் இந்த பிழை பாதிக்கும் என மேத்தி வான்ஹோஃப் என்ற ஆராய்ச்சியாளர் தெரிவித்துள்ளார்.

### கிராக் பிழை என்றால் என்ன?

கிராக் (KRACK Key Reinstallation AttaCK) பிழை உங்களது வைபை சாதனம் பாதுகாக்கப்பட்ட வைபை நெட்வொர்க்குடன் இணைய முயற்சிக்கும் நான்கு வழி ஹேன்ட்ஷேக் முறையின் மூன்றாவது வழிமுறையை குறிவைக்கும். மூன்றாவது வழிமுறையில் என்க்ரிப்ஷன் கீயினை பலமுறை அனுப்பமுடியும் என்பதால் ஹேக்கர்கள் இந்த வழிமுறை மூலம் இடைமறித்து தகவல்களை சேகரித்து கொள்கின்றனர்.

வைபை சேவையை எவ்வித சாதனத்தில் பயன்படுத்த முயற்சித்தாலும் கிராக் வைபை பிழையில் பாதிப்பை சந்திக்க நேரிடும். எனினும் சில சாதனங்கள் மற்ற சாதனங்களை விட அதிக பாதிப்பில் சிக்க வாய்ப்புகள் இருப்பது தெரிய வந்துள்ளது.

உங்கள் சாதனத்தின் வைபை பாதுகாப்பு என்க்ரிப்ஷன் மறிக்கப்பட்டால், உங்களது நெட்வொர்க் மூலம் பரிமாற்றம் செய்யப்படும் அனைத்து தகவல்களும் அபகரிக்க முடியும். குறிப்பாக கிரெடிட் கார்டு எண், பாஸ்வேர்டுகள், மின்னஞ்சல்கள், சாட் வரலாறு, புகைப்படங்கள் உள்ளிட்டவற்றை உளவு பார்க்க முடியும்.

### பிழையில் இருந்து பாதுகாப்பாக இருப்பது எப்படி?

கிராக் வைபை பிழையில் பாதிக்கப்படாமல் இருக்க உங்களது சாதனம் அப்டேட் செய்யப்பட்டிருக்க வேண்டும் என வான்ஹோஃப் தெரிவித்துள்ளார். உங்களது சாதனம் அப்டேட் செய்யப்பட்டிருந்தாலும், மற்ற ஹார்டுவேருடன் தகவல் பரிமாற்றம் செய்ய முடியும். இதனால் வைபை பிழையில் இருந்து தப்பிக்க முடிந்தவரை வைபை இணைப்பை தவிர்த்து ஈத்தர்நெட் அல்லது மொபைல் டேட்டா பயன்படுத்துவது நல்லது.

இந்த பிழையில் வைபை நெட்வொர்க் மூலம் தகவல்களை பரிமாற்றம் செய்யும் அனைத்து சாதனங்களும் பாதிக்கப்படலாம் என்ற வகையில், ஆண்ட்ராய்டு சாதனங்கள் அதிகப்படியான பாதிப்பை சந்திக்கலாம் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆப்பிள் நிறுவனம் சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், தற்போதைய ஐ.ஓ.எஸ்., வாட்ச் ஓ.எஸ்., மேக் ஓ.எஸ். மற்றும் டி.வி. ஓ.எஸ். பீட்டா அப்டேட்களில் கிராக் வைபை பிழை சரி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று மைக்ரோசாஃப்ட் விண்டோஸ் சென்ட்ரல் சமீபத்தில் வெளியிட்ட அப்டேட் விண்டோஸ் 10 கணினிகளை கிராக் பாதிப்பில் இருந்து பாதுகாக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. விண்டோஸ் வெளியிட்ட அப்டேட்டின் போது கிராக் பிழையே கண்டறியப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# நீண்ட கூந்தலின் இரகசியம்



இந்த காலத்தில் நீண்ட நேரம் வேலை மற்றும் காலநிலை மாற்றம் போன்றவற்றால் கூந்தல் நிறைய பிரச்சினைகளை சந்திக்கின்றனர்.

உங்கள் கூந்தல் ஆரோக்கியமாக அழகாக இருக்க இப்பொழுது நிறைய கூந்தல் பராமரிப்பு பொருட்கள் உள்ளன. இவற்றை பயன்படுத்துவதால் எந்த பாதிப்பும் ஏற்பட வாய்ப்பில்லை. உங்களுக்கு தகுந்த பிராண்ட் பொருட்களை பயன்படுத்திக் கொள்ளலாம். இங்கே வேலைக்கு போகும் பெண்களின் கூந்தல் பராமரிப்புக்காக மிகவும் அத்தியாவசியமான சில பொருட்களை பற்றி பார்ப்போம்.

★ ஹேர் கன்டிஷனரை நீங்கள் ஷாம்பு பயன்படுத்தினால் முடியில் இருக்கும் எண்ணெய் பசை மட்டும் தான் போகும். ஆனால் கூந்தலின் ஆரோக்கியத்திற்கு கன்டிஷனர் தேவை. தினமும் ஷாம்பு போட்டு குளித்த பிறகு கன்டிஷனர் பயன்படுத்தினால் மிருதுவான மற்றும் அலங்கரிக்க ஏதுவான கூந்தல் கிடைக்கும்.

நீங்கள் கன்டிஷனரை தேர்ந்தெடுக்கும் போது உங்கள் ஷாம்பு பிராண்ட் கன்டிஷனரை அல்லது உங்கள் கூந்தல் ஸ்டைல்லிஸ்ட் இடம் ஆலோசனை பெற்று தேர்ந்தெடுக்கலாம்.

★ நீங்கள் நீண்ட நேரம் வேலை பார்ப்பவரா இருந்தால் கண்டிப்பாக அந்த நாள் இறுதியில் கூந்தல் கலைந்து போகும். இந்த பிரச்சினை நிறைய பெண்களிடம் உள்ளது. எனவே இதற்கு நீங்கள் ஹேர் வேக்ஸ் பயன்படுத்தினால் நல்ல வித்தியாசத்தை காண்பீர்கள். கொஞ்சம் ஹேர் வேக்ஸ் பயன்படுத்தினால் போதும் உங்கள் கூந்தல் அதிசயிக்கும் படி அழகாக கலையாமல் இருக்கும்.

★ நீங்கள் பயன்படுத்தும் தண்ணீர் மற்றும் காலநிலை மாற்றம் உங்களுக்கு முடி உதிர்வை ஏற்படுத்துகிறது. இதை கண்டு கொள்ளாமல் விட்டால் நாளுக்கு நாள் அதிகரித்து விடும். இதை சரி செய்ய ஹேர் வாளியுமரைசரை பயன்படுத்தினால் நல்ல பலன் கிடைக்கும். இந்த வாளியுமரைசர் ஸ்பிரே வடிவிலும் கிடைக்கிறது. ஷாம்பு போட்ட பிறகு இதை பயன்படுத்தினால் கூந்தல் அழகாக அடர்த்தியாக காணப்படும். மேலும் இது வறண்ட சிக்கலான கூந்தலை சமாளிக்கவும் உதவுகிறது.

★ உங்களது நீளமான கூந்தல் என்றால் அதை முழுமையாக பராமரிக்க நீண்ட நேரம் தேவைப்படும். ஆயில் மற்றும் ஷாம்பு அதன் வேரை சென்றடைய நீண்ட நேரம் ஆகும். எனவே இதற்கு ஹேர் மாஸ்க் மற்றும் க்ரீம்கள் பயன்படுத்தினால் எளிதில் முடியின் வேருக்கு சென்று நல்ல பலனை தரும். மேலும் மூலிகை மாஸ்க் மற்றும் க்ரீம்கள் பயன்படுத்தினால் அதிகமான பலனை பெறலாம்.

# ஆடைக்கேற்ற அழகான காலணிகள்!







பெண்கள் விரும்பும் வகையில் மிகவும் நளினமாக, ஆனால் பார்ப்பதற்கே கொஞ்சம் விலை கூடுதல் போல என்று நினைக்க வைக்கும் வகையில் காலணிகள் வந்துள்ளன.

பெண்களின் ஆடையின் நிறத்திற்கேற்ற செருப்பு, அதிக உயரம் கொண்ட குதிக் கால் செருப்பு, கால்களை முழுவதும் மூடிக் கொள்ளும் கட்ஷூ, மெல்லிய லேஸ்களைக் கொண்ட தளர்வான செருப்பு, பெரிய கற்கள் பதித்தவை, துணியால் அலங்கரிக்கப்பட்ட காலணிகள் என பலப் பல வகைகளில் காலணிகள் சந்தைகளில் குவிகின்றன.

ஒவ்வொன்றும் தரத்திற்கும், அழகுக்கும் ஏற்ற விலைகளில் கிடைக்கின்றன. குறைந்த விலையிலும் அழகான காலணிகளை வாங்கிச் செல்ல முடியும். பாதங்களின் அழகைக் கூட்டும் விதத்திலும் காலணிகள் கிடைக்கின்றன.

பெண்கள் விரும்பும் வகையில் மிகவும் நளினமாக, ஆனால் பார்ப்பதற்கே கொஞ்சம் விலை கூடுதல் போல என்று நினைக்க வைக்கும் வகையில் காலணிகள் வந்துள்ளன.

சாதாரண தோற்றத்தில் நல்ல தரத்துடன் அணிவதற்கு சுகமானதாகவும் அலுவலக பயன்பாட்டிற்கு பல வகைகளில் காலணிகள் இடம்பிடித்துள்ளன.

காலணிகள் என்றதும் குழந்தைகளுக்குச் சொல்லவா வேண்டும். விளக்கொளியில் மின்னும் செருப்பு, ஒலி எழுப்பும் செருப்பு, சிறுவர்களுக்குப் பிடித்த பொம்மைகளை இணைத்திருக்கும் வகை, பெண் குழந்தைகளுக்குப் பிடித்த வண்ண வண்ண மணிகளைக் கொண்டவை, புசுபுசுவென தோற்றமளிக்கும் செருப்புகள் என ஏராளம் ஏராளம். இதிலும் விளையாட்டு வீரர்கள் அணிந்திருப்பதைப் போன்ற தோற்றத்துடன் ஆண் குழந்தைகளுக்கு என பல்வேறு விதங்களில் செருப்புகள் வந்துள்ளன.

பொதுவாக, எல்லா செருப்புகளுமே பார்பதற்கு அழகாக இருக்கும். பெண்கள் செருப்புகளின் அழகை பார்க்காமல், தங்கள் உடல் அமைபுக்கு ஏற்றவாறும், அணியும் உடைக்கு ஏற்றவாறும், ஆரோக்கியத்துக்குரியதாகவும் அதை தேர்வு செய்வது அவசியம்.

செருப்பு அணியும்போது, அதற்கு பொருத்தமாக ஆடையை தேர்வு செய்வது முக்கியம். கறுப்பு அல்லது டார்க் கலர் ஆடையை அணிந்துகொண்டு, பிரவுன், சந்தன நிற செருப்புகளை அணிந்தால் பொருத்தமாக இருக்காது. அதேநேரம், கறுப்பு அல்லது டார்க் நிற செருப்பை அணிந்து கொண்டால் பொருத்தமாக இருக்கும்.

பெண்களின் விருப்பங்களுக்கு ஏற்ப இன்றைய புட்வேர் உலகில் பல மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதுவரை, ஆடைகளில் மட்டுமே காணபட்ட எம்ராய்டரி வேலைகள் இப்போது நவீன செருப்புகளிலும் இடம்பெறுகின்றன.

இன்றைய நாகரீக மங்கையர் அதிகம் விரும்பி தேர்வு செய்வது, எம்ராய்டரி வேலைகள் காணப்படும் இந்த செருப்புகளைத்தான்.

இன்றைய பெண்கள் பெரும்பாலும் பிளாட் (தட்டை வடிவம்) மற்றும் பாயின்ட்டட் வகை (ஹீல்ஸ் போன்ற மெல்லிய வடிவம்) காலணிகளையே அதிகம் தேர்வு செய்கிறார்கள்.

சந்தையில் பல வகைகளில் காலணிகள் வந்தாலும் நமக்கென்று ஒரு தேர்வு உள்ளது. உங்களுக்குப் பிடித்தவற்றை தேர்வு செய்து அணியுங்கள். காலுக்கும், காசுக்கும் எந்த பாதிப்பும் இல்லாத வகையில் உங்களது தேர்வு இருக்கட்டும்.

# முகத்திற்கு சுகமான மசாஜ்!



பேபி வைப்ஸ் போலவே தற்போது பெரும்பாலானோர் ஸ்கின் கேர் வைப்ஸ் பயன்படுத்துகிறார்கள். காற்று புகாத வண்ணம் டைட்டான பாக்ஸில் ஈரப்பசையுடன் வைப்ஸ் இருக்கும்.

இதனை நாம் எளிதாக பயன்படுத்தலாம். தண்ணீரைக் கொண்டு முகத்தை கழுவ முடியாத சமயங்களில் இதனைப் பயன்படுத்தலாம். மேக்கப் ரீமூவ் செய்வதற்கு சருமம் வறண்டு காணப்பட்டால் இதனைப் பயன்படுத்தி முகத்தை துடைக்கலாம்.

இதனைப் பயன்படுத்த எளிதாக இருந்தாலும் இதனால் ஏராளமான தீமைகள் ஏற்படுகிறது.


ஸ்கின் கேர் வைப்ஸில் ஏராளமான கெமிக்கல்ஸ் இருக்கும். எப்போதும் அவை ஈரப்பதத்துடன் இருப்பதற்காக அவற்றில் கெமிக்கல் சேர்க்கப்படுகிறது. இவற்றால் சென்ஸிட்டிவ் ஸ்கின் இருப்பவர்களுக்கு நோய்த்தொற்று ஏற்பட வாய்ப்புண்டு. இதனை தொடர்ந்து பயன்படுத்தினால் சருமம் வரண்டு போகும். இதனால் பல்வேறு சரும பாதிப்புகள் உண்டாகும்.

தண்ணீரை பயன்படுத்த முடியாத சூழ்நிலைகளில் தான் அதிகமாக இதனை பயன்படுத்துகிறார்கள் ஆனால் இதனை பயன்படுத்துவதால் முகம் முழுவதுமாக சுத்தம் ஆகாது. சில நுண்ணிய துகள்கள் முகத்தில் ஒட்டியபடியிருக்கும். இப்படியே அடிக்கடி செய்து வந்தால் அது சருமத்திற்கு பாதிப்பையே உண்டாக்கும்.

வைப்ஸில் இருக்கும் ஆல்கஹால் நம் சருமத்தை வறட்சியாக்கிடும். இது சீக்கிரத்திலேயே சருமத்தில் சுருக்கம் விழுவதற்கு காரணமாக அமைந்திடும். இதனால் பருக்கள், கரும்புள்ளி தோன்றும்.




# கண்களின் அழகைப் பராமரிக்க...



முட்டை, மஞ்சள் மற்றும் ஆரஞ்சு நிறப் பழங்கள் மற்றும் காய்கள். போதிய அளவு தண்ணீர் குடிக்க வேண்டியதும் மிக முக்கியம். உடலுக்கு மட்டு மின்றி கண்களுக்கு பயிற்சி அவசியம்.

ஏனெனில் கண் தசைகளோடு, மூளையுடன் தொடர்புடைய ஏராளமான நரம்புகள் இணைக்கப்பட்டுள்ளன. கண்களை நேரம் கிடைக்கும் போதெல்லாம் க்ளாக் வைஸ் மற்றும் ஆன்டிக்ளாக் வைஸ் டைரக்ஷன்களில் மூன்று முறைகள் சுழற்ற வேண்டும்.

கிட்டத்தில் இருக்கும் பொருளைப் பார்த்துவிட்டு, உடனடியாக தொலைவில் உள்ள ஒரு பொருளையும் பார்க்க வேண்டும்கட்டை விரலை நடுவில் வைத்துக் கொண்டு, அதை இடவலமாகவும், வல இடமாகவும் நகர்த்தி, தலையைத் திருப்பாமல் வெறும் பார்வையை மட்டும் திருப்பிப் பார்க்க வேண்டும்.

நீண்ட நேரம் கம்ப்யூட்டர், மானிட்டர் போன்றவற்றின் முன் அமர்ந்து வேலை பார்ப்பவர்கள், அடிக்கடி ஏதேனும் பச்சை வெளியைப் பார்க்கலாம். கண்களுக்குக் குளிர்ச்சியைத் தரும் நீலம் மாதிரியான நிறங்களையும் பார்க்கலாம்.

# 40 வயதிற்குமேல்....



பொதுவா செல்கள் தினந்தோறும் இறக்குது, அதுக்குப் பதிலா புதிய செல்கள் பிறக்குதுன்னு நமக்குத் தெரியும். இந்த புதிய செல் உருவாகிறது எப்பதாமதமாகுதோ அப்ப வெளிப்படையா முதுமை தெரியும். அழகு நிலையத்துக்கு போய் வெளிப்படையான மாற்றத்தை ஓரளவு மறைக்கலாம். ஆனா, உட்புறம் ஏற்படுகிற மாற்றத்துக்கு என்ன செய்யறது? உணவுப்பழக்கமும், உடற்பயிற்சியும்தான் இதுக்கு தீர்வு.ஆக்சிடேடிவ் ஸ்ட்ரெஸ் - கொலாஜன். இந்த இரண்டுலயும் மாற்றம் ஏற்படறப்ப முதுமை தெரியும். நம்ம உடம்புல போதுமான அளவுக்கு ஃபிரீராடிகல்ஸ் மற்றும் ஆன்டிஆக்சிடென்ட்ஸ் சுரக்கலைனா ஆக்சிடேடிவ் ஸ்ட்ரெஸ் ஏற்படும். ஃபிரீராடிகல்ஸ் அதிகமாக சுரந்தா அது ஆன்டி ஆக்சிடென்ட்சை பாதிக்கும். சருமத்துல ஏற்படற சுருக்கங்களை கொலாஜென், பாதுகாக்கும். இது ஒவ்வொரு நாளும் உடையும். புதுசு புதுசா உற்பத்தியாகும். இதுல மாற்றம் ஏற்பட்டா முகத்துல சுருக்கம், கண்களுக்கு கீழ கருவளையம் ஏற்படும். இதையெல்லாம் மரபணுசோதனைலதான் கண்டறியமுடியும்.

பொதுவா நம்ம சருமத்துக்கு புரதம், வைட்டமின், மினரல்கள் அவசியம். சராசரி அளவுல இதை நம்ம உணவுல சேர்த்துகிட்டா போதும். அதுபோக நிறைய தண்ணீர் குடிக்கணும். நம்ம உடம்புல 75% தண்ணீர் தான் இருக்கு. உடல்ல இருக்கிற நச்சுத்தன்மையை போக்கவும், சருமம் பளபளப்பா மின்னவும் தண்ணீர் அவசியம். மத்த பொருட்களை விட பால்ல கால்சியம் குறைவுதான். ஆனாலும் தினமும் பால் குடிக்க சொல்றோம். குறைந்த அளவுல கால்சியம் இருந்தாலும் அதை முழுமையா உடம்புக்கு சேர்க்கிறது பால்தான்.

வேகாத, பாதி வெந்த, முழுமையான வெந்த உணவுகள்னு மூணு வகையா நம் சமையலை பிரிக்கலாம். இந்த மூணுமே நமக்கு அவசியம். சாத்துக்குடி, எலுமிச்சை, ஆரஞ்ச் பழங்கள்ல வைட்டமின் சி இருக்கு. இதையெல்லாம் அப்படியே சாப்பிடலாம் அல்லது ஜூஸ் பிழிஞ்சு, தேன் கலந்து குடிக்கலாம். பேரீச்சம் பழத்துலயும், தேன்லயும் இரும்புச்சத்து இருக்கு. இதை வைட்டமின் சி கொண்ட பழங்களோட சாப்பிட்டா, முழுமையான ஆரோக்கியம் கிடைக்கும்.

கார்போஹைட்ரேட்டை குறைச்சு, புரதசத்து அதிகமிருக்கிற உணவுகளை சாப்பிடலாம். முக்கியமா நேரம் தவறாம சாப்பிடணும். இதையெல்லாம் செய்தாலே நாம இளமையா இருக்கலாம்.

# வாங்க சமைக்கலாம்

## செஷ்வான் பனீர்



### என்னென்ன தேவை?

துண்டுகளாக நறுக்கிய பனீர் - 100 கிராம்,
மைதா, சோள மாவு - தலா 25 கிராம்,
பச்சைமிளகாய் - 1,
காய்ந்தமிளகாய் விழுது - சிறிது,
பூண்டு, இஞ்சி, தலா 1 டேபிள்ஸ்பூன்,
காய்ந்தமிளகாய் - 1,
உப்பு, எண்ணெய், சோயா சாஸ் - தேவைக்கு,
செஷ்வான் விழுது - சிறிது.

### செஷ்வான் சாஸ் செய்ய...

நறுக்கிய வெங்காயம் - 1,
பூண்டு, இஞ்சி, செலரி - தலா 1 டேபிள்ஸ்பூன்,
வேகவைத்த மிளகாய் - 5,
செஷ்வான் விதை - 25 கிராம்,
வினிகர் - சிறிது,
தக்காளி சாஸ் - சிறிது,
உப்பு - சிறிது.

### எப்படிச் செய்வது?

செஷ்வான் சாஸிற்கு கொடுத்த பொருட்கள் அனைத்தையும் விழுதாக அரைத்து, எண்ணெயில் போட்டு வேக வைத்துக் கொள்ளவும். பாத்திரத்தில் பனீர், சோள மாவு, மைதா, உப்பு, வெள்ளை மிளகுத்தூள், சிறிது தண்ணீர் விட்டு பிசைந்து, சூடான எண்ணெயில் பனீரை வறுத்து வைத்துக் கொள்ளவும்.

கடாயில் எண்ணெயை காயவைத்து பூண்டு, இஞ்சி,பச்சை மிளகாய், காய்ந்தமிளகாய், காய்ந்தமிளகாய் விழுது போட்டு வதக்கி, வறுத்த பனீர், சோயா சாஸ், உப்பு, வெள்ளை மிளகுத்தூள், செஷ்வான் சாஸை சேர்த்து நன்றாக கிளறி இறக்கவும்.

# உங்களுக்காக...


★ தேங்காய் இளசாக இருந்தாலும் சரி... நன்கு முற்றி ஓட்டை விட்டு கழன்று வரும் நிலையிலிருந்தாலும் சரி. சுலபமாக துருவ, தேங்காயைத் துண்டுகளாக வெட்டி, ஒரு மணி நேரம் ஃப்ரீஸரில் வைத்து விடுங்கள், பின்னர் மிக்சி ஜாரில் போட்டு தண்ணீர் விடாமல் சில விநாடிகள் சுற்றினால், துருவியது போலவே பூப்பூவாக வந்து விடும்.

★ இரவு மீந்த ஒரு கப் சாதத்தை மிக்சி ஜாரில் போட்டு, கூடவே மூன்று டீஸ்பூன் கடலை மாவு, மூன்று டீஸ்பூன் அரிசி மாவு, தேவையான உப்பு சேர்த்து, மோர் விட்டு தோசை மாவு பதத்துக்கு அரைத்துக் கொள்ளுங்கள். பொடியாக அரிந்த ஒன்றிரண்டு பச்சைமிளகாய், கொத்தமல்லி ஆகியவற்றை அதில் சேர்த்து கலந்து, ஃப்ரிட்ஜில் வைத்து விடுங்கள். அடுத்த நாள் காலை சிற்றுண்டிக்கு சுவையான தோசைகள் வார்க்கலாம்.

★ வாழைக்காயை நறுக்கும் முன் கைகளில் உப்பு தூளை தடவிக் கொண்டால் கைகளில் பிசுபிசுப்பும், கறையும் வராது.

★ பஜ்ஜி செய்யும் வாழைக்காய், உருளைக்கிழங்கு வில்லைகளை மிளகாய் பொடி, உப்புடன் கலந்து 1/2 மணி நேரம் வைத்திருந்து, பின் பஜ்ஜி மாவில் போட்டு செய்தால் பஜ்ஜி சுவையாய் இருக்கும்.

# ஒரு கோப்பை தங்கம்!



படபடவென்று அந்த வீட்டின் கதவு தட்டப்பட்டது. யாரோ, என்னவோ என்று நினைத்து கதவைத் திறந்து பார்த்தார்கள். ஒரு பிரிட்டிஷ் காவல்துறை அதிகாரி தன் உதவியாளருடன் நின்றுகொண்டிருந்தார். ஐயோ இவர் ஏன் வீட்டுக்குவருகிறார் என்று வீட்டில் இருந்தவர்கள் பயந்தாலும், பயத்தை வெளியில் காட்டாமல் உள்ளே வாருங்கள் என்று அழைத்தார்கள். வராதீர்கள் என்று சொன்னால் மட்டும் போய்விடவா போகிறார்கள்?

அந்த அதிகாரி உள்ளே வந்து நாற்காலியில் அமர்ந்தார். பிறகு தன் உதவியாளரைப் பார்த்து கண்ணசைத்தார். உடனே உதவியாளர் தன்னுடைய பையைத் தோளில் இருந்து இறக்கினார். உள்ளே இருப்பதை ஒவ்வொன்றாக எடுத்து வெளியில் வைத்தார். முதலில் ஒரு சிறிய மண்ணெண்ணெய் அடுப்பு. ஒரு கெண்டி. ஒரு பாத்திரத்தில் பால். கொஞ்சம் சர்க்கரை. கோப்பைகள். ஒரு சிறிய பொட்டலம். வீட்டில் இருந்தவரைப் பார்த்து பிரிட்டிஷ் அதிகாரி சொன்னார். அடுத்த ஐந்து நிமிடங்களுக்கு இவர் என்ன செய்கிறார் என்று கவனியுங்கள். எல்லோரும் உட்காருங்கள், யாரும் பயப்படவேண்டாம்.

உதவியாளர் அவர்களிடம் தண்ணீர் எடுத்து வரச் சொன்னார். அடுப்பைப் பற்ற வைத்தார். தண்ணீர் கொதிக்க ஆரம்பித்ததும், பொட்டலத்தைப் பிரித்தார். அதிலிருந்து சிறிது எடுத்து தண்ணீரில் போட்டார். கவனியுங்கள், கவனியுங்கள் எவ்வளவு போடுகிறார் என்று பாருங்கள் என்று குரல் கொடுத்தார் அதிகாரி. அவர் சொல்லாமலேயே எல்லோரும் கவனித்துக்கொண்டுதான் இருந்தார்கள்.

குபுக் குபுக்கென்று கொதித்துக்கொண்டிருந்த தண்ணீர், இப்போது தங்க நிறத்தில் மின்ன ஆரம்பித்திருந்தது. அந்த அறை முழுக்க புதிய வாசம் பரவ ஆரம்பித்தது. இன்னும் கொஞ்சம் கொதிக்க விட்டால் பாத்திரத்தைவிட்டு தண்ணீர் வெளியில் குதித்துவிடும் என்னும் கட்டத்தில் சரியாக அந்த உதவியாளர் அடுப்பை அணைத்தார்.

ஓர் ஏவுகணையை வெற்றிகரமாக விண்ணில் செலுத்திய திருப்தியோடு அந்தத் தங்க நிறத் தண்ணீரை எடுத்து (ஆ அடுத்து என்ன செய்யப் போகிறார் என்று எல்லோரும் கவனித்துக்கொண்டிருப்பதைக் கவனியுங்கள்!) கையோடு கொண்டுவந்திருந்த கோப்பைகளில் அளவு பார்த்து நிரப்பினார். பாலை எடுத்து அளவோடு கலந்தார். என் வேலை முடிந்தது என்பதுபோல் நிமிர்ந்து அதிகாரியைப் பார்த்தார்.

அதிகாரி இப்போது நாற்காலியிலிருந்து எழுந்துகொண்டார். இதோ இங்குள்ள கோப்பையை எடுத்துப் பருகுங்கள். இது உடலுக்கு நல்லது. குடித்துப் பார்த்துவிட்டு எப்படியிருக்கிறது என்று சொல்லுங்கள். ஆளுக்கொரு கோப்பையை அங்கிருந்தவர்கள் எடுத்துக் கொண்டார்கள். குடித்து முடித்த பிறகு ஒரே குரலில் உற்சாகமாகச் சொன்னார்கள். 'அருமை, மிகவும் பிடித்திருக்கிறது ஐயா. இதன் பெயர் என்ன?'

அந்த அதிகாரி பெருமிதத்துடன் சொன்னார். இதன் பெயர் டீ. இதோ உங்களுக்கு இலவசமாக ஒரு பொட்டலம் எடுத்துவந்திருக்கிறேன். இதேபோல் வெளியிலும் கிடைக்கும். தினமும் காலை எழுந்தவுடன் சாப்பிடுங்கள். நான் வரட்டுமா?

அவர் போனபிறகு கதவைச் சாத்தினார்கள். ஒருவர் விடாமல் எல்லோரும் முகத்தைச் சுளித்துக்கொண்டார்கள். டீயாம், டீ! வயிற்றை ஒரு கலக்கு கலக்கிவிட்டது. எப்படித்தான் இதை இந்த வெள்ளையர்கள் குடிக்கிறார்களோ! ஆமாமாம், நல்ல பாலை ஏதோ பொடி கலந்து வீணாக்கிவிட்டார்கள். ஐயோ, இதைத் தினமும் போட்டுக் குடிக்கவேண்டும் என்று வேறு சொல்கிறாரே என்றார் மூன்றாவது நபர். அதிகாரி போய்விட்டாரா என்பதை உறுதி செய்துகொண்ட பிறகு அவர் கொடுத்த பொட்டலத்தை ஜன்னல் வழியாக வீசியெறிந்தார்கள்.

இப்படித்தான் தேநீரை வரவேற்றுக் கொண்டாடியது இந்தியா. எப்படியாவது இந்தியர்களைத் தேநீர் சுவைக்குப் பழக்கப்படுத்திவிட வேண்டும் என்று தலைகீழாக நின்று பார்த்தது பிரிட்டிஷ் காலனி அரசு. இந்தியர்கள் மயங்கினால்தானே? தங்க நிறத்தில் மின்னினாலும் சரி, வைரம்போல் கண் சிமிட்டினாலும் சரி, வேண்டவே வேண்டாம். பால் போதும் எங்களுக்கு என்று சொல்லிவிட்டார்கள். அசாமில் மிகப் பெரிய தேயிலைத் தோட்டங்களை வெற்றிகரமாக அமைத்துவிட்டது காலனி அரசு. உற்பத்தியும் பெருகிக்கொண்டே போகிறது. உலகமே ஆஹா ஓஹோ என்று பாராட்டி வாங்கிக் குடிக்கிறது. இந்தியர்கள் மட்டும் ஏன் மசிய மாட்டேன் என்கிறார்கள்?

தொடர்ந்து வீட்டுக்கு வீடு அதிகாரிகள் பிரச்சாரம் செய்தார்கள். சுடச்சுடப் போட்டு கையில் கொடுத்து ஆசை காட்டினார்கள். அப்போதும் பலனில்லை. பிறகொருநாள் யாரோ சொன்னார்கள். தேநீர் குடித்தால் வயிற்று வலி போகிறது, காய்ச்சல் குறைகிறது, இருமல் மறைகிறது, தலைவலி பறந்து போகிறது. ஏன் இதை மருந்துபோல் நினைத்து கஷ்டப்பட்டு குடித்துவிடக்கூடாது?

கண்ணை மூடிக்கொண்டு ஒரே வாயில் விழுங்கினார்கள். இருமல் மருந்து சாப்பிடுவோமே அப்படி! வீட்டில் யாருக்காவது உடம்பு சரியில்லை என்றால் மட்டும் கடைக்குப் போய் தேயிலை வாங்கிவந்து போடுவார்கள். காலை எழுந்து ஒருநாள் குடித்துப் பார்த்தார்கள். பரவாயில்லை, ஓரளவு நன்றாகவே இருக்கிறது என்று மறுநாளும் குடித்தார்கள். விருந்தினர்கள் வரும்போது கலந்து கொடுக்க ஆரம்பித்தார்கள். வெளியில் போய்விட்டு, களைப்பாக வரும்போது அருந்திப் பார்த்தார்கள். அப்படியொன்றும் மோசமில்லை என்று தோன்றியது.

தேநீர் பொட்டலத்தை வீசியெறிந்ததைப் போலவே ஒரு நாள் பிரிட்டிஷ் அரசையும் ஜன்னல் வழியாக இந்தியர்கள் தூக்கிப் போட்டார்கள். ஆனால் தேநீரை அதற்குப் பிறகு வீசவில்லை. தங்கம்போல் மின்னிய தேநீர் அனைவரையும் மயக்கிவிட்டது.

# வௌவால் ஏன் தலைகீழாக தொங்குகிறது?

பறக்கும் பாலூட்டியான வௌவாலுக்கு கால்கள் நிற்பதற்கு ஏற்ற வகையில் அமையவில்லை. பறப்பதற்கு ஏற்ற வகையில் முன்னங்கால்களும் பின்னங்கால்களும் சவ்வால் இணைக்கப்பட்டிருக்கின்றன. பகல் நேரத்தில் எதிரிகளிடமிருந்து தப்பிப்பதற்காக மரக்கிளைகளைப் பின்னங்கால்களால் பற்றிக்கொண்டு தலைகீழாகத் தொங்கிக்கொண்டிருக்கின்றன.

இப்படித் தொங்கும்போது எதிரிகளின் கண்களுக்குச் சட்டென்று இவை புலப்படுவதில்லை. அது மட்டுமின்றி, பறவைகளைப்போல நிலத்திலிருந்து வௌவால்களால் பறந்து செல்ல முடியாது. தலைகீழாகத் தொங்கிக்கொண்டிருக்கும்போது எளிதாகப் பறந்து சென்றுவிட முடியும். தலைகீழாகத் தொங்கும்போது குறைவான சக்தியே செலவாகிறது என்பதாலும் வௌவால்கள் தலைகீழாகத் தொங்குகின்றன,



## பொன்மொழிகள்

அதிகம் பேசாதவனை உலகம் அதிகம் விரும்புகிறது. அளந்து பேசுபவனை அதிகம் மதிக்கிறது. அதிகம் செயல்படுபவனையே கைகூப்பித் தொழுகிறது.

கற்ற அறிவையும், பெற்ற செல்வத்தையும் இறுதிக் காலம் வரை மற்றவர்களுக்காகச் செலவிடுங்கள்.

நம்முடன் வாழ்வோரைப் புரிந்து கொள்வதற்கு நம்மை முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.


நம்பிக்கை குறையும் போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான்.

சலித்துக் கொள்பவன் ஒவ்வொரு வாய்ப்பிலும் உள்ள ஆபத்தைப் பார்க்கிறான். சாதிப்பவன் ஒவ்வொரு ஆபத்திலும் உள்ள வாய்ப்பினைப் பார்க்கிறான்.

மகிழ்ச்சி என்ற உணர்ச்சி மட்டும் இல்லாவிட்டால் வாழ்க்கை என்பது சுமக்க முடியாத பெரிய சுமையாகியிருக்கும்.

உலகம் ஒரு விசித்திரமான கல்லூரி. இங்கே பாடம் சொல்லிக்கொடுத்துத் தேர்வு வைப்பது இல்லை. தேர்வு வைத்த பிறகே பாடம் கற்பிக்கப்படுகிறது.

## நிறந்தீட்டுவோம்



# குட்டையைப் பிரித்த மீன்கள்

மதியூரில் ஒரு பெரிய குட்டை இருந்தது. அந்தக் குட்டையின் ஒரு புறத்தில் மீன்கள் வசித்துவந்தன. மற்றொரு புறத்தில் வயதான தவளை ஒன்று வசித்தது.

அந்த மீன்களுக்குத் தவளையைக் கண்டாலே ஆகாது. அதுவும் இரவில் தவளை கத்தும் சத்தம் கொஞ்சம் கூடப் பிடிப்பதில்லை.



அதனால் அந்தத் தவளையைக் குட்டையை விட்டே துரத்திவிட வேண்டும் என்று மீன்கள் அடிக்கடி பேசிக்கொண்டன.

ஒருநாள் எல்லா மீன்களும் சேர்ந்து தவளையிடம் வந்தன.

தவளையே உன்னைக் கண்டாலே எங்களுக்குப் பிடிக்கவில்லை. அதனால் நீ இந்தக் குட்டையைவிட்டு ஓடிப் போய்விடு என்று எச்சரிக்கை செய்தன.

நண்பர்களே! நம் அனைவருக்குமே பொதுவானது இந்தக் குட்டை. நான் உங்களைத் தொந்தரவு செய்வதில்லை. அப்படி இருந்தும் என்னை ஏன் போகச் சொல்கிறீர்கள்? இது நியாயம்தானா?

நியாயம், அநியாயம் என்பதெல்லாம் எங்களுக்குத் தெரியாது. நீ இங்கிருந்து போய்தான் ஆக வேண்டும் என்று மீன்கள் பிடிவாதம் பிடித்தன.

நான் பிறந்து வளர்ந்தது எல்லாமே இந்தக் குட்டையில்தான். நான் எங்கே போவது? அதுமட்டுமல்ல, இந்தக் குட்டையை விட்டுப் போக எனக்கு விருப்பமில்லை என்று அமைதியாகச் சொன்னது தவளை.

மீன்களின் மத்தியில் கொஞ்ச நேரம் சலசலப்பு ஏற்பட்டது.

வயதான மீன் முன்னே வந்தது. தவளையே, அப்படியானால் ஒன்று செய்யலாம். இந்தக் குட்டையை இரண்டாக பிரிப்போம். ஒரு பகுதியில் நீ இரு. மற்றொரு பகுதியில் நாங்கள் இருக்கிறோம். ஆனால் எங்கள் பகுதிக்கு நீ வரக்கூடாது என்றது.

அனைத்து மீன்களும் ஓ... என்று கத்தியபடியே மகிழ்ச்சியைத் தெரிவித்தன.

தவளைக்குக் குட்டையைப் பிரிப்பதில் விருப்பம் இல்லைதான். வேறு வழியில்லாமல் சரி என்றது. குட்டை இரண்டாகப் பிரிக்கப்பட்டது.

அப்பாடா! இனிமேல் அந்தத் தவளை இந்தப் பக்கம் வரவே வராது என்று மகிழ்ச்சியில் துள்ளியது ஒரு மீன்.

ஆமாம். ஆமாம். இனி இந்தப் பக்கக் குட்டை நம் கட்டுப்பாட்டில்தான் என்றது இன்னொரு மீன்.

நாட்கள் செல்லச் செல்ல மீன் கூட்டம் அதிகரித்தது. அவற்றுக்கு அந்தப் பாதிக் குட்டை போதவே இல்லை.

பல மாதங்களாகக் கடுமையான வெயில் வாட்டி எடுத்தது. மழையே இல்லாமல் குட்டை நீர் வற்றத் தொடங்கியது.

நீர்ப்பற்றாக்குறை அதிகமானதால் வயதான மீன்கள் இறந்து போயின. தவளை இருந்த பக்கம் தண்ணீர் ஓரளவு இருந்தது.

குட்டையின் மறுபுறம் நீர் குறைந்து, மீன்கள் வாடுவதைப் பார்த்து மனம் வருந்தியது தவளை.

இப்படியே போனால் இந்தக் குட்டையும் அந்த மீன்களும் அழிந்து போய்விடுமே என்று பயந்தது.

ஏதாவது உதவி செய்து அந்த மீன்களைக் காப்பற்ற வேண்டும் என்று நினைத்து, குட்டையின் பிரிக்கப்பட்ட பகுதிக்கு வந்தது.

எட்டிப் பார்த்தது. பாதிக் குட்டையில் மீன்கள் ஒன்றோடு ஒன்று மோதி, துன்பப்படுவதைக் கண்டது.

குட்டையை இரண்டாகப் பிரிக்க மீன்கள் சேர்ந்து உருவாக்கிய சுவரை, தனது பின்னங்கால்களால் உடைக்க ஆரம்பித்தது.


சுவர் கொஞ்சம் உடைந்ததும் அந்தப் பக்கம் இருந்த தண்ணீர் இந்தப் பக்கத்தை நோக்கி வரத்தொடங்கியது. கொஞ்ச நேரத்தில் சிறிய ஓடைப்போல தண்ணீரின் வேகம் அதிகரித்தது.

தன் வேலை முடிந்த மகிழ்ச்சியில், தனக்கான இடத்தை நோக்கித் திரும்பியது தவளை.

தண்ணீரைக் கண்டதும் மீன்கள் ஆனந்தம் அடைந்தன.

தங்களால் போடப்பட்ட சுவரை உடைத்து, தண்ணீரை அளித்த தவளைக்கு நன்றி கூற மீன்கள் துள்ளலுடன் புறப்பட்டன.

## நீங்களும் செய்யலாம் மேஜிக்




**தண்ணீரில் எரியும் விளக்கு!**

**தேவையான பொருட்கள்**

புது பட்டரி 2, சூடம், நூல், அகல் விளக்கு

**செய்முறை**

பார்வையாளர்கள் முன்பாக ஒரு அகல் விளக்கில் தண்ணீரை ஊற்றவும். பின்னர், அதில் ஒரு திரி நூல் போடவும்.

அடுத்து, தீப்பெட்டியிலிருந்து தீக்குச்சி எடுத்து பற்ற வைத்து, ''இப்போது இந்த அகல் விளக்கில் இருக்கும் தண்ணீரில் தீபம் எரியும் பாருங்கள்' என்று சொல்லி, விளக்கில் இருக்கும் திரி நூலில் பற்றவைக்கவும். பற்ற வைத்து சில நிமிடங்கள் தண்ணீரில் தீபம் எரியும். அதைப் பார்த்து பார்வையாளர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

**மேஜிக் சீக்ரெட்**

இந்த மேஜிக் செய்யும் முன்பு தண்ணீரில் இரண்டு புது பேட்டரிகளை போட்டு ஒரு மணி நேரம் ஊறவைக்கவும். அடுத்து, சூடத்தை பவுடராக்கி அதில் திரி நூலை புரட்டி எடுத்துக்கொள்ள வேண்டும். மேஜிக் செய்யும் போது பட்டரி ஊற வைத்த தண்ணீரை அகலில் விட வேண்டும். இந்த தண்ணீர் சாதாரண தண்ணீர் போலதான் இருக்கும். எந்த வேறு வாசனையும் இருக்காது. அதனால் பார்வையாளர்களுக்கு எந்த சந்தேகமும் வராது. திரிநூலில் சூடப்பவுடர் ஒட்டிக் கொண்டிருப்பதால் பற்ற வைத்தவுடன் திரி நூல் எரிய ஆரம்பிக்கும். பேட்டரியின் எரிசக்தி தண்ணீரில் கலந்து இருப்பதால் திரி சிறிது நேரம் எரியும்.

## இவ்வார இராசி பலன்கள்

ஜோதிடர் த.சத்தியதாஸன்




இவ்வாரம் தர்ம, புண்ணிய பாவத்தில் புதன், ரவி, சனி, வெள்ளி சஞ்சாரம் செய்வதால் தர்ம, புண்ணிய கர்மங்களில் ஈடுபாடு, நோன்பு, விரதம், கோவில் தரிசனம் உண்டாகும். பிதா வழி உதவி, அனுகூலம் ஏற்படும். இல்லறம் நல்லறமாகும். புருஷன், மனைவி ஐக்கியம், புத்திரர்களுடன் அன்பு, பாசம் நிலவும். உத்தியோகத்தர் தம் பணிகளில் ஏற்றம் காண்பர். மாணவர் கல்வியில், ஊக்கமும் விடாமுயற்சியும் அடைவர்.




இவ்வாரம் அஷ்டமத்தில் புதன், ரவி, சனி, வெள்ளி சஞ்சரிப்பதால் ஆயுட் பலம் உண்டு. சத்துரு ஜெயம் ரோக நிவர்த்தி உண்டு. உத்தியோகத்தர் தம் பணிகளில் ஏற்றம் காண்பர். வியாபாரிகள் புது முதலீடுகளை தொடங்கலாம். விவசாயிகளுக்கு அரச மாணியம் உரிய வேளையில் வந்து சேரும். குடும்ப பெண்களின் இல்லற நிர்வாகம் நன்கு நடைபெறும். மாணவர்கள் கல்வி, விளையாட்டுத்துறைகளில் புதிய உத்வேகம் கொள்வர். குடும்ப பெண்களின் இல்லறம் நல்லறமாகும்.




சப்தம , களத்திர பாவத்தில் சுபர் சஞ்சாரம் செய்வதால் நன்மையளிக்கும். களத்திர சுகம், இல்லறம் நல்லமாகும். புத்திரர்களுடன் அன்பு, பாசம் நிலவும். தொழில் விருத்தி, உயர்வு, வங்கி வசதிகள் உண்டாகும். ஈடுபடும் கருமகாரியங்கள் யாவும் ஜெயமளிக்கும். உத்தியோகத்தர்களுக்கு இவ்வாரம் ஏற்றம் உண்டு. பஞ்ச குரு சஞ்சாரத்தால் வியாபாரிகளுக்கு வாடிக்கையாளர்களின் வரவு கூடும்.




இவ்வாரம் சத்துரு பாவத்தில் சுபர்கள் சஞ்சரிப்பதால் சத்துரு வெற்றி, ரோக நிவர்த்தி, சிவில் வழக்கு விடயங்களில் வெற்றி ஏற்படும். கரும, காரியங்கள் யாவும் அனுகூலமாகும். தொழில் உயர்வு, விருத்தி உண்டு. உத்தியோகத்தர் சக ஊழியர்களின் உதவி, ஒத்துழைப்புகளைப் பெறுவதனால் வேலைப்பழு குறையும். வியாபாரிகள் தம் முதலுக்கேற்ற ஆதாய முன்னேற்றம் பெறுவர். விவசாயிகள் பண்ணைகளாலும் விலைப் பொருட்களை சந்தைப் படுத்தலாம்.




இவ்வாரம் உத்தியோகத்தர்க்கு சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும். வேலைப்பழு குறையும். உத்தியோகப் பெண்களும் தம் பணிகளில் புது உத்வேகம் அடைந்து , எதிலும் ஏற்றம் காண்பர். வியாபாரிகள் புதிய முதலீடுகளையும், கொள் முதல்களையும் மட்டுப்படுத்தல் வேண்டும். விவசாயிகளுக்கு விவசாயப் பண்ணைகளில் கூலியாட்களின் மேலதிக உதவி, ஒத்துழைப்புகளை பெறுவர். குடும்ப பெண்களின் குடும்ப நிர்வாகம் சிரமத்தின் மத்தியில் நடைபெறும்.




தன பாவத்தில் குரு குஜன் சஞ்சாரத்தால் தன லாபம், பொருள் வரவுண்டு. வெளிநாட்டு நிதி வந்து சேரும். அந்நிய நாட்டு செய்திகள் நன்மையளிக்கும். வியாபாரிகளுக்கு வங்கி வசதிகள் மன நிறைவைத் தரும். வியாபாரிகள் புதிய முதலீடுகளையும் கூட்டு வாணிபத்தையும் தொடங்கலாம். விவசாயிகளுக்கு அரச மாணியம் உரிய வேளையில் வந்து சேரும். குடும்ப பெண்களின் இல்லற நிர்வாகம் புத்திரர் உதவியுடன் நன்கு நடைபெறும் . ஆசிரியர் , மாணவர், உறவு வளரும்.




ஜென்மத்துச் செவ்வாய் உஷ்ண ரோகத்தை உண்டாக்கும். தேகாபிமானம் அவசியம். அல்லாவிடின் வைத்தியச் செலவுண்டாகும். வாகன, குடும்ப விருத்திகள் உண்டாகும். உத்தியோகப் பெண்கள் தம் பணிகளில் புது உத்வேகம் கொண்டு ஏற்றம் காண்பர். வியாபாரிகள் தம் முதலுக்கேற்ற ஆதாய இலாபமடைவர். விவசாயிகளுக்கு அரச மாணியம் உரிய வேலையில் கிடைக்கும். ஆசிரியர் மாணவர் உறவு வளரும்.




இவ்வாரம் ஏழரை நடுக்கூறு முடிந்து கடைக்கூறு ஆரம்பமாகின்றது. விரய வியாழ தோஷமும் உண்டு. குரு, சனிக்கு வாரம் தோறும் கிரக தோஷ நிவர்த்தி செய்தல் வேண்டும். வியாபாரிகள் புதிய முதலீடுகளை மட்டுப்படுத்தல் வேண்டும். விவசாயிகளுக்கு அரச மாணியம் கிடைப்பதில் தடை, தாமதம் ஏற்படும். குடும்ப பெண்களின் குடும்ப நிர்வாகம் சிரமத்தின் மத்தியில் நடைபெறும். இவ்வாரம் ஆசிரியர், மாணவர்உறவு சீராக இருக்கும்.




இவ்வாரம் ஜென்ம ரவி சஞ்சாரம் செய்வதால் உஷ்ண ரோகத்திற்கு இடமுண்டு. செய்தொழில் விருத்தி, இலாப சேமிப்பு ஏற்படும். உத்தியோகத்தர்க்கு சக ஊழியர்களின் உதவி, அனுகூலம் உண்டு. விவசாயிகள் நவீன முறைகளை கையாண்டுச்சி புழுக்களின் தொல்லைகளின் இருந்து பயிர் பாதுகாப்புகளை மேற்கொள்ளலாம். கன்னிப் பெண்களின் காதல் விவகாரம் ஜெயம் அளித்து இந்த வாரமும் திருமணப் பேச்சுக்கள் தொடரும்.




இவ்வாரம் ஜீவன பாவத்தில் குஜன், குரு சஞ்சாரம் செய்வதால் தொழில் மேன்மை, உயர்வு, விருத்தி உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு வேலைச்சுமையும், மேலதிக வேலையும் கிடைக்கும். வியாபாரிகளுக்கு வாடிக்கையாளர்களின் வரவு கூடும். விவசாயிகளுக்கு நவின முறைகளை கையாண்டு பயிர் உற்பத்திகளைப் பெருக்கலாம். குடும்ப பெண்களின் குடும்ப நிர்வாகம் நன்கு நடைபெறும்.




இவ்வாரம் தனலாபம், பொருள் வரவுண்டு. மனை, வாகனம் அபிவிருத்தியடையும். வெளிநாட்டு நற்செய்திகள் நன்மையளிக்கும். உத்தியோகத்தர் பதவி சிறப்பு அடைவர். உத்தியோக செல்வாக்கு உண்டாகும். வியாபாரிகள் விவசாயிகள் தத்தம் தொழிலால் நல்ல ஆதாய முன்னேற்றம் அடைவர். பெண்கள் , மாணவர் இவ்வாரம் செளபாக்கியம் பெறுவர். குடும்ப பெண்களின் இல்லற நிர்வாகம் நன்கு நடைபெறும்.




அஷ்டமத்துக் குரு , குஜன் தோஷம் இவ்வாரம் உண்டு. ஜீவன , கர்ம ஸ்தானத்தில் ரவி இருப்பதால் தொழிலால் மேன்மை, உயர்வு விருத்தி கிட்டும். உத்தியோகத்தர் அதிகாரிகளின் பாராட்டையும் ஊக்குவிப்பையும் பெறுவர். வியாபாரிகள் தம் முதலுக்கேற்ற இலாப அடைவர். விவசாயப் பண்ணைகளின் நல்ல ஆதாய முன்னேற்றம் அடைவர். குடும்ப பெண்களின் இல்லற நிர்வாகம் சுமூகமாக இடம்பெறும். மாணவர் கல்வி , விளையாட்டுக்களில் சிறப்படைவர்.

# பித்ருக்களுக்கு ஜோதிட ரீதியிலான பரிகார பூஜைகள்

ஜாதகத்தையும், நவகிரகத்தையும் நம்பி பலவித வழிபாடுகளை - பரிகாரங்களை செய்பவர்கள் தான் செய்ய வேண்டிய பித்ரு கடமையில் அவ்வளவாக ஈடுபாடு காட்டுவதில்லை. இதனால்தான் தொடர்ந்து கஷ்டத்தை அனுபவிக்கிறார்கள்.

முறையாக பித்ரு பூஜை செய்தால், ஜாகத்தில் உள்ள தோஷங்கள் எல்லாம் நிச்சயம் அகன்று விடும். பித்ரு பூஜை வழிபாடு செய்யாமல், நீங்கள் என்னதான் கோவில், கோவிலாக அலைந்து பரிகார பூஜைகள் செய்தாலும் நிச்சயமாக பலன்கள் கிடைக்கப்போவதில்லை.

நமது முன்னோர்களில் ஒருவர் இறந்த திதி, பட்சம், தமிழ் மாதம் அறிந்து, ஒவ்வொரு தமிழ் வருடமும் அதே திதியன்று (ஆங்கிலத் தேதிக்கு ஒவ்வொரு ஆண்டும் மாறிவரும்) குடும்பத்தார்கள் பிண்டம் செய்து வைத்து படைப்பதே சிரார்த்தமாகும்.

இதனால் குடும்பத்தில் சகல தோஷங்களும் நிவர்த்தியாகின்றன. இந்த தர்ப்பணத்தை இதே போல அமாவாசைத் திதிகளிலும் செய்து வந்தால் மிகப்பெரும் நன்மைகள் உண்டாகும். ஒரு வேளை முன்னோர்களின் இறந்த திதி தெரியாதவர்கள், ஆடி, அமாவாசை அல்லது தை அமாவாசையன்று இராமேஸ்வரம் அல்லது சொந்த ஊரில் உள்ள ஏதாவது ஒரு கோவிலில் அல்லது வீட்டிலேயே சிரார்த்தம் செய்வது நன்று.

அதுவும் முடியாதவர்கள் ஏதாவது ஒரு அமாவாசையன்று (ஆண்டுக்கு ஒரு அமாவாசை என நமது ஆயுள் முழுக்கவும்) செய்து வருவது மிகவும் நன்மையையும், அளப்பரிய நற்புண்ணியங்களையும் தரும். சாதாரணமான அமாவாசையானது அனுஷம், விசாகம், சுவாதி நட்சத்திரங்களில் வருமானால் அப்போது செய்கிற சிரார்த்தம் ஒரு வருடத்துக்குரிய திருப்தியை உண்டாக்குகிறது. திருவாதிரை, புனர்பூசம், பூசம் நட்சத்திரங்களில் வரும் அமாவாசையன்று செய்யப்படும் பிதர் தர்ப்பணம் பனிரெண்டு ஆண்டுகள் பிதர்திருப்தி ஏற்படுத்தும். அவிட்டம், சதயம், பூரட்டாதி நட்சத்திரங்களில் வரும் அமாவாசையன்று செய்யப்படும் பிதரு பூஜையானது, பித்ருக்களுக்கும் தேவர்களுக்கும் கிடைக்காத புண்ணிய காலத்தைத் தரும்.



மாசி மாதத்து அமாவாசையானது சதய நட்சத்திரத்தன்று வருமானால் அது பித்ருக்களுக்கு மிகவும் திருப்தியை அளிக்கக்கூடிய காலமாகும். மாசி மாத அமாவாசை அவிட்டம் நட்சத்திரத்தில் வருமானால் அதுவும் பித்ருக்களுக்கு அளவற்ற மனமகிழ்ச்சியைத்தரும். மாதம் அமாவாசை அவிட்டம் நட்சத்திரம் வரும் நாளில் பித்ருக்களை நினைத்து அன்னம் அல்லது தண்ணீர் தானம் செய்தால் பதினாயிரம் ஆண்டுகள் பிதுர்களைத் திருப்தி செய்த பலன் கிடைக்கும்.

மாசி மாதம் வரும் அமாவாசை பூரட்டாதி நட்சத்திரத்தில் அப்போது அந்த நன்னாளில் சிரர்த்தம் செய்தால், பித்ருக்கள் திருப்தி அடைந்து ஆயிரம் யுகங்கள் சுகமாக தூங்குவார்கள் என விஷ்ணுபுராணம் கூறுகிறது.

## வறுமையை போக்கும் ஐஸ்வர்ய லட்சுமி மந்திரம்



கடன், வறுமை நீங்க கீழே கொடுக்கப்பட்டுள்ள மந்திரத்தை 108 முறை சொல்லி வந்தால் குபேரன், மகாலட்சுமி அருளினால் மிகுந்த செல்வம் கிடைக்கும்.


ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் ஐம்
ஞானாயை கமலதாரிண்யை
சக்தியை சிம்ஹ வாஹின்யை
பலாயை ஸ்வாஹா !
ஓம் குபேராய நமஹ
ஓம் மகாலட்சுமியை நமஹ

என தினமும் 1008 முறை அல்லது 108 முறை சொல்லி வந்தால் குபேரன் மற்றும் மகாலட்சுமி அருளினால் மிகுந்த செல்வம் கிடைக்கும்.

# நம்பிக்கை அவசியம்!

புனித லூக்காவின் நற்செய்தியைப் படிப்பதில், வழக்கம் போல் ஆர்வம் கொள்ளும் நாம், இந்த நற்செய்தியையும் ஆர்வத்துடன் படிப்போம். தெளிவடைவோம்.

அக்காலத்தில் இயேசு பிரான், கற்பித்துக் கொண்டிருந்தபோது, கலிலேயா, யூதேயா பகுதிகளில் உள்ள ஊர்களில் இருந்தும், எருசலேமில் இருந்தும் வந்திருந்த பரிசேயரும், திருச்சட்ட ஆசிரியர்களும் அங்கு அமர்ந்து கேட்டுக் கொண்டிருந்தார்கள்.



நோயைப் போக்குவதற்கான ஆண்டவரின் வல்லமையை அவர் கொண்டிருந்தார். அப்பொழுது சில பேர், முடக்கு வாதத்தில் அவதிப்பட்டுக் கொண்டிருந்த ஒருவரைக் கட்டிலோடு சுமந்து கொண்டு வந்தனர். அவரைக் கூட்டத்திற்குள் கொண்டு போய், இயேசு பிரானின் முன் வைப்பதற்கு வழியைத் தேடினர்.

மக்கள் அதிகமாகத் திரண்டிருந்ததால், அவரை உள்ளே கொண்டு போக அவர்களால் முடியவில்லை.

எனவே கூரை மேல் ஏறினார்கள். ஓடுகளைப் பிரித்து, அந்த வழியாக மக்களின் நடுவில், அவரைக் கட்டிலோடு, அவருக்கு முன் இறக்கி வைத்தார்கள். அவர்களுடைய நம்பிக்கையையும், விசுவாசத்தையும் கண்ட இயேசு பிரான், அந்த ஆளைப் பார்த்து, உம் பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்று கூறினார்.

இதைக் கேட்ட மறை நூல் அறிஞர்களும், பரிசேயர்களும், 'கடவுளைப் பழித்துரைக்கும் இவன் யார்? கடவுள் ஒருவரைத் தவிர, பாவங்களை மன்னிக்க யாரால் முடியும்?' என்று தங்களுக்குள்ளே எண்ணிக் கொண்டனர்.

அவர்களுடைய எண்ணத்தை உணர்ந்து கொண்ட இயேசு பிரான், அவர்களை நோக்கி, உங்கள் உள்ளங்களில் நீங்கள் எண்ணுகிறது என்ன? உம் பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்பதா? அல்லது எழுந்து நட என்பதா? எது எளிமையானது? மண்ணுலகத்தில் பாவங்களை மன்னிக்க, மானிட மகனுக்கு அதிகாரம் உண்டு என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்று கூறினார்.

உடனே அவர் முடக்கு வாதம் உள்ளவரை நோக்கி, நான் உமக்குச் சொல்கிறேன். நீர் எழுந்து, உம்முடைய கட்டிலைத் தூக்கிக் கொண்டு உமது இல்லத்துக்குப் போம் என்றார்.

உடனே அந்த முடக்குவாதக்காரர், அவர்களின் முன்பாக எழுந்து, தான் படுத்திருந்த கட்டிலைத் தூக்கிக் கொண்டு, இறைவனைப் போற்றிப் புகழ்ந்து கொண்டே, தனது இல்லத்திற்குப் போனார்.

இதை நேரே பார்த்த அனைவரும், தங்களை மறந்தவர்களாய் வியப்படைந்து, இறைவனைப் போற்றிப் புகழ்ந்தனர். அவர்கள் அனைவரும் பயம் அடைந்தவர்களாய், 'இன்று புதுமையானவற்றைக் கண்டோம்' என்று பேசிக் கொண்டனர்.

இந்த நற்செய்தியில் இருந்து நாம் அறிந்து கொள்ள வேண்டியது என்ன? நம்பிக்கை மனிதனுக்கு அவசியம் என்பதை வெளிப்படுத்துகிறார். முடக்குவாதக்காரர் நலம் பெற்று, இல்லம் திரும்பி விடுவார் என்ற நம்பிக்கை, அவரைத் தூக்கி வந்தவர்களுக்கு இருந்தது.

மிகுந்த துன்பத்தோடு, கூட்டத்தினருக்கு மத்தியில், அவரைத் தூக்கிக் கொண்டு செல்ல முடியாமல், கூரையைப் பிய்த்து, கீழே இறக்கி வைக்கின்றனர். கூரையைப் பிரித்து இறக்கி வைக்கும் அளவுக்கு நம்பிக்கை மேலோங்கியது.

## சகவாழ்வு

# அண்டை வீட்டாரிடம் அன்பு!

ஒருமுறை நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஒருவர், தனது அண்டை வீட்டார் தனக்குத் தொல்லை தருவதாக முறையீடு செய்தார். 'பொறுமையாக இருங்கள்' என்று கூறி அவரை அனுப்பி வைத்தார்கள். நபிகளாரின் அறிவுரைக் கேற்ப அவர் பொறுமை காத்தார். ஆனால் தொல்லை தொடரவே செய்தது. அவர் மீண்டும் நபிகளாரிடம் முறையிட்டார். பொறுமையாக இருக்கும்படி அவருக்கு மீண்டும் அறிவுரை வழங்கினார்கள். இவ்வாறு பலமுறை அவர் முறையீடு செய்த வேளைகளில் பொறுமை காக்கும்படியே கூறி வந்தார்கள். இறுதியில் அவர், 'இறை தூதர் அவர்களே! தொல்லை அதிகரித்துக் கொண்டே போகிறதே ஒழிய குறைந்த மாதிரி தெரியவில்லையே' என்றார்.

:தோழரே! அப்படியானால் உன்னுடைய வீட்டில் உள்ள பொருட்களையெல்லாம் வெளியே எடுத்துப் போட்டு தெருவில் அமர்ந்து கொள்' என்று நபிகளார் கூறினார்கள். அவரும் அவ்வாறே செய்தார்.

வருவோர் போவோரெல்லாம் என்னவென்று விசாரிக்கத் தொடங்கினார்கள். அவர் நடந்தவற்றைச் சொன்னார். அதனைக் கேட்ட மக்கள், அவருக்குத் தொல்லை கொடுத்த அந்த நபரை ஏசவும், சபிக்கவும் செய்தார்கள். இதைக் கேட்ட அந்த நபர் நபிகளாரிடம் ஓடோடிச் சென்று நடந்ததைச் சொல்கிறார். அவர் தனது அண்டை வீட்டாருக்குக் கொடுத்த தொல்லைகளை நபிகளார் கண்டித்தார்கள். 'அண்டை வீட்டினரிடம் நீ நடந்து கொண்ட முறை கண்டு மக்கள் சபிக்குமுன் இறைவனும் உன்னைச் சபிக்கிறான்' என்று கூறினார்கள்.

உடனே அவர், 'இறைதூதர் அவர்களே! இனி ஒருபோதும் நான் அண்டை வீட்டினருக்கு நோவினை செய்ய மாட்டேன்'என்றார்.

பாதிக்கப்பட்ட மனிதரை நபிகளார் அழைத்து, 'பொருட்களை உள்ளே எடுத்து வை. இதுவே அவருக்குப் போதுமானது. உனக்கு அவருடைய தொந்தரவு இருக்காது' என்று கூறினார்கள். (நூல்: பைஹகீ 8924)

பொதுவாகவே அண்டை வீட்டாரிடம் இருந்து பிரச்சினைகள் வந்தால் நாம் அதனை ஒரு கவுரவப் பிரச்சினையாக எடுத்துக் கொண்டு சண்டைக்குத் தயாராகி விடுகிறோம். வாக்குவாதத்தில் ஈடுபடுகிறோம். தொல்லை தந்த அவருக்கு நாமும் தொல்லை தர ஆரம்பிக்கிறோம். இது நிரந்தரப் பகையாக மாற அமைதியை இழந்து விடுகிறோம். சில வேளைகளில் பிரச்சினை முற்றிப் போய் காவல்துறை, நீதிமன்றம் என்று அலைய ஆரம்பித்து விடுகிறோம். இதற்கு மாற்றாக நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காட்டிய நடைமுறையைச் செய்து பார்க்கலாமே!

நபிகளார் கூறியது போல் முதலில் பொறுமையாக இருந்து பிரச்சினையைத் தீர்க்க பார்க்கலாம். பல சமயங்களில் பொறுமை பலன் அளிப்பதை நாம் பார்க்கிறோம். பொறுமை இழந்து ஏட்டிக்குப் போட்டியாக நாமும் செயல்களில் இறங்கி விடும்போது நிலைமை இறுக்கமாக மாறி விடுகிறது. எனவே முதலில் பொறுமையை மேற்கொள்வோம்.

பொறுமை பலன் அளிக்காவிடில் பிரச்சினையை மக்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். மக்கள் தலையிட்டு அதற்குத் தீர்வு தரலாம். பொதுவாக பலர் மறைவில் தவறுகளைச் செய்வார்கள். ஆனால் அது எவருக்கும் தெரிந்து விடக்கூடாது என்பதில் கவனமாக இருப்பார்கள். இத்தகையோரை வழிக்கு கொண்டு வர பிரச்சினைகளை மக்கள் மன்றத்திற்கு எடுத்துச் செல்வதே சிறந்த வழியாகும். இறைவனுக்கு அஞ்சாவிட்டாலும், சமூகத்திற்கு அஞ்சியாவது தம்மை மாற்றிக் கொள்வார்கள். இதனையே மேற்கண்ட நிகழ்வு நமக்கு உணர்த்துகிறது.



அண்டை வீட்டினரால் ஏற்படும் பிரச்சினைகளை தீர்க்க இது ஒன்றுதான் வழியென்பது இல்லை. தீமைக்குப் பதிலாக நன்மை செய்யுங்கள். அவ்வாறு செய்தால் உங்கள் பகைவர்களும் உற்ற நண்பர்களாக ஆகி விடுவார்கள். '(நபியே!) நன்மையும், தீமையும் சமமாகாது. மிகச் சிறந்த நன்மையைக் கொண்டு நீர் தீமையைத் தடுப்பீராக. அப்போது உம்முடன் கடும் பகைமை கொண்டிருந்தவர்கள்கூட உற்ற நண்பராய் ஆகி விடுவதைக் காண்பீர்' (41:34) என்று குர்ஆனில் இறைவன் கூறுகின்றான். நாமாகவே அவரிடம் வலியச் சென்று உரையாடுவது, பரிசுகள் கொடுப்பது ஆகியவற்றின் மூலம் உறவுகளைச் சரி செய்யலாம். சில வேளைகளில் இருவருக்கும் தெரிந்த நபர்கள் மூலம் சமரச முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஓர் இறை நம்பிக்கையாளரின் தேவையானவை மூன்று. 1. விசாலமான வீடு 2. நல்ல அண்டை வீட்டுக்காரர் 3. நல்ல வாகனம் (நூல்: அஹமத்)

நல்ல வீடும், நல்ல வாகனமும் இருந்தால் மட்டும் போதாது. நல்ல அண்டை வீட்டுக்காரரும் அமைதியான வாழ்விற்கு அவசியம் தேவை. எனவே நாமும் நல்ல அண்டை வீட்டுக்காரர்களாக வாழ்வோம்.

# மழைக்கால மருத்துவம்!

எங்கும் மழைவெள்ளம் இந்த மழை காலத்தில் தான் அதிகமாக நோய்கள் நம்மை விரைவாக தாக்கும் மழைக் காலத்தில் முடிந்த வரை நாம் கவனமாக இருக்க வேண்டும்.

குளிர், மழைக்காலங்களில் எளிதில் பரவுவது வைரஸ் தொற்றுக்கிருமிகள் தான். கோடை காலத்தில் வருவதை விட, தடிமன் , ப்ளூ காய்ச்சல் போன்றவை குளிர் காலத்தில் சட்டென்று தாக்கிவிடும். குளிர் காலங்களில் முடிந்த வரை வெதுவெதுப்பான சூழ்நிலையில் இருப்பது அவசியம். ஒருவரால், அவரின் எதிர்ப்பு சக்தியை பொறுத்து குளிரை தாங்க முடியும். ஆனால், குளிரால் தொற்றும் தொற்றுக்கிருமியை சாதாரணமாக ஒதுக்க முடியாது. கோடை காலத்தை விட, மழைக்காலம், குளிர் காலத்தில் தான் தொற்றுக்கிருமிகள் எளிதில் பரவும் .

சுத்த இல்லாத குடிநீர் மூலம் கொலரா, வாந்தி,வயிற்றோடடம் , ப்ளூ காய்ச்சல், மஞ்சள் காமாலை ஆகிய நோய்கள் ஏற்பட அதிக வாய்ப்புள்ளது. இது குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை எல்லோரையும் தாக்கும்.ஆகையால் முடிந்த வரை நன்றாக கொதிக்க வைத்து ஆரிய நீரை மட்டுமே அனைவரும் குடிக்கவேண்டியது அவசியமாகும்

குழந்தைகளுக்கு மழைக் காலத்தில் கதகதப்பான ஆடைகளை அணிவிக்க வேண்டும் ஊர் எங்கும் தேங்கி இருக்கும் நீர் சாக்கடை போல் மாறி விடுகின்றது. வேறு வழியின்றி வீட்டிற்கு வெளியில் அந்த சாக்கடை நீரில் நடந்து செல்கிறோம். இவ்வாறு இருக்கும் போது வைரஸ் கிருமிகள் எளிதில் பரவி நோய்களை ஏற்படுத்துகிறது. வெளியில் இருந்து வீட்டுக் உள்ளே வரும் முன்பு நன்றாக கால்களை அலசிவிட்டு வீட்டுக்குள் செல்லவும். செருப்பு, ஷூ ஆகியவற்றை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்

கடுமையான மழையால் மழை நீர் வீட்டை சுற்றி தேங்கிருக்கும் அதில் உருவாகும் நுளம்புகள் மூலம் மலேரியா, டெங்கு, சிக்குன் குனியா, மூளைக்காய்ச்சல், யானைக்கால் ஆகிய நோய்கள் வரலாம். முடிந்தவரை நுளம்பு வலைக்குள் படுக்க பழகவும். மாலை ஐந்து ஆறு மணிக்குள் வீட்டு ஜன்னல் கதவுகளை அடைத்துவிடவும். இதனால் அதிகமான நுளம்பு வீட்டுக்குள் வராமல் தடுக்கலாம்.

காய்ச்சல், இருமல் ஏற்படும் போது மருத்துவரிடம் சென்று தகுந்த மருந்துகளை எடுத்து கொள்ளலாம். சரியாகி விடும் என்று வீட்டிலேயே ஏதேனும் மாத்திரை போட்டுக் கொள்வதை தவிர்க்கவும்.தொடர்ந்து இரண்டு அல்லது மூன்று நாட்கள் காய்ச்சல் நீடிக்கும் பட்சத்தில் ரத்தப் பரிசோதனை செய்து என்ன கிருமி தாக்கியுள்ளது என்பதை தெரிந்து கொண்டு, அதற்கு தகுந்தபடி சிகிச்சை மேற்கொள்ள வேண்டும்.

கூடுமானவரை பள்ளி, கல்லூரிகள், அலுவலகங்களுக்கு செல்பவர்கள் வீட்டில் கொதித்து ஆறிய தண்ணீரை கொண்டு சென்று குடித்தால் மழை கால நோயில் இருந்து நம்மை பாதுகாத்துக் கொள்ள முடியும்.வீட்டு கழிவறைகள் மற்றும் வெளியில் பயன்படுத்தும் கழிவறைகள் சுத்தமாக இருந்தால் மட்டுமே பயன்படுத்தவும்.

உணவு சாப்பிடும் முன்பு கட்டாயம் கைகழுவி விட்டு சாப்பிடுவது நல்லது. மழைக் காலத்தில் நாம் சாப்பிடும் உணவில், இனிப்பு அதிகம் சேர்த்துக் கொள்ளாமல் இருப்பது நல்லது. இரவு தூங்குவதற்கு முன், பாலில் மஞ்சள் தூள், மிளகுத்தூள், பனங்கற்கண்டு சேர்த்து சாப்பிடுவது நல்லது. கண்டிப்பாக மழைக் காலத்தில் நம் உணவுப் பதார்த்தங்களில், மிளகு பொடியைச் சேர்த்துச் சமைத்துச் சாப்பிடுவது நல்லது. சிலருக்கு சளி, இருமல் இருந்தாலும், விட்டமின் ‘சி’ சத்து ஒத்துப் போகும். சிலருக்கு மழைக்காலம் வந்து விட்டாலே ஒத்துக் கொள்ளாது. எலுமிச்சம், ஆரஞ்சு ஜூஸ் சாப்பிட்டாலும் ஒன்றும் செய்யாது. ஆனால், ஒத்துக் கொள்ளாதவர்கள் கண்டிப்பாக சாப்பிடாமல் இருப்பது நல்லது.

**இரத்தினம் நடராஜன்**

நமது நாட்டில் மின்சாரம் மழை நேரங்களில் அதிகமாகவே தடைப்படும் ஆகையால் முன்னதாகவே டார்ச்சு லைட், செல்போனுக்கு சார்ஜ் செய்து வைப்பது நலம்.

மழை நேரத்தில் மாலை நேரத்தில் பொரித்த உணவுகளை சூட சூட சாப்பிட ஆசையாக இருக்கும் ஆனால் எண்ணெயில் பொறித்த வடை, பஜ்ஜினு சாப்பிடாமல் ஆரோக்கியமான சுண்டல், சாலட் போன்று சாப்பிடலாம்.சூடாக தேநீர் பருகலாம் . எந்த வகை உணவாக இருந்தாலும் சூடாக சாப்பிடவும்.

### மழைக்கால பாதிப்பு

டெங்கு ,உணவுப் பாதை நோய்கள், மலேரியா, சரும பாதிப்பு , வைரஸ் சமிபாடு ஆகியவை ஆகும்.

இவைகளை தவிர்க்க:

பழங்களே என்றும் எந்த காலத்திலும் சிறந்த உணவு. உப்பு உணவுகள் உடலில் நீரைத் தங்கச் செய்யும், நோயை கூட்டும், எனவே அதனைத் தவிருங்கள். அதிக அரிசி, தர்பூஸ் இவைகளை தவிர்த்து மூக்கடலை, பருப்பு வகைகளை எடுத்துக் கொள்ளுங்கள். சிவப்பு அரிசி, பழுப்பு அரிசி, ஓட்ஸ், பார்லி இவை சிறந்தது. பூண்டினை உணவில் சேருங்கள். பாலுக்குப் பதிலாக தயிர் மற்றும் பாதாம் எடுத்துக் கொள்ளலாம். அதிக கனமுள்ள எண்ணெய்களான கடலை எண்ணெய், நல்ல எண்ணெய் இவற்றினை குறைத்துக் கொள்ளுங்கள். புளி உபயோகத்தினை குறைக்க வேண்டும். அதிக அசைவ உணவுகளைத் தவிர்க்க வேண்டும் பச்சை காய்கறிகளை விட வேக வைத்த காய்கள் இக்காலத்தில் சிறந்தது.

மழைக்கால நீர் சுகாதாரமின்றி இருக்க அநேக வாய்ப்புகள் உண்டு. மழையினால் ஏற்படும் வயிற்றுப் போக்கு அதிக ஆபத்தில் கொண்டு விடலாம். நன்கு கொதித்தாறிய வடிகட்டிய நீரை



பயன்படுத்துங்கள். வயிற்றுப் போக்கினை அலட்சியமாக கவனிக்காது விட்டு விடாதீர்கள். தும்மும் பொழுதும், இருமும் பொழுதும் கைதுண்டு கொண்டு வாய், மூக்கினை மூடிக் கொள்வது மற்றவர்களுக்கு கிருமி பரவாதிருக்க உதவும். இந்த நல்ல பழக்கத்தினை இன்றிலிருந்தே செயல்படுத்துங்கள்.

உங்கள் பிள்ளைகளுக்கும், மற்றவர்களுக்கும் இந்த பழக்கத்தினை ஏற்படுத்துங்கள். லெப்டோஸ்பைரோஸிஸ் எனப்படும் கிருமி பாதிப்பும் சுகாதார மற்ற நீரினாலேயே ஏற்படுகின்றது. மூளைக் காய்ச்சல், கல்லீரல் பாதிப்பு, சிறுநீரக பாதிப்பு என அனைத்து பாதிப்பினையும் ஏற்படுத்தும் உடனடி அவசர சிகிச்சை என்பது

★ இருமல்

★ நெஞ்சு வலி

★ எச்சிலில் ரத்தம் ஆகும்.

இந்த அறிகுறிகள் இருப்பின் உடனடி மருத்துவரை அணுகவும்.

★ அடிக்கடி முகத்தினை தொட்டுக் கொண்டே இருந்தால் வைரஸ் கிருமிகள் வாய், கண், மூக்கு போன்ற அனைத்து வழிகளிலும் உடலினுள் சென்று விடும். எனவே அடிக்கடி முகத்தினை தொடுவதினை தவிர்க்கவும்.

★ கைகளை சோப் கொண்டு கழுவுவதே முதல் உடல் நல பாதுகாப்பு முறையாகக் கூறப்படுகின்றது. எனவே உணவு உண்ணும் முன்பாக ஒவ்வொரு முறையும் சோப் கொண்டு கை கழுவவும் அதே போன்று சமைக்கும் முன்பும் சவற்காரம் கொண்டு கை கழுவவும்.

### மழைக்கால கவனம்

★ தெரு ஓரங்களில் இருக்கும் கடைகளில் சாப்பிடுவது குடும்பம் வெளியூரில் இருக்கும் ஆண்களுக்கு அவசியம். உள்ளூரில் இருக்கும் பலருக்கு விருப்பம். ஆனால் தண்ணீரும், காய்கறிகளும் சுத்தமாக இருப்பது மழைக் காலத்தில் கடினம். வயிற்றுப் போக்கு, வாந்தி என கிருமிகளின் பாதிப்பால் அநேகர் பாதிக்கப்படுகின்றனர். கவனம் தேவை.

★ கண்டிப்பாக நுளம்பு மருந்துகளை உபயோகித்தே ஆக வேண்டும். மலேரியா தவிர்ப்பு முறைக்காக மருத்துவ ஆலோசனை பெறவும். நில வேம்பு நீர் குடிக்கவும்.

★ தண்ணீரில் நனைந்து நடப்பது சந்தோசம் தான். கணக்கற்ற சரும வியாதிகள் காலில் வந்து விடும். எனவே நோயை நடந்து வரவேற்காதீர்கள்.

★ குடை, மழைகோட்டு இவை வாசல் அறையிலேயே இருக்கட்டும்.

★ குளிர்ந்த உணவுகள், பானகங்களை எடுத்துக் கொள்ளாதீர்கள்.

★ குழந்தைகளை மழையிலோ, மழை நீரிலோ விளையாட விடாதீர்கள்.

★ மழை நீரில் நடக்கும் பொழுது மின்சார கம்பிகள் அதனுள் இருக்கலாம் பிள்ளைகளை எச்சரியுங்கள்.

★ கால்களை எப்பொழுதும் ஈரமில்லாமல் உலர்வாய் துடைத்து வைத்திருங்கள்.

★ சளி, வராது தவிர்க்கவும். வந்தால் உடனடி மருந்து எடுக்கவும். இல்லையெனில் பலநாள் படுக்க வைத்து விடும்.

★ ஏசி அறையினுள் நனைந்த முடி, நனைந்த உடல், ஈர உடை இவற்றுடன் செல்லாதீர்கள்.

★ ஆஸ்த்துமா, சர்க்கரை நோய் உடையவரா வீட்டில் ஈர சுவர்கள் இருந்தால் எளிதில் பூஞ்சை நோய்கள் தாக்கி விடும். அதிக கவனம் தேவை.

★ அதிக கொழுப்பு உணவு, பாஸ்ட் புட் இவைகளைத் தவிருங்கள். வயிற்றில் எளிதில் கிருமி பாதிப்பு ஏற்படும். இக்காலங்களில் அதாவது மழை நேரங்களில் அதிக ஜீரண கோளாறு ஏற்படும். கிருமிகள் அதிக வீரியம் கொண்டதாக இருக்கும்.

★ மழைக் காலங்களில் பழங்களைத் தவிர்ப்போர். அநேகர் கிடைக்கும் பழங்களை கண்டிப்பாய் உண்ண வேண்டும். இதனால் வைட்டமின் சக்தியும், நோய் எதிர்ப்பு சக்தியும் கூடும்.

★ உலர் பழங்கள், கொட்டைகள் மிகவும் நல்லது.

★ சூப் உட் கொள்ள பழகிக் கொள்ளுங்கள். அதில் பூண்டு, கிராம்பு இவைகளை சேர்ப்பது உடலுக்கு நன்மை பயக்கும்.

★ மழைக்காலம் என்றால் தண்ணீர் குடிப்பது குறைந்து விடும். சுத்தமான எட்டு க்ளாஸ் நீர் உடலுக்கு மிக அவசியம்.

★ மழைக் காலம் என்றால் காரசார உணவுகளும், மசாலா உணவுகளும், உப்பு கூடிய உணவுகளும் அனைவரையும் ஈர்க்கும். ரத்த கொதிப்பு உடையவர்கள் இவ்வகை உணவுகளை தவிர்க்க வேண்டும். அவை அதிக உலர், ரத்த அழுத்தத்தில் கொண்டு விடும்.

★ வேப்பிலை, பாகற்காய் போன்ற கசப்பு உணவுகள் அலர்ஜி, சரும கிருமி பாதிப்பிலிருந்து உதவுவதாக கூறப்படுகின்றது. வேப்பிலை பொடியினை சருமத்தில் சிறிது தடவி குளிக்கலாம்.

★ தண்ணீரை வீட்டிலோ வீட்டை சுற்றியோ தேங்க விடாதீர்கள்.

★ அறைகள் அடைத்து மூடி வைக்காதீர்கள். அறைக்கு வெளிச்சமும் காற்றோட்டமும் அவசியமே.

★ வெதுவெதுப்பான நீரில் குழந்தைகளை குளிக்க வையுங்கள்.

### பாதுகாப்பு

★ அவசர நேரங்களில் மின் இணைப்பினை விரைந்து துண்டிக்கும் வகையில் மின் கருவிகளின் சுவிட்சுகள் இருப்பிடம் அமைய வேண்டும்.

★ மின் சாதனங்கள் உபயோகத்தில் இல்லாத பட்சத்தில், சுவிட்சை ஆப் செய்து வைக்கவும்.

★ மின்சார தீவிபத்துக்களுக்குண்டான தீயணைப்பான்களை மட்டுமே மின்சாதனங்களில் தீவிபத்து ஏற்படும்போது பயன்படுத்தவேண்டும். உலர்ந்த மணல், கம்பளிப் போர்வை, உலர்ந்த ரசாயணப் பொடி (ஈஇக)அல்லது கரியமில வாயு (இணி2) ஆகிய தீயணைப்பான்களைப் பயன்படுத்தவும். மின்சாரத்தினால் ஏற்பட்ட தீயினை தண்ணீர் கொண்டு அணைக்க முயற்சிக்க வேண்டாம்.

★ தீ விபத்து மின்சாரத்தினால் ஏற்பட்டதெனில், உடனே மெயின் ஸ்விட்சை நிறுத்திவிட வேண்டும்.

★ எந்த மின் சர்க்யுட்டையும் அளவுக்கு மீறி பளு ஏற்றக் கூடாது. ஸ்விட்ச் மற்றும் பியூஸ் போன்றவைகளை மாற்றும் போது சரியான அதே அளவு திறன் கொண்டவைகளையே பொருத்தவேண்டும்.

★ இடி அல்லது மின்னலின்போது வெட்டவெளியில் இருக்காதீர்கள். இடி அல்லது மின்னலின்போது உடனடியாக கான்கிரிட் கூரையிலான பெரிய கட்டிடம் வீடு போன்ற பெரிய கட்டிடங்களிலோ, உலோகத்தால் மேலே மூடப்பட்ட பேருந்து, கார், வேன் போன்ற வாகனங்களிலோ தஞ்சமடையுங்கள். இடி அல்லது மின்னலின்போது குடிசை வீட்டிலோ, மரத்தின் அடியிலோ, பேருந்து நிறுத்த நிழற்குடையின் கீழோ, தஞ்சம் புகாதீர்கள்.

★ இடி அல்லது மின்னலின்போது தண்ணீர் தேங்கியுள்ள பகுதிகளை விட்டு அகலுங்கள்.

★ இடி அல்லது மின்னலின்போது தஞ்சம் அடைய அருகில் எதுவும் இல்லாதபட்சத்தில், மின் கம்பிகள், மின் கம்பங்கள், மரங்கள், உலோக கம்பி வேலி போன்றவை இல்லாத தாழ்வான பகுதிகளை தேர்ந்தெடுங்கள்.

★ இடி அல்லது மின்னலின்போது டி.வி., மிக்ஸி, கிரைண்டர், கணினி மற்றும் தொலைபேசி போன்றவற்றை பயன்படுத்தாதீர்கள்.

★ இடி அல்லது மின்னலின்போது திறந்த நிலையில் உள்ள ஜன்னல், கதவு போன்றவற்றின் அருகில் இருக்காதீர்கள்

நீர் நிலைகள் மற்றும் ஆறுகளில் இருந்து மிகவும் தொலைதுாரத்தில் சென்று குடியிருப்பதன் மூலம் வெள்ளத்தால் ஏற்படும் சேதங்களை தவிர்த்து விடலாம் என்றாலும் வாழ்க்கைக்குரிய ஆதாரத்தைப் பெறுவதற்கும் பயணம் மற்றும் வர்த்தக வசதிகளின் காரணமாகவும் பன்னெடுங் காலம் தொட்டே மக்கள் நீர்நிலைகளின் அருகிலேயே குடியிருந்து வருகிறார்கள் வெளியில் சென்று வந்தவுடன் கால்களை நன்றாக சவர்க்காரம் போட்டு கழுவுவோம் என்றும் சுத்தமாய் இருந்து நம்மை நாம் பாதுகாப்போம்.

# ஆசிரியர் வாண்மையும் வகிபங்கும்

ஆசிரியர்கள் தனிமனிதனையும் சமூகத்தினையும் ஏன் முழு உலகினையும் கூட உருவாக்குபவர்கள்;. ஆசிரியர்களின்றி கல்விச்செயல்முறை இடம்பெற இயலாது. கல்வியின் நோக்கங்கள் எவ்வளவு சிறந்தனவாக இருப்பினும் கல்வி நிர்வாகம் எவ்வளவு ஆற்றல் வாய்ந்தனவாக இருப்பினும் கல்வி கற்பதற்கான உபகரணங்கள் எவ்வளவு ஏராளமானதாகவும் அவை காலத்திற்கு ஏற்றனவாயும் இருப்பினும் அவற்றால் மாணவர்கள் அடையும் பயன் ஆசிரியர்களைப் பொறுத்ததேயாகும். மாணவர்களது அறிவுமட்ட வளர்ச்சி ஆசிரியர்களது அறிவுமட்ட வளர்ச்சி என்பனவற்றுக்கு உட்பட்டதாகவே இருக்கும் என்ற கோட்பாடும் உண்டு.

பாரம்பரிய சமூதாயத்தில் ஆசிரியர்களின் சேவை இறைதொண்டாக கருதப்பட்டது. குருகுலக்கல்வி முறையும் குரு, சீட மரபும் ஆசிரியர்களுக்கு இருந்த அந்தஸ்த்தை உயர்த்திக் காட்டின. அரசு கல்விப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதும் ஆசிரியர் அந்தஸ்த்து, கல்வி, சம்பளம், நலங்கள் அத்தனை அம்சங்ளிலும் அரசின் வழிகாட்டலும் கட்டுப்பாடும் ஏற்படத் தொடங்கின. அதன் எதிர் விளைவாக காலப்போக்கில் ஆசிரியர்களது சேவை தன்மதிப்பை இழக்கத்தொடங்கியது. அரசுகள் ஆசிரியர்களின் நலன்களில் போதிய அக்கறை எடுக்காமையும் அவர்களது சுய கௌரவம், கடமை என்பவற்றை மதிக்கத் தவறியமையுமே ஆசிரியர்களின் இந்நிலைக்ககுக் காரணங்களாக இருந்தன. 1966 இல் பாரீஸி;ன் யுனெஸ்கோவில் நடைபெற்ற ஆசிரியர் அந்தஸ்து பற்றிய சர்வதேச மாநாடு இவற்றைக் கருத்திற் கொண்டு விதப்புரைகளை தயாரித்தது. இந்த விதப்புரைகள் ஆசிரியர் அந்தஸ்தினை உயர்த்தும் ஒரு சாசனமாக அமையலானது. யுனெஸ்கோவின் தீர்மானத்தின்படி முதலாவது உலக ஆசிரியர் தினம் 1991 ஒக்டோபர் 06 ஆம் திகதி உலகெங்கும் கொண்டாடப்பட்டது.

ஆசிரியர் தன் நிலையை உணரவும் சமூகத்திற்கு ஆசிரியர் மதிப்பை உணர்த்தவும் இத்தினம் நினைவுகூறும் வகையில் அமையப்பெற்றுள்ளது.

கற்பித்தல் தொழில் என்பது ஒரு உயர் தொழிலாக அமைகின்றது. இதனை வாண்மை எனவும் குறிப்பிடுவர். இதனையே ஆங்கிலத்தில் கசழக நளளைழண என குறிப்பிடலாம். இத்தகைய இவ்வுயர் தொழில் குழந்தைகளுக்கு ஓர் அத்தியாவசிய சேவையினை வழங்குகின்றது. தனிப்பட்ட குழந்தையைப் பொறுத்தமட்டில் அதற்கு கல்வி வழங்குவது ஓர் அவசிய தேவை. பிறந்தவுடனேயே கற்கத் தொடங்கும் குழந்தைக்கு பாடசாலைக் கல்விக்கு முன்பிருந்தே ஆசிரியரது பங்களிப்பு அதன் நீண்டகால நடத்தை உருவாக்கத்திற்கு பங்களிக்கின்றது. பாலர் முன் பள்ளியிலிருந்து ஆரம்ப கல்வி வளர்ச்சிக்கு ஆசிரியரின் பங்களிப்பு ஆரம்பமாகின்றது. குழந்தையானது தன்னுடைய குடும்பத்திற்கு வெளியே பரிவும் அன்பும் கொள்ளும் முதல் நபராக ஆசிரியரே காணப்படுகின்றார்.

ஒரு வைத்தியன் தனக்குரிய அறிவுத் தளத்தை குறிப்பி;ட்ட ஒரு நீண்ட காலத்திற்கு கற்க வேண்டியிருப்பதனைப் போலவே ஆசிரியனும் குறிப்பிட்ட காலத்திற்கு கல்வியினையும் அதற்கான பயிற்சியினையும் பெறவேண்டியுள்ளது. அதுமட்டுமல்லாது திறன்களையும் அத்தொழிலுக்குப் பொருத்தமான உளப்பாங்கினையும் வளர்த்துக் கொள்ளவேண்டியுள்ளது. இதேவேளை ஆசிரியத் தொழிலானது விடய அல்லது பாட அறிவை மட்டுமன்றி கல்விக் கோட்பாடுகளையும் அடிப்படையாகக் கொண்டது. கல்விக் கோட்பாடு அறிவின்றி ஓர் ஆசிரியன் ஆசிரியன் என்ற கணிப்புக்குரியவன் ஆகமாட்டான்.

ஆசிரியர் தொழிலானது சுதந்திரத்தைக் கொண்ட ஒரு தொழிலாக அமைவதனை காணலாம். இவ்வகையில் தேசிய கல்விக்கொள்கை செயல்முறை என்பவற்றிற்கு உட்பட்டு ஓர் ஆசிரியன் தனது தொழிலினை ஆற்றும்போது அவ் எல்லைக்கு உட்பட்ட தொழில் சுதந்திரம் ஒரு ஆசிரியனுக்கு கிடைக்கின்றது. அதன் மூலமாக புதியனவற்றை உருவாக்கவும் அதனை கற்பித்தலில் பிரயோகிகிகவும் சுதந்திரம் கிட்டுகின்றது தனது தொழில் எவ்வகையில் ஆற்றப்பட வேண்டும் என்பது தொடர்பாக முடிவு எடுக்கும் சுதந்திரம் உடையவனாக ஒரு ஆசிரியன் திகழ்கின்றான். தனது மாணவன் தொடர்பாக அவனது கல்வி வளர்ச்சி தொடர்பாக வழிகாட்டவும் தீர்மானத்தினை மேற்கொள்ளவும் ஆசிரியர்களுக்கு தொழில் சுதந்திரம் கிட்டுகின்றது.

இவ்வுயர் தொழினானது அறிவுத் தொகுதியினை அடிப்படையாகக் கொண்டிருப்பதாலும் தொடர்ந்தும் மாற்றமுறும் தன்மை கொண்ட திறன்களைக் கொண்டிருப்பதாலும் அது தொழில் வளர்ச்சிக்கு இட்டுச் செல்கின்றது. கல்விச் செயல்முறைகள் பாட அறிவு என்பன வளர்ச்சியும் மாற்றமும் பெற்றுச் செல்வதனால் ஆசிரியர் அவற்றை தொடர்ந்து கற்று சேவைக் காலத்தில் பயிற்சிகளைப் பெற்று தொழில் வளர்ச்சியை ஏற்படுத்துவது ஆசிரியர்களது கடமையாக அமைகின்றது.

இதேவேளை ஆசிரியர் தொழிலானது ஓர் உயர் ஒழுக்கக் கோவையினைக் கொண்டதாக அமைகின்றது. ஓர் உயர் தொழிலாளனை மதிப்புக்கும், மரியாதைக்கும் உரியதாக்குவது இவ் ஒழுக்கக் கோவையாகும். வைத்தியர்கள், சட்ட அறிஞர்கள், பொறியியலாளர்களுக்கு ஓர் ஒழுக்கக் கோவை காணப்படுவதனைப் போலவே ஆசிரியர்களுக்கான ஒழுக்கக் கோவையொன்று கல்வி அமைச்சினால் உருவாக்கப்பட்டுள்து. ஆசிரியர்கள் ஓர் எல்லைக்குட்பட்டு செயற்படக்கூடியதான பொருத்தமான தொடர்பை விளக்குவதாக இவ் ஒழுக்கக் கோவை அமைகின்றது.

இவ்வகையில் இலங்கையில் ஆசிரியர் தொழினாது அண்மைக் காலத்தில் உயர் தொழிலுக்குரிய அந்தஸ்தைப் பெற்றுள்ளது. பதவி உயர்வுமுறையும், சம்பளவுயர்வும் வழங்கப்பட்டமை அவர்களது தொழில் அந்தஸ்தை உயர்த்தியுள்ளது. தேசிய, சர்வதேசியக் கல்விப் போக்குகளுக்கமைபாக புதிய திறன்களும் தேவைப்படும் இன்றைய நிலையில் ஆசிரியர்கள் தங்களது கடமைகளை எந்த அளவிற்கு திருப்திகரமாக மேற்கொள்கின்றனர் என்பது கருத்திற்கொள்ளப்படவேண்டிய விடயமாகும்.

ஆசிரியர் தொழில் விருத்தியினை எல்லையிட முடியாது. ஆசிரியன் ஒருவன் நடுநிலையாக இருந்து மாணவர்களிடையே ஏற்படும் முரணபாடுகளை தீர்த்து வைத்து முன்மாதிரியாக தொழிற்பட வேண்டும். அத்தோடு ஆசிரியரானவர் உளவியல் நுட்பம் தெரிந்தவராகவும், ஓர் ஆலோசகராகவும், வழிகாட்டியாகவும் விளங்குகின்ற அதேவேளை மரபுரீதியிலமைந்த பாட வரையறைக்கப்பாற்பட்டு மேலதிக அறிவை ஊட்டுபவராகவும் காணப்பட வேண்டியது அவசியமானதாகும். இதேவேளை மாணவர்களுக்கான உயர் கற்றல் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதோடு சிறந்த ஊக்கத்தினை வழங்க்கூடியவராகவும் அமைவதன்மூலம் ஆசிரியரின் வகிபங்கு மாணவர்களின் கற்றலில் முதன்மை பெறுகின்றது.

**சி.புனிதா,**
**2ஆம் வருடம் (சிறப்புக் கற்கை),**
**கல்வி, பிள்ளைநலத்துறை,**
**கிழக்குப் பல்கலைக் கழகம்.**



திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலக சாகித்திய விழா திருகோணமலை மெதடிஸ்த்த மகளிர் கல்லூரியில் பிரதேச செயலாளர் ஜே.எஸ்.அருள்ராஜ் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதேச கலைத்துறைக்கு ஆற்றிய பணிக்காக பல கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் இலக்கிய விடயங்களை சுமந்த 'தரளம்' என்ற சஞ்சிகையையும் மேலதிக அரசாங்க அதிபரால் வெளியிட்டு வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



கல்முனை இஸ்லாமிய சமூக சங்கத்தின் 15வது ஆண்டு நிறைவு விழாவும் மற்றும் மீலாத் நிகழ்வும் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கல்முனை தேசிய ஸாஹிறாக் கல்லூரி எம்.எஸ்.காரியப்பர் மண்டபத்தில்இடம்பெற்றது. இவ் நிகழ்வானது இஸ்லாமிய சமூக சங்கத்தின் தலைவர் எம்.ஐ.எம்.பதுர்தீன் தலைமையில் இடம்பெற்றது.



பனங்காடு அக்கினி விளையாட்டுக் கழக பொதுக் கூட்டம் பனங்காடு பாசுபதேசுவரர் வித்தியாலயத்தி ல் இடம் பெற்ற போது தலைவர் ரவிச்சந்திரன் உரையாற்று வதையும் கலந்து கொண்ட உறுப்பினர்களையும் படத்தில் காணலாம்

படம்: ஆலையடிவேம்பு நிருபர்




கொக்குவில் தேசிய கலை இலக்கியப் பேரவையில் இடம்பெற்ற சமூக பொருளாதார அரசியல் பின்னணியில் இயற்கை விவசாயம் என்ற தலைப்பிலான சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டக் கலந்துரையாடலின் காட்சிகள்.



மலையகத்தில் புகழ்பூத்த இடங்களில் நவநாத சித்தர் ஆலயம் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். மத பேதமின்றி அனைவரும் செல்லும் இடமாகவும் அடையாளப்படுத்தப்படுகின்றது. அந்தவகையில் பல விசேட தினங்களில் அங்கு பல நிகழ்வுகள் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

படம்: பூண்டுலோயா நிருபர்

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் (தனியார்) நிறுவனத்தின் ஜாஎல, மினுவான்கொட வீதி, 302/1/A இலக்கத்தில் அமைந்துள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டு 02.12.2018 ஞாயிற்றுக்கிழமை அன்று வெளியிடப்பட்டது.